சிதம்பரச் செட்டியார்

அவதூறு வழக்கு

வள்ளுவர் நிலைய வெளியீடு ௧.

சிதம்பரச் செட்டியார் - -
- - அவதூறு வழக்கு.

ஊழியன் கம்பெனி லிமிடெ

விலை ரூ

அவதாரு வழக்கு.

முன்னுரை.

இந்த நூல் "ஊழியன்" கம்பெனியாரால் வெளியிடப்பெற்றுள்ளது. ஒரு நூலுக்கு முன்னுரையொன்று இருக்கவேண்டுமென்பது மாமூலல்லவா? அதையொட்டி, இந்த முன்னுரை எழுதப்பட்டுள்ளது என்று வாசக நண்பர்கள் கருதவேண்டாம். பொருளும் தேவையுமில்லாச் சம்பிரதாயம் உயிருள்ள மனிதனையும் நடைபிணமாக்கிவிடும் என்பதற்கு உருசுவும் நண்பர்களுக்குத் தேவையாயிருக்குமா? நிற்க,

"ஏதோ ஒரு தனிமனிதன் கொணர்ந்த அவதூறுவழக்கு இவ்வளவு பகிரங்கமும் பெருமையும் பெறுதல் வேண்டுமா? அதை நூல் உருவமாகக்கூட வெளிப்படுத்துதல் அழகாமா? எப்பொழுது வழக்கு முடிந்து விட்டதோ, அதைப்பற்றிய நினைவை அடியோடு எல்லாக் கட்சியாரும் மறந்துவிடுதல் பெருந்தன்மையல்லவா" எனச் சில நண்பர்கள் வாதம் செய்வதையும் செய்யப்போவதையும் நான் அறிவேன். தக்க சமாதானமாக அவர்களுக்குத் தோன்றாவிடினும், இந்த நூல் வெளிவருவதற்கு இன்றியமையாத சந்தர்ப்பத்தையும் காரணத்தையும் ஒருவாறு விளக்கிக் கூறுவது வெளியிடுவோரின் கடமையெனக்கொண்டு, இந்த முன்னுரையை நான் எழுதத் துணிந்தேன், ஊழியன் கம்பெனியாரின் விருப்பத்துக்கிணங்க.

இந்தியாவில் இப்பொழுது அமுலிலிருந்து வரும் "அவதூறு" சம்பந்தமான சட்டம் மிகவும் குறை

கொண்டதாகும். குறுகிய நோக்கங்கொண்ட நீதிபதிகள் இந்தச் சட்டத்துக்குக் கொடுமையுடன் வியாக்கியானம் செய்யலாம். இந்த வழக்கில் "ஊழியன்" பதிப்பாசிரியருக்கும் வெளியிடுவோருக்கும் ஒருரூபாய் அபராதம் விதிக்கப்பெற்றதும், தமிழ் நாட்டில் சட்ட அறிவிலும் ஆராய்ச்சியிலும் தலைசிறந்து விளங்கும் ஒரு சில நிபுணர்களில் ஒருவர் எனக்குப்பின் வருமாறு எழுதியிருந்தார்:— "ஒரு ரூபாய் அபராதம் விதிக்கப் பெற்றதைப்பற்றி நான் சந்தோஷமடைகின்றேன். இது உங்களுக்கு வெற்றியாகும். இந்தியாவிலிருக்கும் "அவதூறு"ச் சட்டத்தின் நுட்பத்தை அறிந்தவர்கள், இந்த அபராதத்தைத் தோல்வியாகவும் அவமானமாகவும் கொள்ளமாட்டார்கள். ஒரு ரூபாய் அபராதம் விதித்தது, இந்த வழக்கில் அவதூறு யாதொன்றுமில்லை யென்று நீதிபதி கூறியதற்குச் சமமாகும்." இந்தச்சட்ட நிபுணரின் தீர்ப்பை நான் ஏற்றுக்கொள்ளுகிறேன்; நண்பர்களும் ஏற்றுக்கொள்ளுவார்கள் என்பதுறுதி.

"இவர்களால் யாதுபயன்" என்ற கட்டுரையின் மூலமாய் இந்த அவதூறு வழக்குத்தோன்றியுள்ளது. "யாது பயன் யாருக்கு? இவர்களால்" என்று இரண்டு பகுதிகளாக இந்தத்தலைப் பெயரைப்பிரித்துக் கொண்டால், இந்தக்கட்டுரை எழுதியவரின் நன்னோக்கம் எளிதிலே புலனாகும். "இவர்களால்" என்பது ஒரு கூட்டத்தாரைக் குறிக்கும். கூட்டம் என்றால் வகுப்பு அல்லது ஜாதி என்று பொருளல்ல. இந்த "இவர்கள்" என்ற கூட்டத்தார் எல்லா நாடுகளிலும்

எல்லாச் சாதிகளிலும் எல்லாச்சமயங்களைத் தழுவியும் இருக்கின்றார்கள். ஜன சமூகவளர்ச்சிக்கு இந்த "இவர்களால்" யாதுபயனுமேயில்லை என்பது கட்டுரையின் நோக்கமாகும். பொய்யை அநாகரிக முறையில் பொருமைகொண்டு எழுதுவதுதான் அவதூருகக் கொள்ளப்படுதல் வேண்டும். உண்மை, நாகரிக முறையில், கடமை யுணர்ச்சி தாங்கி, பேசப்படாமலும் எழுதப்பட்டாலும், இந்த நாட்டில் தவிர வேறு எந்த நாட்டிலும், அதைப் பொதுஜன ஊழியத்துக்குத் தூண்டுகோலாகக் கொள்ளுவார்கள். தொட்டதற்கெல்லாம் சந்தேகமும், கண்டதற்கெல்லாம் அச்சமும், திண்ணைத் திட்டுதலும், போசனசாலை அவதூறும் நிறைந்து கிடக்கும் நமது நாட்டில், எல்லாம் குறுகிய நோக்கங்கொண்டு மதிக்கப்படுவது வியப்பாகாது.

ஒவ்வொருவகை ஊழியத்திற்கும் ஒவ்வொரு வகைத் தகுதி இருத்தல்வேண்டும். மோட்டார் அரசனை போர்டு கோடீசுரன். கார்கள் அமைப்பதில் அவருக்கு நிகர் யாருமேயில்லை என்ற பெயரை அவர்வாங்கியிருக்கிறார். அத்தகைய மனிதனுக்கு நூல் எழுதத் தெரியாது என்று கூறினல், அது அவதூறு ஆகுமா? அதை போர்டு அவர்கள் அவதூருகக் கொள்ளலாமா? கொண்டால், அமெரிக்காவில் ஜனசமூகம் குலுங்க நகைக்கும் ஒலியை இந்நாட்டிலே நாமெல்லோரும் தெளிவாகக் கேட்கலாம். ஆனல் நமது நாடு அடிமை நாடல்லவா? அதனலேதான் இந்த முன்னுரையும் நூலும்.

ஸ்தல ஸ்தாபனங்கள் சுய ஆட்சியின் அடித் தளங்கள் என்று மேனாட்டில் கருதப்படும். இதிலே உண்மை உண்டு. ஆனால் இந்த நாட்டிலோ, அவைகள் விளையாட்டுக்கருவிகளாகவும் ஏமாற் றுக் கருவிகளாகவும் துரைத்தனத்தாரால் கரு தப்பட்டும் உபயோகப்படுத்தப்பட்டும் வருவது யாவ ரும் அறிந்த பகிரங்க இரகசியமாகும். இந்த துர்வினி யோகத்துக்கும் நோக்கத்துக்கும் உடந்தையாயிருக் கும் நம்மவர்கள் பரிதாபத்துக்குரியவர்களேயன்றி, பொறாமைக்கு உரியவர்களல்ல. எனவே, பிரஸ்தாப கட்டுரை பொறாமையால் எழுந்ததல்லவென்பது தெளிவு; எனவே, அவதூறாகாது. அந்நிய ஆட்சி யின் பொறுப்பற்ற அரசியல் நிர்வாகத்துக்கு உடந்தையாக விருப்பவர்கள் பிரஸ்தாப கட் டுரையை அவதூறாகக்கொண்டதில் வியப்பு ஒன்றுமே யில்லை. ஆனால் "இவர்களின்" முனைப்புக்காக அஞ்சி, பத்திரிகாசிரியர்கள் நடுங்கி, ஒடுங்கிப்போவார்களா கில், முதுகெலும்பு நிமிர்ந்த வாழ்வு இன்னும் பல நூற்றாண்டுகளுக்கு, நமது நாட்டிலே உதயமாகாது என்பது உறுதி. எனவே, "அவதூறு" சம்பந்தமான நடவடிக்கைகளை நூல் உருவமாக அமைக்கவேண்டி யது பொதுஜன ஊழியத்தின் ஒரு பகுதியாகும். இந்த நோக்கம்தான் ஊழியன் கம்பெனியாரின் நோக்கம் என்றறிந்து நான் மகிழ்வடைகின்றேன். கட்டுரை அவ தூறு கொண்டதா அல்லவா என்பதை வழக்கின் நட வடிக்கைகளை நண்பர்கள் படித்துத் தெரிந்துகொள்ள லாம்.

நல்லவர்கள் கஷ்டத்துக்காளாகி, தீமை விஷத்தைப்போல வெளியேவந்து கக்கினாலன்றி, பொது ஜன வாழ்வு நமது நாட்டில் திருத்தமடையாது. நல்லவர்கள் பகிரங்கத்தையும் மற்றவர்கள் இரகசியத்தையும் தங்கள் நோக்கத்துக்குக் கருவிகளாகக்கொள்ளுவார்கள். நூல் என்பது நல்லவர்களின் பகிரங்கக்கருவியாதலின், இந்நூல் பொது ஜனங்களுக்கு நன்மை பயக்கும் என்பதில் சந்தேகமேயில்லை.

வ. ரா.

உள்ளுறை.

தொடர்ந்த எண்.	பொருள்.	பக்கம்.
௧௭	திரு. பி. எஸ். குமாரசாமி ராஜாவின் சாட்சியம்	௨௦௬
௧௮	திரு. கோபால நாயக்கர் சாட்சியம்	௨௧௪
௧௯	திரு. கரு. முத்து. சிவலிங்கம் சாட்சியம்	௨௧௭
௨௦	இருதரப்பு ஆர்குமெண்டு	௨௨௩
௨௧	அறிக்கை விண்ணப்பம்	௨௨௪
௨௨	ஒரு ரூபா அபராதம்	௨௩௦
௨௩	மாஜிஸ்ட்ரேட்டின் தீர்ப்பு	௨௩௧
௨௪	மாஜிஸ்ட்ரேட் தீர்ப்பின்மீது பத்திரிகை அபிப்பிராயங்கள் :—	
	" ஊழியன் "	௨௯௮
	" நவசக்தி "	௨௯௮
	" லோகோபகாரி "	௨௯௮
	" சுதேசமித்திரன் " ... " சுகோதயம் "	௩௦௦
	" தமிழ் நாடு "	௩௦௬
	" தமிழ் நேசன் "	௩௦௮
	" தேசோபகாரி "	௩௧௧
௨௫	ஹைகோர்ட் அப்பீல்	௩௧௩
௨௯	அப்பீல் தீர்ப்பு	௩௧௩
௩௦	ஹைகோர்ட்தீர்ப்பின்மீது பத்திரிகை அபிப்பிராயங்கள் :—	
	" ஊழியன் "	௩௨௧
	" சுகோதயம் "	௩௨௬

"இவர்களால் யாது பயன்?"

(வழக்கின் காரணமான கட்டுரை.)

இராமநாதபுரம் ஜில்லா ஸ்தலஸ்தாபன சபையின் கூட்டம் இம்மதி ௫-ம் நாள் மதுரையில் கூடியது. அதுகாலே சேர்ந்தாற்போல் மூன்று மாதம் கூட்டங்கட்கு வராத எண்மர் அக்காரணம்பற்றி அங்கத்தினர் பதவி இழந்துவிட்டனரெனும் தலைவரது குறிப்புப் படிக்கப்பட்டது. இவர்களில் சிலர் அரசாங்கத்தாரால் நியமனம் செய்யப்பட்டவர்கள். ஏனையோர் பொதுஜனப்பிரதிநிதிகள் என்ற முறையில் ஸ்தானம் பெற்றவர்கள். நியமனம் செய்யப்பட்டவர்களைப்பற்றி நாம் ஏதும் கூற விரும்பவில்லை. பொது ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தவர்கள் கூட்டங்கட்குச் செல்லாது வாளாவிருந்துவிடுவார்களாயின் பொது ஜனங்களின் நலவுரிமைகள் எவ்வாறு பாதுகாக்கப்படும்? கூட்டங்கட்குச் செல்வதற்குக்கூட அவகாசமில்லாதவர்கள் அபேட்சகர்களாக முன்வராதிருக்க வேண்டும். பொது ஜனங்களும் அவகாசமில்லாதவர்களைத் தேர்ந்தெடுக்கலாகாது. ஒன்றிரண்டு கூட்டங்கட்குப் போகமுடியாமலிருக்கக் கூடியவாறு சிற்சில சமயங்களில் அசந்தர்ப்பம் ஏற்படுவது இயற்கையே. சேர்ந்தாற்போல் மூன்று மாதங்கள் போகாமலிருப்பதற்கு இவர்கள் எவ்விதக் காரணம் கூறமுடி

யும்? இவ்வாறு செல்லாதவர்களுள் நம் நகர் ஆவி. பழ. சிதம்பரம் செட்டியாரும் ஒருவர் என்பதைப் பொது ஜனங்கள் கவனித்தல் அவசியம். இவரும் இவர்போன்றோரும் சபைகட்குச் சென்றுவிட்டாலும் பேசுவது என்ற கெட்டவழக்கம் இவர்களிடம் கிடையாது. அதிகாரிகட்குச் சார்பாக ஓட்டுக் கொடுக்கமட்டும் தயாராக யாவருக்கும் முன்னதாக எழுந்துவிடுவார்கள். நாற்காலிகளை அலங்கரித்து அரசாங்கத்தார்களிடம் நல்ல பிள்ளைகள் என்ற பெயர் வாங்கக்கூடியவாறு நடந்துகொள்ளுவதே இவர்களது வேலை. கூட்டங்கட்குச்செல்ல வசதி இல்லாதவர்களுங்கூட எப்படியோ கமிட்டிகளிலும் ஸ்தானம்பெற்றுவிடுகின்றனர். இது நகைப்பிற்கிடமாகும். பொதுக் கூட்டங்கட்கே வர வியலாதவர்கள் கமிட்டிக் கூட்டங்கட்கு எவ்வாறு வரப்போகின்றனர்? ஸ்தானம் பெறும்வரை பொது ஜனங்களிடம் தாங்கள் அங்கு சென்று ஏதேதோ செய்யப் போவதாகக் கூறுவது இவர்கள் வழக்கம். பின்னர் வாய்மூடி மௌனிகளாக நாற்காலிகளில் அமர்க்திருப்பார்கள். ஸ்தல ஸ்தாபனங்களில் அங்கம் பெறுவதைக் கௌரவப் பட்டங்களும் பதவிகளும் பெறுவதற்கு ஓர் சாதனமாக வைத்துக்கொண்டிருப்பவர்கள் பொது ஜன நலனை எவ்வாறு கவனிக்கப்போகின்றனர்? பொது ஜனங்களை ஏமாற்றி வந்த காலம் மலையேறிப் போய்விட்டதென்பதையும் இனியும் இவ்வாறு காலங்கழிக்க வியலாதென்பதையும் அறிந்து தக்கபடி நடந்துகொள்ள இவர்கள் முற்படவேண்டும்.

அவதூறு வழக்கு.

நிகழ்ச்சி.

இவ்வூர் ராவ்பகதூர் ஆவி. பழ. சிதம்பரம் செட்டியார் "ஊழியன்" ஆசிரியர் மீது, குரோதன-வரு கார்த்திகை-மீ ௧௮-௳ பத்திரிகையில் இடிமுழக்கத்தில் "இவர்களால் யாது பயன்?" என்று எழுதிய குறிப்புக்காரணமாக தேவகோட்டை சப்-டிவிஷனல் பஸ்டு கிளாஸ் மாஜிஸ்டிரேட்டிடம் இ. பி. கோ. ௫௦௦-வது பிரிவுப்படி ஓர் அவதூறு வழக்குக் கொடுத்திருக்கிறார். அவ்வழக்குக்கு குரோதன-வரு மார்கழி மாதம் ௨௩-ந் தேதி தேவகோட்டையில் வாய்தாப் போடப்பட்டிருந்தது. அன்று "ஊழியன்" காரியஸ்தர் திரு. தே. வே. அருணாசலன் ஆஜராகியிருந்தார். இவ்வூர் மீனாட்சி சுந்தரேஸ்வர வித்தியாசாலைத் தலைமை ஆசிரியர் திரு. என். எஸ். வெங்கிட்டராமய்யர் நீதி ஸ்தலத்தின்முன் நின்றுகொண்டிருந்தார். அவர் பரபரப்பாக அங்குமிங்கும் சென்றுகொண்டிருந்தார். பிராசிகூஷன் தரப்புக்கு வேலை செய்துகொண்டிருந்தார் போலக் காணப்பட்டார். வாதி பிற்பகலில் வருவதாகக் கம்பிச் செய்தி கிடைத்திருப்பதாக நீதிஸ்தலத்தில் கூறப்பட்டது. எதிரிக்குப் பிராது நகல் கிடைக்கவில்லையாதலாலும், எதிரி தரப்பு வக்கீல் மதுரை எஸ். சோமசுந்தர பாரதியார் அன்று ஆஜராக முடியாமையாலும்

வாய்தாக் கொடுக்கவேண்டுமென்று எதிரி தரப்புக்கு ஆஜராயிருந்த வக்கீல் சிவசுப்பிரமணிய அய்யர் கேட்டார். வாயிதாக் கொடுக்க முடியாதென நீதிபதியால் மறுக்கப்பட்டு விட்டது. மாலை ரு மணிக்கு வாதியும் வாதி தரப்புக்குச் சாக்ஷிக்குக் குறிக்கப்பட்ட பலரில் பள்ளத்தூர் திவான்பகதூர் அ. மு. மு. முருகப்ப செட்டியார் என்பாரும் வந்தனர். பிறகு தாங்கள் வழக்கு நடத்த ஆயத்தமாக விருப்பதாக வாதி தரப்புக்கு ஆஜராயிருந்த வக்கீல் கோபாலாச்சாரி கூறினர். கி. பு. கோ. ருஉகூ-வது செக்ஷன்படி வழக்கை வேறு கோர்ட்டிக்கு மாற்ற வாய்தாத்தர வேண்டுமென எதிரி தரப்பு வக்கீல் மனுச்செய்துகொண்டதின் பேரில் தை மாதம் கஉ-ந் தேதி சாக்கோட்டை முகாமில் வாய்தாப் போட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

பிரியாது நகல்.

தேவகோட்டை சப் டிவிஷன் மாஜிஸ்திரேட்டு கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ககஉரு-ம் வருஷத்திய ஸி. ஸி. கருகூ-ம் நம்பர் வழக்கின் விவரம் வருமாறு:—

ராவ்பகதூர் ஏ. வி. பி. எல். சிதம்பரம் செட்டியார் ... வாதி.

காரைக்குடி ''ஊழியன்'' ஆசிரியர் ராய. சொக்கலிங்கன் ... எதிரி.

௯-டி வாதி இந்தியன் பினல் கோடு ௫00-வது பிரிவுப்படி தாக்கல் செய்யும் பிரியாது விவரம்:—

(க) வாதி காரைக்குடியைச் சேர்ந்தவர். கௌரவம் வாய்ந்த நாட்டுக்கோட்டைச் செட்டியார் சராசரி ரூ. ௫000 வருமானவரி செலுத்துகிறார். காரைக்குடி ஸ்தல ஸ்தாபன சபைத் தலைவராகவும், தேவகோட்டைத் தாலூகா ஸ்தல ஸ்தாபனசபை அங்கத்தவராகவும், ராமநாதபுரம் ஜில்லா ஸ்தல ஸ்தாபனசபை அங்கத்தவராகவும் இருந்துவருகிறார்.

(உ) வாதிக்குக் காருண்ய அரசாங்கத்தார் "ராவ் பகதூர்" எனும் பட்டத்தை வழங்கியிருக்கிறார்கள். மேலும் ராமநாதபுரம் ஜில்லா கல்வி ஸ்தாபன அங்கத்தவராகவும் இருந்துவருகிறார்.

(ங) காரைக்குடி ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஹைஸ்கூல் ஜூனிய தலைவராகவும், மதுரையிலிருக்கும் ராமநாதபுரம், மதுரை ஜில்லாக்களின் சுகாதாரம், மாதர்கள், சிசுக்கள் நலவுரிமைச் சங்கத்தின் தலைவராகவும், குன்னக்குடி அஞ்சுகோவில் தேவஸ்தான நிர்வாக சபை அங்கத்தவராகவும் இருந்துவருகிறார்.

(ச) ராமநாதபுரம் ஜில்லா ஸ்தல ஸ்தாபன சபையின் சென்ற கூட்டத்தில் வாதி சில விசேஷ கமிட்டிகளுக்கு அங்கத்தவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றிருக்கிறார்.

(ரு) எதிரி காரைக்குடியிலிருந்து வெளியாகும் "ஊழியன்" எனும் பத்திரிகையின் ஆசிரியராகவும்

பிரசாரகர்த்தாவாகவும் இருந்துவருகிறார். வாதியும் அப்பத்திரிகை சந்தாதாரருள் ஒருவர்.

(அ) க-கஉ-உ௫-ல் வெளிவந்த ஷெடி பத்திரிகையின் இதழில் கூ-வது பக்கத்தில் "இவர்களால் யாது பயன்" எனும் தலைப்பின் கீழ் எதிரி வாதியை மான பங்கம் செய்யவேண்டுமென்றே கீழ்க்காணுமாறு எழுதியிருக்கின்றார். அவ்வாறு எழுதுவது வாதியின் கௌரவத்திற்குப் பங்கம் விளைக்கும் என்பதை எதிரி நன்கறிந்தே வெளியிட்டிருக்கிறார். ஆகவே பிரஸ்தாப வியாஸத்தில் கூறப்பட்டிருப்பவைகள் பெரும் அவதூறாக இருப்பதால் எதிரி இந்தியன் பினல்கோடு ௫00-வது பிரிவுப்படி குற்றம் புரிந்தவராகிறார்.

ஆகவே பிராதை விசாரித்து எதிரியைத் தண்டிக்கும்படி கோர்ட்டார் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

ஆட்சேபப் பகுதி.

"இவ்வாறு செல்லாதவர்களுள் நம் நகர் ஆவி. பழ. சிதம்பரம் செட்டியாரும் ஒருவர் என்பதைப் பொது ஜனங்கள் கவனித்தல் அவசியம். இவரும் இவர் போன்றோரும் சபைகட்குச் சென்றாலும் பேசுவது என்ற கெட்ட வழக்கம் இவர்களிடத்தில் கிடையாது. அதிகாரிகட்குச் சார்பாக ஓட்டுக்கொடுக்க மட்டும் தயாராக யாவருக்கும் முன்னதாக எழுந்துவிடுவார்கள். நாற்காலிகளை அலங்கரித்து அரசாங்கத்தாரிடம் நல்ல பிள்ளைகள் என்ற பெயர் வாங்கக்கூடிய

வாறு நடந்துகொள்ளுவதே இவர்களது வேலை. கூட்டங்கட்குச் செல்ல வசதி யில்லாதவர்களுங்கூட எப்படியோ கமிட்டிகளிலும் ஸ்தானம் பெற்றுவிடுகின்றனர். இது நகைப்பிற்கிடமாகும். பொதுக் கூட்டங்கட்கே வரவியலாதவர்கள் கமிட்டிக் கூட்டங்கட்கு எப்படி வரப்போகின்றனர்? ஸ்தானம் பெறும் வரைப் பொது ஜனங்களிடம் தாங்கள் அங்கு சென்று ஏதேதோ செய்யப்போவதாகக் கூறுவது இவர்கள் வழக்கம். பின்னர் வாய்மூடி மௌனிகளாக நாற்காலிகளில் அமர்ந்திருப்பார்கள். ஸ்தல ஸ்தாபனங்களில் அங்கம் பெறுவதைக் கௌரவப்பட்டங்களும் பதவிகளும் பெறுவதற்கு ஓர் சாதனமாக வைத்துக்கொண்டிருப்பவர்கள் பொதுஜன நலனை எவ்வாறு கவனிக்கப் போகின்றனர்? பொதுஜனங்களை ஏமாற்றிவந்த காலம் மலையேறிப்போய்விட்டதென்பதையும் இனியும் இவ்வாறு காலங்கழிக்க வியலாதென்பதையும் அறிந்து தக்கபடி நடந்துகொள்ள இவர்கள் முற்படவேண்டும்".

பிரஸ்தாப பத்திரிகையின் பிரதியொன்று இத்துடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது.

வாதியின் பிரமாண வாக்குமூலம்.

[௯-௧௨-௨௫. திருப்பத்தூர் முகாம்.]

இப்பிரியாதைக்கொடுத்தவன் நானே. க-௧௨-௨௫ல் வெளிவந்த "ஊழியன்" எனும் தமிழ் பத்திரிகையின் பிரதி யொன்றை இதோ சமர்ப்பிக்கிறேன்.

எனது பிரியாது, எதிரி அப்பத்திரிகையின் கூடவது பக்கத்தில் " இவர்களால் யாது பயன் " என்ற தலைப்பின் கீழ் பிரசரிக்கப்பட்டிருக்கும் வியாஸத்தைப் பற்றியதே யாகும். அதில் கூறப்பட்டிருப்பவைகளை எனது பிரியாதில் குறிப்பிட்டிருக்கிறேன். என்னை அவமானப் படுத்த வேண்டுமெனும் நோக்கத்துடனேயே அவைகள் எழுதப்பட்டிருக்கின்றன. கூறப்பட்டிருப்பவைகள் உண்மையல்ல. அவ்வாறு எழுதப்பட்டதால் எனது கௌரவம் போய்விட்டது. அப்பத்திரிகை காரைக்குடியிலிருந்து எதிரியால் வெளியிடப் படுகின்றது. அதற்கு இந்தியாவின் பல பாகங்களிலும் இந்தியாவிற்கு வெளியேயுள்ள பல விடங்களிலும் சந்தாதார்களிருக்கின்றனர்.

(ஒ-ம்) ஆவி. பள. சிதம்பரம்செட்டி (யார்.)

என் முன்னிலையில் இவ்வாக்குமூலம் வாங்கப் பட்டு வாதிக்குப் படித்துக் காட்டப்பட்டு அவரால் அங்கீகரிக்கப்பட்டது.

(ஒ-ம்) என். கோயில் பிள்ளை.

ஸப் டிவிஷனல் மாஜிஸ்திரேட்டு.

சித்திரை மாதம் மூன்றாம் நாள் இராமநாதபுரம் சப் டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் இவ் வழக்கு பிற்பகல் இரண்டு மணிக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. வாதிக்கு டி. வி. ஸ்ரீநிவாசய்யங்காரும், எதிரிக்கு பாரிஸ்டர் ஜியார்ஜ் ஜோசப்

யும் ஆஜாராகி இருந்தனர். வாதி சரியாக இரண்டு மணிக்குக் கூட்டில் ஏற்றப்பட்டார். எதிரி குற்றச்சி கொடுத்து அமர்த்தப்பட்டார். முதலில் வாதி விசாரணை துவங்கப்பட்டது. அதன் விபரம் வருமாறு:—

வாதியின் விசாரணை.

டி. சி:—இவ்வழக்குத் தொடர்ந்திருக்கும் சிதம்பரம் செட்டியார் என்பவர் தாங்கள் தானோ?

வாதி.—ஆம்.

டி. சி.—டிஸ்ட்ரிக்ட் போர்டில் எத்தனை மாதத்திற்கு ஒரு முறை கூட்டம் கூடுகிறது வழக்கம்?

வாதி.—இரண்டு மாதத்திற்கு ஒரு முறை.

டி. சி:—டிஸ்ட்ரிக்ட் போர்டு மீட்டிங்குகளுக்கு எத்தனை மாதம் சேர்ந்தாப்போல் போகத் தவறினால் மெம்பர் ஸ்தானத்தை இழப்பது?

வாதி:—மூன்று மாதக் கூட்டங்களுக்குச் சேர்ந்தாப்பிலே போகாட்டா மெம்பர் வேலை போய்விடும்.

டி. சி:—மூன்று மாதம் எதுமுதல்?

வாதி:—கடைசியாக வந்திருந்த கூட்டத் தேதியிலிருந்து மூணுமாதம்.

டி. சி:—நீங்கள் மூன்றுமாதக் கூட்டங்களுக்குப் போகாமலிருந்ததுண்டா?

வாதி:—ஆம்.

டி. சி:—எந்தெந்தக் கூட்டங்களுக்குத் தாங்கள் போகவில்லை?

வாதி:—௧௯௨௫-௵ ஆகஸ்டு மாதம் ௩-௳ ஒரு கூட்டம் நடந்தது. அதுக்குப் போனேன். அதே வருஷம் செப்டம்பர்-௴ ௧௨-௳ ஒரு கூட்டம் நடந்தது. அதுக்குப்போகலே. அதற்கப்பறம் நவம்பர் ௨௦-௳ ஒரு கூட்டம் நடந்தது. அதிலே தான் என்னை ரெஸ்டோர் செய்யப்பட்டது.

டி. சி:—நீங்கள் பெரும்பாலும் கூட்டங்கட்குப் போகாமலிருக்கிறதில்லையல்லவா?

வாதி:—இடை இடையே எப்பவாவது போகாமலிருப்பேன்.

டி. சி:—நீங்கள் மட்டுந்தான் அந்தக் கூட்டத்தில் ரெஸ்டோர் செய்யப்பட்டீர்களா? வேறு யாரும் உண்டா?

வாதி:—என்னைத் தவிர இன்னம் ஏழு பேர்கள் ரெஸ்டோர் செய்யப்பட்டார்கள்.

டி. சி:—இவர்களில் நியமிக்கப்பட்டவர்கள் எத்தனை? எலக்ஷனில் வந்தவர்கள் எத்தனை?

வாதி:—நாலுபேர் எலக்ட் பண்ணினவர்கள். நாலு பேர் நாமினேஷன் பண்ணப்பட்டவர்கள்.

டி. சி:—அவர்களில் உங்களைத் தவிர பட்டதாரிகள் உண்டா?

வாதி:—இல்லை. நான் ஒருவன் தான்.

டி. சி:—உங்களுக்கு என்ன பட்டம் தந்திருக்கிறார்கள்?

வாதி:—ராவ்பகதூர் பட்டம்.

டி. சி:—"இவரும் இவர் போன்றாரும் சபைகட்குச் சென்றுவிட்டாலும் பேசுவதென்ற கெட்ட வழக்கம் இவர்களிடம் கிடையாது" என்று எழுதி இருப்பது நல்லெண்ணத்தோடேதானே எழுதியிருக்கிறார்கள்?

வாதி:—பேசுவது கெட்ட வழக்கமா? நல்லது தானே. வேணுமிண்ணே கேலி பண்ணி எழுதி யிருக்காக.

டி. சி:—நீங்கள் கூட்டங்களிலே பேசுகிறதே இல்லையா?

வாதி:—பேசவேணுமிண்ணு அவசியம் நேர்ந்தபோதெல்லாம் பேசியிருக்கிறேன்.

டி. சி:—சபையென்றால் எதெது?

வாதி:—சபை என்றால் யூனியன் போர்டு தாலூகா போர்டு, டிஸ்ட்டிரிகட்டுபோர்டு இன்னும் இதைச் சேர்ந்தவைகள்.

(இவ்விடத்தில் ஜோசப் "சபைகள்" என்று எழுதியிருப்பது டிஸ்ட்டிரிக்ட் போர்டு கூட்டங்களை என்றும் அது தாலூகா போர்டு முதலியவற்றைக் குறிக்காதென்றும் ஆட்சேபித்தார்.)

டி. சி:—தாங்கள் தேவகோட்டை தாலூகா போர்டு மெம்பரா?

வாதி:—ஆம்.

டி. சி:—காரைக்குடி யூனியன் போர்டிலும் தாங்கள் மெம்பரும் பிரசிடெண்டுமா?

வாதி :—ஆம்.

டி. சி :—நீங்கள் டிஸ்ட்ரிக்ட் போர்டில் மெம்பரா?

வாதி :—ஆம்.

டி. சி :—கூட்டங்களில் உங்களுடைய அபிப்பிராயத்தைத் தெரிவிப்பதுதானே.

வாதி :—ஆம்.

டி. சி :—எந்தெந்த போர்டுகளில் பேசி இருக்கிறீர்கள்?

வாதி:—யூனியன் போர்டு, தாலூகாபோர்டு, ஜில்லா போர்டு, கான்பரென்சுக்கு நான் டெலிகேட்டாய்ப் போயிருந்த காலத்தில், சப் கமிட்டியில், எல்லாவற்றிலும் அவசியமான போதெல்லாம் பேசி இருக்கிறேன்.

டி. சி.:—"அதிகாரிகட்குச் சார்பாக ஓட்டுக்கொடுக்க மட்டும் தயாராக யாவருக்கும் முன்னதாக எழுந்துவிடுவார்கள்" என்று எழுதி இருப்பது சரியா?

வாதி:—அப்படி இல்லை. அதிகாரிகள் சொல்லுவது சரியாய் இருந்தால் ஒத்துக்கொள்ளுகிறது. பொது ஜனங்களுக்கு விரோதமாகச் சொன்னால் அதை ஒத்துக்கொள்ளுகிறதில்லை. என்னுடைய அபிப்பிராயத்தைத் தெரிவித்திருக்கிறேன்.

டி. சி.:—இவை உங்களைத்தான் குறிப்பிடுகிறதா? மற்றவர்களையும் குறிப்பிடுகிறதா?

வாதி:—என்னைமட்டும் தான் குறிப்பிடுகிறது.

டி. சி.:—"தாற்காலிகளை அலங்கரித்து அரசாங்கத்தார்களிடம் நல்ல பிள்ளைகள் என்று பெயர் வாங்கக்

கூடியவாறு நடந்து கொள்ளுவதே இவர்களது
வேலை" என்று சொல்லி இருப்பது சரியா?

வாதி:—அதெப்படிச்சரி. பூக்கிப்போட்டா நாற்காலி
களை அலங்கரிக்கிறார்கள். நான் ஒன்றும் வேலை
செய்யாமல் சும்மாபோய் உட்கார்ந்திருக்கிறேன்
என்று சொல்லுகிறார்கள்.

டி. சி:—தாங்கள் டிஸ்டிரிக்ட் போர்டு மெம்பரா?

வாதி:—ஆம்.

டி. சி:—டிஸ்டிரிக்ட் போர்டு கமிட்டிகளிலும் தாங்கள்
மெம்பரா?

வாதி:—சில கமிட்டிகளில் என்னையும் மெம்பராய்ப்
போட்டார்கள்.

டி. சி:—அந்த கமிட்டிகளில் மெம்பர் ஸ்தானம் வேண்
டுமென்று நீங்கள் விரும்பினீர்களா?

வாதி:—நான் வேணுமென்று கேட்கவில்லை. போர்
டாரே நியமித்தார்கள்.

டி. சி:—நீங்கள் எந்தெந்தக் கமிட்டிகளில் மெம்பராய்
இருந்தீர்கள்?

வாதி:—பையன்களுக்கு பிரீஸ்காலர்ஷிப் கமிட்டியி
லும், பட்ஜெட் கமிட்டியிலும்.

டி. சி:—அவைகளில் நடந்த கூட்டங்கட்கெல்லாம்
தாங்கள் சென்றீர்களா?

வாதி:—ஒவ்வொரு கூட்டம்தான் நடந்தது. அதுக
கெல்லாம் நான் போயிருக்கிறேன்.

டி. சி:—ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரேஸ்வராள் ஹைஸ்கூலுக்குத் தாங்கள் லைப் பிரஸிடெண்டா?

வாதி:—ஆமா. இலக்ஷ ரூபாய் கொடுத்துக் கட்டடம் கட்டிக்கொடுத்திருக்கிறேன்.

டி. சி:—தாங்கள் அந்த ஸ்கூலை இப்பொழுது நடத்தி வருகிறீர்களா?

வாதி.—ஆம்.

டி. சி.—வருஷாவருஷம் பணம் பத்தாவிட்டால் தாங்கள் தான் கொடுக்கிறதோ?

வாதி:—ஆமா. வருஷாவருஷம் ரூ000 நான் கொடுக்கிறேன்.

டி. சி:—டிஸ்டிரிக்ட் சகிண்டரி எஜுகேஷன் போர்டில் தாங்கள் மெம்பரா?

வாதி:—ஆமா.

டி. சி:—எலெக்ஷனுக்கு முன்னாலே தாங்கள் ஜனங்களிடத்திலே போய் அதைச் செய்துவிடுகிறேன், இதைச் செய்துவிடுகிறேன் என்று சொன்னதுண்டா?

வாதி:—இல்லவே இல்லை.

டி. சி.—ஜனங்களுக்கு விரோதமாக நீங்கள் ஓட்டுக் கொடுத்ததுண்டா?

வாதி:— இல்லை.

டி. சி:—கூட்டங்களிலே அதிகாரிகள் பக்கம் சேர்ந்து அவர்கள் பக்கமே பேசினதுண்டா?

வாதி:—அவர்கள் சொல்லுவது நியாயமாய் இருந்தால் அவர்களோடு சேர்ந்து கொள்ளுவேன். இல்லாவிட்டால் இல்லை.

டி. கி:—பட்டம் வாங்குவதற்கு உங்கள் மெம்பர் ஸ்தானங்களை எல்லாம் உபயோகித்தீர்களா?

வாதி:—இல்லை.

டி. கி:—காரைக்குடிக்கும் குன்னக்குடிக்கும் ரோட்டுப் போட்டார்களா?

வாதி:—ஆமா. அதற்குச் செலவு ச0000. அதில் உ0000 நான் கொடுத்தேன்

டி. கி:—அதற்கு முயற்சி எல்லாம் யார்?

வாதி:—நான்தான் பணமெல்லாம் சேர்த்து ரோட்டுப் போட்டது.

டி. கி:—குன்னக்குடி பெரிய ஸ்தலமா? ஜனப்போக்குவரவு அதிகமாய் உண்டா?

வாதி:—ஆமா. பெரிய ஸ்தலம். உத்ஸவகாலத்தில் ஆயிரக்கணக்கான ஜனங்கள் போவார்கள். அவசியமான ரோடு அது.

டி. கி:—பர்மாவிலுள்ள பாட்டர்ஸிட் அண்டு சைக்கு வெல்பேர் அசோசியேஷனுக்குத் தாங்கள் கட்டிடம் கட்டிக்கொடுத்திருக்கிறீர்களா?

வாதி:—ஆமா.

டி. கி:—அது எவ்வளவு ரூபாய்.

வாதி:—க000 ரூபாய் கொடுத்திருக்கேன். இன்னம் உ000 ரூபாய் கொடுக்கப்போறேன்.

மாஜிஸ்திரேட்: கொடுத்ததை மட்டும் சொல்லுங்கள்.

வாதி: க000 ரூபாய்

டி. சி: அதிலே நீங்கள் பிரசிடெண்டா?

வாதி: முன்னே பிரசிடெண்டா யிருந்தேன். இப்ப வைஸ் பிரசிடெண்ட்.

டி. சி:—தங்கள் பள்ளிக்கூடத்திற்குக் கவர்னர் வந்தாரோ?

வாதி:—ஆமா, எ-அ வருடங்கட்கு முன் பெண்லண்ட துரை அவர்கள் வந்து அஸ்திவாரக்கல் போட்டார்கள். வெல்லிங்டன் துரை அவர்களும், கோஷன் துரை அவர்களும் வந்திருக்கிறார்கள்.

மாஜிஸ்ட்ரேட்: பள்ளிக்கூடத்திற்குக் கவர்னர் வருவது ஒரு கௌரவமா?

(நகைப்பு)

டி. சி:—மந்திரிகள் யாரும் வந்திருக்கிறார்களா?

வாதி:—ஆமா; பாத்ரோ மந்திரி வந்திருக்கிறார்.

டி. சி:—தங்களுக்கு வியாபாரங்களுண்டோ?

வாதி:—வியாபாரக் கடைகளெல்லாம் உண்டு.

டி. சி:—எவ்வளவு இன்கம்டாக்ஸ் கட்டுகிறீர்கள்?

வாதி:—வருஷத்திற்கு ரு000 ரூபாய்.

டி. சி:—இந்தப்பத்திரிகை எங்கிருந்து வெளிவருகிறது?

வாதி:—காரைக்குடியிலிருந்து.

டி. சி:—யார் வெளியிடுவது?

வாதி:—ராய. சொக்கலிங்கஞ் செட்டியார்.

டி. சி:—அவர் உங்கள் ஜாதியைச்சேர்ந்தவர்தானா?

வாதி:—ஆமா.

டி. சி:—அவரும் உங்கள் ஊரில்தான் வசிக்கிறாரா?

வாதி:—ஆமா.

டி. சி:—இந்தப் பத்திரிகையை வாசிப்பவர்கள் ரொம்ப இருக்கிறார்களா?

வாதி:—காரைக்குடியிலும் மற்ற இடங்களிலும் ரொம்ப இருக்கார்கள்.

டி. சி:—இந்தப் பத்திரிகையில் உங்களைப்பற்றி எழுதியிருப்பதால் உங்களுக்கு ஏதாவது கௌரவக் குறைவு உண்டா?

வாதி:—ஆமா. ஜனங்களெல்லாம் வந்து "உங்களைப் பற்றிப் பத்திரிகையில் நன்றாய் எழுதவில்லையே, கூட்டங்களிலெ சும்மா உக்கார்ந்திருக்கியளாமில" என்று கேட்டார்கள். அதனாலே எனக்கு அவமானமாய் இருக்கு. என் கௌரவம் போச்சு.

டி. சி:—உங்களுக்கும் எதிரிக்கும் இதற்குமுன் ஏதாவது மனஸ்தாபம் உண்டா?

வாதி:—ஆமா உண்டு.

டி. சி:—பத்திரிகையில் எழுதும் முந்தியா பிந்தியா?

வாதி:—முந்தி.

டி. சி:—எப்படி மனஸ்தாபம்?

வாதி:—பத்திரிகையில் எங்களுடைய ஜாதியைப்பற்றியும், கவர்ன்மெண்டுக்கு விரோதமாகவும், சங்க-

ராசார்யஸ்வாமிகளுக்கு விரோதமாகவும் எழுதி னூர்கள். நான் அவர்களைக் கூப்பிட்டனுப்பி இரண்டு மூன்று தடவைகளில் அப்படியெல்லாம் செய்யக்கூடாது என்று சொன்னேன். அதை மறுத்து "என்னிஷ்டம்போல்தான் செய்வேன்" என்று சொல்லி இருக்கார்கள்.

டி. சி:—யூனியன் போர்டு மீட்டிங்குகளுக்கு அஜெண்டா அவர்களுக்கு அனுப்புவதுண்டா ?

வாதி:—ஆமா: முன்னே அனுப்பிவந்தேன். பின்னுடி அவுக எஜண்டு தப்பாய் பத்திரிகையில் எழுதிவிட்டமையால் அப்பறம் அனுப்புகிறது கிடையாது.

டி. சி:—அதற்காக அவர்கள் கடிதம் ஏதும் எழுதி இருக்கிறார்களா ?

வாதி:—ஆமா. முதலில் ஒரு கடுதாசி எழுதினூர்கள் "என் அஜண்டா அனுப்பவில்லை" என்று. அதுக்கு பதில் பண்ணுதினாலே ரிஜிஸ்டர் நோட்டீசு விட்டார்கள்.

டி. சி:—அந்த லெட்டர்களிலே கையெழுத்துப் போட்டிருப்பது யார்?

வாதி:—மானேஜர் அருணுசலஞ் செட்டியார்.

டி. சி:—அவர் இங்கே வந்திருக்கிறாரா ?

வாதி:—ஆமா, வந்திருக்கிறார்.

இப்பொழுது சரியாக ங இ—மணி. இதோடு வாதியின் சீப் விசாரணை முடிந்தது.

குறுக்கு விசாரணை நடத்தும்படி மாஜிஸ்டிரேட் சொன்னார்.

குறுக்கு விசாரணை நடத்த இன்று நேரம் போதாதென்றும், சில சாட்சிகளை இப்பொழுது விசாரிக்கலாமென்றும் வாதியின் குறுக்கு விசாரணையை ஒத்தி வைக்கவேண்டுமென்றும் ஜோசப் கேட்டுக்கொண்டதை மாஜிஸ்டிரேட் அநுமதித்தார். பிறகு வாதியின் முதல் சாக்ஷி திரு. கோயில்பிள்ளை (சப்-டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட், தேவகோட்டை) விசாரிக்கப்பட்டார். அதன் விபரம் பின் வருமாறு:—

கோயில்பிள்ளை விசாரணை

டி. சி:—தாங்கள் தான் தேவகோட்டைத் தாலூகா போர்டு பிரசிடெண்டோ?

கோ:—ஆம்

டி. சி:—எவ்வளவு காலமாக?

கோ:—இடையில் நான் லீவிலிருந்த காலம் தவிர ௧௯௨௪-ஆம் செப்டம்பர்-மீ முதல் நாளிது வரையிலும் பிரசிடெண்டாக இருந்துவருகிறேன்.

டி. சி:—வாதியை உங்களுக்குத் தெரியுமா?

கோ:—தெரியும். அவர் தாலூகா போர்டில் ஒரு மெம்பர்.

டி. சி:—அவர் என்ன மௌனம் சாதிக்கிற மெம்பரா?

கோ:—அல்ல. விவாதத்தில் கலந்துகொண்டிருக்கிறார்.

டி. சி:—அவர் புத்திசாலித்தனமான அபிப்பிராயங்கள் கூறி இருக்கிறாரோ?

கோ:—ஆம்.

ஜோசப் :—வாதி ஏதேனும் கேள்வி கேட்டிருக்கிறாரா?

கோ. :—அவர் கேள்வி கேட்டிருப்பதாக எனக்கு ஞாபகமில்லை.

ஜோசப் :—உங்களைச் சபையில் எதிர்த்துப் பேசுவதுண்டா ?

கோ. :—அவர் எதிர்த்துப் பேசுபவராக நான் கருதவில்லை.

ஜோசப் :—காரைக்குடி யூனியன் போர்டின் அங்கத்தவர்களின் சங்கியை என்ன ?

கோ. :—கரு அங்கத்தவர்கள்.

ஜோசப் :—அதில் உங்களால் நியமிக்கப்பட்டவர் எத்தனைபேர் ?

கோ. :—மூவர்,

ஜோசப் :—அவர்கள் எந்த எந்த வகுப்பைச் சேர்ந்தவர்கள் ?

கோ. :—ஒருவர் முகமதியர்; ஒருவர் வாதி; ஒருவர் வல்லம்பர்.

ஜோசப் :—சிறுபான்மையாகவுள்ள வகுப்பினரை ஏன் நியமிக்கவில்லை ?

கோ. :—அவ்வகுப்புக்களில் தகுதியானவர்கள் இருந்திருக்கமாட்டார்கள்.

ஜோசப் :—தேர்ந்தெடுக்கப் பட்டவர்களில் பெரும்பான்மையோர் எந்த வகுப்பைச்சேர்ந்தவர்கள் ?

கோ. :—நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள்.

ஜோசப் :—அப்படியிருக்க வாதியை என் நியமித்தீர்கள் ?

கோ :—அவரை நியமிப்பதால் காரைக்குடி பொது

ஜனங்களின் நன்மை பாதுகாக்கப்படுமென கருதி னேன்.

ஜோசப் :—வாதியின் மருமகன் ராமனுதன் செட்டி யாரை உங்கட்குத் தெரியுமா ?

கோ :—இராமனுதன் செட்டியார் என்ற ஒருவரை நான் அறிவேன்.

ஜோசப் :—அவரை கௌரவ பெஞ்சு மாஜிஸ்ட்ரேட் டாக நியமிக்கவேண்டுமென நீங்கள் சிபார்சு செய்தீர்களா ?

கோ :—சிபார்சு செய்ததாக எனக்கு ஞாபகமில்லை.

ஜோசப் :—இராமானுஜய்யங்கார் என்பவர் யார் ?

கோ :—அவர் பள்ளிக்கூடத்தில் ஒரு வாத்தியார்.

ஜோசப் :—அவரை கௌரவ பெஞ்சு மாஜிஸ்ட்ரேட் டாக நியமிக்க நீங்கள் சிபார்சு செய்ததுண்டா ?

கோ :—ஆம். எட்மாஸ்ட்டர் வகித்துவந்த ஸ்தானத் திற்கு அவரைச் சிபார்சு செய்தேன்.

ஜோசப் :—மரு. சுப்பையா செட்டியாரை உங்களுக் குத் தெரியுமா ?

கோ :—தெரியும்.

ஜோசப் :—அவரை யூனியன் போர்டு மெம்பராக நீங் கள் நியமனம்செய்தீர்களா ?

கோ :—ஆம்.

ஜோசப் :—அவரை நியமிக்கும்படி வாதி சிபார்சு செய் தாரா ?

கோ :—அவரை நியமிப்பதென நான் தீர்மானித்த பிறகு வாதியை அது விஷயமாகக் கலந்துகொண் டேன்.

ஜோசப் :—வாதி என்ன சொன்னர் ?

கோ :—அவர் ஏதும் ஆக்ஷேபணை கூறவில்லை.

ஜோசப் :—தாழ்ந்த வகுப்பாரில் அந்தப் பதவிக்கு யாரும் அகப்படவில்லையா ?

கோ :—அகப்படவில்லை.

ஜோசப் :—இவரை நியமித்ததற்குக் காரணமென்ன ?

கோ :—இவர் சிறுபான்மையோரான வியாபார வகுப்பைச் சேர்ந்தவர். பொது ஜன விஷயங்களில் ஊக்கமுள்ளவர்.

ஜோசப் :—இவர் தாலூக்கா போர்டில் போட்டியன்னியில் தேர்ந்தெடுக்கப்பட்டாரா ?

கோ :—ஆம்.

மறு விசாரணை.

டி, சி. :—தேவகோட்டை தாலூக்காபோர்டில் ஆயுர்வேத வைத்யசாலை ஒன்று திறக்கவேண்டுமென வாதி ஆலோசனை கூறியதுண்டா ?

கோ :—ஆம். நான் ஆஜராகியிருந்த கூட்டமொன்றில் அம்மாதிரி யோசனை கூறினர்.

டி. சி. :—ஆயுர்வேத வைத்யசாலையைப்பற்றி வேறு யாரும் ஆலோசனை கூறினர்களா ?

கோ :—முதல் முதல் யோசனை கூறியவர் வாதிதான். அதற்கு முன் இதைப்பற்றிய பேச்சே வந்ததில்லை.

டி. சி. :—கோட்டைப்பட்டணத்தில் வைத்யசாலை வைப்பதெனமுடிவுசெய்யப்பட்டது எப்போது?

கோ :—அடுத்த கூட்டத்தில் தான் அவ்விஷயம் முடிவு செய்யப்பட்டது.

டி. சி. :—வேறு அங்கத்தினர் யாரும் கேள்வி கேட்டிருக்கிறார்களா ?

கோ :—இல்லை.

மணி ௪இ ஆயிற்று. மாஜிஸ்திரேட் சிற்றுண்டி அருந்தச் சிறிது நேரம் கோர்ட்டுக் கலைந்தது. மாஜிஸ்திரேட்டும் திரு. கோவில்பிள்ளையும் சேம்பரில் சிற்றுண்டியருந்தினர். ௫—௧௦-க்கு மீண்டும் கோர்ட்டுக் கூடியது.

அடுத்தாற்போல் தேவகோட்டை வக்கீல் சி. சுந்தரமய்யர் வாதியின் இரண்டாவது சாக்ஷியாக விசாரிக்கப்பட்டார்.

சுந்தரமய்யர் விசாரணை.

டி. சி. :—தாங்கள் தானே சி. சுந்தரமய்யர் ?

சுந் :—ஆம்.

டி. சி. :—தங்கட்கு வயதென்ன ?

சுந் :—௪௯.

டி. சி. :—தங்கள் தொழிலென்ன ?

சுந் :—நான் தேவகோட்டையில் வக்கீல் தொழில் நடத்துகிறேன்.

டி. சி. :—நீங்கள் எவ்வளவு காலமாய்த் தேவகோட்டையில் தொழில் நடத்திக்கொண்டு வருகிறீர்கள் ?

சுந் :—௧௯௧௦-ம் வருடம் முதல் (இடையில் சிறிது காலம் நீங்கலாக) பதினைந்து வருடமாக தேவகோட்டையில் வக்கீல் தொழில் நடத்தி வருகிறேன்.

டி. சி. :—வாதியை உங்கட்குத் தெரியுமா ?

சுந் :—ஆம்; தெரியும்.

டி. சி. :—அவர் தேவகோட்டை தாலூக்காபோர்டு மெம்பரா ?

சுந் :—ஆம்.

டி. சி. :—நீங்கள் தேவகோட்டை தாலூக்கா போர்டு மெம்பரா ?

சுந் :—ஆம்.

டி. சி. :—நீங்கள் தேவகோட்டை தாலூக்கா போர்டில் வைஸ் பிரசிடெண்டாகவிருந்திருக்கிறீர்களா ?

சுந் :—ஆம் சில ஆண்டுகள் வைஸ்பிரசிடெண்டாக இருந்திருக்கிறேன்.

டி. சி. :—நீங்களும் சிதம்பரம் செட்டியாரும் தாலூக்கா போர்டுக் கூட்டங்கட்குப் போவதுண்டா ?

சுந் :—ஆம்.

டி. சி. :—நீங்களும் சிதம்பரம் செட்டியாரும் தேர்ந்தெடுக்கப்பட்டீர்களா ?

சுந் :—ஆம்; கக௨௪-ம் வருஷம் நவம்பர் மாதம் நானும் சிதம்பரம் செட்டியாரும் தேவகோட்டை தாலூக்கா போர்டிலிருந்து இராமனாதபுரம் ஜில்லாபோர்டு அங்கத்தவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டோம்.

டி. சி. :—வாதி கூட்டங்களில் விவாதிப்பதுண்டா ?

சுந் :—ஆம்; வாதிப்பார்.

டி. சி. :—வாதி தன் அபிப்பிராயத்தைத் தெரிவிக்கக் கூடிய சக்தியுடையவரல்லவா ?

சுந் :—ஆம்.

டி. சி. :—லோகல்போர்டு கான்பரன்சுக்கு நீங்களும் வாதியும் ஆஜராயிருந்தீர்களா ?

சுந் :—௧௯௨௪-ம் வருடம் மதுரையில் நடந்த லோகல் போர்டு கான்பரன்சுக்கு நானும் வாதியும் தாலூக்கா போர்டு பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு கான்பரன்சுக்குப் போனேம்.

டி. சி. :—கான்பரன்சில் நியமித்த கமிட்டியில் வாதி ஒரு அங்கத்தினரா ?

சுந் :—ஆம்.

டி. சி. :—கான்பரன்சில் நீங்கள் ஏதும் யோசனை கூறியதுண்டா ?

சுந் :—ஆம். தாலூக்கா போர்டுகட்கு வைஸ்பிரஸிடெண்டு தேர்ந்தெடுக்கப்படுவதுபோல யூனியன் போர்டுகட்கும் வைஸ்பிரஸிடெண்டு தேர்ந்தெடுக்கப்படவேண்டுமென்று நான் ஆலோசனை சொன்னேன்.

டி. சி. :—வாதி ஏதும் யோசனை கூறினரா ?

சுந் :—யூனியன் போர்டுகள் உள்பட லோகல்போர்டு சபைகள் எதற்கும் கர்ணங்கள் தேர்தலுக்கு நிற்கத் தகுதியற்றவர்கள் எனச் செய்யப்படவேண்டும் என அவர் யோசனை கூறினர்.

டி. சி. :—வாதி ஏதும் வேறு யோசனைகள் கூறியதுண்டா ?

சுந் :—தொழில்வரி சம்பந்தமான விஷயங்களைப்பற்றியும் என்குரோச்மெண்டு சம்பந்தமான விஷயங்களைப்பற்றியும் அவரிடம் யோசனை கேட்கப்படும். அவர் அவ்விஷயங்களை விசாரித்து அறிவிப்

பார். இது சம்பந்தமாக போர்டுக்குவரும் விஷயங்களிலும் கலந்துகொண்டு வேலை செய்வார்.

டி. சி. :—வாதி பொது விஷயங்களில் ஊக்கமுள்ளவரா?

சுங் :—ஆம்.

குறுக்கு விசாரணை.

ஜோசப் :—லோகல் போர்டு கான்பரன்ஸ் சட்டப்படி அமைக்கப்பட்டதா?

சுங். :—இல்லை.

ஜோசப் :—கான்பரன்ஸில் வாதி என்னசெய்தார்?

சுங். :—கர்ணங்கள் சம்பந்தமாய்க் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை ஆமோதித்தார்.

ஜோசப் :—எப்படி ஆமோதித்தார்? சாதாரணமாகவா? அல்லது பிரசங்கம் செய்தா?

சுங். :—பிரசங்கம் பேச்சு முதலியன செய்யவில்லை. சாதாரணமாக ஆமோதித்தார்.

ஜோசப் :—அந்த தீர்மானத்தைப் பிரப்போஸ் செய்தவர் யார்?

சுங் :—எனக்கு ஞாபகமில்லை.

ஜோசப் :—அவர் கான்பரன்சில் நடந்த விவாதத்தில் கலந்துகொண்டாரா?

சுங் :—இல்லை.

ஜோசப் :—கான்பரன்சில் ஒரு சப் கமிட்டி நியமிக்கப்பட்டதா?

சுங். :—ஆம்.

ஜோசப் :—அக்கமிட்டியில் தாங்கள் ஒரு அங்கத்தவரா?

சுந் :—இல்லை.

ஜோசப் :—அங்கு என்ன நடந்தது ?

சுந் :—எனக்குத் தெரியாது ?

ஜோசப் :—வாதி கான்பரன்சில் வேறு என்ன என்ன செய்தார் ?

சுந் :—வைஸ் பிரசிடெண்டு சம்பந்தமாக வந்த தீர்மானத்தையும் வாதி ஆமோதித்தார்.

ஜோசப் :—அதுபற்றி ஏதும் பேசினாரா ?

சுந் :—ஏதுவும் பேசவில்லை.

ஜோசப் :—தாலுக்கா போர்டுக் கூட்டங்களில் வாதி பேசுவதுண்டா ?

சுந் :—எனக்குத் தெரிந்தவரை வாதி பேசியதில்லை.

ஜோசப் :—அவர் தன் அபிப்பிராயத்தைத் தெரிவித்ததுண்டா ?

சுந். :—தக்க காரணங்களுடன் தன் அபிப்பிராயத்தை தெரிவிப்பதுண்டு.

ஜோ :—அப்படி அபிப்பிராயத்தைத் தெரிவித்தகாலத்தின் நீண்டநேரம் எவ்வளவிருக்கும் ?

சுந். :—ஐந்து நிமிடங்கள் இருக்கும்.

ஜோசப்:—எந்த சந்தர்ப்பத்தில் அவ்வாறு நிகழ்ந்தது?

சுந்.—எந்த விஷயத்தைப்பற்றி என்பது எனக்கு ஞாபகமில்லை.

ஜோசப் :—வாதி டிஸ்டிரிக்ட் போர்டில் ஏதும் செய்திருக்கிறாரா ?

சுந் :—எனக்கு ஞாபகமில்லை.

ஜோசப் :—டிஸ்டிரிக்ட் போர்டுக் கூட்டங்கட்கு நீங்கள் இருவரும் சேர்ந்தாற்போல எத்தனைமுறை போயிருக்கிறீர்கள் ?

கர் :—இரண்டு மூன்று கூட்டங்கட்கு ஒன்றாய்ச் சென்றிருந்தோம்.

ஜோசப் :—அப்போது என்ன விஷயங்கள் அங்கு விவாதிக்கப்பட்டன ?

கர் :—அது எனக்கு ஞாபகமில்லை.

ஜோசப் :—வாதி விவாதத்தில் கலந்துகொண்டாரா ?

கர் :—அக்காலங்களில் வாதி விவாதங்களில் கலந்துகொண்டாரென நான் சொல்லமுடியாது.

ஜோசப் :—அவர் ஆதரிக்காத விஷயம் ஏதும் உண்டோ ?

கர் :—அதுவும் எனக்கு ஞாபகமில்லை.

ஜோசப் :—அவர் பொது ஜனங்கட்கு ஏதும் நன்மை செய்திருக்கிறாரா ?

கர் :—தன் பணத்தையும் செல்வாக்கையும் கொண்டு ஜனங்கட்கு நன்மை செய்திருக்கிறார்.

ஜோசப் :—அப்படிச் செய்த நன்மைகட்கு ஏதும் உதாரணம் கூறமுடியுமா ?

கர் :—பொதுஜன வேலையில் மாறுபட்டுச் சென்ற அங்கத்தினர்களைத் திருத்தி ஒரு சமாதான முடிவு செய்வார்.

ஜோசப் :—அதிகாரிகள் சொல்கிறபடி தானே வாதி காரியங்களெல்லாம் செய்கிறது ?

கர் :—அதிகாரிகளால் அங்கீகரிக்கப்பட்ட முறைப்படி தான் காரியங்கள் செய்வார்.

ஜோசப் :—தாங்கள் ஊழியன் பத்திரிகையை வாசிப்பதுண்டா ?

கர் :—இல்லை.

ஜோசப் :—தாலூகா போர்டில் டிஸ்டிரிக்ட் போர்டு மெம்பர் எலக்ஷன் நடந்தபோது அவர் உங்களை ஆதரித்ததுண்டா ?

சுந் :—அவர் என்னை ஆதரித்தாரா, அல்லவா என்பது எனக்கு ஞாபகமில்லை. நான் அவரை ஆதரித்தேன்.

ஜோசப் :—உங்களை ஆதரிக்கும்படி நீங்கள் அவரைக் கேட்டுக்கொண்டீர்களா ?

சுந் :—இல்லை.

ஜோசப் :—அந்த எலக்ஷனில் போட்டியிருந்ததுண்டல்லவா ?

சுந் :—ஆம்.

ஜோசப் :—ஆகையால் நீங்கள் போட்டியில்தானே ஸ்தானம் பெறவேண்டியிருந்தது.

சுந் :—ஆம்.

(மறு விசாரணை.)

டி. சி. :—வாதி யோசனைகூறியது கான்பரன்ஸில் தானே ?

சுந் :—ஆம்.

டி. சி. :—அந்த கான்பரன்ஸ்க்கு மந்திரியும் அரசாங்க அதிகாரிகளும் கூட வந்திருந்தார்களா ?

சுந் :—ஆம்.

மணி கூஇ ஆயிற்று. இதோடு இவ்வழக்கின் இன்றைய நடவடிக்கை முடிந்தது. அடுத்த வாயிதா மே-மீ௨௨ (சித்திரை ௨௨) செவ்வாய்க்கிழமை மதுரையிலிருந்து ௧அ மைல் தூரமுள்ள காரியா

பட்டி என்னும் ஊரில் போடப்பட்டிருக்கிறது. வாதியை விசாரிக்கும்பொழுது அவர் தமிழிற் சொன்னவைகளை டி. சி. ஸ்ரீனிவாசய்யங்கார் ஆங்கிலத்தில் திரித்துக் கூறியவற்றை இடையே பலமுறை ஜோசப் ஆட்சேபித்து மாஜிஸ்ட்ரேட் குமாஸ்தாவை மொழி பெயர்க்கும்படி கூறினார். டி. சி. மொழிபெயர்ப்பதை நிறுத்தவில்லை. பிறகு ஜோசப் "நான் ரொம்ப நேரமாய்ச் சொல்லிக்கொண்டிருக்கிறேன். நீங்கள் கேட்கவில்லை. இது முறையல்ல" என்று கண்டிப்பாகச் சொன்னார். அதற்கு டி. சி. கோபத்துடன் "நான் எத்துணையோ ஜட்ஜுகட்கு முன் இப்படிச் செய்திருக்கிறேன். அங்கு யாரும் தடுக்கவில்லை" யென்று கூறினார். "அவ்வழக்குகளில் நான் ஆஜராகியிருந்தால் கட்டாயம் தடுத்தேயிருப்பேன்" என்று ஜோசப் கூறினார். பிறகு கோர்ட்டுக் குமாஸ்தாவே மொழிபெயர்த்தார்.

கடைசியில் மாஜிஸ்ட்ரேட் சமாதானமாகப் போகும்படி சொன்னார். அதற்கு வாதி வக்கீல் டி. சி. "நாங்கள் ஒத்துக்கொள்கிறோம்; எழுதினது தவறு என்று ஏற்றுக்கொண்டால் போதும்" என்றார். எதிரியின் வக்கீல் ஜோசப் "நீங்கள் இவரை வேண்டுமென்று குறித்து ஒன்றும் எழுதவில்லை; பொதுநலம் பற்றி எழுதியதில் ஒன்றும் தவறில்லை" என்று இயம்பினார்.

வாதியின் சாக்ஷிகளாக குறிக்கப்பட்டவர்களுள் கானாக்குடி திருவாளர்களான முரு. வீர. சாமிநாதஞ் செட்டியார், மெ. நா. சுப. நாகப்ப செட்டியார், மெ.

செ. ச. சிதம்பரம் செட்டியார், யூனியன் ஆபீஸ் ஹெட்கிளர்க்கு நடேசய்யர் முதலியோர் வந்திருந்தும் விசாரிக்கப்படவில்லை.

வாயிதா மேற்குறித்தவாறு சஉ முதல் தொடர்ந்து இரண்டு அல்லது மூன்று நாட்கள் நடைபெறக் கூடும்.

திரு. ராவ்பகதூர் ஏ. வி. பி. எல். சிதம்பரம் செட்டியார் அவர்கள் "ஊழியன்" ஆசிரியர் திரு ராய. சொக்கலிங்கன் அவர்களின் மீது தொடர்ந்திருக்கும் அவதூறு வழக்கு ராமநாதபுரம் டெபுடி மாஜிஸ்டிரேட்டார் அவர்களால் விசாரிக்கப்பெற்று வருகிறது என்பதை நண்பர்கள் அறிவார்கள். ஷை வழக்கு உகூ—ரு—உகூ உயில் ராமனாதபுரத்தில் விசாரணைக்குப் போடப்பட்டிருந்தது. வாதியும் அவர்தம் வக்கீல்களான பாரிஸ்ட்டர் அப்பாஸ் அலி, டி. சி. சீனிவாசய்யங்கார், கிருஷ்ணசாமி அய்யங்கார், எ. சோமசுந்தரமய்யர், டி. சி. மைத்துனர் ஆகிய ஐவரும், சாக்ஷிகளான திவான்பகதூர் முருகப்ப செட்டியாரும் சிறுவயல் பெரியணன் செட்டியாரும் தேவகோட்டையில் ஒரு காலத்தில் டிப்டி கலெக்ட்டராகவிருந்த மாணிக்கம்பிள்ளையும் உரு—ரு—உகூ-ந் தெய்தியன்று மாலையில் இராமனாதபுரம் வந்து சேர்ந்தனர். எதிரியின் காரியஸ்தரும் அன்று காலை எக்ஸ்பிரசில் இராமனாதபுரம் வந்து சேர்ந்தார். எதிரியும் அவர் நண்பர்களும் வாய்தாவன்று முற்பகல் க௦—ரு௦ மணிக்கு மூனறு

சொந்த இயந்திர வண்டிகளில் வந்து சேர்ந்தனர். வாதியும் அவர்தம் வக்கீல்களும் அவர்தம் சாக்ஷிகளும் இராமனுதபுரம் ராஜா அவர்கள் பங்களாவில் தங்கியிருந்தனர். எதிரியும் அவர்கள் நண்பர்களும் தேவகோட்டை திரு. அழ. சித. லெ. ராம. பங்களாவில் தங்கியிருந்தனர். எதிரியின் வக்கீல் பாரிஸ்ட்டர் ஜியார்ஜ் ஜோசப் அவர்கள் அன்று பகல் ௨-௩௫ மணிக்கு போட்மெயிலில் வந்து சேர்ந்தார். ௨-௩௦ மணிக்கு கோர்ட்டு கூடியதும், வாதி திரு. சிதம்பரம் செட்டியார் அவர்கள் எதிரியின் வக்கீல் பாரிஸ்ட்டர் ஜியார்ஜ் ஜோசப் அவர்களால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார். குறுக்கு விசாரணை ௨௯—௫—௨௯௨ பிற்பகல் ௨-௩௦ மணிக்குத் துவக்கி, ௬ மணிக்கு முடியாமற்போகவே, கோர்ட்டு அன்றைத்தினம் கலேந்தது. மறுநாள் காலே ௮ மணிக்கு மீண்டும் குறுக்கு விசாரணை ஆரம்பம். ௧௧ மணிக்கு கோர்ட்டு கலேந்தது. மீண்டும் ௩ மணிக்குத் துவக்கம். இறுதியில் குறுக்கு விசாரணை மாலே ௬-௩௦ மணிக்கு முடிவடைந்தது. எனவே வாதி அவர்கள் சுமார் ௧௦ மணி நேரம் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

ஸ்ரீமான் பாரிஸ்டர் ஜோசப் அவர்கள் வாதியைக் குறுக்கு விசாரணை செய்யுமுன், ராமனுதபுரம் ராஜாவை வாதியின் சாட்சியாகச் சேர்த்துக்கொள்ள உத்திரவாகவேண்டும் என்று வாதியின் வக்கில் அப்பாஸ் அலி அவர்கள் கோர்ட்டாருக்கு மனுப்பண்ணிக் கொண்டார். ஜோசப் அவர்கள் இந்த மனுவை எதிர்த்துப் பேசுகையில், வாதியின் இந்த சாட்சி ஜாப்தா

எடுபாவது ஜாப்தா. இவ்வாறு போய்க்கொண்டிருந்தால், இதற்கு முடிவு காண முடியாது. சாட்சியச் சட்டத்துக்கு இது நேர் விரோதமானது. இதை நான் ஆட்சேபிக்கிறேன் என்றார். மாஜிஸ்ட்ரேட் அவர்கள், ஜோசப்பின் ஆட்சேபத்தை ஏற்றுக் கொண்டு, மனுவைத் தள்ளிவிட்டார்.

குறுக்கு விசாரணை.

ஜோசப் :—உங்கள் தொழில் லேவாதேவியா ?

வாதி :—ஆம்.

ஜோசப் :—உங்கள் ஹெட்டாபீஸ் காரைக்குடியிலிருக்கிறதா ?

வாதி :—ஆம்.

ஜோசப் :—உங்களுக்கு எங்கெங்கே கடைகள் இருக்கின்றன ?

வாதி :—பினாங்கில், பர்மாவில்,

ஜோசப் :—நீங்கள் வருமானவரி செலுத்துகிறீர்களா?

வாதி :—பர்மாவில் செலுத்துகிறேன்.

ஜோசப் :—பினாங்கில் செலுத்துகிறதில்லையோ ?

வாதி :—வருமானவரி வசூலிக்கும் வழக்கம் பினாங்கில் இல்லை.

ஜோசப் :—வருமான வரி எவ்வளவு செலுத்துகிறீர்கள் ?

வாதி :—சுமார் ௬000 ரூபா.

ஜோசப் :—காரைக்குடியில் எவ்வளவு செலுத்துகிறீர்கள் ?

வாதி :—ரூ. ௨000 ; பாக்கி வேறு இடங்களில்.

ஜோசப் :—எவ்வளவு காலமாக நீங்கள் தொழில்

நடத்திவருகிறீர்கள்?

வாதி:—சுமார் முப்பது வருஷங்களாக.

ஜோசப்:—பொது வேலையில் நீங்கள் நுழைந்து எவ்வளவு காலமிருக்கும்?

வாதி:—சுமார் பத்து வருஷங்கள்.

ஜோசப்:—நீங்கள் யூனியன்போர்டு மெம்பராக எப்பொழுது ஆனீர்கள்?

வாதி:—நான் மெம்பரான வருஷத்தைக் குறிப்பிட்டுச் சொல்லமுடியாது. சுமார் பத்து வருஷங்களுக்கு முன் யூனியன் போர்டு மெம்பராக நியமனம் பெற்றேன். நான்கு வருஷங்களுக்குமுன் யூனியன் போர்டு மெம்பராக தேர்ந்தெடுக்கப்பட்டேன்.

ஜோசப்:—நீங்கள் தாலூகா போர்டு மெம்பரா?

வாதி:—ஆம்.

ஜோசப்:—நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டீர்களா?

வாதி:—ஆம்; சுமார் நான்கு வருஷங்களுக்கு முன்பாக.

ஜோசப்:—உங்களை தாலூகா போர்டுக்கு மெம்பராக ஸர்க்கார் நியமனம் செய்ததுண்டா?

வாதி:—இல்லை. நான் தேர்ந்தெடுக்கப்பட்டேன்.

ஜோசப்:—நீங்கள் ஜில்லா போர்டு மெம்பரா?

வாதி:—ஆம். ௧௯௨௪-வருஷ மார்ச்சு-மீ ஜில்லா போர்டுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டேன்.

ஜோசப்:—ஜில்லா போர்டுக்கு நியமனம் பெற்றதுண்டா?

வாதி:—இல்லை.

ஜோசப் :—நீங்கள் இப்பொழுது காரைக்குடி யூனியன் போர்டு பிரிசிடெண்டா (தலைவரா ?)

வாதி :—ஆம் ; நான்கு வருஷங்களாக.

ஜோசப் :—யூனியன் போர்டில் நியமனம் பெற்றிருந்த பொழுது ஏதாவது கமிட்டியில் இருந்ததுண்டா?

வாதி :—யாதில்லை.

ஜோசப் :—உங்களுக்கு இங்கிலீஷ் தெரியுமா ?

வாதி :—தெரியாது.

ஜோசப் :—நீங்கள் தமிழில் ஏதாவது கொடுத்திருக்கிறீர்களா ?

வாதி :—நான் தமிழ் வாசிக்கும்பொழுது வகுப்பு, பரீட்சை ஒன்றும் கிடையாது, ஆகையால் யாதொரு பரீட்சையும் கொடுக்கவில்லை.

ஜோசப் :—நீங்கள் ஏதாவது புஸ்தகம் எழுதியிருக்கிறீர்களா ?

வாதி :—இல்லை.

ஜோசப் —தமிழில் ஏதாவது பிரசங்கம் செய்ததுண்டா ?

வாதி :—இல்லை.

ஜோசப் :—பொதுக் கூட்டங்களில் எப்பொழுதேனும் பேசியதுண்டா ?

வாதி :—இல்லை.

ஜோசப் :—ஜில்லா போர்டில் கேள்விகள் கேட்கும் பாத்தியம் உமக்கு உண்டு என்று தெரியுமா ?

வாதி :—தெரியும்.

ஜோசப் :—நீங்கள் கேள்வி கேட்டதுண்டா ?

வாதி :—இல்லை.

ஜோசப் :—வேறு மெம்பர்கள் ஜில்லா போர்டில் கேள்வி கேட்டதுண்டா ?

வாதி :—அந்தக் கூட்டங்களில் யாரும் கேள்விகேட்டு, நான் பார்த்ததில்லை.

ஜோசப் :—ஜில்லா போர்டில் திரு. அளகிரிசாமி நாயுடு என்று ஒரு மெம்பர் இருக்கிறாரா ?

வாதி :—இருக்கிறார்.

ஜோசப் : ௩—௨—௩௪-லில் அவர் ஜில்லா போர்டில் ஏதேனும் கேள்வி கேட்டதுண்டா ?

வாதி :—ஞாபகமில்லை.

ஜோசப் :—திரு. சௌமிய நாராயண அய்யங்கார் ஒரு மெம்பரா ?

வாதி :—ஆம்.

ஜோசப் :—இவர்கள் ஏதேனும் கேள்விகள் கேட்டிருக்கிறார்களா ?"

வாதி :—யாதில்லை.

ஜோசப் :—திரு. ஆர். வி. சுந்தரம்பிள்ளை ஒரு மெம்பரா ?

வாதி :—ஆம்.

ஜோசப் :—இவர் யாதேனும் கேள்வி கேட்டிருக்கிறாரா ?

வாதி ;—யாதில்லை

ஜோசப் :—கேள்வி கேட்பது எதற்கு என்பது உங்களுக்குத் தெரியுமா ?

வாதி :—கேள்வி கேட்பது பொது ஜன நன்மைக்காக.

ஜோசப் :—பொது ஜன நன்மையை நாடக்கூடாது என்று நீங்கள் கேள்வியே கேட்டதில்லையோ ?

வாதி :—சந்தர்ப்பம் ஏற்படவில்லை, நான் கேள்வி கேட்கவில்லை. பொது ஜனங்களுக்கு நன்மை செய்யக்கூடாது என்று நான் கேள்வி கேட்காமலிருக்கவில்லை.

ஜோசப் :—ஜில்லாபோர்டு பிரஸிடெண்டும் உதவி பிரஸிடெண்டும் போர்டின் நிர்வாகிகள் அல்லவா ?

வாதி :—ஆம்.

ஜோசப் :—அவர்கள் ஒருபொழுதும் தவறு செய்ததில்லையா ?

வாதி :—எனக்குத் தெரிந்த வரையிலும் இல்லை.

ஜோசப் :—கேள்வி கேட்கும் உரிமை உங்கட்கு உண்டென்று தெரியுமா ?

வாதி :—தெரியும்.

ஜோசப் :—அவர்கள் ஏதேனும் தவறாக நடந்துகொண்டால், அதை எடுத்துக்காட்டி, திருத்துவதற்காக கேள்வி கேட்கலாமல்லவா ?

வாதி :—ஆம்.

ஜோசப் :—௧௯௨௪–௧௯௨௫-ல் அவர்கள் யாதொரு தவறும் செய்ததில்லையே ?

வாதி :—இல்லை.

ஜோசப் :—தவறு செய்திருந்தால் கேள்வி கேட்டிருப்பீர்கள் ?

வாதி :—தவறு நேரவில்லை ; நான் கேள்வி கேட்கவில்லை.

ஜோசப் :—பிரஸிடெண்டு, உதவி பிரஸிடெண்டு அவர்களின் வேலையை பொது ஜனங்களுக்கு எடுத்துக்காட்ட கேள்வி கேட்கலாம் என்று உங்களுக்குத்

தெரியுமா ?

வாதி :—தெரியும்.

ஜோசப் :— அப்படி எதாவது கேள்வி கேட்டதுண்டா?

வாதி :—அவ்வாறு சந்தர்ப்பம் ஏற்படவில்லை.

ஜோசப் :—ஜில்லா போர்டைப்பற்றி உங்களிடம் யாரும் முறையிட்டுக்கொண்டதில்லையா ?

வாதி :—யாரும் வரவில்லை.

ஜோசப் :—ரஸ்தாக்களைப்பற்றி ?

வாதி :—இல்லை.

ஜோசப் :—கல்வியைப்பற்றி ?

வாதி :—இல்லை.

ஜோசப் :—மோட்டார் லைசென்ஸ் விஷயமாக ?

வாதி :—இல்லை.

ஜோசப் :—சமீபத்தில் மோட்டார் லைசென்ஸ் துகை அநேகமாய் இரட்டிப்பு மடங்கு ஆகிவிட்டது. அதைப்பற்றி யாரும் உங்களிடம் முறையிட்டுக் கொண்டதுண்டா ?

வாதி :—எனக்குத் தெரிந்தவரையிலும், ஒருவரும் வர வில்லை.

ஜோசப் :—ராமநாதபுரம் ஜில்லாவைக்காட்டிலும் மது ரையில் லைசென்ஸ் துகை குறைவு என்று உங்க ளுக்குத் தெரியுமா ?

வாதி :—தெரியாது. திருநெல்வேலியைப்பற்றித் தெரி யும்.

ஜோசப் :—தேவகோட்டை தாலூகா போர்டு எப் பொழுது இரண்டாகப் பிரிக்கப்பட்டது ?

வாதி :—சமீபத்தில்.

ஜோசப் :—அதைப்பற்றி ஜில்லா போர்டில் அபிப்பிராயபேதம் இருந்ததுண்டா ?

வாதி :—உண்டு.

ஜோசப் :—உங்களுடைய அபிப்பிராயம் என்ன ?

வாதி :—பிரிக்கக்கூடாது என்பது என் எண்ணம். பிரசிடெண்டும் உதவி பிரசிடெண்டும் பிரிக்கவேண்டும் என்ற அபிப்பிராயம் கொண்டிருந்தார்கள்.

ஜோசப் :—உங்கள் கருத்துக்கிசைய, நீங்கள் ஏதேனும் கேள்வி கேட்டதுண்டா ?

வாதி :—இல்லை.

ஜோசப் :—பிரசிடெண்டும் வைஸ் பிரசிடெண்டும் சர்க்காருக்கு என்ன ரிப்போர்ட்டு செய்து கொண்டார்கள் என்று உங்களுக்குத் தெரியுமா ?

வாதி :—தெரியாது.

ஜோசப் :—உங்களுடைய அபிப்பிராயம் என்று சொன்னீர்களே. அது யாருடைய அபிப்பிராயம் ?

வாதி :—அது தேவகோட்டை பொது ஜனங்களின் அபிப்பிராயம்.

ஜோசப் :—அந்த அபிப்பிராயத்தை வெளிப்படுத்த நீங்கள் ஏதேனும் செய்ததுண்டா ?

வாதி :—ஒன்றும் செய்யவில்லை.

ஜோசப் :—பொது ஜன அபிப்பிராயத்தைத் தெரிந்து கொள்ள, நீங்கள் ஒன்றும செய்ததில்லை ?

வாதி :—பொது ஜன அபிப்பிராயம் என்று நான் சொன்னது தேவகோட்டை தாலூகா போர்டு தேர்ந்தெடுத்திருக்கும் ஜில்லாபோர்டு மெம்பர்களின் அபிப்பிராயம்.

ஜோ:—தேவகோட்டை தாலுகா போர்டார், தாலுகா போர்டைப் பிரிக்கவேண்டும் என்ற யோசனையை ஏற்றுக்கொண்டார்களா?

வாதி:—அவர்கள் யோசனையை ஏற்கவில்லை. அந்த யோசனையை எதிர்த்து, தீர்மானம் செய்து அதை ஜில்லா போர்டுக்கு அனுப்பினார்கள்.

ஜோசப்:—அந்த சமயத்தில் நீங்கள் தாலுகா போர்டில் ஆஜராயிருந்தீர்களா?

வாதி:—ஞாபகமில்லை.

ஜோசப்:—இந்தப் பிரிவு யோசனைக்குத் தாலுகா போர்டில் யாரார் சாதகம், யாரார் பாதகமாயிருந்தார்கள் என்று உங்களுக்குத் தெரியுமா?

வாதி:—ஞாபகமில்லை; தெரியாது.

ஜோசப்:—இதைப்பற்றி ஜில்லா போர்டில் நீங்கள் ஏதேனும் தீர்மானம் கொண்டுவந்ததுண்டா?

வாதி:—இல்லை.

ஜோசப்;—தேவகோட்டை மெம்பர்களுடைய அபிப்பிராயத்துக்கு விரோதமாக ஆசாங்கத்தாரின் அபிப்பிராயம் இருந்ததாக உங்களுக்குத் தெரியுமா?

வாதி:—தெரியாது.

ஜோசப்:—தேவகோட்டை தாலுகா போர்டின் தீர்மானத்தை வற்புறுத்த, ஜில்லா போர்டில் நீங்கள் ஏதேனும் செய்ததுண்டா?

வாதி:—இல்லை.

ஜோசப்:—செய்யாததற்குக் காரணம் சொல்ல முடியுமா?

வாதி :—ஜில்லா போர்டில் மெஜாரிட்டியார் பிரிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் இருந்தார்கள்.
ஜோசப் :—வேறு காரணம் உண்டா?
வாதி :—இல்லை.
ஜோசப் :—தாலூகா போர்டில் இதைப்பற்றி ஏதே னும் முயற்சி எடுத்துக்கொண்டார்களா?
வாதி :—இல்லை.
ஜோசப் :—இதைப்பற்றி தாலூகா போர்டில் நீங்கள் கேள்வி கேட்டதுண்டா?
வாதி :—இல்லை.
ஜோசப் :—நீங்கள் தாலூகா போர்டிலிருக்கையில், கூட்டங்களில் அபிப்பிராயபேதம் இருந்தது ண்டா?
வாதி :—உண்டு.
ஜோசப் :—தாலூகா போர்டு பிரசிடெண்டாக யார் இருந்தார் அந்த சமயத்தில்?
வாதி :—தேவகோட்டை டெபுடி கலெக்டர்
ஜோசப் :—பிரசிடெண்டுக்கு விரோதமாக எப்பொழு தாவது நீங்கள் வோட்டு போட்டதுண்டா?
வாதி :—ஞாபகமில்லை.
ஜோசப் :—ஒரு சமயமாவது ஓட்டுபோட்டதுண்டா?
வாதி :—ஞாபகமில்லை,
ஜோசப் :—ஸர்க்கார் உத்தியோகஸ்தர்களுடன் நெரு ங்கிய பழக்கம் (உறவு) உங்களுக்குண்டா?
வாதி :—ஸர்க்கார் உத்தியோகஸ்தர்கள் எனக்கு சினே கமுமில்லை, விரோதமுமில்லை.
ஜோசப் :—உத்தியோகஸ்தர்களை நீங்கள் போய்ப்

பார்ப்பதுண்டா ?

வாதி :—இல்லை. எங்கள் ஊருக்கு அவர்கள் வந்தால், ஸர்க்கார் அலுவல் சம்பந்தமாக அவர்களைப் போய்ப் பார்ப்பேன்.

ஜோசப் :—ஸர்க்கார் வேலை என்றால் ?

வாதி :—யூனியன்வேலை சம்பந்தமாக—யூனியன்வேலையை ஸர்க்கார்வேலை என்று தவறாகச் சொல்லிவிட்டேன்—உத்தியோகஸ்தர்கள் சொல்லி அனுப்பினாலும் போய்ப் பார்ப்பேன்.

ஜோசப் :—ஜில்லா கல்வி உத்தியோகஸ்தரைப்போய்ப் பார்ப்பதுண்டா ?

வாதி :—இல்லை. அவர் காரைக்குடிப் பள்ளிக்கூடத்துக்கு வந்தபொழுது பார்த்தேன்.

ஜோசப் :—ஜில்லா டாக்டரைப் பார்ப்பதுண்டா ?

வாதி :—இல்லை.

ஜோசப் :—டெபுடி கலெக்டரை ?

வாதி :—வேலையிருந்தால் பார்ப்பேன்.

ஜோசப் :—டெபுடி கலெக்டர் உங்களை யோசனை கேட்பதுண்டா ?

வாதி :—என்னை ஏன் அவர்கள் யோசனை கேட்க வேண்டும் ?

ஜோசப் :—கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லுங்கள் என்று ஜோசப் அவர்கள் கேட்க,

வாதி :—இல்லை என்று சொன்னார்.

ஜோசப் :—யாரைப்பற்றியாவது நீங்கள் டெபுடிகலெக்டர் அவர்களுக்குச் சிபார்சுசெய்ததுண்டா?

வாதி :—சம்பள உத்தியோகங்களுக்கு சிபார்சு செய்த

தில்லை. கௌரவ உத்தியோகங்களுக்காக சிபார்சு செய்வதுண்டு.

ஜோசப் :—தேவகோட்டை டெபுடி கலெக்டராகவிருந்த திரு. ஒய். வி. சீனிவாசய்யர் அவர்கள் உங்களை யோசனை கேட்ட துண்டா?

வாதி:—ஞாபகமில்லை.

ஜோசப்:—கோயில்பிள்ளை அவர்கள் உங்கள் யோசனை கேட்டதுண்டா ?

வாதி :—ஞாபகமில்லை.

ஜோசப் :—ராமானுஜ அய்யங்காரை உங்களுக்குத் தெரியுமா ?

வாதி:—தெரியும். அவர் பள்ளிக்கூட உபாத்தியாயர்.

ஜோசப் :—கௌரவ மாஜிஸ்திரேட் பதவி அவருக்குக கொடுக்கவேண்டும் என்று கோயில்பிள்ளை அவர்களிடம் நீங்கள் சிபார்சு செய்ததுண்டா ?

வாதி:—ஞாபகமில்லை.

ஜோசப் :—கோயில்பிள்ளை அவர்கள் சாட்சி சொன்னபொழுது, நீங்கள் கோர்ட்டில் இருக்கவில்லையா?

வாதி :—இருந்தேன்.

ஜோசப்:—சுப்பய்யா செட்டியாரை உங்களுக்குத் தெரியுமா ?

வாதி :—தெரியும். அவர் வைரவியாபாரி.

ஜோசப் :—கோயில்பிள்ளை அவரை, காரைக்குடி யூனியன் போர்டு மெம்பராக நியமனம் செய்தாரா ?

வாதி:—ஆம்.

ஜோசப்:—அதைப்பற்றி கோயில்பிள்ளை உங்களுடைய யோசனை யைக் கேட்டாரா ?

வாதி :—கலந்துகொண்டார். சுப்பய்யா செட்டியார் நல்லவர், யோக்கியர் என்று நான் சொன்னேன்.

ஜோசப் :—உங்களைக் கலந்துகொண்டது நியமனம் செய்வதற்கு முந்தியா, பிந்தியா?

வாதி :—ஞாபகமில்லை.

ஜோசப் :—உங்களைக் கலந்துகொண்டபிறகு, சுப்பய்யாசெட்டியாரின் பெயர் கஜெட்டில் வந்ததா? அல்லது முன்பே வந்து விட்டதா?

வாதி :—ஞாபகமில்லை.

ஜோசப் :—ராமநாதன் செட்டியாரை உங்களுக்குத் தெரியுமா?

வாதி :—அவர் என் மாப்பிள்ளை. அவர் கௌரவ மாஜிஸ்டிரேட்.

ஜோசப் :—அவரை மாணிக்கம்பிள்ளை அவர்கள் நியமனம் செய்தாரா?

வாதி ;—ஞாபகமில்லை

ஜோசப் :—நீங்கள் சிபார்சு செய்ததுண்டா?

வாதி :—இல்லை.

ஜோசப் :—மாணிக்கம்பிள்ளை முதலிய உத்யோகஸ்தர்களை நீங்கள் சாட்சி போடுவதற்கு முன், உங்களைப்பற்றி அவர்களுடைய அபிப்பிராயம் என்னவென்று தெரிந்துகொண்டீரா?

வாதி :—அவர்கள் என்ன அபிப்பிராயம் கொண்டிருக்கிறார்கள் என்று எனக்குத் தெரியாது.

ஜோசப் :—என்ன உத்தேசத்தைக் கொண்டு அவர்களை நீங்கள் சாட்சி போட்டீர்கள்?

வாதி :—கோயில்பிள்ளை அவர்கள் தாலுகா போர்டு, பிரசிடெண்டாக இருந்ததால், அவர்களை சாட்சி போட்டேன். என்னைப்பற்றி அவர்கள் என்ன எண்ணிக்கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிந்துகொள்ளவில்லை.

ஜோசப் :—மதுரையில் ௨௰—௧௧—௨௫ ல் ராமநாதபுரம் ஜில்லா போர்டு நடந்ததே, அதிலே நீங்கள் ஆஜராயிருந்தீர்களா ?

வாதி :—இல்லை.

ஜோசப் :—௧௨–௧௰–௨௫ மீட்டிங்கிலும் நான் ஆஜராகவில்லை.

ஜோசப் :—௧௯௨௪—௧௯௨௫-ம் வருஷங்களில் ஜில்லா போர்டு கூட்டங்கள் எத்தனை நடைபெற்றன ?

வாதி :—ஞாபகமில்லை.

ஜோசப் :—கெஜட்டைப் பார்த்துச்சொல்ல முடியுமா?

வாதி :—முடியும்.

ஜோசப் :—அவர்கள் கெஜட்டை வாதியினிடம் கொடுத்தார். கெஜட்டைப் புரட்டிப் பார்த்துவிட்டு ஜோசப் அவர்களின் உதவியின்பேரில், ௧௧ கூட்டங்கள் நடைபெற்றன வென்றார்.

கூட்டங்களின் தேதிகள் பின்வருமாறு:—

௨௫–௪–௧௯௨௪, ௨௭–௬–௧௯௨௪, ௨–௮–௧௯௨௪, ௯–௯–௧௯௨௪, ௮–௧௧–௧௯௨௪, ௧௫–௧௨–௧௯௨௪, ௨௬–௧–௧௯௨௫, ௧௰–௫–௧௯௨௫, ௯–௪–௧௯௨௫, ௯–௬–௧௯௨௫, ௫–௮–௧௯௨௫.

ஜோசப் :—௫-௮-௨௫ க்கும் ௫௧-௫-௧௯௨௪ க்கும் இடையே, ராமநாதபுரம் ஜில்லாபோர்டு கூட்டங்

கள் எத்தனை நடை பெற்றன?

வாதி :—கக.

ஜோசப் :—ஜில்லா போர்டில் ராஜவிசுவாசப்பிரமாணம் எடுத்துக்கொண்டீரா?

வாதி :—ஆம்,

ஜோசப் :—உள-கூ-கக௲உச ல் கூடிய கூட்டத்தில் கூட நீர் ஆஜராகவில்லையல்லவா?

வாதி :—ஆம். ஆஜராகவில்லை.

ஜோசப் :—மறுபடியும் அக்டோபர் மாதத்தில் நீங்கள் தேர்ந்தெடுக்கப் பட்டீர்களா?

வாதி :—ஆம்.

ஜோசப் :—உமக்கு மெஜாரிட்டி கிடைத்ததா?

வாதி :—இல்லை.

ஜோசப் :—பின்னர் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டீர்?

வாதி :—௧0 வோட்டு கிடைத்த மூன்றுபேர்களுக்குள் சீட்டுப்போட்டுப் பார்த்ததில், என்பெயர் அகப்பட்டது.

ஜோசப் :—ராஜ விசுவாசப் பிரமாணம் எடுத்துக் கொண்டீர்களா?

வாதி :—அ-கக-உச ல் கூடிய மீட்டிங்கில் எடுத்துக் கொண்டேன்.

ஜோசப் :—டிசம்பர் மாதத்தில் மீட்டிங்கில் ஆஜராயிருந்தீரா?

வாதி :—இல்லை.

ஜோசப் :—ஜனவரி மாதத்தில்,

வாதி :—இல்லை.

ஜோசப் :—மார்ச்சு மாதத்தில்,

வாதி :—இல்லை.

ஜோசப் :—மார்ச்சுமீ கூட்டத்தில் பிரசிடெண்டு அவர்களின் குறிப்பைக்கொண்டு, அங்கத்தினர் பதவிக்கு மீண்டும் தகுதிபெற்றீரா ?

வாதி :—ஆம்.

ஜோசப் :—மீட்டிங்குகளுக்கு போகாததற்குக் காரணம் கண்டு, பிரஸிடெண்டு அவர்களுக்குக் காகிதம் எழுதினீர்களா ?

வாதி :—எழுதினதாக எனது ஞாபகம்.

ஜோசப் :—அந்தக் காகிதத்துக்கு நகல் உம்மிடம் இருக்கிறதா ?

வாதி:—இல்லை ; நகல் வைத்துக்கொள்ளவில்லை.

ஜோசப் :—அடுத்த மீட்டிங் எப்பொழுது நடந்தது ?

வாதி :—ஏப்ரல் மாதத்தில்.

ஜோசப் :—அதற்கு அடுத்த கூட்டம் ?

வாதி :—ஜூன் மாதத்தில்.

ஜோசப்:—நீர் இந்தக் கூட்டங்களுக்கு ஆஜராகவிருந்தீரா ?

வாதி:—இல்லை.

ஜோசப்.—௩—௮—௧௯௨௫ல் கூட்டம் கூடிற்றே, அப்பொழுது நீர் ரெஸ்டோர் ஆனீரா ? பிரசிடெண்டு அவர்களின் குறிப்பின் பேரிலே ?

வாதி.—ஆமாம்.

ஜோசப்:—இந்த மீட்டிங்குகளுக்குப் போகாததற்கு காரணம் உண்டா ?

வாதி:—என் மாப்பிள்ளை இறந்துபோனர்.

ஜோசப்:—காரணம் பிரசிடெண்டு அவர்களுக்குத் தெரி

வித்தீரா?

வாதி:—ஆம்.

ஜோசப்:—காகித மூலமாயா?

வாதி:—இல்லை. நேரே பிரஸிடெண்டு அவர்களிடம் சொன்னதாக என் ஞாபகம்.

ஜோசட:—உமது மாப்பிள்ளை எப்பொழுது இறந்தார்?

வாதி:—தை மாதத்தில்.

ஜோசப்:—மேலேசொன்ன கூட்டங்களுக்கு போகாததற்குக் காரணம் மாப்பிள்ளை சீக்தத்தானோ?

வாதி:—ஆமாம். நான் அடிக்கடி மதராஸ் போய்வந்து கொண்டிருந்ததால், மீட்டிங்குகளுக்குப் போக முடியவில்லை. போவதற்கு சாவகாசம் எற்படவில்லை.

ஜோசப்:—உம்முடைய மாப்பிள்ளை எவ்வளவுகாலம் சீக்காயிருந்தார்?

வாதி:—எவ்வளவுகாலம் என்று நிச்சயமாய்ச் சொல்ல முடியாது.

ஜோசப்:—அந்தக் காலங்களிலெல்லாம் நீர் தாலூகா போர்டு மீட்டிங்குகளுக்குப் போயிருந்தீரா?

வாதி:—இல்லை.

ஜோசப்:—௧௯௨௫-ஆண்டு வரையில் ஜில்லா போர்டு மீட்டிங்குகளுக்குப் போயிருந்தீரா?

வாதி:—இல்லை

ஜோசப்.—ஊழியன் பத்திரிகையில் பிரசுரமாயிருக்கும் வியாசத்துக்கு முன் நீர் எதாவது கமிட்டியில் அங்கத்தினராயிருந்தீரா?

வாதி—இல்லை.

ஜோசப்.—பிரஸிடெண்டு அவர்கள் கூட்டிய பிரத்தி யேக கமிட்டியில்?

வாதி.—உண்டு.

ஜோசப்.—நீர் அதில் ஏதாவது வேலைசெய்தீரா?

வாதி.—போர்டு கலைந்துபோனதால், ஒரு வேலையும் செய்ய முடியவில்லை.

ஜோசப்.—அப்பீல் கமிட்டி கூடிற்றா?

வாதி.—இல்லை.

ஜோசப்.—கமிட்டியை ஏன் கூட்டவில்லை என்று பிரசி டெண்டு அவர்களை நீங்கள் கேட்டீர்களா?

வாதி.—இல்லை.

ஜோசப்.—அப்பீல் கமிட்டியின் வேலை என்ன?

வாதி.—பிரசிடெண்டு அவர்கள் யாரையாவது வேலை யைவிட்டு நீக்கினால், அவர்கள் சப்கமிட்டிக்கு மனுச்செய்துகொண்டால், அதை விசாரித்து முடிவுசொல்லுவது அப்பீல் கமிட்டியின் வேலை?

ஜோசப்.—நீர் அப்பீல் கமிட்டியில் இருந்தபொழுது யாராவது வேலையைவிட்டு நீக்கப்பட்டு, மனுப் பண்ணிக்கொண்டார்களா?

வாதி.—ஞாபகமில்லை.

ஜோசப்.—வேறு எந்த கமிட்டியிலாவது நீர் இருந் தீரா? பட்ஜட் கமிட்டியில் இருந்தேன்; உபகாரச் சம்பள கமிட்டியில் இருந்தேன். கமிட்டி மெம்ப ராக, உம்முடைய பெயரை யார் பிரேரணை செய் தார்?

வாதி.—ஞாபகமில்லை.

ஜோசப்.—ஜில்லா போர்டு மீட்டிங்குகளிலும் கமிட்டி-

கூட்டங்களிலும் இந்தக் காலத்தில் நீர் பிரசன்ன மாயிருந்ததுண்டா?

வாதி.—இல்லை.

ஜோசப்.—மேற்படி கமிட்டி கூட்டங்கள் நடந்தது ௧-௧௨-௧௯௨௰க்கு முந்தியா, பிந்தியா?

வாதி.—ஞாபகமில்லை.

ஜோசப்.—பட்ஜட் (வரவு செலவு) கமிட்டி கூட்டமும் உபகாரச்சம்பளக் கூட்டமும் ஒரே நாட்களில் நடந்தனவா?

வாதி.—இல்லை. வெவ்வேறு நாட்களில்.

ஜோசப்.—பட்ஜட் கமிட்டி கூட்டம் எங்கே, எத்தனை நாட்கள் நடந்தது?

வாதி.—கூட்டம் மதுரையில் நடந்தது; ஒரு நாள் நடந்தது. ௮-மணி முதல் ௧௧-மணி வரை நடந்தது. வேலை முடிந்துவிட்டது.

ஜோசப்.—உபகாரச் சம்பளக் கமிட்டி கூட்டம்?

வாதி.—ஒருநாள் நடந்தது.

ஜோசப்.—ஜில்லா போர்டு மீட்டிங்குக்கு ஆஜராகிவிட்டு நீர் மதுரைக்குத் திரும்பிவந்தீரா?

வாதி.—ஞாபகமில்லை.

ஜோசப்.—ஜில்லா போர்டுக்கு உம்மைத் தேர்ந்தெடுக்கையில், உமக்குப் போட்டியிருந்ததா?

வாதி.—இல்லை.

ஜோசப்:—ஓட்டு சேகரிக்க நீர் ஏதாவது முயற்சி செய்தீரா?

வாதி:—இல்லை.

ஜோசப்.—ஏதாவது விக்ஞாபனம் வெளியிட்டீரா?

வாதி.—இல்லை. வோட்டர்களைக்கண்டு எனக்கு வோட்டுப்போடும்படி கேட்டுக்கொண்டேன்.

ஜோசப்.—எத்தனை அபேட்சகர்கள் இருந்தார்கள்?

வாதி.—ஐந்து ஸ்தானங்களுக்கு ஒன்பது பேர்கள் போட்டிபோட்டார்கள். மூன்று பேர்களுக்கு பெரும்பான்மை வாக்குகள் கிடைத்தன. மற்ற மூன்று பேர்களுக்கு சமமாக பத்து வோட்டுகள் கிடைத்தன. பிறகு சீட்டுப்போட்டுப் பார்த்ததில் எனக்கும் முருகப்ப செட்டியாருக்கும் ஷெ ஸ்தானங்கள் கிடைத்தன.

ஜோசப்.—ஏதாவது செய்துகொடுப்பதாக வோட்டர்களுக்கு நீங்கள் வாக்குக்கொடுத்தீர்களா?

வாதி.—நான் வாக்குக்கொடுக்கவில்லை; "என்னுடைய நடத்தை உங்களுக்குத்தெரியும்; இஷ்டமானால் வோட்டுப்போடுங்கள்" என்றேன்.

ஜோசப்.—மற்ற அபேட்சகர்கள் ஏதேனும் வாக்குக் கொடுத்தார்களா?

வாதி.—எனக்குத் தெரியாது.

ஜோசப்.—தேர்ந்தெடுக்கப்பட்டால் நீங்கள் இன்னது செய்யவேண்டுமென்று வோட்டர்கள் உங்களைக் கேட்டார்களா?

வாதி.—இல்லை.

ஜோசப்.—தேர்ந்தெடுக்கப்பட்டால் இன்னது செய்வேன் என்று அபேட்சகர்கள் வாக்காளர்களுக்கு விக்ஞாபனம்செய்து அறிக்கை விடுக்கும் வழக்கம் உங்களுக்குத் தெரியுமா?

வாதி.—தெரியாது.

ஜோசப்.—முருகப்ப செட்டியார் ஏதேனும் அறிக்கை விடுத்தாரா?

வாதி.—எனக்குத் தெரியாது.

ஜோசப்.—ஜில்லா போர்டு கூட்டங்களில் நீங்கள் ஏதாவது தீர்மானத்தை பிரரேபித்ததுண்டா!

வாதி.—இல்லை.

ஜோசப்.—ஆதரித்ததுண்டா?

வாதி.—இல்லை.

ஜோசப்.—எதிர்த்துப் பேசியதுண்டா?

வாதி.—உண்டு.

ஜோசப்.—எப்பொழுது?

வாதி.—லைஸன்ஸ் துகையை உயர்த்த எத்தனித்த பொழுது.

ஜோசப்.—தேதி தெரியுமா?

வாதி.—ஞாபகமில்லை.

இத்துடன் உ௬—௫—உ௬உ விசாரணை முடிந்தது.

(உ௭—௫—உ௬)

உ௭—௫—உ௬, வியாழக்கிழமை காலை அ-மணிக்கு கோர்ட்டு கூடியது. வாதி மீண்டும் தொடர்ந்து குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

ஜோசப். ஜில்லா போர்டு கூட்டங்களில் நீங்கள் பேசினதுண்டா?

வாதி.—பேசியிருக்கிறேன்.

ஜோசப்.—எத்தனை தடவைகளிருக்கும்?

வாதி.—இரண்டு தடவைகள்.

ஜோசப்.—எந்த சந்தர்ப்பங்களில்?

வாதி.—(க) மானமதுரையில் வைகையாற்றுப் பாலம்

கட்ட வேண்டுமென்ற யோசனை மீட்டிங்கில்வந்த பொழுது. (உ) மோட்டார் லைசென்ஸ் விஷயம் பிரஸ்தாபத்துக்கு வந்தகாலத்தில்.

ஜோசப்.—வேறு சமயங்களில் பேசினதுண்டா?

வாதி.—பேசியிருக்கிறேன். ஆனால் ஞாபகமில்லை.

ஜோசப்.—வைகையாற்றுப்பாலத்தைப்பற்றி எப்பொழுது பேசினீர்?

வாதி.—௩-அ-௧௯உ௫ல் பேசினேன்.

ஜோசப்—மோட்டார் லைசென்ஸ் சங்கதி?

வாதி.—௧-௧உ-உ௫-க்குப்பிறகு.

ஜோசப்:—உ௦௪ நிர். தீர்மானத்தைப்பாருங்கள். இந்த சமயத்தில் ஜோசப் அவர்கள் ஜில்லா போர்டு கெஜட்டை வாதியின் கையில் கொடுத்தார். வாதி பார்த்தார்.

ஜோசப்:—உ௦௪ நிர். தீர்மானத்தைப் பார்த்தீரா?

வாதி:—பார்த்தேன்.

ஜோசப்:—நீர் பேசினதாக அதிலிருந்து தெரிகிறதா?

வாதி:—நான் பேசினேன் என்பதைக்குறிப்பிட அதிலே ஒன்றும் காணப்படவில்லை.

ஜோசப்:—உ௦-அ-உ௫வ ஜில்லா போர்டு கெஜட்டு எக்ஸிபிட் க ஆக கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்டது.

ஜோசப்:—வேறு எப்பொழுதேனும் பேசினதுண்டா?

வாதி:—௧௯உ நிர். தீர்மானத்தைப்பற்றி, அதேநாளில் பேசியிருக்கிறேன்.

ஜோசப்:—௧௯உ நிர். தீர்மானத்தை கெஜட்டில் பார்க்கிறீரா?

வாதி:—பார்க்கிறேன்.

ஜோசப்:—நீர் பேசினதாக அதில் காணப்படுகிறதா?

வாதி:—இல்லை. ஒன்றுமில்லை.

ஜோசப்.—௧௯௨ நிர். தீர்மானம் எக்ஸிபிட் ௨ ஆக தாக்கல்செய்யப்பட்டது.

ஜோசப்,—மறுபடி எப்பொழுதேனும் பேசினதுண்டா?

வாதி.—உண்டு.

ஜோசப்.—எப்பொழுது?

வாதி.—௧௯௮ நிர். தீர்மானச் சமயத்தில்.

ஜோசப்.—நீங்கள் பேசினதாக அதிலிருந்து தெரிகிறதா?

வாதி.—இல்லை.

ஜோசப்.—௧௯௮ நிர். தீர்மானம் எக்ஸிபிட் ௩ ஆக கோர்ட்டில் தாக்கல்செய்யப்பட்டது.

ஜோசப்.—மேற்சொன்ன தீர்மானத்தை யார் பிரேரணை செய்தார்?

வாதி.—திரு. பொன்னுசாமி பிள்ளை.

ஜோசப்.—யார் ஆமோதித்தார்

வாதி.—திரு. நாகலிங்கம்பிள்ளை.

ஜோசப்:—பிரேரணை செய்தவர் ஆமோதித்தவர் பெயர்கள் கெஜட்டில் காணப்படுகின்றனவா?

வாதி.—ஆமாம்.

ஜோசப்—இன்னும் எப்பொழுதேனும் பேசினதுண்டா?

வாதி—௨௭-௬-௨௯ல் இராமனாதபுரத்திலிருந்து திருப்புல்லாணிக்கு டிராம் போடுகிற யோசனை வந்து

பொழுது பேசினேன்.

ஜோசப்—அதை ஆதரித்துப் பேசினீரா?

வாதி—அதை எதிர்த்துப்பேசினேன்.

ஜோசப்—நீர் பேசினதாக கெஜட்டிலிருந்து தெரிகிறதா?

வாதி—இல்லை. ஒன்றும் தெரியவில்லை.

ஜோசப்—இன்னும் எப்பொழுது பேசியிருக்கிறீர்?

வாதி—௯—௨—உறில் ராமேசுரத்து ஜலசப்ளை யோசனை வந்தபொழுது.

ஜோசப்—நீர் பேசினதாக கெஜட்டிலிருந்து தெரிகிறதா?

வாதி—இல்லை.

ஜோசப்—அங்கு ஜில்லா கலெக்டர் ஆஜராகியிருந்தாரா?

வாதி—ஆம்.

ஜோசப்—அவர் எவ்வாறு அபிப்பிராயப்பட்டார்.

வாதி—அவரும் நானும் ஒரேமாதிரியாகவே அபிப்பிராயப்பட்டோம.

ஜோசப்—அடி தீர்மானத்தைப்பற்றி உம்முடைய அபிப்பிராயம் என்ன?

வாதி—தீர்மானத்திற்கு நான் விரோதமாயிருந்தேன்.

ஜோசப்—நீர் தீர்மானத்துக்கு விரோதமாயிருந்தீரே அதை வோட்டுக்கு விடவேண்டுமென்று பிரசிடெண்டு அவர்களைக் கேட்டீரா?

வாதி—இல்லை.

ஜோசப்—ஏன் கேட்கவில்லை? காரணம் சொல்ல முடியுமா?

வாதி—மெஜாரிட்டி எனக்கு விரோதமாகவிருந்தது. தாலுகா போர்டிலிருந்து ரூ. ௨௫00 கொடுக்கிறது என்று சொன்னதின்பேரில், நான் தீர்மானத்தை ஏற்றுக்கொண்டேன்.

ஜோசப்—ராமேசுர ஜல சப்ளையைப்பற்றிப் பேசினதாகச் சொன்னீரே, அதை எவ்வாறு சொன்னீர்?

வாதி—ஞாபகத்திலில்லை.

ஜோசப்—உமது வக்கீலைக் கலந்துகொள்ளவில்லையே?

வாதி—இல்லை.

ஜோசப்—வழக்கு போடும்பொழுது, இன்னின்ன கூட்டங்களுக்கு நீர் ஆஜராயிருந்தீர் என்று உம்முடைய வக்கிலுக்குச் சொன்னீரா?

வாதி—இல்லை.

ஜோசப்—சிறப்பாக மீட்டிங்குகளைக் குறிப்பிட்டு வக்கிலிடம் சொன்னதுண்டா?

வாதி—இல்லை. மீட்டிங்குகளில் பேசியிருப்பதாக பொதுவாகச் சொன்னேன்.

ஜோசப்—இன்னின்ன மீட்டிங்குகளில் பேசினீர் என்று சொல்ல உம்முடைய வக்கீல் உம்மிடம் குறிப்பிடவில்லையா?

வாதி—இல்லை.

ஜோசப—இதைப்பற்றியொன்றும் வக்கீலிடம் சொல்லவில்லையே?

வாதி—இல்லை.

ஜோசப்—யார், யாரை சாட்சிபோடவேண்டுமென்று?

வாதி—இல்லை.

ஜோசப்—நேற்று இராத்திரி யாரையாவது கலந்து

கொண்டரா ?

வாதி—ஒருவரையும் நான் கலந்துகொள்ளவில்லை.

ஜோசப்—தாலூகாபோர்டு கூட்டத்தில் நீங்கள் ஏதேனும் ஒரு தீர்மானம் பிரரேபணை செய்ததுண்டா ?

வாதி:—பிரேரபணை செய்ததில்லை. ஆமோதித்திருக்கிறேன்.

ஜோசப்:—எப்பொழுது ?

வாதி—தாலூகா போர்டுக்கு ஸர்க்கார் கிராண்டுகொடுக்கவேண்டும் என்ற தீர்மான சம்பந்தமாக.

ஜோசப்—யார் பிரேரணை செய்தார் ?

வாதி—மூன்றுவது சாட்சி சுந்தரமய்யரவர்கள்.

ஜோசப்:—நீங்கள் ஆமோதித்தது எந்த வருஷம் ?

வாதி:—ஷாதி ௧௯௨௩, ௧௯௨௪, ௧௯௨௫ ஏதாவது ஒரு வருஷம்.

ஜோசப்;—எப்பொழுது எங்கே தீர்மானத்தை ஆதரித்தீர் என்று உம்மால் சொல்லமுடியாது ?

வாதி:—சொல்லமுடியாது ?

ஜோசப்:—தாலூகா போர்டுக்கு, சர்க்கார் ரூ. ௫000 கிராண்டுகொடுக்கும் விஷயமாக நீர் பேசினதாகச் சொல்லுவதற்கு ருசு உண்டா ?

வாதி;—ரிக்கார்டு இருக்கிறது.

ஜோசப்:—மற்றைய தீர்மானங்களிலே நீங்கள் பேசினத்தைப்பற்றி ?

வாதி :—ஞாபகமில்லை. ரிக்கார்டு இருப்பதாகச்சொல்ல முடியாது ?

ஜோசப்:—ரிக்கார்டு இல்லாதபொழுது நீங்கள் பேசின

தாக எவ்வாறு தெரிகிறது?

வாதி:—ஜில்லா போர்டு நடவடிக்கைகளை கெஜட்டில் பார்க்கிறபொழுது இன்னின்ன சந்தர்ப்பங்களில் நான் பேசியிருக்கலாம் என்று ஞாபகம் எனக்கு வருகிறது.

ஜோசப்:—எப்பொழுது உமக்கு ராவ்பகதூர் பட்டம் வந்தது?

வாதி:—௧௯௨௪ வருஷம் ஜூலை மாதத்தில்.

ஜோசப்:—அப்பொழுது நீங்கள் ஜில்லா போர்டு மெம்பரா?

வாதி:—இல்லை.

ஜோசப்:—நீங்கள் அப்பொழுது தாலூகா போர்டு மெம்பரா?

வாதி:—ஆம்.

ஜோசப்:—யூனியன் பிரசிடெண்டா?

வாதி:—ஆமாம.

ஜோசப்:—பொது வேலை செய்வதினாலே உமக்குப் பட்டம் கிடைக்குமென்று எண்ணியதுண்டா?

வாதி:—இல்லை.

ஜோசப்:—செட்டியார்களுக்குள் யாருக்கு முதன் முதன்முதலில் பட்டம் வந்தது.

வாதி:—ராமசாமி செட்டியார்.

ஜோசப்:—பொது வேலையில் அவர் நுழைந்த பிறகு தானே அவருக்குப் பட்டம் வந்தது?

வாதி:—முந்தியோ பிந்தியோ எனக்குத்தெரியாது.

ஜோசப்:—அவர் ஏதாவது தருமம் செய்தாரா?

வாதி:—சிதம்பரம் குடிதண்ணீர்க்குழாய் வசதிக்காக

அவர் ஒரு இலட்ச ரூபாய் கொடுத்தார்.

ஜோசப்:—பிறகு அவருக்குப்பின் யாருக்குப்பட்டம் கிடைத்தது?

வாதி:—அவருடைய சகோதரர் அண்ணாமலைச் செட்டியாருக்கு.

ஜோசப்:—அவரும் பொது வேலையில் புகுந்து உழைத்தாரா?

வாதி:—ஆமாம்.

ஜோசப்:—அவர்கள் பொதுவேலையில் பிரவேசித்து உழைத்தபிறகுதானே அவர்களுக்கு பட்டம் கிடைத்தது?

வாதி:—முந்தியோ பிந்தியோ எனக்குத்தெரியாது.

ஜோசப்:—அண்ணாமலைச் செட்டியார் சென்னை சட்டசபை மெம்பராக விருந்தாரா?

வாதி:—சென்னை சட்டசபைக்கு அவர் அரசாங்கத்தாரால் நியமனம் செய்யப்பட்டார்?

ஜோசப்:—யுத்தகாலத்தில் அவர் சர்க்காருக்கு ஏதேனும் கொடுத்தாரா?

வாதி:—எனக்குத்தெரியாது.

ஜோசப்:—"மதராஸ்" ஹாஸ்பிடல் கப்பலுக்கு அவர் பணம் கொடுத்துதவியதுண்டா?

வாதி:—தெரியாது.

ஜோசப்:—இப்பொழுது அவர் ராஜாங்க சபை மெம்பரா?

வாதி:—ஆம்.

ஜோசப்:—அவருக்கு ஸர் பட்டம் கிடைத்து எவ்வளவு காலமிருக்கும்?

வாதி :—சுமார் இரண்டு வருஷங்களாகின்றன.

ஜோசப் :—இன்னும் யாருக்கு பட்டம் கிடைத்திருக்கிறது?

வாதி :—முருகப்ப செட்டியாருக்கு.

ஜோசப் :—அவர் பொது வேலைக்கு இறங்கின பிறகு தானே, அவருக்குப் பட்டம் கிடைத்தது?

வாதி :—அது எனக்குத் தெரியாது.

ஜோசப் :—முந்தியே கிடைத்துவிட்டதா?

வாதி :—தெரியாது.

ஜோசப் :—அவர் பள்ளத்தூர் யூனியன் போர்டு பிரஸிடெண்டா?

வாதி :—ஆம்.

ஜோசப் :—எவ்வளவு காலமாக?

வாதி :—இரண்டு வருஷமாக.

ஜோசப் :—அவருக்குப் பட்டம் உண்டா?

வாதி :—உண்டு.

ஜோசப் :—என்ன பட்டம்?

வாதி :—திவான்பகதூர்.

ஜோசப் :—எப்பொழுது கிடைத்தது?

வாதி :—கிடைத்து ஒரு வருஷம் இருக்கும்.

ஜோசப் :—பட்டங்கள் பெறுவதினாலே, பொதுவேலை சீர்குலைந்து போகும் என்ற கொள்கையைத் தழுவிய கட்சி இருக்கிறது என்று உங்களுக்குத் தெரியுமா?

வாதி :—தெரியாது.

ஜோசப் :—பட்டங்களைப் பெறுவதினால், ஜனசமூகத் தொண்டு இழிவுபட்டுப் போய்விடும் என்பது

ஊழியன் பத்திரிகையின் கொள்கையா ?

வாதி :—சுயராஜ்யப் பத்திரிகைகளின் நோக்கம் அது. அந்தப் பத்திரிகைகள் தான் அவ்வாறு எழுதும்.

ஜோசப் :—ஊழியன் பத்திரிகை சுயராஜ்யப் பத்திரிகையா ?

வாதி :—ஊழியன் பத்திரிகையைப் படிப்பதிலிருந்து என்றால் ஒன்றும் சொல்லமுடியாது.

ஜோசப் :—பட்டங்களை நீங்கள் விரும்புகிறீர்களா ?

வாதி :—பட்டங்களை நான் மதிக்கிறேன்.

ஜோசப் :—ஊழியன் பத்திரிகையை நீங்கள் படிப்பதுண்டா ?

வாதி :—சில சமயங்களில் நான் படிப்பேன். சென்ற ௩ வருஷங்களாக, நான் "ஊழியன்" பத்திரிகைக்கு சந்தாதாரன்.

ஜோசப் :—சுதேசமித்திரன் பத்திரிகை உங்களுக்குத் தெரியுமா ?

வாதி :—தெரியும். எனக்கு அந்தப்பத்திரிகை வருகின்றது. அதைப் படிப்பதுண்டு.

ஜோசப் :—காரைக்குடி குமரன் பத்திரிகை தெரியுமா?

வாதி :—தெரியும். அந்தப் பத்திரிகையும் எனக்கு வந்துகொண்டிருக்கிறது.

ஜோசப் :—ஊழியன் பத்திரிகையின் கொள்கை என்னவென்று உங்களுக்குத் தெரியுமா?

வாதி :—சுயராஜ்யம் பெறவேண்டுமென்பது "ஊழியன்" கொள்கை.

ஜோசப் :—"குமரன்" பத்திரிகையின் கொள்கை என்ன ?

வாதி :—எனக்கு நிச்சயமாய் சொல்லமுடியாது.

ஜோசப் :—"சுதேசமித்திரன்" பத்திரிகையின் கொள்கை தெரியுமா?

வாதி :—தெரியாது.

இந்த மாதிரியான கேள்விகளை வாதியின் வக்கில் திரு. டி. ஸி. சீனிவாஸய்யங்கார் அவர்கள் ஆட்சேபித்தார். பொதுஜன வேலையில் பொறுப்புள்ள பதவியில் அமர்ந்திருக்கும் வாதிக்கு இவைகள் யாவும் தெரிந்திருக்கவேண்டியது அவசியம் எனக் காட்டுவதற்கு இந்தக் கேள்விகள் அவசியம் என ஜோசப் எடுத்துக்காட்டினார். கேள்வி கேட்கும்படி ஜோசப்புக்குக் கோர்ட்டார் அனுமதி கொடுத்தார்கள்.

ஜோசப்: "சுயராஜ்யா" என்ற பத்திரிகையை உங்களுக்குத்தெரியுமா?

வாதி: தெரியும். இங்கிலீஷ், தமிழ் இரண்டிலுமிருக்கிறது.

ஜோசப்: பட்டங்கள் பெறுவதைப்பற்றி ஊழியன் பத்திரிகையில் காணப்படும் வியாசத்தின் பகுதியை நீங்கள் படித்ததுண்டா?

வாதி: படித்திருக்கிறேன்.

ஜோசப்: இவ்வாறு வேறு பத்திரிகைகள் எழுதுவதை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா?

வாதி: வேறு எந்தப்பத்திரிகையும் இந்தமாதிரி எழுதி நான் பார்த்ததில்லை.

ஜோசப்: எதிரி வேறு யாரையாவதுபற்றி இவ்வாறு எழுதியிருக்கிறாரா?

பதில்: இல்லை.

ஜோசப்: பொதுஜனத்தொண்டு செய்பவர்களின் வேலையை ஆராய்ந்து விமர்சனம் செய்யும் வழக்கம் உண்டென்று உங்களுக்குத் தெரியுமா?

வாதி: தெரியாது?

ஜோசப்: க---௧௨--௨௫ ஊழியன் பத்திரிகையை நீங்கள் படித்தீர்களா?

வாதி: முழுதும் படிக்கவில்லை. ஏகதேசம் படித்தேன்.

ஜோசப்: உங்களைப்பற்றி எழுதியிருக்கும் குறிப்பு பிரசுரிக்கப்பெற்றிருக்கும் பக்கத்திலேயே, ஆசிரியர் ஊரிலில்லை. சென்னையிலிருக்கிறார் என்று எழுதியிருக்கிறதே, அதை நீங்கள் படித்தீரா?

வாதி: இல்லை. இந்தக்குறிப்பு கோர்ட்டார் முன் தாக்கல்செய்யப்பட்டது.

ஜோசப்: அந்த இதழில் வேறு எதையாவது படித்தீரா?

வாதி: ஏகதேசம் படித்திருக்கிறேன்.

ஜோசப்: உங்களைப்பற்றி எழுதியிருப்பதை நீங்களே படித்தீர்களா? வேறு எவரேனும் படித்துவிட்டு உங்களிடம் சொன்னார்களா?

வாதி: நானே படித்தேன்.

ஜோசப்:—அதே இதழில் உங்களைப்பற்றி வேறு ஏதேனும் எழுதப்பெற்றிருக்கிறதா?

வாதி:—இல்லை. எழுதியிருப்பதாகத் தெரியவில்லை.

ஜோசப்:—அந்த இதழ் க௦-வது பக்கம் படித்தீர்களா?

வாதி:—இல்லை.

ஜோசப்:—யூனியன் போர்டு வேலையைப்பற்றி குறை

கூறி எழுதியிருப்பதை நீங்கள் படித்தீர்களா?

வாதி:— வழக்குப்போட்ட பிறகு படித்ததாக என் ஞாபகம்.

ஜோசப்:—உம்முடைய சாட்சி முருகப்ப செட்டியாரைப்பற்றி ஊழியன்பத்திரிகை எழுதியதுண்டா?

வாதி:—நான் பார்க்கவில்லை.

ஜோசப்:—௧-௬-௨௬ல் முருகப்ப செட்டியாரைப்பற்றி ஊழியன் பத்திரிகையில் எழுதியிருப்பதை நீர் படித்தீரா?

வாதி:—இல்லை.

ஜோசப்:—வழக்குப்போடப்பட்டது என்ன தேதி?

வாதி:—௬-௧௨-௨௬.

ஜோசப்:—வழக்கு வியாசத்தை நீங்கள் எப்பொழுது படித்தீர்கள்?

வாதி:—௩-௧௨-௨௬-ல்.

ஜோசப்:—௧-௧௨-௨௬-ல் நீங்கள் காரைக்குடியில் இருந்தீர்களா?

வாதி:—ஞாபகமில்லை.

ஜோசப்:—வழக்குப் போடுவதற்கு முன், நீங்கள் உங்கள் சாட்சிகளில் எவரையும் கலந்துகொண்டதுண்டா?

வாதி:—இல்லை.

ஜோசப்:—யார் யாரை சாட்சி போடவேண்டும் என்று தீர்மானித்துக்கொண்டதுண்டா?

வாதி:—இல்லை.

ஜோசப்:—சாட்சிகளைப்பற்றி உம்முடைய வக்கீலிடம் சொன்னதுண்டா?

வாதி :—தாலூகா போர்டு, ஜில்லா போர்டுகளிலிருந்து சாட்சிகளை எடுக்கவேண்டும் என்று என் வக்கீலிடம் நான் சொன்னேன்.

ஜோசப் :—சாட்சி ஜாப்தா எத்தனை கொடுத்திருக்கிறீர்கள் ?

வாதி :—ஏழு ஜாப்தாக்கள்.

ஜோசப்:—தேவகோட்டையில் முதல் ஜாப்தா கொடுத்தீரோ ?

வாதி:—ஆம்; தேவையானவர்களை சாட்சிபோட்டேன்.

ஜோசப்;—மற்றைய ஜாப்தாக்கள் ?

வாதி:—என்னுடைய சாட்சிகளைக் கலந்துகொண்டு தயார்செய்தேன்.

ஜோசப்:—யார்யாரைக் கலந்துகொண்டீர்கள்?

வாதி:—திருவாளர்கள், ராஜம் நாயுடு, மாணிக்கவாசகம் பிள்ளை, மாணிக்கம்பிள்ளை, ஜில்லா கல்வி அதிகாரி, சுந்தரமய்யர்.

ஜோசப்:—எந்தெந்த தேதி தங்களுக்கு சௌகரியம் என்று சொன்னார்களா ?

வாதி:—இல்லை. அவர்களைச் சாட்சி போடப்போகிறேன் என்று அவர்களிடம் நான் சொன்னேன்.

ஜோசப்:—அவர்களுடைய சௌகரியத்தைப்பற்றி அவர்களிடம் கலந்துகொண்டீரா ?

வாதி:-மூன்று நான்கு பேர்களைக் கலந்துகொண்டேன்.

ஜோசப் :—மற்றவர்களை ?

வாதி :—கலந்துகொள்ளவில்லை.

ஜோசப் :—முதலில் சொன்னீர்களே, அவர்களை எதற்காக சாட்சி போட்டீர் ?

வாதி :—நான் ஓட்டுகளுக்காக அலைந்துதிரியவில்லை என்பதை ருசுப்படுத்த.

ஜோசப் :—எம். எஸ். எஸ். சிதம்பரம் செட்டியார், எம். ஆர். சுப்பையா செட்டியார், எம். ஆர். வி. ஆர். சாமினாதச் செட்டியார் இவர்களை எதற்காக சாட்சிபோட்டது?

வாதி :—நான் ஏமாற்றவில்லை என்று ருசுப்படுத்த.

ஜோசப் :—எம். என். எஸ். பி. நாகப்ப செட்டியார், பி. என். எம். எம். பழனியப்ப செட்டியார், எம். ஆர். எம். பெரியண்ண செட்டியார், ஒ. ஏ. பி. ஆர். எம். அருணாசல செட்டியார், ஸர். எம். சி. டி. முத்தையா செட்டியார் இவர்களை?

வாதி :—எனது சமூகப்பதவியை ருசுப்படுத்த.

ஜோசப் :—மற்றவர்களை?

வாதி :—யூனியன் போர்டு, தாலூகா போர்டு, ஜில்லா போர்டுகளில் நான்செய்த வேலையைப்பற்றிப் பேச.

ஜோசப் :—நடேசய்யரை?

வாதி :—வழக்கு சம்பந்தமான யூனியன் தஸ்தாவேஜ் களை கோர்ட்டில் ஆஜர்ப்படுத்தி தாக்கல் செய்ய.

ஜோசப் :—சொர்ணநாதன் செட்டியாரை?

வாதி :—என் ஸ்திதியைப்பற்றிப் பேச?

ஜோசப் :—ஏ. எம். எம். முருகப்ப செட்டியார் உங் களுக்குச் சிநேகிதரா?

வாதி :—ஆம். நானும் அவரும் குன்றக்குடி தேவஸ் தானத்து நிர்வாக போர்டு அங்கத்தினர்கள்.

ஜோசப் :—முருகப்ப செட்டியார் சென்னை சட்ட

சபை மெம்பரா?

வாதி:—ஆம். அவர் நாட்டுக்கோட்டை நகரத்தார் பிரதிநிதி?

ஜோசப்:—வரும் தேர்தலில் அவர் இராமநாதபுரம் ரூரல் தொகுதிக்கு சட்டசபை அபேட்சகராக நிற்கப்போகிறாரா?

வாதி:—அவ்வாறுதான் கேள்விப்பட்டேன்.

ஜோசப்:—அடுத்த தேர்தலில் தனக்கு உதவிசெய்யும்படி, முருகப்ப செட்டியார் உங்களைக்கேட்டுக்கொண்டதுண்டா?

வாதி:—இல்லை.

ஜோசப்:—நாகப்ப செட்டியாருக்கு பணம் கொடுத்து உதவிசெய்திருக்கிறீரா?

வாதி:—இல்லை.

ஜோசப்:—சாமிநாதன் செட்டியார்?

வாதி:—அவர் என் கோவில் பங்காளி.

ஜோசப்:—நாகப்ப செட்டியாரிடம் நீங்கள் மாணிக்கம் பிள்ளையை அனுப்பினதுண்டா?

வாதி:—இல்லை.

ஜோசப்:—நாகப்ப செட்டியாருக்குக் கடன்கொடுத்து ஒத்தாசை செய்திருக்கிறீர்களா?

வாதி:—இல்லை.

ஜோசப்:—கானாடுகாத்தானில் எஸ். ஏ. ஆர். எம். என்ற விலாசமுள்ள கடை இருக்கிறதா?

வாதி:—இருக்கிறது.

ஜோசப்:—அந்தக் கடையின் ரங்கூன் ஏஜண்டாக சாமிநாதன் செட்டியார் போனதுண்டா?

வாதி :—ஆம், போனார்.

ஜோசப் :—உம்முடைய சிபார்சினாலா ?

வாதி :—இல்லை.

ஜோசப் :—எஸ். எ. ஆர். எம். விலாசத்தில் எத்தனை பேர்கள் ?

வாதி :—மூன்று சகோதரர்கள்.

ஜோசப் :—அவர்கள் அ. மு. முருகப்ப செட்டியாருக்குச் சொந்தமா ?

வாதி:—அவர்கள் அ. மு. முருகப்ப செட்டியாரின் மைத்துனியின் பிள்ளைகள்.

ஜோசப் :—சாமிநாதன் செட்டியாருக்கும் எஸ். எ. ஆர். எம் கடைக்கும் இப்போது ஏதேனும் விரோதம் உண்டா ?

வாதி: —இல்லை.

ஜோசப் :—கே. ஆர். வி. சிதம்பரம் செட்டியாருக்கும் பெரியணன் செட்டியாருக்கும் வழக்கு நடந்ததா?

வாதி: —ஆம் நடந்தது.

ஜோசப் :—நீங்கள் பெரியணன் செட்டியாருக்காக சாட்சி சொன்னீர்களா ?

வாதி: —சொன்னேன்.

ஜோசப் :—பெரியணன் செட்டியாருக்கும் உமக்கும் கொடுக்கல் வாங்கல் உண்டா ?

வாதி :—அவருக்கு நான் கடன் கொடுத்திருக்கிறேன். அவரிடமிருந்து கடன் வாங்கவில்லை.

ஜோசப் :—சுப்பையா செட்டியாருக்கும் உமக்கும் விரோதமா ?

வாதி :—ஆம் கொஞ்சம் மனஸ்தாபம்.

ஜோசப் :—சென்ற தேர்தலில் உங்களுக்கு விரோதமாக விருந்தாரா? சாதகமாகவிருந்தாரா?

வாதி :—விரோதமாக விருந்தார்.

ஜோசப் :—விரோதத்திற்குக் காரணமுண்டா?

வாதி :—கவர்னர் தட்டி சம்பந்தமாக மனஸ்தாபம்.

ஜோசப் :—மனஸ்தாபம் நீங்கிப்போய்விட்டதா?

வாதி :—கவர்னர் தட்டிகட்ட முதலில் நான் அவருக்கு யூனியன் பிரஸிடெண்டு என்ற ஹோதாவில் அனுமதி கொடுக்கவில்லை. பின்னர் அனுமதி கொடுத்தேன். ராஜியாய் போய்விட்டோம்.

ஜோசப் :—கவர்னர் தட்டி சம்பந்தமான வழக்கு தேர்தலுக்கு முந்தியா, பிந்தியா?

வாதி :—பிந்தி என்று நினைக்கிறேன்.

ஜோசப் :—நீங்களிருவரும் ராஜியாய் போன தேதி தெரியுமா?

வாதி :—ஞாபகமில்லை.

ஜோசப் :—சுவர்ணநாதன் செட்டியார் பாதரக்குடி மட சம்பந்தமாக எந்தக் கட்சியிலிருந்தார்?

வாதி :—என்னுடைய கட்சியிலிருந்தார்.

ஜோசப் :—சாமினாதன் செட்டியார்?

வாதி :—அவரும் என் கட்சியிலிருந்தார்.

ஜோசப் :—பி. என். எம். எம். பழனியப்ப செட்டியாரை யூனியன் மெம்பராக நீங்கள் ரெஸ்டோர் செய்தீர்களா?

வாதி :—அவர் யூனியன் மீட்டிங்குக்கு ௪, ௫ இ மாதம் ஆஜராகவில்லை. பிரஸிடெண்ட் ஹோதாவில் குறிப்பு எழுதி அவரை ரெஸ்டோர் செய்தேன்.

ஜோசப் :—ரெஸ்டோர் செய்த மீட்டிங்கில் அவர் ஆஜ ராகி இருந்தாரா ?

வாதி :—அப்பொழுதும் அவர் ஆஜராகியிருக்கவில்லை.

ஜோசப் :—அவர் உங்களுகக்கு ஆஜராகாததற்கு கா ரணங்காட்டி கடிதம் எழுதினதுண்டா ?

வாதி :—அவர் கடிதம் எழுதினர்.

ஜோசப் :—நீங்கள் பதில் எழுதினீர்களா ?

வாதி :—இல்லை.

ஜோசப் :—அவர் எழுதினது நீங்கள் குறிப்பு எழுதிய தற்கு முன்பா, பின்பா ?

வாதி :—ஞாபகமில்லை.

ஜோசப் :—மெய்யப்பன் சேர்வை என்று யூனியன் போர்டு மெம்பர் ஒருவர் இருந்தாரா ?

வாதி :—இருந்தார்.

ஜோசப் :—அவருக்கும் உமக்கும் விரோதமுண்டா ?

வாதி :—விரோதமொன்றுமில்லை.

ஜோசப் :—செட்டியார்களுக்கும் வல்லம்பர்களுக்கும் கேஸ் நடந்ததா ?

வாதி :—நடந்தது.

ஜோசப் :—மெய்யப்பன் சேர்வை வல்லம்பர்களுக்கு தலைமை வகித்து கேஸ் நடத்தினரா ?

வாதி :—தெரியாது.

ஜோசப் :—யூனியன் போர்டு மீட்டிங்கில் அவர் மூன்று மாதம் ஆஜராகவில்லையே ?

வாதி :—இல்லை.

ஜோசப் :—அந்த மூன்று மாதத்தில் யூனியன் போர்டு கூட்டம் நடைபெற்றதா ?

வாதி :—இல்லை.

ஜோசப் :—மெய்யப்பன் சேர்வையை நீங்கள் ரெஸ்டோர் செய்தீர்களா ?

வாதி :—செய்யவில்லை.

ஜோசப் :—அதைப்பற்றி உங்கள் அபிப்பிராயமென்ன?

வாதி :—யூனியன் போர்டார் ரெஸ்டோர் செய்வதற்கு விரோதமாயிருந்தார்கள்.

ஜோசப் :—யூனியன் போர்டார் அபிப்பிராயத்தைக் கேட்கவில்லை. உங்கள் சொந்த அபிப்பிராயமென்ன ?

(வாதி பதில் சொல்லுமுன் வாதியின் வக்கீல் ஸ்ரீனிவாசய்யங்கார் ஜோசப் அவர்களின் கேள்வி கேட்கும் முறையைப்பற்றி ஆக்ஷேபித்தார். கோர்ட்டார் ஜோசப் அவர்களின் கேள்வியை ஏற்றுக்கொண்டு கேள்வி கேட்கச் சொன்னார்.)

ஜோசப் :—உங்களுடைய சொந்த அபிப்பிராயமென்ன?

வாதி :—அவரை ரெஸ்டோர் செய்யக்கூடாது என்று என்னுடைய அபிப்பிராயம்.

ஜோசப் :—உங்களுடைய அபிப்பிராயத்தைத் தெரிவித்தீர்களா ?

(வாதியின் வக்கீல் இந்தக் கேள்வியை ஆக்ஷேபித்தார். கோர்ட்டார் ஆக்ஷேபித்ததை ஏற்றுக்கொள்ளவில்லை. ஜோசப் அவர்களை கேள்வி கேட்கக் கோர்ட்டார் அனுமதி கொடுத்தார்கள்.)

ஜோசப் :—உங்களுடைய அபிப்பிராயத்தை தெரிவித்தீர்களா ?

வாதி :—இல்லை.

ஜோசப் :—மெய்யப்பன் சேர்வையை நீங்கள் ரெஸ்டோர் செய்யாதது அவர் பேரில் உங்களுக்குள்ள விரோதங் காரணமா?

வாதி :—இல்லை.

ஜோசப் :—உங்களுக்கும் மெய்யப்பன் சேர்வைக்கும் எதாவது வழக்கு இருந்ததா?

வாதி :—செட்டியார்களுக்கும் வல்லம்பர்களுக்கும் நடந்த வழக்கைத் தவிர எனக்கும் அவருக்கும் தனித்த வழக்கு நடக்கவில்லை.

ஜோசப் :—காரைக்குடியில் தங்கள் பங்களாவிற்குப் பக்கத்தில் ஒரு சந்து ஓடுகிறதா?

வாதி :—இல்லை.

ஜோசப் :—உங்கள் பங்களாவிற்கு மேற்கே ஒரு பாலம் இருக்கிறதா?

வாதி :—இல்லை.

ஜோசப் :—அந்தப் பங்களாவுக்கருகிலிருந்த பாலத்தைப் பிரித்து கால்வாயையும் பங்களாவுடன் சேர்த்துக்கொண்டீரே இதற்கு யூனியன் போர்டில் அனுமதி பெற்றீரா?

வாதி:—இல்லை.

ஜோசப் :—யூனியன் போர்டில் எத்தனை மெம்பர்கள் இருக்கிறார்கள்.

வாதி :—பதினைந்து.

ஜோசப் :—எத்தனை வல்லம்ப அங்கத்தினர்கள் இருக்கிறார்கள்.

வாதி :—மெய்யப்பன் சேர்வையை நீக்கி இரண்டு.

ஜோசப் :—எத்தனை செட்டியார் அங்கத்தினர்கள்

இருக்கிறார்கள்.

வாதி :—பத்து.

ஜோசப் :—சுப்பையா செட்டியார் ஒரு மெம்பரா ?

வாதி :—ஆம்

ஜோசப் :—அவர் எப்படி மெம்பரானார் ?

வாதி :—காலியான மெய்யப்பன் சேர்வை ஸ்தானத்திற்கு சுப்பையா செட்டியாரை கோயில்பிள்ளை அவர்கள் நியமனம் செய்தார்.

ஜோசப் :—சுப்பையா செட்டியாரை சிபார்சு செய்து கோயில் பிள்ளையவர்களிடம் நீங்கள் பேசியதுண்டா ?

வாதி :—இல்லை. அவர் சுப்பையா செட்டியாரைப்பற்றி என்னைக் கலந்துகொண்டார். நான் சுப்பையா செட்டியாரைப்பற்றி அவரிடம் நல்லபிப்பிராயம் கொடுத்தேன்.

ஜோசப் :—மெய்யப்பன் சேர்வையின் காலிஸ்தானத்திற்கு ஒரு வல்லப்பரை நியமிப்பது யுக்தமாயிருக்கும் என்று தாலூகா போர்டு பிரஸிடெண்ட் அவர்களிடம் நீங்கள் சொன்னதுண்டா ?

வாதி :—இல்லை

ஜோசப் :—அவ்வாறு சொல்லாததற்கு காரணமுண்டா ?

வாதி :—இல்லை. சுப்பையா செட்டியாரைப்பற்றி எனக்கு ஏதேனும் ஆட்சேபமுண்டாவென்றுதாலூகா போர்டு பிரஸிடெண்டு அவர்கள் என்னைக் கேட்டார். ஒன்றுமில்லையென்று சொன்னேன். நியமனவிஷயமாக பிரஸிடெண்ட் அவர்களுக்கு

யோஜனை சொல்லவேண்டிய தேவையில்லை என்று சொன்னேன்.

ஜோசப் :—மதுரையில் ஸ்தலஸ்தாபன மகாநாடு ஒன்று நடந்ததா ?

வாதி :—மூன்று வருஷங்களுக்கு முன் நடந்தது.

ஜோசப் :—நீங்கள் எந்த ஹோதாவில் மகாநாட்டிற்கு சென்றீர்கள் ?

வாதி :—தாலூகாபோர்டார் என்னை அனுப்பித்தார்கள்.

ஜோசப் :—அதைப்பற்றித் தீர்மானம் ஏதாயினும் தாலூகாபோர்டில் நிறைவேறிற்று ?

வாதி :—மகாநாட்டுக்கு நான் போகும்படியாக எனக்கு தாலூகாபோர்டு பிரஸிடெண்ட் அவர்களிடமிருந்து ஒரு உத்திரவு கிடைத்தது.

ஜோசப் :—தாலூகாபோர்டார் உங்களை பிரதிநிதியாகத் தேர்ந்தெடுத்தார்களா ?

வாதி :—தெரியாது.

ஜோசப் :—பிரதிநிதியனுப்புவதற்கு தாலூகாபோர்டில் தெரிந்தெடுக்கும் வழக்கம் உண்டா ?

வாதி :—வழக்கமாயுண்டு.

ஜோசப் :—ஸ்தலஸ்தாபன மகாநாடு வருஷத்திற்கொருமுறை நடைபெறுகின்றதா ?

வாதி :—எனக்குத்தெரியாது.

ஜோசப் :—மதுரையில் நடந்த மகாநாட்டிற்கு பின் ஏதாவது மகாநாடு நடந்ததா ?

வாதி :—இல்லை.

ஜோசப் :—மதுரை மகாநாட்டிற்கு முன் நடந்ததா ?

வாதி:—திருச்சிறுப்பள்ளியில் நடந்தது.

ஜோசப்:—மகாநாட்டிற்கு எப்படி பிரதி நிதிகள் தேர்ந்தெடுக்கப்பெறுகிறுர்கள்?

வாதி:—எனக்குத்தெரியாது.

ஜோசப்:—மகாநாட்டு நடவடிக்கைகள் பிரசுரிக்கப்பெற்றிருக்கின்றனவா?

வாதி:—மகாநாட்டின் நடவடிக்கைகளை அச்சுப்போட்ட பிரதியொன்றைப் பார்த்தேன் பிரசுரிக்கப்பட்டதா இல்லையா என்ற சங்கதி தெரியாது.

ஜோசப்:—நீங்கள் மகாநாட்டில் பேசினீர்களா?

வாதி:—பேசினேன்.

ஜோசப்:—மகாநாட்டின் நடவடிக்கைகள் பத்திரிகைகளுக்கு அனுப்பப்பட்டனவா?

வாதி:—தெரியாது.

ஜோசப்:—தேவகோட்டை யூனியன் போர்டு பிரஸிடெண்ட் சுப்பிரமணியஞ்செட்டியாரவர்கள் மகாநாட்டில் பிரஸன்னமாயிருந்தாரா?

வாதி:—இருந்தார்.

ஜோசப்:—தாலூகாபோர்டு மெம்பர் சுந்திரமய்யர்?

வாதி:—பிரசன்னமாயிருந்தார்.

ஜோசப்:—சுப்பிரமணியஞ் செட்டியார் மகாநாட்டிற்கு பிரதிநிதியாய் வந்தாரா?

வாதி:—வந்தார்.

ஜோசப்:—நீர் மகாநாட்டில் பேசியதாகச் சொன்னீரே அவருக்கு அது தெரியுமா?

வாதி:—தெரியுமோ, என்னவோ.

ஜோசப்: சுப்பையா செட்டியாருக்கு "ராவ்சாகிப்"

பட்டம் கொடுக்கப்பட்டதற்காக ஒரு விருந்து கச்சேரியில் நீங்கள் தலைமை வகித்தீர்களா ?

வாதி :—ஆமாம்.

ஜோசப் :—யூனியன் பிரஸிடென்ட் வீட்டிற்கு யார் வரி விதிப்பது ?

வாதி :—யூனியன் போர்டார்.

ஜோசப் :—உங்கள் வீட்டிற்கு யார் வரி விதித்தார்கள்?

வாதி :—நானே விதித்துக்கொண்டேன்.

ஜோசப் :—இந்த முறையை ஆடிட்டாவர்கள் ஆட்சேபித்தாரா ?

வாதி :—ஆட்சேபித்தார்.

ஜோசப் :—பின்னர் என்ன செய்தீர்கள் ?

வாதி :—பின்னர் யூனியன்போர்டார் முன்வைத்து அவருடைய அனுமதி பெற்றேன்.

ஜோசப் :—உங்கள் வீட்டிற்கு நீங்களே வரி விதிக்கக் கூடாது என்ற சட்டம் உங்களுக்குத் தெரியுமா ?

வாதி :—தெரியும்.

ஜோசப் :—தெரிந்தும் ஏன் வரி விதித்துக்கொண்டீர்கள் ?

வாதி :—தவறுதலாக.

ஜோசப் :—இதைப்பற்றி யூனியன் போர்டு ஹெட் குமாஸ்தாவை கலந்துகொண்டீர்களா ?

வாதி :—இல்லை

ஜோசப் :—யூனியன் போர்டில் தொழில்வரி விதிப்பது யார் ?

வாதி :—போர்டார்.

ஜோசப் :—உங்கள் தொழில்வரியை யார் விதித்தார்

கள் ?

வாதி :—நானே விதித்துக்கொண்டேன்.

ஜோசப் :—ஆடிட்டர் (கணக்குப் பரிசோதகர்) இதை ஆட்சேபித்தாரா ?

வாதி :—ஆட்சேபித்தார்.

ஜோசப் :—பிறகு என்ன செய்தீர் ?

வாதி :—போர்டார் முன்னிலையில் இதை வைத்து அவர்களுடைய அனுமதி பெற்றேன்.

ஜோசப் :—நீங்கள் செய்தது சட்டத்திற்கு விரோதம் என்று தெரியுமா ?

வாதி :—தெரியும். தவறுதலாகச் செய்துவிட்டேன்.

ஜோசப் :—எஸ். எம். எஸ். பள்ளிக்கூடத்தின் நிர்வாகத்தை நீங்கள் நடத்திவருகிறீர்களா ?

வாதி :—ஆமாம.

ஜோசப் :—அதைப்பற்றிய கணக்கு வைத்துக்கொண்டிருக்கிறீர்களா ?

வாதி:—கணக்குகள் இருக்கின்றன. பொக்கிஷதார் வைத்துக்கொண்டிருக்கிறார்.

ஜோசப்:—பரம்பரையாக பள்ளிக்கூடத்தலைமை உங்கள் குடும்பத்திலேயே இருக்கவேண்டுமென்று ஒரு யோஜனை யுண்டாயிற்று?

வாதி: — ஆம்.

ஜோசப்:—அம்மாதிரி ஒரு தீர்மானம்நிறைவேற்றிற்று

வாதி:—ஆம்.

ஜோசப்:—அந்தக்கூட்டத்தில் நீங்கள் ஆஜராயிருந்தீர்களா?

வாதி:—ஆஜராகியிருந்தேன்.

ஜோசப்:—அந்த யோசனையை நீங்கள் ஒப்புக்கொண்டீர்களா?

வாதி:—ஒப்புக்கொண்டேன்.

ஜோசப்:—பின்னால் இதற்கு விரோதம் ஏற்பட்டதா?

வாதி:—ஏற்பட்டது.

ஜோசப்:—என்ன நடந்தது?

வாதி:—பாம்பனை பிரஸிடெண்ட் என்பதை மாற்றி ஜீவிய பிரஸிடெண்ட் என்று ஒரு தீர்மானம் நிறைவேற்று.

ஜோசப்:—நீங்கள் இதை ஒத்துக்கொண்டீர்களா?

வாதி:—இதற்கும் ஒத்துக்கொண்டேன்.

ஜோசப்:—முத்து வெ. வெள்ளையஞ்செட்டியார் அப்பள்ளிக்கூடத்திற்கு ஏதாவது பணம் கொடுத்திருக்கிறாரா?

வாதி:—பதினையாயிரம் ரூபாய் கொடுத்திருக்கிறார்.

ஜோசப்:—பள்ளிக்கூடத்தை ஸ்தாபிக்க முதலில் முயற்சித்தவர் அவர்தானா?

வாதி:—இல்லை.

ஜோசப்:—அவரை ஜீவிய பிரஸிடெண்டாக செய்வதற்கு ஒரு யோசனை இருந்ததா?

வாதி:—இல்லை.

ஜோசப்:—கட்டிடம் கட்டிக்கொடுப்பதற்கு நீங்கள் ஒத்துக்கொண்டீர்களா?

வாதி:—ஒத்துக்கொண்டேன்.

ஜோசப்:—கட்டிடம் கட்டினால் பதினையாயிரத்துக்கதிகம் செலவாகுமென்று உமக்குத் தெரியுமா?

வாதி:—தெரியும்.

ஜோசப் :—உம்மை ஜில்லா பிரஸிடெண்டாகச் செய்யக் கூடாது என்று மதிர்க்கட்சியில் வெள்ளையஞ் செட்டியார் சேர்ந்தவரா ?

வாதி :—இல்லை.

ஜோசப்:—பள்ளிக்கூடக் கட்டிடம் இருக்கிற நிலம் பொதுஜனங்களால் கொடுக்கப்பட்டதா?

வாதி:—இல்லை.

ஜோசப் :—நீர் வாங்கினீரா ?

வாதி :—ஐந்தேமுக்கால் குறுக்கம் நிலம் பதினாயிரம் ரூபாய்க்கு அதன் சொந்தக்காரரிடம் வாங்கினேன்.

ஜோசப் :—இந்த நிலத்தைப்பற்றி ஏதாவது தகரார் இருந்ததா ?

வாதி :—இருந்தது.

ஜோசப் :—யாருககும் யாருக்கும் ?

வாதி :—சிவன்கோவில் டிரஸ்டிகளுக்கும் நிலச்சுவான் தாருக்கும்.

ஜோசப் :—நீர் வாங்கின நிலத்தில் பள்ளிக்கூடம் கட்டப்போவது என்று நிலச்சுவான்தாருக்குத் தெரியுமா ?

வாதி : தெரியும்.

ஜோசப் :—ஐந்தேமுக்கால் குறுக்க நிலத்தின் விலை பதினாயிரம் ரூபாதானா ?

வாதி :— அந்தக் காலத்தில் இருபதினாயிரம் பெறும்.

ஜோசப் —சிவன் கோவிலாருக்கு ஏதாவது பணம் கொடுத்தீரா ?

வாதி :—இல்லை. கொஞ்சம் நிலம் ஒதுக்கிவிட்டேன்.

ஜோசப் :—பள்ளிக்கூடத்தைச் சேர்ந்த ஒரு ஹாஸ்டல் (மாணவர் விடுதி) இருக்கிறதா?

வாதி :—இருக்கிறது.

ஜோசப் :—அதன் மானேஜ்மெண்டைப்பற்றி யாராவது குறை கூறினதுண்டா?

வாதி :—எனக்குத் தெரியாது.

ஜோசப் :—அதன் மானேஜ்மெண்டு உம்முடைய கையிலிருக்கிறதா?

வாதி :—இல்லை. பொக்கிஷதார் வசம் இருக்கிறது.

ஜோசப் :—பொக்கிஷதார் வசம் தானு? கமிட்டிவசமா?

வாதி ;—கமிட்டி வசம். அந்தக் கமிட்டியில் நான் ஒரு மெம்பர்

ஜோசப் :—அந்தக் கமிட்டியில் எம். எஸ். சிதம்பரம் செட்டியார் ஒரு மெம்பரா?

வாதி :—ஆம்.

ஜோசப் :—உமக்கும் அவருக்கும் ஏதாவது விரோதமுண்டா?

(இந்த சமயத்தில் வாதி வக்கீல் ஸ்ரீனிவாஸய்யங்கார் இந்தக் கேள்வியை ஆட்சேபித்தார். சிதம்பரம் செட்டியாருக்கும் வாதிக்கும் இருந்ததாகச் சொல்லப்படும் விரோதத்திற்கும் இந்த வழக்கிற்கும் யாதொரு சம்பந்தமில்லை யென்றும் இந்த மாதிரி கேள்விகள் கேட்டுக்கொண்டுபோனுல் அதற்கு ஒரு முடிவு இருக்காதென்றும் ஆட்சேபித்தார். கேள்வியின் நோக்கம் என்னவென்று கோர்ட்டாரவர்கள் ஜோசப்பை கேட்டபின் கேள்வி கேட்க அனுமதி கொடுத்தார்.)

ஜோசப் :—உங்களுக்கும் எம். எஸ். எஸ். சிதம்பரம் செட்டியாருக்கும் ஏதாவது வழக்கு நடந்ததா?

வாதி :—எனக்கும் அவருக்கும் நேராக நடக்கவில்லை அவருடைய குடியானவர்களுக்கும் என்னுடைய குடியானவர்களுக்கும் நடந்தது.

ஜோசப் :—உங்களுக்கு விரோதமாக சிதம்பரம் செட்டியார் ஏதாவது மனுப்போட்டாரா?

வாதி :—எனக்குத் தெரியாது.

ஜோசப் :—நிலங்களை பரிவர்த்தனை செய்து உங்கள் வழக்கை ராஜிபண்ணிக்கொண்டீர்களா?

வாதி :—ஆம்.

ஜோசப் :—குன்னக்குடி ரஸ்தா விஷயமாக உம்முடைய சம்பந்தமென்ன?

வாதி :—பொது ஜனங்களிடமிருந்து ரூபாய் இருபதினாயிரம் வசூல் செய்தும் நான் என்னுடைய சொந்தப்பணம் ரூபாய் இருபதினாயிரம் போட்டும் ரஸ்தாவை வேலைசெய்து அதன் பாதுகாப்புக்காக பன்னீராயிரம் ரூபாய் சேர்த்து ஜில்லா போர்டாரிடம் ஒப்புவிக்கிறது என்று ஜில்லா போர்டாரிடம் ஒப்பந்தம் செய்துகொண்டேன்.

ஜோசப் :—பணம் வசூல் செய்யும்பொழுது இதை பொது ஜனங்களிடம் சொன்னீரா?

வாதி :—இல்லை.

ஜோசப் :—பொது ஜனங்களிடமிருந்து எவ்வளவு ரூபாய் வசூலாயிற்று?

வாதி :—இருபதினாயிரம்.

ஜோசப் :—செலவான தொகைக்கு கணக்குவைத்திருக்கு

கிறீரா ?

வாதி:—ரோட் வேலைசெய்யும் பொறுப்பை முருகப்ப செட்டியார் என்ற ஒருவரிடம் ஒப்படைத்துவிட்டேன். அவர் கணக்கு வைத்திருப்பார்.

ஜோசப்:—அவர் இப்பொழுதிருக்கிறாரா ?

வாதி:—அவர் இறந்துபோய்விட்டார்.

ஜோசப்:—அந்தக் கணக்குகளெல்லாம் என்னவாயிற்று ?

வாதி:—என்னவாயிற்றோ தெரியாது ?

ஜோசப்:—ரோட்டிற்கு எவ்வளவு செலவாயிற்று ?

வாதி:—நாற்பதினாயிரம்.

ஜோசப்:—செலவழிந்த தொகையின் கணக்கை பொது ஜனங்களுக்கு காண்பித்து பாக்கித்தொகையை வசூல் செய்தீரா ?

வாதி:—கணக்கு காண்பிக்கவுமில்லை, பணம் வசூல்செய்யவுமில்லை.

ஜோசப்:—பாக்கி இருபதினாயிரம் ரூபாய் எங்கிருந்து வந்தது ?

வாதி:—என் கையிலிருந்து கொடுத்தேன்.

ஜோசப்:—ஜனங்கள் அறியும்படி கணக்கு வெளியிட்டீரா ?

வாதி:—அவர்கள் கேட்கவுமில்லை. நான் வெளியிடவுமில்லை.

ஜோசப்:—நீர் கணக்கு காண்பித்தீரா ?

வாதி:—காண்பிக்கவுமில்லை,

ஜோசப்:—ரோட் எப்படி பழுதுபார்க்கப்படுகிறது ?

வாதி:—வருஷம் ஒன்றுக்கு நானூறு ஐநூறு ரூபாய்

என் கையைவிட்டுக்கொடுக்கிறேன்.

ஜோசப்:—இந்தப் பணத்தை பொது ஜனங்களிடமிருந்து கேட்டீரா?

வாதி:—இல்லை.

ஜோசப்:—புதுக்கோட்டையில் "தேச ஊழியன்" என்ற பத்திரிகை இருக்கிறதா?

(வாதியின் வக்கீல் இந்தக் கேள்விக்கு ஆட்சேபித்தார். கோர்ட்டார் ஆட்சேபத்தை மறுத்து கேள்வி கேட்கச் சொன்னார்.)

ஜோசப்:—"தேசஊழியன்" பத்திரிகையை பார்த்திருக்கிறீரா?

வாதி:—பார்த்ததில்லை.

ஜோசப்:—எதிரி சர்க்காருக்கு விரோதமாக தமதுபத்திரிகையில் வியாசமெழுதி வருகின்றார் என்று அதிகாரிகளிடம் நீங்கள் சொன்னதுண்டா?

வாதி:—உண்டு. அமிர்தசாமி பிள்ளையிடம் சொன்னேன்.

ஜோசப்:—வேறு ஒருவரிடமும் சொல்லவில்லையா?

வாதி:—இல்லை.

ஜோசப்:—அமிர்தசாமி பிள்ளையிடம் என்ன சொன்னீர்?

வாதி:—எதிரி சர்க்காருக்கு விரோதமாக எழுதுகிறார் என்று பொதுவாகச்சொன்னேன்.

ஜோசப்:—ஏதாவது வியாசத்தைக் குறிப்பிட்டுச் சொன்னீரா?

வாதி:—இல்லை.

ஜோசப்:—நீர் சொன்னது வழக்கிற்கு முந்திய பின்

தியா !

வாதி :—முந்தியா பிந்தியா என்று ஞாபகமில்லை.

ஜோசப்.—அமிர்தசாமி பிள்ளையிடம் எங்கே சொன்னீர் ?

வாதி :—அவர் வீட்டில்.

ஜோசப் :—நீர் என்ன காரியமாய்ப் போனீர் ?

வாதி:—பல விஷயங்களைப்பற்றிப் பேச.

ஜோசப் :—சொந்த விஷயமாகவா ?

வாதி:—இல்லை பொது விஷயமாக.

ஜோசப் :—அமிர்தசாமி பிள்ளையிடம் இவ்வாறு சொன்னதாக உம்முடைய வக்கீலிடம் சொன்னீரா ?

வாதி:—ஞாபகமில்லை.

ஜோசப் :—இந்த மாதிரி வியாசம் எழுதுவதற்காக எதிரியைக் கூப்பிட்டு எப்பொழுதாவது கண்டித்தீரா ?

வாதி:—கண்டித்தேன்.

ஜோசப்:—எங்கே நடந்தது ?

வாதி:—யூனியன் போர்டாபீஸில்.

ஜோசப் :—நீர் அவரை கூப்பிட்டுவிட்டீரா ?

வாதி.—இல்லை. நான் கூப்பிட்டுவிடவில்லை.

ஜோசப்:—பிறகு அவரை எப்படிச் சந்தித்தீர் ?

வாதி.—எதிரி தெரு வழியாகப் போய்க்கொண்டிருந்தார். நான் யூனியன் ஆபீஸ் வராண்டாவில் நின்றேன், அவரைக் கூப்பிட்டுப் பேசினேன்.

ஜோசப் :—அதற்கு முன் எதிரியோடு எப்பொழுதாவது பேசியிருக்கிறீரா ?

வாதி —பேசியிருக்கிறேன்.

ஜோசப்.—நீர் அன்றைக்கு எதிரியின் க்ஷேமத்தைப் பற்றி விசாரித்தீரா?

வாதி:—விசாரிக்கப்படவில்லை.

ஜோசப்:—யூனியன் ஆபீஸில் அவர் வந்து உட்கார்ந்து கொண்டாரா?

வாதி:—இல்லை. நாங்களிரண்டுபேரும் வராண்டாவில் நின்றுகொண்டுதான் பேசினோம்.

ஜோசப்.—அங்கே வேறு யாராவது இருந்தார்களா?

வாதி:—ஆபீசுக்குள் குமாஸ்தாக்கள் இருந்தார்கள்.

ஜோசப்:—நீங்கள் உரக்கப் பேசினீர்களா?

வாதி:—நாங்கள் பேசிக்கொண்டிருந்ததை குமாஸ்தாக்கள் கேட்டுக்கொண்டிருக்கமுடியாது.

ஜோசப்:—எவ்வளவுநேரம் பேசிக்கொண்டிருந்தீர்கள்?

வாதி.—சுமார் பதினைந்து நிமிஷம்.

ஜோசப்:—அவரிடம் என்னசொன்னீர்?

வாதி:—சங்கராச்சாரியார் முதலியவர்களைப்பற்றி அவர் அவமரியாதையாக எழுதக் கூடாதென்று சொன்னேன்.

ஜோசப்:—அவர் என்ன பதில் சொன்னார்?

வாதி:—என்னுடைய அபிப்பிராயத்தை ஏற்றுக் கொள்ள முடியாதென்றும் தம்முடைய இஷ்டம் போல்தான் எழுதுவாரென்றும் சொன்னார்.

ஜோசப்:—பேசுகிறபொழுது கோபமான வார்த்தையை உபயோகப்படுத்தினாரா?

வாதி:—ஆமாம் ரொம்பவும் கோபமாய்த்தான் பேசினார்.

ஜோசப்:—நீர் சாந்தமாயிருந்தீரா?

வாதி :—நான் சாந்தமாயிருந்தேன்.

ஜோசப்.—எத்தனை தடவைகளில் இந்த மாதிரி எதிரியைக் கண்டித்தீர் ?

வாதி :—ஒரே ஒரு தடவைதான்.

ஜோசப்:—எதிரியை பொதுவாக கண்டித்தீரா அல்லது ஏதாவது வியாஸத்தை குறிப்பிட்டு கண்டித்தீரா ?

வாதி :—பொதுவாக கண்டித்தேன். வியாஸத்தை ஒன்றும் குறிப்பிடவில்லை.

ஜோசப்:—இந்த மாதிரி நடந்ததை அதிகாரிகளிடம் சொன்னீரா ?

வாதி :—ஞாபகமில்லை.

ஜோசப்:—வேறு யாரிடமாவது சொன்னீரா ?

வாதி:—பி. ஆர். கே. ஆர். நாகப்ப செட்டியாரிடம் சொன்னேன்.

ஜோசப்:—வேறு யாரிடமாவது ?

வாதி :—ஆ. வி. பள. முரு. விடம் சொன்னேன்.

ஜோசப்:—எதிரியை நீங்கள் கண்டித்த தேதி உங்களுக்கு ஞாபகமிருக்கிறதா ?

வாதி:—நவம்பர் மாதம் முத்தேதி வாக்கில்.

ஜோசப் :—நீங்கள் கண்டித்ததிலிருந்து எதிரி உங்களைத் தாக்கி எழுதுவாரென்று தோன்றிற்று ?

வாதி :—தோன்றிற்று.

ஜோசப் :—சங்காராச்சாரியார் முதலியவர்களைப்பற்றி விரோதமாக எழுதப்பட்ட வியாஸம் ஏதாவதொன்றை உங்களுடைய வக்கீலுக்கு காண்பித்தீரா ?

வாதி :—இல்லை.

ஜோசப் :—சங்கராச்சாரியார் காரைக்குடிக்கு எப்பொழுது வந்தார்?

வாதி :—நவம்பர் மாதம் முதல்தேதி வாக்கில்.

ஜோசப் :—அவர் உங்களுக்கு குருவா?

வாதி :—அவர் லோக குரு.

ஜோசப் :—கேட்டதற்குப் பதில் சொல்லும்?

வாதி :—எங்கள் ஜாதியாருக்கும் அவர் குருதான்.

ஜோசப் :—சங்கராச்சாரியாருக்கு விரோதமாக எதிரி எழுதிய வியாஸம் ஒன்றை நீங்கள் குறிப்பிட முடியுமா?

வாதி :—நான் குறிப்பிட முடியாது.

ஜோசப் :—சங்கராச்சாரியரென்று சொன்னீரே அது சிருங்கேரியா அல்லது கும்பகோணமா?

வாதி :—இரண்டுபேரும் தான்.

ஜோசப் :—கும்பகோணம் சங்கராச்சாரியார் காரைக்குடிக்கு எப்பொழுது வந்தார்?

வாதி :—நாலு மாதங்களுக்கு முன்னே.

ஜோசப் :—நீர் எதிரியோடு பேசினீரே, அதற்கு முந்தி அவர் சங்கராச்சாரியாருக்கு விரோதமாக எழுதினரா?

வாதி :—நவம்பர் மாதத்திற்கு முந்தி எழுதியிருக்கிறார்.

ஜோசப் :—எவ்வளவு நாள் முந்தி?

வாதி :—சுமார் ஒன்றிரண்டு மாதம் முந்தி.

ஜோசப் :—சங்கராச்சாரியாருக்கு விரோதமாக 'குமரன்' பத்திரிகையில் ஏதாவது எழுதப்பட்டிருக்கிறதா?

வாதி:—எனக்குத் தெரியாது.

இந்த சமயத்தில் ஜோசப் வாதியிடம் 'ஊழியன்' பத்திரிகையை கொடுத்து ஒரு வியாஸத்தை காட்டி "இதை படித்த பிறகா நீங்கள் எதிரியைக் கண்டித்தீர்" என்று கேட்டார். வாதி இல்லை என்று சொன்னார். ஜோசப் மற்றுமொரு நிரூபத்தைக் காட்டி "இதைப் படித்த பிறகா எதிரியைக் கண்டித்தீர்" என்று கேட்டார். வாதி குறிப்பை படித்துப்பார்த்து 'ஆம் இதைப் படித்த பிறகுதான்' என்றார் வாதி.

அக்குறிப்பு கீழ்வருகின்றது.

"சிருங்கேரி சங்கராச்சாரி:—இம்மதி உஎ-ம் நாளன்று சிருங்ககிரி பீடத்து சங்காாச்சாரியார் இந்நகருக்கு வந்தார். அவருக்கும் முன்னும் பின்னும் நான்கு குதிரைகளில் போர்வீரர் உடையணிந்த நால்வர் துப்பாக்கியுடனும் அவருக்குப் பக்கத்தில் ஒரு குதிரையில் போர்வீரர் உடையணிந்த இருவர் துப்பாக்கியுடனும் சுமார் ஐயாயிரம் வெண்பொற்காசுகள் பெறுமதியுள்ள ஜரிகைப் போர்வையாற் போர்த்தப் பட்ட யானையும் வேறு பல விருது முதலிய எடுபிடிகளும் சர்வாதிகாரி முதலியோரும் சில தனவணிகரும் பிற சிலரும் உடன் நடந்து செல்ல ஆச்சாரியார் ஜரிகைப் பீதாம்பரம் உடுத்தி தலையில் இரத்தினக்கிரீடம் தாங்கி தங்கப் பல்லக்கில் ஆரோகணித்து அப்பல்லக்கைக் கோவிலூர் மடமகாதேவஞான தேசிகரும் வேறு இரண்டொரு தனவணிகரும் போகிகளும் தூக்க கல்லுக்கட்டி வடக்குவீதி வழியாய் இந்நகருக்கு வந்தார். நேற்றுவரை சிலர் இந்நகருக்கு வந்ததற்கு பார்ப்பனச்

சாப்பாட்டுக்கும் போகிகள் மதுமாம்சம் முதலிய இன்னும் பிறவுமாகச் சேர்ந்து ஏராளமான வெண்பொற் காசுகள் தனவணிகரால் செலவிடப்பட்டிருக்கின்றன. இன்னும் ஏராளமான பொருள் செலவிடப்படுமெனவும் அறிவிக்கிறோம்.''

(கஎ—கக—உரு-ம் வ ஊழியன் இதழிலிருந்து)

ஜோசப் :—இந்த தேதியைப் பாரும், நவம்பர் மாதம் கஎவ யல்லவா ?

வாதி :—ஆம்.

ஜோசப் :—ஆகையால் நீர் சொன்னது பொய்தானே?

வாதி :—(பதில் சொல்லவில்லை) ஆனால் திகைத்து விழித்தார்.

ஜோசப் :—ஜில்லா கல்விபோர்டில் நீங்கள் இன்னும் மெம்பராயிருக்கிறீரா ?

வாதி :—ஆமாம். நியமனம் பெற்ற அங்கத்தினர்.

ஜோசப் :—நீங்கள் போஸ்ட்மாஸ்ட்டர் ஜெனரலைப் பார்த்தீரா ?

வாதி :—அவர் என்னைக் கூப்பிட்டனுப்பினார். காயலாயிருந்தவன் போய்ப் பார்த்தேன்.

ஜோசப் :—நீங்கள் போஸ்ட்மாஸ்ட்டர் ஜெனரலைப் பார்த்த அன்றையதினம் இந்த வழக்கு ராமேஸ்வரத்தில் வாய்தா போடப்பட்டிருந்ததா?

வாதி :—ஆமாம்.

ஜோசப் :—மெடிகல் சர்டிபிகேட் அனுப்பினீரா?

வாதி :—மெடிகல் சர்டிபிகேட் வாங்கி யனுப்பினேன்.

ஜோசப் :—போஸ்ட்மாஸ்டர் ஜெனரலை எங்கு பார்த்தீர்?

வாதி:—என் பள்ளிக்கூடத்தில்.

ஜோசப்:—அவருக்கு விருந்துக் கச்சேரி நடந்ததா?

வாதி:—நடந்தது.

ஜோசப்:—நீங்கள் அதற்குப் போயிருந்தீர்களா?

வாதி:—போகவில்லை.

ஜோசப்:—யார் அதை நடத்தினார்கள்?

வாதி:—சிவன்கோயில் டிரஸ்டிகள்.

ஜோசப்:—விருந்துக கச்சேரி எங்கு நடந்தது?

வாதி.—என் பள்ளிக்கூடத்தில்.

ஜோசப்.—விருந்துக்கச்சேரி பள்ளிக்கூடத்தில் நடத்துவதற்கு நீங்கள் அனுமதி கொடுத்தீர்களா?

வாதி:—அனுமதி கொடுத்தேன்.

ஜோசப்:—விருந்துக்கச்சேரி நடத்துவதில் நீங்கள் முதன்மையாக விருந்தீர்களா?

வாதி:—நான் முதன்மையாக இருக்கவில்லை. ஆத. பள. சிதம்பரம் செட்டியார் முதன்மையாக இருந்தார்.

ஜோசப்:—எப்பொழுது பார்த்தீர்?

வாதி:—விருந்துக்கச்சேரி நடந்து அவர் சாப்பிட்டான பிறகு.

ஜோசப்:—வேறு யாராவது அதுசமயம் அங்கே இருந்தார்களா?

வாதி:—மற்றவர்களுமிருந்தார்கள்.

ஜோசப்:—எவ்வளவு நேரம் அவருடன் நீங்கள் பேசிக்கொண்டிருந்தீர்கள்?

வாதி:—பதினைந்து முதல் முப்பது நிமிஷம் வரை இருக்கும்.

ஜோசப்:—அருணுசலஞ் செட்டியாருக்கு வழக்கமாக அஜெண்டா பேப்பர் அனுப்பி வருவதுண்டா?

வாதி:—ஞாபக மில்லை.

ஜோசப்:—எவ்வளவுகாலமாக 'ஊழியன்' பத்திரிகைக்கு அஜண்டா பேப்பர் அனுப்பி வருகிறீர்கள்?

வாதி:—எவ்வளவு காலமென்று ஞாபகமில்லை.

ஜோசப்:—பிறகு 'ஊழியன்' பத்திரிகைக்கு அஜெண்டா பேப்பர் அனுப்புவதை நிறுத்திவிட்டீரா?

வாதி.—ஆமாம்.

ஜோசப்.—காரணம் சொல்லமுடியுமா?

வாதி:—யூனியன்போர்டு மீட்டிங் நடவடிக்கைகளை தவருக அந்தப் பத்திரிகையின் நிருபர் எழுதியிருந்தார்.

ஜோசப்:—அஜண்டா பேப்பர் அனுப்பாததைப்பற்றி அருணுசலஞ்செட்டியார் உங்களுக்கு ஏதாவது கடிதமெழுதியதுண்டா?

வாதி:—எழுதினுர்.

ஜோசப்:—நீங்கள் அதற்குப் பதில் எழுதினீர்களா?

வாதி:—இல்லை.

ஜோசப்.—கடிதம் சிதம்பரம் செட்டியார் என்ற தனி முறையில் வந்ததா, யூனியன்போர்டு பிரஸிடெண்டு என்ற முறையில் வந்ததா?

வாதி:—யூனியன் போர்டு பிரஸிடெண்டு என்றமுறையில்.

ஜோசப்:—யூனியன் போர்டு பிரஸிடெண்டு என்ற முறையில் வரும் கடிதங்களுக்கு நீங்கள் பதில் எழுதும் வழக்கமுண்டா?

வாதி:—வழக்க முண்டு.

ஜோசப் :—பிறகு அவர் உங்களுக்கு ரிஜிஸ்டர் லெட்டர் எழுதினாரா?

வாதி:—அனுப்பினார்.

ஜோசப்:—அனுப்பின தேதி தெரியுமா?

வாதி:—ஞாபகமில்லை.

ஜோசப்:—அந்த ரிஜிஸ்டர் லெட்டருக்கு நீங்கள் பதில் எழுதினீர்களா?

வாதி:—இல்லை

ஜோசப்:—உங்களுக்கு 'திராவிடன்' பத்திரிகை தெரியுமா?

வாதி:—'திராவிடன்' என்ற பத்திரிகை இருக்கிறதென்று எனக்குத் தெரியாது.

ஜோசப்—நீங்கள் ஜஸ்டிஸ் கட்சியில் சேர்ந்தவரா?

வாதி:—எனக்கு ஒரு கட்சியுமில்லை.

ஜோசப்:—திராவிடன்' பத்திரிகைக்கு அருணாசலஞ் செட்டியார் ஒரு நிரூபர் என்று உங்களுக்குத் தெரியுமா?

(வாதியின் வக்கீல் இந்தக்கேள்வியை ஆக்ஷேபித்தார். கோர்ட்டார் கேள்விகேட்குமாறு ஜோசப்புக்கு அனுமதி கொடுத்தார்கள்.)

ஜோசப்:—அருணாசலஞ்செட்டியார் திராவிடன் பத்திரிகைக்கு நிரூபர் என்று உமக்குத் தெரியுமா?

வாதி:—தெரியாது.

ஜோசப்:—யூனியன் போர்டில் சுதேசமித்திரன் நிரூபருக்கு சீட் கொடுக்கவேண்டுமென்று ஜில்லா போர்டிலிருந்து உங்களுக்கு ஒரு தாக்கீது அனு

ப்பட்டதா?

வாதி—ஞாபக மில்லை.

ஜோசப்:—கோட்டப்பட்டணம் ஆயுர்வேத வைத்திய சாலை திறந்து வைக்கப்பட்டது க-கஉ-உ௫ க்கு முந்தியா பிந்தியா?

வாதி.—முந்தியா பிந்தியா என்று எனக்குத் திட்டமாகச் சொல்ல முடியாது.

ஜோசப்:—உப்பூரில் ஒரு ஆயுர்வேத வைத்தியசாலை இருந்தது உமக்குத் தெரியுமா?

வாதி.—தெரியும்.

ஜோசப்:—அது மாணிக்கம்பிள்ளை காலத்தில் மூடப்பட்டதா?

வாதி:—ஆம்

ஜோசப்—ஜலசப்ளைக்காக நீர் ஏதாவது செய்திருக்கிறீரா?

வாதி:—நான் ஒன்றும் செய்யவில்லை. அதற்கு சந்தர்ப்பம் ஏற்படவில்லை.

ஜோசப்:—ஜலசப்ளை விஷயம் என்னவாயிற்று?

வாதி.—லக்ஷ ரூபாய் ஜனங்களிடமிருந்து வசூல் பண்ணினால் இன்னொரு லக்ஷ ரூபாய் சர்க்கார் கொடுப்பாரென்று கலெக்டர் சொன்னார். சமயம் வரும்பொழுது தகுந்த தொகை அதற்காக நான் கொடுப்பதாகச் சொன்னேன்.

இத்துடன் குறுக்கு விசாரணை முடிந்தது.

வாதி வக்கீல் ஸ்ரீனிவாசய்யங்காரவர்கள்
வாதியை விசாரித்தார்.

டி. சி:—பதினாயிரம் ரூபாய்க்கு நீங்கள் இடம் வாங்கி

னீர்களே அதில் எத்தனை ரூபாய் செலவழித்து கட்டிடம் கட்டினீர்கள்?

வாதி:—கூ0000 ரூபாய்.

டி. சி:—பள்ளிக்கூடத்திற்கு வருஷாவருஷம் எவ்வளவு செலவழிக்கிறீர்கள்?

வாதி:—செலவிற்காக துண்டு விழுகிற ரு000 ரூபாயை என் கையிலிருந்து கொடுக்கிறேன்.

டி. சி:—சிவன் கோவிலாருக்கு நிலத்திற்காக நீங்கள் ஏன் பணம் கொடுக்கவில்லை.

வாதி:—அவர்களுக்கு நிலம் ஒதுக்கிவிட்டோம். மேலும் அவர்கள் பெண்பாடசாலைக்கு நிலம் கொடுத்திருக்கிறார்கள்.

டி. சி:—பள்ளிக்கூடத்திற்கு என்ன பெயர்?

வாதி:—உள்ளூர் ஸ்வாமி அம்மன் பெயராகிய ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரேசுவரர் பள்ளிக்கூடம் என்று பெயரிடப்பட்டிருக்கிறது.

டி. சி:—தேவகோட்டை தாலூகாபோர்டை பிரிக்க வேண்டுமென்று சொன்னபொழுது நீங்கள் ஜில் போர்டு மெம்பராயிருந்தீரா?

வாதி.—ஞாபகமில்லை.

டி. சி:—ரெஸ்டோர் பண்ணுகிற காலத்தில் மெம்பர் ஆஜராகியிருக்க வேண்டுமென்பதுண்டா?

வாதி:—இல்லை.

டி. சி:—குன்னக்குடி தேவஸ்தானம் நிர்வாக போர்டு யாரால் நியமிக்கப்பெற்றது?

வாதி.—ஹைகோர்ட்டாரால்.

டி. சி.—யாரார் நியமிக்கப்பெற்றனர்?

வாதி:—நானும், முருகப்ப செட்டியாரும்.

டி. சி:—உம்முடைய கோயில் பங்காளிகளில் எவ்வளவு புள்ளி?

வாதி.—ஆயிரத்தி ஐநூறு.

டி. சி.—காரைக்குடியில் உங்களுக்குக் கடையுண்டா?

வாதி.—இல்லையென்று எற்கனவே சொல்லியிருக்கிறேன்.

டி. சி.—காரைக்குடி ஹெட் ஆபிஸ் என்று சொன்னீரே அப்படி என்றால் என்ன?

வாதி:—காரைக்குடியில் லேவாதேவி நடக்கவில்லை. கணக்குகள் அங்கு வைக்கப்பட்டிருக்கின்றன. கடைகள் வேறிடங்களிலிருக்கின்றன.

இத்துடன் வாதியின் விசாரணை முடிந்ததும் அவர்தம் வக்கீல் திரு. டி. சி. சீனிவாசய்யங்கார் வழக்கை துடர்ந்தார்ப்போல் நடத்தலாமே என மாஜிஸ்ட்ரேட்டைப் பார்த்துக் கேட்டார். அதற்கு மாஜிஸ்ட்ரேட் தாம் நாளை மதுரை போவதாகச் சொல்லி இருதரப்பு வக்கீல்களையும் கலந்துகொண்டு ஜூன்-மீ உஅ௳ உகூஉ ௩0௨ களில் இவ்வழக்கு மீண்டும் இராமநாதபுரத்தில் விசாரிக்கப்படுமென அறிவித்தார். குறுக்கு விசாரணை நடந்த இரு நாட்களிலும் தனவணிகர் நாட்டில் பல பாகங்களிலிருந்தும் தனவணிக வாலிபர்களும் பிறருமாக ஏராளமாகக் கூடி நடபடிக்கைகளைக் கவனித்துக்கொண்டிருந்தனர். இவ்வழக்கு இந்நாட்டிலுள்ள வாலிபர்கட்கிடையில் ஒரு பெருங் கிளர்ச்சியை உண்டு பண்ணியிருக்கிறது.

ஆனித் திங்கள் ௩௧-ம் நாள் இவ் வழக்கு விசாரணை நடக்கும் என முன் குறிப்பிட்டிருந்ததை நேயர்கள் அறிவார்கள். வழக்கு நடவடிக்கைகளைக் கவனிக்க தனவணிகர் நாட்டின் பல பாகங்களிலிருந்தும் இளைஞர்கள் வந்து குழுமியிருந்தனர். வாதியும் அவர் தம் வக்கீல்களும் ௩௦-ம் நாள் புதன் அன்றே புகைரத மார்க்கம் வந்துசேர்ந்தனர். எதிரியும் அவர்தம் நண்பர்களும் குற்றாலமிருந்து சொந்த இயந்திர வண்டியில் விசாரணை அன்று முற்பகல் ௧௧-மணிக்கு வந்து சேர்ந்தனர். எதிரி வக்கீல் பாரிஸ்டர் ஜோசப்பும் அவர் ஜூனியர் திரு. கோபாலகிருஷ்ணய்யரும் போட்மெயிலில் வந்திறங்கினர். வாதியும் அவர் தம் வக்கீல்களும சாக்ஷிகளும் ராஜா பங்களாவில் தங்கியிருந்தனர். எதிரியும் அவர்தம் நண்பர்களும் தேவகோட்டை திருவாளர் அழ. சித. லெ. பங்களாவில் தங்கியிருந்தனர். எதிரி வக்கீல் பாரிஸ்ட்டர் ஜோசப் அவர்கள் ஹெல்த் ஆபிசர், தாமஸ் அவர்களின் விருந்தினராக அவர் வீட்டில் தங்கியிருந்தார். கோர்ட்டு கூடியதும் வாதியின் ச-வது சாக்ஷியாக திரு. மாணிக்கவாசகம்பிள்ளை விசாரிக்கப்பட்டார்.

முதலில் வாதியின் வக்கீலால்,

ஸ்ரீமான் மாணிக்கவாசகம்பிள்ளை சாட்சி விசாரணை.

கேள்வி :—நீங்கள் மதுரையில் வக்கில் தொழில் நடத்துகிறீர்களா?

பதில் :—ஆம் நான் மதுரை ஜில்லா கூட்டு பப்ளிக் பிராஸிகூடராகவும் இருக்கிறேன்.

கேள்வி :—தாங்கள் ராமநாதபுரம் ஜில்லா சபையின் (போர்டின்) உபதலைவரா?

பதில் :—ஆம் சென்ற ஐந்தாண்டுகளுக்கு சற்று அதிகமாக, ஐந்தாண்டுகளும் மூன்று மாதங்களுமாக அப்பதவியை நான் வகித்து வருகிறேன்.

கேள்வி :—தங்களுக்கு எதாவது பட்டங்கள் கொடுக்கப்பட்டிருக்கிறதா?

பதில் :—ராவ்சாகிப் என்ற பட்டம் பெற்றிருக்கிறேன்.

கேள்வி :—வாதியைத் தாங்களறிவீர்களா?

பதில் :—நான் அறிவேன்.

கேள்வி :—எவ்வித மறிவீர்கள்?

பதில் :—ஜில்லா சபையின் அங்கத்தினராகவும், காரைக்குடி யூனியன் போர்டு தலைவராகவும் நான் அறிவேன்.

கேள்வி :—வாதி தேவகோட்டை தாலூகா சபையின் தலைவராக இருக்கிறாரா?

பதில் :—தேவகோட்டை தாலூகா சபையின் தலைவராக அவரை சர்க்கார் நியமித்தது.

கேள்வி :—ஜில்லா சபையிலும் அவர் அங்கத்தினராயிருக்கிறாரா?

பதில் :—ஆம்.

கேள்வி :—ஜில்லா சபையின் கூட்டங்களுக்குத் தாங்கள் சென்றிருக்கிறீர்களா?

பதில் :—அனேகமாக ஜில்லா சபையின் கூட்டங்கள் அனைத்துக்குமே நான் சென்றிருக்கிறேன்.

கேள்வி :—அக்கூட்டங்களில், வாதப் பிரதிவாதங்களில் கலந்து கொள்ளுவோர் அனைவருடைய

பெயரையுங்குறித்துக்கொள்ளும்வழக்கமுண்டா?

பதில் :—சாதாரண ரீதியில் அவர் பெயர்களைக் குறித்துக்கொள்ளும் வழக்கம் கிடையாது.

கேள்வி :—வாதி ஜில்லாசபைக் கூட்டங்களுக்கு வருவதுண்டா?

பதில் :—ஆம் ஜில்லா சபைக்கூட்டங்களில் அவர் பிரசன்னமாக இருந்திருக்கிறார்.

கேள்வி :—அவர் மௌனம் சாதிக்கும் அங்கத்தினராக அங்கு அமர்ந்திருந்தாரா? அல்லது நடவடிக்கைகளில் கலந்து காரியவாகினியாக இருந்திருக்கிறாரா?

பதில் :—தங்கள் கருத்து விளங்கவில்லை.

கேள்வி :—ஜில்லாசபைக் கூட்டங்களில் விஷயங்கள் தர்க்கிக்கப்பட்டு வரும்பொழுது அவரும் கலந்துகொண்டு தமது அபிப்பிராயங்களையும் வெளியிட்டதுண்டா?

பதில்:—ஆம். கூட்டங்களில் வாதங்களில் அவரும் கலந்து கொண்டிருக்க நான் பார்த்திருக்கிறேன்.

கேள்வி :—ஏதாவது விஷயங்கள் தங்களுக்கு நினைவிருக்கிறதா?

பதில் :—செட்டிமார்நாடு சம்பந்தபட்ட விஷயம் ஏதாவது வரும்பொழுது, அவர் அவ்வாதங்களில் கலந்து கொள்ளுவது வழக்கம். அப்பொழுதுதான் அவர் விசேஷமாகச் சிரத்தை காட்டியிருக்கிறார்.

கேள்வி :—அவரை 'யூனியன் போர்டு' தலைவர் என்ற ஹோதாவில் பார்த்திருக்கிறீர்களா?

பதில் —ஒரு சந்தர்ப்பம் நினைவில் இருக்கிறது. அவ

ருடைய ஆட்சேபங்களை ஜில்லா சபை அங்கத்தினருக்கு விளக்கிக் கூறுவதற்காக ஜில்லாசபைத் தலைவர் அவரைக் கூப்பிட்டுவிட்டு இருந்தார். தொழில்வரி விஷயமாக தாவா செய்துகொண்டிருந்தார். அவருக்கும் அவரது யூனியனில் உள்ள ஏனைய அங்கத்தினருக்கும் உள்ள தாவாவை எடுத்துக்கூறும்படி, அவரை ஜில்லா சபைத்தலைவர் கேட்டுக்கொண்டார்.

கேள்வி: அவ் வேண்டுதலுக் கிணங்க வாதி பிரசன்னமாயினரா?

பதில்:—ஆம். வாதி பிரசன்னமானார்.

கேள்வி:— அப்பொழுது தலைவர் யார்?

பதில்:—கௌரவ ஸ்ரீ ராமநாதபுரம் ராஜா ஜில்லாசபையின் தலைவராக இருந்தார்.

கேள்வி:—வேறு யாராவது தலைவராயிருந்திருக்கத் தாங்கள் கண்டிருக்கிறீர்களா?

பதில்:—ஆம். இன்னொரு தலைவரை எனக்கு நினைவிருக்கிறது. அவர் திவான் பகதூர் ஸ்ரீ எதிராஜுலுநாயுடு அவர்களாகும்.

கேள்வி:—வாதி வந்து தம் கட்சியை விளக்கிக்காட்டினரா?

பதில்:—ஆம். வாதி தம் கட்சியை விளக்கிக் கூறினர். ஆனால் அவருடைய ஆட்சேபங்கள் ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

கேள்வி:—யாரால்? ஜில்லா சபைத் தலைவராலா?

பதில்:—ஆம் ஜில்லா சபைத் தலைவர் அவருடைய கருத்துகளுக்கு முற்றும் மாறுபட்டார்.

கேள்வி:—காரைக்குடி யூனியனைப் போய்ப்பார்க்கத் தங்களுக்கு ஏதாவது சந்தர்ப்பம் வாய்த்திருந்ததா?

பதில்:—ஜில்லா சபைத் தலைவர், ராமநாதபுரம் கலெக்டர், இவர்கள் கோஷ்டியில் நானும் கூடச் சேர்ந்துபோயிருக்கிறேன். அது எனக்கு நன்ருக நினைவிருக்கிறது.

கேள்வி:—அப்பொழுது வாதி வந்திருந்தாரா?.

பதில்:—இயல்பாக, அவர் வந்துதான் எங்களையெல்லாம் இட்டுக்கொண்டு சென்று விஷயங்களை எடுத்துக் கூறினார்.

கேள்வி:—அவ்வூர் தெருக்கள் வழியாக தாங்கள் வண்டியை விட்டுச் சென்றீர்களா?

பதில்:—ஆம்.

கேள்வி:—வாதி அப்பொழுது யூனியன் போர்டு தலைவராயிருந்தனரா?

பதில்:—ஆம். அவர்தான் யூனியன் போர்டு தலைவராயிருந்தார்.

கேள்வி:—அப்பொழுது அவர் ஏதாவது தங்களிடம் தெரிவித்ததுண்டா?

பதில்:—சில மூலை முடுக்குகள், மிகவும் குறுக்கமாயிருப்பதால், பொது ஜனங்களின் போக்குவரத்துக்கு இடைஞ்சலாயிருக்கிறதென்றும், அவற்றை விசாலப்படுத்தவேண்டும் என்றும் எடுத்துக் கூறினார்.

கேள்வி:—இது தாங்கள் கலெக்டர்கூடச் சென்றகாலையில் நடந்ததா?

பதில் :—இல்லே. வேறு ஒரு சந்தர்ப்பத்தில் நான் மட்டும் தனியாகப் போயிருக்கும்பொழுது.

கேள்வி :—ஜல வசதிக்கான திட்டம் யாதாயினும் தங்களுக்குத் தெரியுமா ?

பதில் :—தெரியாது.

கேள்வி:—இது ராமநாதபுரம்ஜில்லா சபையின் நிர்வாக வருட அறிக்கை தானு ? 1923–1924 வருடத்திற்கு, இதில் காரைக்குடி யூனியன்நிர்வாக அறிக்கையின் சுருக்கமும் அடங்கி யிருக்கிறதா ?

பதில் :—ஆம்.

கேள்வி :—இக்கடிதம் யாது ?

பதில் :—இது, தாலூகா போர்டு தலேவர் அந்த யூனியன் நிர்வாகத்தைப்பற்றி பாராட்டி அங்கீகாரம் (என்டார்ஸ்மெண்ட்) செய்து ஜில்லா சபைக்கு அனுப்பிய யாதாஸ்தாரும். இதுவும் ஜில்லா சபையின் நிர்வாக அறிக்கையில் பிணேக்கப்பட்டிருக்கிறது.

வாதி வக்கீல், அறிக்கையில் காரைக்குடி யூனியன் சம்பந்தமான பாகங்களேயும் மேலே அனுப்பப்பட்ட இந்த யாதாஸ்தையும் குறிக்குமாறு வேண்டுகிறேன் எனக் கோர்ட்டாரைக் கேட்டுக்கொண்டார்.

கேள்வி :—அந்த யாதாஸ்தில் கண்ட தலேவர் வாதி தானே ?

பதில் :—ஆம்.

எதிரி வக்கீலால் குறுக்கு விசாரணே.

கேள்வி :—வாதி ஜில்லா சபையின் மௌன அங்கத்தினராக இருந்தாரா ?

பதில் :—இல்லை, என்றுதான் நான் சொல்லிவிட்டேனே.

கேள்வி :—அவர் முன் சொல்லிய வார்த்தைகளை மாற்றுமற் சொல்லவே கேட்டுக்கொள்ளுகிறேன்.

நீதிபதி :—செட்டிமார் நாடு சம்பந்தமாக அவர் காரியவாகினி அங்கத்தினராக இருந்திருக்கிறார்.

கேள்வி :—தாங்கள் சொல்லும் இக்கருத்தில் யாராவது, மௌன அங்கத்தினராக இருந்ததுண்டா? ஜில்லா சபையில்?

பதில் :—சிலர் இருக்கின்றனர் என்று வெளிப்படையாக நான் ஒத்துக்கொள்ளவேண்டியதுதான்.

கேள்வி :—எத்தனை பேர்?

பதில் :—அரைடஜன் பேர்வழிகள் இருக்கின்றனர். வாக்குக் கொடுப்பதை மட்டும் அவர் வேலையாகக் கொண்டிருப்பர்.

கேள்வி :—அத்தரப்பில் வாதி சேர்ந்தவரில்லையே?

பதில் :—இல்லை, நிச்சயமாக இல்லை.

கேள்வி :—இவரினும் அதிக சிரத்தை எடுத்துக்கொள்ளும் அங்கத்தினர்கள் ஜில்லாச் சபையில் இருக்கிறார்களா? அதாவது இவரைப்பார்க்கிலும் அதிகக் காரியவாகினியாக இருக்கும் அங்கத்தினர்கள் இருக்கிறார்களா?

பதில் :—என்னால் பதில் சொல்லக்கூடவில்லை. இது ஏற்றத் தாழ்வைப் பற்றியதாக இருக்கிறது.

கேள்வி :—தாரதாரத்தைப்பற்றியது அன்று கேள்வி; நான் கேட்கிறேன், ஜில்லா சபையில் விதிக்கப்படும் விஷயங்கள் எல்லாவற்றிலும் கலந்துகொள்

ளும் அங்கத்தினர்கள் இருக்கிறார்களா ?

பதில் :—பல தாலூகா போர்டுகளிலிருந்தும் அங்கத்தினர்கள் ஜில்லா சபைக்கு அனுப்பப்படுகிறார்கள். பொதுவாக, அவரவர் தாலூகா சம்பந்தமான விஷயங்களில்தான் அவர்கள் சிரத்தை காட்டக் கூடும்.

கேள்வி :—தங்கள் தாலூகா சம்பந்தப்படாத விஷயங்களிலும் தலையிடும் அங்கத்தினர் உளரா ?

பதில் :—ஒரு சிலர் உளர்; அவர் எல்லா விஷயங்களிலுமே தலையிட்டுக்கொள்ளுவர்; தம்மைச் சார்வதாயினும், சாராததாயினும், உசிதமாகவோ அனுசிதமாகவோ ஏதாவது பேசியே தீருவர்.

கேள்வி :—தாங்கள் சொல்லிய இவ்வேறு சிலருள் இவர் ஒருவரா?

பதில் :—அப்பொருளில் அவ்வகுப்பையே அவர் சார்ந்தவர் என்னவேண்டும். சில சமயங்களில் பொது விஷயங்களிலுங்கூட அவர் தலையிட்டுக் கொண்டிருக்கிறார்.

கேள்வி :—ஆகவே மேற்சொல்லிய வகுப்பை வாதி சேர்ந்தவர்தான் என்று சொல்லுகிறீர்களா ?

பதில் :—வேளாவேளைகளில்.

கேள்வி :—இவ்வகுப்பைச் சார்ந்தாரது பெயர்கள் தான், கூட்டநடவடிக்கைகளில் குறிக்கப்படக் காணலாம் அல்லவா ?

பதில் :—ஆம். சாதாரணமாக அவரது பெயர்கள் வெளி வருவதில்லை.

கேள்வி :—பிரசுரமான நடவடிக்கைகளில் பெயர்களே

தோன்றுவதில்லையா ?

பதில் :—பிரசுரமான நடவடிக்கைகளில் பெயர்கள் வெளியிடப்படவில்லை.

கேள்வி :—தீர்மானங்களைப் பிரேரிப்பவர் ஆமோதிப்பவர் போன்ற சிலருடைய பெயர்கள்கூட வெளியாவதில்லையா ?

பதில் :—அடுத்த கூட்டத்திற்கான காரியத்திட்டத்தில் ஒரு தீர்மானத்தின் பிரேரேபகருடையவும் ஆமோதிப்பவருடையவும் பெயர்கள் வெளியாயிருந்தால், அப்பொழுது மட்டும் அவ்விருவருடைய பெயர்களும் வெளியாகும். சாதாரணமாக பிரேரேபகருடைய பேர் மட்டும் இருக்கும். ஆமோதிப்பவர் பேரும், தெளிவாக முன்னரேயே குறிக்கப்பட்டிருந்தால்தான், அவரது பெயரும் வெளியாகும். ஜில்லா சபையில் சில சமயங்களில் முக்கியமான விஷயங்கள் தாவா செய்யப்படும். உதாரணமாகத் தொழில்வரி, சுங்கச் சாவடிகள் வைக்கவேண்டிய இடங்களை மாற்றுவது முதலான விஷயங்கள் சொல்லுவதும், அப்பொழுது அங்கத்தினர்களுடைய அபிப்பிராயத்துக்கும், தலைவருக்கும் முரண்படலாம். நிர்வாக தத்துவங்களை உத்தேசித்து, தலைவர் அங்கத்தினர்களுக்கு மாறுபட்டு நிற்பர். அச்சந்தர்ப்பங்களில் மட்டும், தீர்மானங்களுக்கு சாதகமாக வாக்குக்கொடுத்தார் யார், பாதகமாக வாக்குக்கொடுத்தார் யார் என்று பெயர்கள் குறிக்கப்படும். இப்படி நேருவது அபூர்வமாகத்தான் இருக்கும்.

கேள்வி :—ஜில்லா சபையின் நடவடிக்கைகள் அச்சடிக்கப்பட்டு, ஜில்லா கெஜட்டின் கூடத்தானே வெளியிடப்படுகிறது ?

பதில் :—அனுபந்தமாக வெளியிடப்படும்.

கேள்வி :—ஜில்லா கெஜட்டின் அனுபந்தமாக வெளியிடப்படுவதல்லால், வேறு ஏதாவது சுருக்கங்கள் வெளியிடப்படுவதுண்டா ?

பதில் :—ஜில்லா கெஜட்டுக்குப் புறம்பே ஜில்லா சபையின் நடவடிக்கைகளின் சுருக்கங்கள் வெளியிடப்படுவது கிடையாது.

கேள்வி :—இப்பொழுது காணப்படும் இந்த ஜில்லா சபை நடவடிக்கைகள் ஒன்றிலேனும் வாதியின் பெயர் காணப்படவில்லையே ?

பதில் :—இல்லாமல் இருக்கலாம்.

வாதி வக்கீல் :— நடவடிக்கைகள் பிரசுரமானவை அனைத்தையும் தாங்கள் (எதிரி வக்கீல்) சமர்ப்பித்துவிடவேண்டும்.

நீதிபதி :—அவருடைய பெயர் எப்பொழுதாவது தோன்றியிருக்கிறதா, என்பதுதான் கேள்வி.

வாதி வக்கீல் :—ஒருவருடைய பெயர் அபூர்வமான சந்தர்ப்பங்களில்தான் வெளியிடப்படும் என்று சொல்லப்பட்டதே. ஆதலால் அடுத்த கேள்வி, அவ்வபூர்வமான சந்தர்ப்பங்கள் யாவை என்று இருத்தல்வேண்டும்.

நீதிபதி :—சாட்சியை நோக்கி, அவர் பெயர் வெளியாயிருப்பதாகச் சொல்ல உம்மால் சாத்தியப்படுமா?

பதில் :—பெயர் காணப்படாது. அதாவது சாதாரண

வழக்கத்தைக்கொண்டு நான் சொல்லுகிறேன். மற்றப்படி, வாதி நிர்வாக விஷயங்கள் தர்க்கிக்கப் படும்பொழுது அவர் கலந்துகொண்டதே இல்லை என்ற காரணத்தினால் அன்று.

கேள்வி :—வேறு அங்கத்தினர்களைத் தங்களுக்குத் தெரியுமா? உதாரணமாக ஸ்ரீ எஸ். எம். நாராயண ஐயங்கார் என்பவரைத் தெரியுமா?

பதில் :—ஆம. தெரியும்.

கேள்வி :—வாதியைக் காட்டிலும் திறமையுள்ள காரிய வாகினியாக அவர் இருந்திருக்கிறாரா?

பதில் :—தாரதரங்களை நான் எவ்வாறு நிர்ணயித்துக் கூறுவது?

கேள்வி:—ஸ்ரீநாராயணஐயங்கார், அதிகமான காரிய சிரத்தை காட்டும் அங்கத்தினர் என்பீரா?

பதில்:—வாதியைவிட அவர் அதிக காரிய வாகினி என்று நான் கூறமாட்டேன்.

கேள்வி:—ஸ்ரீ அளகிரிசாமி நாயுடுவைப்பற்றித் தாங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?

நீதிபதி:—இக்கேள்விகளின் போக்கு விளங்கவில்லை.

எதிரி வக்கீல்:—இவர்களுடைய பெயர்கள் வெளியாயுள்ளன என்பதைக் காட்டுவதற்காக.

கேள்வி:—பிரசுரமான அறிக்கையில், இவர்களுடைய பெயர்கள் மட்டும் காணப்படுதற்கு காரணம் என்னென்பீர்கள்? இவர்களுடைய பெயர் மட்டும்தான் என்று எண்ணவேண்டாம். வேறு பல பெயர்களிருக்க, வாதி பெயர்மட்டும் காணப் படாததற்கு என்ன கூறுகிறீர்கள்? இப்பெயர்களை

யும் பாருங்கள்.

பதில்:—சிவகாசி தாலுகாவினின்று வந்த அங்கத்தினர் பெயர்கள் இவை. சில அங்கத்தினர்கள் இருக்கிறார்கள். இவர், தலைவருடைய தீர்மானங்கள் அனைத்தையுமே எதிர்த்துப்பேசி வருகின்றனர். அவர்களுக்கு எவ்வித நோக்கமும் கிடையாது. தலைவரை எதிர்க்க வேண்டும் என்பதுதான் அவரது நோக்கம். இப்படி காரியா காரியமின்றி தலைவரை எல்லாவிடங்களிலும் எதிர்த்து வருவோர் பெயர்கள் குறிக்கப்படும். ஒருவேளை ஜில்லா சபையின் வேலைக்கு அகாரணமாகத்தடை செய்து வருவோர்களை சர்க்கார் கவனிக்க நேரிடலாம் என்பது நோக்கமாயிருக்கலாம்.

கேள்வி:—யார் யாருடையபெயர்கள் தான் வெளிவரும் என்பதற்கு ஏதாவது ஒரு நியதி இருக்கிறதா?

பதில்:—சில பெயர்கள், சில விஷயங்கள் சம்பந்தமாக சில வேளைகளில் வெளிவரும்.

கேள்வி:—தெளிவாகக் கூற முடியுமா?

பதில்:—இரகசியங்கள் வெளியிடப்படாதன.

கேள்வி:—வாதி அப்பெயர் வழிகளில் ஒருவரா?

பதில்:—இல்லை. அவர் எப்பொழுதும் தகுந்த காரணங்கொண்டே சாதகமாகவோ, பாதகமாகவோ பேசுவர்.

கேள்வி:—தலைவரிடத்தில் வாதிக்கு அபாரமானமதிப்பு உண்டா?

பதில்:—வாதிக்கு தலைவரிடத்தில் அபாரமான மதிப்பு இருக்கிறதென்று என்னால் சொல்லமுடியாது.

கேள்வி:—தலைவருடன் வாதி வேறுபட்டதாக ஒரு விடயம் கூறினீர்; வேறு ஏதாவது விடயத்தில் வேறுபாடு நிகழ்ந்ததுண்டா?

பதில்:—ஆம்; சுங்கச்சாவடியை இடம் பெயர்த்து அமைப்பதைப்பற்றிய விடயத்தில், கருத்து வேறுபட்டுள்ளார்கள்.

நீதிபதி:—குறித்த தகவல்களைப்பற்றிச் சொல்லுகிறீர்களா? பொது நிர்வாக பிரசினைகளைப் பற்றியதா?

பதில்:—பொது நிர்வாகப் பிரசினைகளாகத்தான் கொள்ளவேண்டும். ஜில்லா சபைக் கூட்டத்தில், சுங்கச் சாவடிகளை ஏற்படுத்தும் விடயமான வாதங்களிலே, தலைவருடைய நோக்கத்திற்கு எதிரான நோக்கம் வாதி கொண்டிருந்திருக்கிறார்கள்.

நீதிபதி:—நீங்கள் பேசிக்கொள்வது என்ன விந்தையாக இருக்கிறதே! கூட்டங்களிலே, தலைவருடைய கருத்து முடிவில் அல்லவா தெரியவரும்? அங்ஙனமிருக்க, அங்கத்தினர் அவர் கருத்துக்கு உடன் படுவதாகவோ, வேறுபடுவதாகவோ கூறுதல் எங்ஙனம் பொருந்தும்?

வாதி வக்கில்:—கோர்ட்டார் சொல்லுவது நியாயம். ஆனால், நாம் நடவடிக்கைகளையும் வழக்கத்தையும் கவனிக்க, சாதாரணமாகத் தலைவருடைய அபிப்பிராயம் முன்னரேயே தெரிந்து விடும்.

சாட்சி:—தலைவர் கேள்வி கேட்கும் தோரணையே அவரது கருத்தை விளக்குவதாகும்.

கேள்வி:—வேறு ஏதாவது விடயங்கள் உண்டா?

பதில்:—எனது நினைவு சரியாயின் கண்டனூர் "யூனி

யன்போர்டை" இரண்டு படுத்தும் விஷயமாகவும் வாதி தலைவரிடமிருந்து வேறுபட்டார்.

கேள்வி :—ஒரு தீர்மான ரூபமாக வாதி தமது அபிப்பிராயபேதத்தை ஊர்ஜிதப்படுத்தினாரா ?

பதில் :—வாதி இவ்வேற்றுமைகளை உருவகப்படுத்தியாதொரு தீர்மானமும் கொண்டுவந்ததில்லை. மற்றும், அவர் தமது வேறுபாட்டை எடுத்துக்கூறியதோடு, வாக்குக் கொடுக்கும்பொழுது பாதகமாகவும் வாக்குக் கொடுத்தார்.

கேள்வி :—இப்படித் தலைவருக்கு விரோதமாகப் பேசியதாகவாவது, வாக்குக் கொடுத்ததாகவாவது காட்டி அவரது பெயர் பிரசுரமான அறிக்கைகளில் எங்காவது காணப்படுமா ?

பதில் :—என்னால் பதில் சொல்லமுடியவில்லை.

கேள்வி :—உபதலைவர் என்ற ஹோதாவில், தங்களுக்கும் நிர்வாக அதிகாரம் உண்டல்லவா ?

பதில் :—ஆம் உண்டு.

கேள்வி :—வாதிக்கும் தங்களுக்கும் இடையில் ஏதாவது தகராறு நேர்ந்ததுண்டா ? அவர் தங்களுக்கு எதிராக நடந்ததுண்டா ?

பதில் :—உபதலைவர் ஹோதாவில் அவரிடமிருந்து எனக்கு எவ்வித எதிர்ப்பும் வந்தது கிடையாது.

கேள்வி :—அவர் தங்களுடன் ஒத்துழைத்ததுண்டா?

பதில் :—எனது உத்தியோக அலுவல்களை நடத்தும் போக்கில், அவருடைய ஒத்துழைப்பை நான் கோரியிருக்கிறேன்.

கேள்வி :—வேறு ஏதாவது சந்தர்ப்பத்தில் தங்க-

ளுடன் ஒத்துழைக்க மறுத்ததாக நினைவிருக்கிறதா ?

பதில் :—ஒத்துழைக்க அவர் ஒருபொழுதும் மறுத்தது கிடையாது.

கேள்வி :—அவர் ஜில்லா போர்டு கூட்டங்களுக்கு வாராமல் இருந்ததாக தங்களுக்கு நினைவிருக்கிறதா ?

பதில் :—பலதடவைகளில் அவர் வாராமல் இருந்திருக்கலாம். அவரது வாராமையை தள்ளிவிட்டு, திரும்ப அவர் அங்கத்தினராக அங்கீகரிக்கப்பட்டும் இருக்கலாம். ஆனால் ஒருபொழுதும், மூன்று மாதங்களுக்கு மேலாக அவர் வாராமலிருந்ததே கிடையாது.

கேள்வி :—கூட்டங்களில் ஆஜராயில்லாத காரணத்துக்காக அங்கத்தினர் ஒரு பஞ்சாயத்தில் தமது ஸ்தானங்களை யிழக்க நேரிடுமா ?

பதில் :—இல்லை. வாராமை காரணமாக, தனது இடத்தினின்று ஒரு அங்கத்தினரை விலக்குவதற்கு ஒரு விதியோ சம்பிரதாயமோ கிடையாது.

கேள்வி :—பஞ்சாயத்து (கமிட்டி) வேலை நியம வேலையா ? அன்றி, அதிகப்படியாகச் செய்யப்படுவதா ?

பதில் :—அது அதிகப்படியான வேலையேயாம் ; சில விஷயங்களைத் தனியாக நன்கு ஆராய்ந்து தலைவருக்கு சாதக பாதகங்களைத் தெரிவிப்பதற்காக இப்பஞ்சாயத்துக்கள் நியமிக்கப்படும். இவை, தலைவருக்கு உதவியாகவே நியமிக்கப்படுகின்றன.

கேள்வி :—இப் பஞ்சாயத்துக்களுக்கு நிர்வாக அதிகா

ரம் எதுமில்லையே?

பதில்:—பஞ்சாயத்து வேலை, எறத்தாழ, ஆலோசனை சொல்லும் தன்மைத்தாம். அது, விசேஷமான பரிஞானத்தைக் கொண்டிருப்பதாகும்.

கேள்வி:—தனது பதவியை இழந்தவர்கள், கூட்டத்தில் கலந்துகொள்ள முடியாதன்றோ?

பதில்:—புனர்ஸ்தாபனம் பெறவில்லையென்றால், கலந்துகொள்ள முடியாதுதான்.

கேள்வி:—இதோ! இந்த அறிக்கையைப் பார்த்து ககூ௨௫ ஆகஸ்டு ௩-தேதி யன்று ஒரு விசேடக் கூட்டமும் ஒரு சாதாரணக் கூட்டமும் நடந்திருக்கின்றனவா என்று சொல்லுவீர்களா?

பதில்:—ஆம்.

கேள்வி:—விசேடக் கூட்டம், சாதாரணக் கூட்டத்திற்கு முன்னதாக நடந்திருக்கிறதா?

பதில்:—ஆம். விசேடக்கூட்டம் மாலை ரு-மணிக்கு; சாதாரணக் கூட்டம் மாலை ரு-கரு-க்கு.

கேள்வி:—சாதாரணக்கூட்டத்தில் தானே, அன்று சில அங்கத்தினர்கள் வாராமை காரணமாக மன்னிப்புப் பெற்றனர்?

பதில்:—ஆம்.

கேள்வி:—அப்பொழுது, மன்னிப்பு பெறுதமுன்பே, விசேடக்கூட்டத்தில் சிலர் கலந்து கொண்டிருக்கக் காண்கிறீரா?

பதில்:—ஆம் இதில் எதோ பிசகு இருக்கவேண்டும். இவ்வறிக்கையில், வாதி சாமானியக் கூட்டத்தில் தான் மன்னிப்புப் பெற்றிருக்கின்றனர் என்று

காணப்படுகிறது. அதற்கு முன் நடந்த தனிக் கூட்டத்தில் அவர் கலந்துகொண்டிருப்பதாகவும் இதனின்றும் துலங்குகிறது. எனவே இது பிச காகவே இருத்தல் வேண்டும்.

கேள்வி:—பிசகு என்பது உண்மைதான்; ஆனால், அப் பிசகு எங்கு, யாரிடத்து நிகழ்ந்தது என்பது தான் கேள்வி?

பதில்:—அன்றைய வேலையில், விசேடக்கூட்டத்திற்கு முதலில் உட்கார்ந்தபோழுது வந்திருப்பவர்களி டமிருந்து ஆஜர்ப்புத்தகத்தில் கையெழுத்து வாங்கியதால் நேர்ந்த குற்றமாயிருக்கும்.

கேள்வி:—தங்கள் போர்டு காரியங்களை மேற்பார்த்து தணிக்கைசெய்து அறிக்கைகள் வெளியிடப்படு வதுண்டா? அவ்வறிக்கையில் இதைப்பற்றி என்ன எழுதப்பட்டிருந்தது?

பதில்:—தணிக்கைக் குறிப்பில் இதுபற்றி என்ன கண்டிருந்தது என்பது எனக்குத் தெரியாது.

கேள்வி:—வாதி தாலூகா போர்டு தலைவராகவும், யூனியன் போர்டு தலைவராகவும் இருப்பதாகத் தாங்கள் கூறினீரல்லவா?

பதில்:—ஆம்.

கேள்வி:—தாலூகா போர்டின் தலைவர் தமது பதவி காரணமாக ஒரு யூனியன் போர்டு தலைவர்மீது மேலதிகாரம் செலுத்தும் உரிமையுடையாரல்லரா?

பதில்:—தாலூகா போர்டு ஒரு தனிச்சங்கம்; யூனியன் போர்டு ஒரு தனிச்சங்கம் இரண்டும் வெவ்வேறு ஸ்தாபனங்கள்.

கேள்வி:—ஒரு தாலூகா போர்டு தலைவர், எவ்விதத்திலேனும் ஒரு யூனியன் போர்டு தலைவர்மீது அதிகாரம் செலுத்தும் உரிமை பெற்றிருக்கின்றனரா?

பதில்:—சில காரியங்களில், ஒரு யூனியன்போர்டு தலைவர் மீது தாலூகாபோர்டு தலைவருக்கு, தலைவர் என்ற ஹோதாவில் சில விதங்களில், மேல் அதிகாரம் செலுத்தும் உரிமை யுண்டு.

கேள்வி:—தேவக்கோட்டை தாலூகாபோர்டின் தலைவருக்கு, காரைக்குடி யூனியன்போர்டின் தலைவர் மீது அவ்வதிகாரம் செலுத்தும் உரிமை உண்டா?

பதில்:—ஆம். தேவக்கோட்டை தாலூக்கா போர்டு தலைவர், காரைக்குடி யூனியன் தலைவருக்கு மேலதிகாரியேயாவர்.

இத்துடன் எதிரி வக்கீல் பாரிஸ்டர் ஜோசப் அவர்கள் தமது குறுக்கு விசாரணையை முடித்துக் கொண்டார்.

பிறகு வாதி வக்கீல் டி. சி. சீனிவாசய்யங்கார் அவர்களால் புனர்விசாரணை செய்யப்பட்டது வருமாறு:—

கேள்வி:—ஜில்லா கெஜட்டுக்கு அனுபந்தமாக வெளியிடப்படும் ஜில்லா போர்டு கூட்ட நடவடிக்கைகள், கூட்டங்களில் வைத்தே எடுக்கப்படும் காரியக் குறிப்புகளின் நேரான நகலே யாகுமன்றோ?

பதில்:—ஆம்.

கேள்வி:—உப பஞ்சாயத்துக்களின் நியமனத்தைப் பற்றிக் கூறினீர்கள். தலைவருக்கு ஆலோசனை

சொல்வதற்கா, அன்றி ஜில்லா சங்கத்திற்காகவா, அப் பஞ்சாயத்துக்கள் நியமிக்கப் படுகின்றன?

பதில்:—சங்கத்தின் நலத்துக்காகத்தான்; ஆனால் தலைவரின் மூலமாக அந்நலம் பெறப்படும்.

கேள்வி:—தனிக் கூட்டங்களில் குறித்த தொகையினர் ஆஜராயிருந்து தீரவேண்டும். அதனைக்கருதி, முதலில் சாமானிய கூட்டத்தைத் துவக்கி உற்ற அங்கத்தினருக்கு புனராஸனம் கொடுத்துவிட்டு அச்சாமானியக் கூட்டத்தை அதோடு நிறுத்திக் கொண்டு, பிறகு தனிக் கூட்டத்தைத் துவக்கி முடித்துக்கொண்டு அதன்மேல் சாமான்னியக் கூட்டத்தில் செய்ய வேண்டிய மீதி வேலைகளை முடிப்பது, சாமானிய காரியப் பழக்கத்தில் உள்ள முறையன்றோ?

பதில்:—சில முக்கியமான காரியங்களைக் கருதி, அவ்வாறு செய்யும் வழக்கம் உண்டு.

இச்சமயத்தில், பிரதிவாதி வக்கீல் எழுந்து, சாட்சி ஏற்கனவே சொன்ன சாட்சியத்துக்கு முற்றும் முரண்படுவதான ஒன்றைச் சொல்லுமாறு தூண்டுவது அனுமதிக்கப்படுதற்குரியதாகாது என்றார். வாதி வக்கீல் அதனை மறுத்து, தாம் அவ்வாறு யாதொன்றும் தூண்டவில்லையென்றும், ஏதோ ஒரு பிசகு எங்காவது நிகழ்ந்திருக்கவேண்டுமாதலால், காரியப் பழக்கத்தில் உள்ள ஒரு விஷயத்தை குறிப்பதல்லாது நான் வேறொன்றும் செய்துவிடவில்லையென்றும் சொன்னார்.

கேள்வி:—சாமானியக் கூட்டத்தைத் துவக்கி நிறுத்திக்கொண்டு, தனிக்கூட்டம் நடத்திவிட்டு, சாமா

னியக்கூட்டம் முடிவு பெறுவது வழக்கந்தான் அன்ரு?

பதில்:—சிலவேளைகளில் இவ்வாறு நடந்திருப்பதுண்டு.

மாஜிஸ்ட்ரேட், எதிரிவக்கீலாகிய பாரிஸ்ட்டர் ஜோசப்பை விளித்து நீங்கள் மறுபடியும் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கிறேன். வேண்டுமானுல் கேள்விகள் கேளுங்கள் எனக் கூறிஞர். பின்னர் ஜோசப் அவர்கள் மறுபடியும் குறுக்கு விசாரணை செய்தார், வருமாறு:—

கேள்வி:—இப்பொழுது குறித்த இந்தக் கூட்டத்தில் அவ்வாறுதான் நடந்ததென்று சொல்லுவீர்களா?

பதில்:—குறித்த கூட்டத்தில் இப்படித்தான் நடந்ததென்று என்னுல் சொல்லமுடியாது.

கேள்வி:—ஜில்லா கல்விக் கழகம் என ஒன்றுண்டா? அதில் வாதி ஓர் அங்கத்தினரா?

பதில்:—அதோடு எனக்கு எவ்விதத்தொடர்புமின்மையால் அதைப்பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது.

ஸ்ரீமான் மாணிக்கம்பிள்ளையின் சாக்ஷியம்.

எனது பெயர் மாணிக்கம் பிள்ளை. நான் "நிலச் சேர்ப்பு" பொறுப்பு ஏற்றுக்கொண்டுள்ள ஒரு 'டெபுடி கலெக்டர்' அலுவல் பார்க்கிறேன்.

கேள்வி:—தாங்கள் தேவகோட்டையில் 'ரெவினியூ 'டிவிஷனல் ஆபீஸ'ராக இருந்திருக்கிறீர்களா?

பதில்:—ஆம். ககூஉக—உச-ல்.

கேள்வி :—அக்காலத்தில் தேவகோட்டை தாலூகா போர்டின் தலைவராகவும் இருந்திருக்கிறீர்களா ?

பதில் :—ஆம். ஒரு வருஷத்திற்கு.

கேள்வி :—இதோ இருக்கும் ஸ்ரீ ஆவி. பள. சிதம்பரம் செட்டியார் அவர்களைத் தாங்கள் அறிவீர்களா ?

பதில் :—ஆம். அறிவேன்.

கேள்வி : —எப்படி ?

பதில் :—அவர் தேவகோட்டை தாலூகா போர்டின் அங்கத்தினராக இருந்திருக்கிறார்.

கேள்வி :—அதன் அங்கத்தினராக மட்டும் தானா ?

பதில் :—காரைக்குடி 'யூனியன் போர்டு'க்கு அவரே தலைவராகவும் இருந்திருக்கிறார்.

கேள்வி :—அவர் தாலூகா போர்டு கூட்டங்களில் ஆஜராகி இருந்திருக்கிறாரா ?

பதில் :—ஆம். அவர் பல கூட்டங்களில் பிரசன்னமாகியிருக்கின்றனர்.

கேள்வி —தாலூகா 'போர்டு' கூட்ட நடவடிக்கைகளில் காரிய சிரத்தை காட்டிய அங்கத்தினராக அவர் இருந்திருக்கிறாரா ?

பதில் :—ஆம். தாலூகா போர்டு விஷயங்களில் காரியவாதியாக சிரத்தை காட்டி வந்த அங்கத்தினர்களுள் அவரும் ஒருவராவர்.

கேள்வி :—வாதங்களில் கலந்துகொண்டு பேசியிருக்கின்றனரா ?

பதில் :—சில வேளைகளில் அவர் எழுந்து நின்று பேசவும் செய்திருப்பதுண்டு.

கேள்வி :—அப்பொழுது அவர் தமது சொந்தக் கருத்தையே வெளியிட்டு வந்தனரா? அல்லது, தலைவர் சொல்லுவதற்கு 'ஆமாச்சாமி' போட்டு வந்தனரா?

பதில் :—அப்படியில்லை. தமது கருத்தையே அவர் வெளியிட்டு வந்திருக்கிறார்.

கேள்வி :—தலைவருக்கு விரோதமாகவும் அவர் பேசியிருப்பதுண்டோ?

பதில் :—ஆம். சில வேளைகளில் அவர் எனது பிரேரேபணைகளை ஆட்சேபித்து, அப்படியே பேசியுமிருக்கிறார்.

கேள்வி :—தாலூகா போர்டின் தலைவர் என்ற பான்மையில், காரைக்குடி யூனியன் போர்டின் தலைவராயிருந்த வாதியின் வேலையைப்பற்றி விசாரித்துத் தெரிந்துகொள்ளத் தங்களுக்கு அவகாசமிருந்ததுண்டா?

பதில் :—ஆம்.

கேள்வி :—தமது வேலையை அவர் எவ்வாறு ஆற்றி வந்தார்.

பதில் :—ஏன்? அவர் தமது யூனியன் வேலைகளை சிரத்தையுடன் திறமையாகவே பார்த்து வந்திருக்கிறார்.

கேள்வி :—அவரது வேலை மேலுள்ளவர்களால் பாராட்டப்பட்டதுண்டா!

பதில் :—ஆம். அவரது வேலை பாராட்டப்பெற்றிருக்கிறது.

கேள்வி :—அவர் யூனியன் போர்டு தலைவராயிருந்த

காலையில் காரைக்குடிக்குத் தாங்கள் சென்று பார்வையிட்டிருக்கிறீர்களா ?

பதில் :—பல வேளைகளில் நான் அங்ஙனம் சென்று பார்வையிட்டு வந்திருக்கிறேன்.

கேள்வி :—கக௯உ௪-ல் மதுரையில் நடந்த லோகல் போர்டு மகாநாட்டுக்குத் தாங்கள் ஒரு பிரதிநிதியாகச் சென்றீர்களா ?

பதில் :—ஆம். தேவகோட்டை தாலூகா போர்டின் பிரதிநிதிகளாகச் சென்றவர்களுள் நானும் ஒருவன்.

கேள்வி :—அப்பொழுது வாதியும் தங்கள்கூட ஒரு பிரதிநிதியாக வந்தாரா ?

பதில் :—வாதியும் ஒரு பிரதிநிதியாக வந்தார்.

கேள்வி :—அந்த மகாநாட்டில் அவர் வெறுமே வாயை மூடிக்கொண்டுதானா உட்கார்ந்திருந்தார் ?

பதில் :—இல்லை. அவர் நடவடிக்கையில் கலந்து கொண்டது மன்னியில் விஷயாலோசனைப் பஞ்சாயத்திலும் அவர் ஒரு அங்கத்தினராகத் தேர்ந்து எடுக்கப்பட்டிருக்கிறார்.

கேள்வி :—விஷயாலோசனைக் கூட்டத்தில் அவர் ஏதாவது பேசியிருக்கின்றனரா ?

பதில் :—ஆம், அவரும் சில யோசனைகள் கூறினார். அவர் பிரேரேபணையாக யாதும் கொண்டுவந்ததாக எனக்கு நினைவில்லை. ஆனால், அவர் பேசியிருக்கிறார்.

கேள்வி :—அக்கூட்டத்தில் அவர் எப்பொழுதும் தங்களுடன் ஒத்துப்பேசி வந்தனரா ? அல்லது

சொந்தமாக அபிப்பிராயங்கொண்டு பேசியிருக்கின்றனரா?

பதில்:—அவர் சொந்த யோசனையின்படியே பேசினார். ஒரு விஷயத்தில் அவரது கருத்து எனக்கு முரண்படுவதாகத் தோற்றியது. ஸ்தல ஸ்தாபனங்களில், கிராம உத்தியோகஸ்தர்கள் இடம் பெற அனுமதி தரலாமா என்ற பிரசினையை உதாரணமாகக் கூறுவேன். அதில், நான் எழுந்து ஒன்றும் பேசவில்லை. என்றாலும் கிராம உத்தியோகஸ்தர்களுக்கு இடங்கொடுக்கவேண்டுமென்று நான் கருதினேன். வாதியோ, இதற்கு மாறான கருத்துக்கொண்டிருந்தார். என் பக்கத்தில், அவர் உட்கார்ந்திருந்தமையால், அவர்களை உள்ளே வரவிடாமல் தடுப்பது (காரிய) தந்திரமாகாது என்று நான் அவருக்குச் சொன்னேன். இருந்தும், அவர் தன் கருத்தை மாற்றவில்லை. கடைசியில் தன் கருத்தின் வண்ணமே அவர் எழுந்து பேசினார்.

கேள்வி:—தாலூகா 'போர்டின்' வருட அறிக்கையிலே காரைக்குடி 'யூனியன் போர்டின்' நிர்வாகத்தைப்பற்றித் தாங்கள் ஏதாவது எழுதியிருக்கிறீர்களா?

பதில்:—ஆம்; காரைக்குடி 'யூனியன் போர்டு' தலைவருடைய வேலையை அங்கீகரித்து பாராட்டியும் எனது வருட அறிக்கையிலே குறிப்பிட்டிருந்தேன்.

கேள்வி:—இக்குறிப்பு தாங்கள் எழுதியது தானா?

அடியில் கையெழுத்துப் போட்டிருப்பதும் தாங்கள்தானா?

பதில் :—ஆம்; இது நான் எழுதியிருந்த யாதாஸ்து தான்; அடியிற்காணும் 'விலாசப்புள்ளி'களும் என்னுடையனவேயாம்.

கேள்வி :—இந்த யாதாஸ்தில் கண்டபடித் தாங்கள் எழுதிய காலையில் காரைக்குடி 'யூனியன் போர்டு' தலைவராக இருந்தது யார்?

பதில் :—வாதிதான் அப்பொழுது யூனியன் தலைவராக இருந்தார்.

கேள்வி :—அவரைப்பற்றித் தங்களுக்கு என்ன தோன்றுகிறது? பொதுக்காரியங்களில் ஊக்கங்கொண்டவர் என்று கருதுகிறீர்களா? அல்லது தன்னலம் தேடுபவர் என்று கருதுகிறீர்களா?

பதில் :—பொது ஜனங்களுக்கு நலம் பயப்பதான சில காரியங்களை அவர் செய்து இருக்கிறார்.

குறுக்கு விசாரணை.

கேள்வி :—தேவகோட்டை தாலூகா போர்டினின்று ஸ்தல ஸ்தாபனங்களின் மகாநாட்டிற்குப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும்பொழுது, மூன்று பிரதிநிதிகள்தானே தெரிந்தெடுக்கப்பட்டனர்?

பதில் :—ஆம். மூவர்தான் தெரிந்தெடுக்கப்பட்டனர்.

கேள்வி :—எப்பொழுது அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் என்று தங்களால் கூறமுடியுமா?

பதில் :—சென்ற ௩௦-௧-௧௯௨௪-ல் நானும் வேறு இருவரும் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாகக் காண்கிறேன்.

கேள்வி :—இதில் வாதியின் பெயர் இருக்கின்றதா?
பதில் :—வாதியின் பெயர் காணப்படவில்லை.
கேள்வி :—நன்றாக ஞாபகப்படுத்திப் பாருங்கள், தங்களைத் தெரிந்தெடுத்தபொழுது, இன்னும் இருவர் யார், யார் தெரிந்தெடுக்கப்பட்டார்கள்?
பதில் :—௩௦-௯-௧௯௨௩-ல் நான் தேர்ந்தெடுக்கப்பட்டேன். அப்பொழுது ஸ்ரீயான் சொக்கலிங்கம் செட்டியாரும் வேறு ஒரு வக்கீலும் தேர்ந்தெடுக்கப்பட்டார். வாதி அப்பொழுது தேர்ந்தெடுக்கப்படவில்லை.
கேள்வி :—அப்புறம் என்ன நடந்தது?
பதில் :—ஸ்ரீ சொக்கலிங்கம் செட்டியார் காலஞ்சென்றார்.
கேள்வி :—அவருடைய ஸ்தானத்தில் எந்தக் கூட்டத்திலாவது வாதி தேர்ந்தெடுக்கப்பட்டார் என்று 'பிரமாணஞ் செய்வீர்களா'? (இவ்வளவு கடுமையான வார்த்தை வேண்டாம்) கூறுவீர்களா?
பதில் :—உறுதியாகச் சொல்லுவதற்கில்லை. முதலில் ௧௯௨௪-ஏப்பிரல்-மே மாதங்கள்வாக்கில், மகாநாடு நடைபெறுவதாக இருந்தது. பின்னர், நாள் ஒத்திப்போட்டு, செப்டம்பர் மாதத்தில் தான் நடைபெற்றது. ஆகவே பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்ட காலம் எனக்கு நினைவில்லை.
கேள்வி :—முதலில் ஏப்ரல்-மேமாத வாக்கில் நடைபெறவிருந்ததால், ௧௯௨௪-துவக்கத்தில் அதாவது ஜனவரி மாதத்தில்தானே தேர்தல் நடைபெற்றிருக்கவேண்டும்?

பதில் :—ஆம்.

கேள்வி :—தேவகோட்டை தாலூகா போர்டின் இந்த தீர்மானத்தைப் பாரும். இதனின்று என்ன தெரிகிறது?

பதில் :—ஸ்ரீ சொக்கலிங்கஞ் செட்டியார் காலஞ்சென்ற பிறகு, வாதி தேர்ந்தெடுக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

கேள்வி :—அவர் எப்பொழுது, தேர்ந்தெடுக்கப்பட்டார் என்றுதான் நான் கேட்கிறேன்?

பதில் :—மேலேகண்ட தேர்தலுக்குப் பிறகு, வேறு மூவர் தேர்ந்தெடுக்கப்பட்டதாக நினைவு இருக்கிறது. என் வட்டத்தில் உள்ள யூனியன்களிலிருந்து இருவர் அனுப்பப்பெற்றது எனக்குத் தெரியும்.

கேள்வி :—மகாநாட்டுக்கு எவ்வாறு, எந்தப்பான்மையில் வாதி ஆஜரானார்?

பதில் :—அவர் ஒரு பிரதிநிதியாக அங்கு ஆஜராயிருந்தார்.

கேள்வி :—அவர் தேர்ந்து அனுப்பப்பட்ட ஒரு பிரதிநிதியாக இருந்தாரா?

பதில் :—வாதி தேர்ந்து எடுக்கப்பட்டாரா இல்லையா என்று காரியாலயக் கடிதாசுகளை நான் பாராத வரையில் என்னால் யாதும் சொல்லமுடியாது.

கேள்வி :—அவ்வருடம் தேவகோட்டை தாலூகா 'போர்டு' கூட்டங்களின் நடவடிக்கைகள் முழுவதையும் கொண்ட 'கெஜத்'தின் தொகுதி இதோ இருக்கிறது. இதில் வாதி தேர்ந்தெடுக்கப்பட்டி

ருப்பதாக ஒரு கூட்டத்திலேனும் சொல்லப்பட வில்லையே!

பதில் :—இந்த நடவடிக்கைகளில், வாதியின் பெயர் காணப்படவில்லைதான்.

கேள்வி :—இதற்கு என்ன விபரம் கூறுகின்றீர்கள்?

பதில் :—தாங்கள் காட்டும் இந்த தொகுதி சம்பூரண மானது என்று எனக்கு எப்படித் தெரியும்?

கேள்வி :—இந்த நிதர்சன சாட்சியம் (Exhibit) கரு-அ பிரகாரம் உள்ள தாலூகா 'போர்டு' கூட்டங்களின் நடவடிக்கைகள், அதாவது ககூஉச 'ஜனவரி' முதல் 'செப்டம்பர்' வரையுள்ளவற்றில், மகாநாட்டுக்கு வாதி தெரிந்தெடுக்கப்பட்டதாகக் காணவில்லை என்று நீதிபதி எழுதிக்கொள்வதில் தங்களுக்கு ஆக்ஷேபம் இல்லையே?

பதில் :—இதன்படி அவர் பெயர் இல்லைதான். ஆனால் இந்தத் தொகுதியில் ஒன்றிரண்டு தவறுதலாக விடப்பட்டிராது என்பதற்கு என்ன நிச்சயமான ஹேது இருக்கிறது.

கேள்வி :—தாங்கள் தேவகோட்டையில் இருந்தபொழுது 'ஊழியன்' பத்திரிகையைப் பார்த்திருக்கிறீர்களா?

பதில் :—நான் தேவகோட்டையில் வசித்த மட்டும் 'ஊழியன்' பத்திரிகையை நான் கண்டதே கிடையாது.

கேள்வி :—பார்த்ததே இல்லை என்கிறீர்களா? படித்ததில்லை என்கிறீர்களா? தங்களுக்கு இப்பத்திரிகை அனுப்பப்பட்டு வந்திருக்கிறதே?

பதில்:—அனுப்பப்படலாம். என் காரியாலயத்துக்கே அது நேராகச் சென்றுவிடும். ஒருவேளை அது என் கண்ணிலும் பட்டிருக்கலாமாயினும், அதனை நான் தேவகோட்டையில் வைத்துப் படிப்பதே கிடையாது.

கேள்வி:—அப்பத்திரிகையின் கொள்கைப்போக்கு என்னவென்று அறிவீர்களா?

பதில்:—இதன் கொள்கை என்னவென்று என்னல் சொல்லமுடியாது.

கேள்வி:—சாதாரணமாக செட்டியார்களுடன் தாங்கள் பழகி அவர்களுடைய அபிப்பிராயங்களின் போக்கில் தங்களுக்குப் பரிச்சயம் உண்டாயிருக்கிறதா? அதாவது அரசியல் சம்பந்தமாக அவர்களது மன நிலையை அறிவீர்களா?

பதில்:—இஃது தெளிவான கேள்வியாக இல்லை; மயங்கவைப்பதாயிருக்கின்றது.

கேள்வி:—அதாவது நான் கேட்கிறேன். இப்பொழுது ஒரு கூட்டம் செட்டியார்கள் இருக்கலாம். அவர்கள் சர்க்காருடன் நெருங்கி ஒத்துழைத்தும், சர்க்காரின் ஊழியருக்கு இணங்கி நடந்தும் வருவதில் தான் ஊருக்கு நலம் வருமென்று நம்பியிருக்கலாம். இவர்களுக்கு, நேர் மாறுபடும் உளத்தினராக வேறு ஒரு கூட்டம செட்டியார்கள் இருக்கலாம். அவர்கள் சர்க்காருடன் ஒத்துழைப்பதிலும் அவர் தம் ஊழியர் பின்னே செல்லுவதிலும் ஊரார் நலம்பெற்றுவிடமாட்டார். மற்று நம்முடைய சக்திகளை இத்துறை

களில் அழித்துவிடாமல் தேக்கிப் பாதுகாத்து சமூகத்தைச் செல்வத்திலும் சிறப்பிலும் உண்மையில் உயர்த்தவல்ல காரியங்களையே செய்து வரல் வேண்டும் என்றும் அபிப்பிராயங் கொண்டவராயிருக்கலாம் அல்லவா?

பதில்:—இப்படி இருவிதக் கருத்து நிலைகளிருப்பதாக எனக்குப் புலப்படவில்லை.

கேள்வி:—தாங்கள் தேவகோட்டைக்குச் சென்ற பிறகுதான், செட்டிமார்கள் பட்டம் பெற்றுவந்தனரா? அல்லது தாங்கள் செல்லும் முன்னமேயே பட்டம் பெற்றவர்களும் இருந்தார்களா?

பதில்:—ஆம். நான் போகும் முன்னமேயே பட்டம் பெற்றோர் இருந்தனர்.

கேள்வி:—ஆனால், தாங்கள் போயிருந்தபொழுது, பட்டங்களில் மோகம் அபாரமாகப் பெருகவில்லையா? அதாவது, பட்டங்களுக்காக, பந்தயப் போட்டி நிகழ்ந்ததில்லையா? (was there not a run for titles)

பதில்:—அப்படி நிகழ்ந்ததென நான் சொல்லமாட்டேன். சில தரும காரியங்கள் அப்பொழுது இயற்றப்பட்டன.

கேள்வி:—பட்டங்கள் பெறுவதை நோக்கமாகக் கொள்ளாமலேயே தரும காரியங்கள் இயற்றப்பட்டிருக்கலாம். அதை ஆட்சேபிக்கவில்லை; இருப்பினும், முன்னைவிடத் தாங்கள் சென்றிருந்த காலத்தில் பட்டங்கள் பெறுவதில் செட்டி

மார்களுக்கு அதிகமான ஆத்திரம், அதிகமான பரபரப்பு உண்டானதாகத் தங்களுக்குத் தோன்றியதில்லையா?

பதில்:—அப்படி ஏதும் இருந்ததாக நான் காணவில்லை; பட்டத்தைக் கருதி என்னை யாரும் நாடினதேயில்லை.

கேள்வி:—காங்கிரஸ் விஷயங்கள் சிரத்தை பூண்ட ஒரு வாலிபச் செட்டியாரைத் தங்களுக்குத் தெரியுமா?

பதில்:—காங்கிரஸினிடம் சிரத்தை கொண்ட எந்த செட்டியாரையும் நான் கண்டதே கிடையாது.

கேள்வி:—ஸ்ரீ. தே. வே. அருணாசலம் செட்டியாரைத் தாங்கள் அறிவீர்களா?

பதில்:—அவரை நான் பார்த்திருக்கிறேன்; அவருடைய முகம் எனக்கு பரிச்சயமான முகமாகத் தான் இருக்கிறது. ஆனால் நான் அவரோடு பேசியிருப்பதில்லை.

கேள்வி:—ஊழியன் பத்திரிகையின் பிரதிநிதியாக, அவர் உங்களிடம் வந்து, தாங்கள் விசாரணை செய்யும் ஒரு துப்பாக்கி பிரயோக வழக்கில் நடவடிக்கைகளில் குறித்துக்கொள்ளத் தனக்கு வசதி செய்துதரவேண்டும் என்று கேட்டுக்கொண்டாரா?

பதில்:—என்னால் சொல்லமுடியாது. விசாரணை மண்டபத்தில் அன்று ஏக கும்பலாக இருந்தது.

கேள்வி:—அவர் தங்களை வீட்டில் வந்து இவ்விஷயமாகக் கண்டாரா?

பதில் —: எனக்கு நினைவில்லை.

கேள்வி :—சரி, இது போகட்டும் : அங்கு ரெவினியூ உத்தியோகஸ்தராகத் தாம் இருந்தபொழுது, பலர் தங்களுக்கு சிநேகிதர்களானார்களல்லவா ?

பதில் :—எனக்கு விரோதிகள் அங்கு தோன்றியதில்லை.

கேள்வி :—வாதி தங்களுடைய சிநேகிதர்தானே ?

பதில் :—பொதுவாக நட்புப் பான்மையில் அனைவருடனும் நான் பழகி வந்ததுபோலே, அவரும் என்னுடன் நட்பு நிலையில் பழகினார்.

கேள்வி :—அவரை அடிக்கடி தாங்கள் போய்ப் பார்த்திருக்கிறீர்களல்லவா ?

பதில் :—ஆம். அவரை நான் அடிக்கடி பார்ப்பது சகஜந்தான். அவரைப்பற்றி நான் நல்ல எண்ணமே கொண்டிருக்கிறேன்.

கேள்வி :—வாதியின் மருமகன் ஸ்ரீ ராமனாதன் செட்டியார், கௌரவ நீதிபதி (Honorary Magistrate) தங்கள் மூலமாகத்தான் நியமனம் பெற்றார்களல்லவா ?

பதில் :—நான் தாலூகா போர்டில் இருக்கும்பொழுது, அவர் கௌரவ நீதிபதியாக நியமனம் செய்யப்பட்டார்.

கேள்வி :—அவர் தஞ்சாவூரில் ஸ்திரமாகத் தாமஸம் செய்து வருகிறாரா ?

பதில் :—அப்படி இருக்கிறாரென்று நான் சொல்லமுடியாது. வழக்கமாக அவர் தஞ்சாவூரிலே வசித்து வருகிறார்.

கேள்வி :— அவர் தஞ்சாவூர் தாலூகா போர்டிலும்,

ஜில்லா சபையிலும் அங்கத்தினராக இருந்தாரா?

பதில் :—அவர் (கௌரவ நீதிபதியாக) நாமகரணஞ் செய்யப்பட்டபொழுது, தஞ்சாவூர் தாலூகா (போர்டி)ல் ஒரு அங்கத்தினராக இருந்தார்.

கேள்வி :—ஒரு ஸ்தல ஸ்தாபனத்தில் அங்கத்தினராக இருப்பவரை கௌரவ நீதிபதியாக நியமனம் செய்யப்படாதென்று ஒரு விதியோ வழக்கமோ இருக்கிறதா?

பதில் :—அதே ஜில்லாவில், ஒரு ஸ்தல ஸ்தாபனத்தில் அங்கம் பெற்றிருப்பவரைக் 'கௌரவ நீதிபதி'யாக நியமனம் செய்யப்படாதென்று ஒரு குறிப்பு இருக்கிறது.

கேள்வி :—ஸ்ரீ ராமனுதன் செட்டியார், 'ஆனரரி பெஞ்சு மாஜிஸ்திரேட்டாக' நியமனம் செய்யப்படவேண்டுமென்று தாங்கள் சிபார்சு செய்தீர்களா?

பதில் :—எனது உரிமைபற்றி நான் நிற்கிறேன். இதற்குப் பதில்சொல்லமாட்டேன். எனது சிபாரசு காரியாலய தஸ்தாவேஜுகளைப் பொறுத்தாகும். சாட்சியச் சட்டம் கஉச. பிரிவுப்படி என் உரிமை பேணி காரியாலய தஸ்தாவேஜுகளில் உள்ளதை நான் வெளியிடமாட்டேன்.

கேள்வி:—தேவகோட்டையை விட்டு நீங்கும் காலத்தில் தங்களுக்குப் பிரிவுபசார விருந்துகள் நடந்தனவா?

பதில் :—என்போன்றாருக்கு, வழக்கமாக நடந்துவருவதுபோல் என் பொருட்டும் ஒன்று நடந்தது.

கேள்வி :—வாதி அதில் பிரமுகராக நின்று விசேஷ கிரமம் எடுத்துக்கொண்டாரா ?

பதில் :—அவரும் பிரசன்னமாயிருந்தார். காரியங்களிலும் கலந்துகொண்டார்.

கேள்வி :—விருந்து நடந்தது., ஸ்ரீ. மீ. சு. வித்பாசாலையில் வைத்துத்தானே நடந்தது ?

பதில் :—ஆம்.

புனர் விசாரணை.

கேள்வி :—தேர்ந்தெடுக்கப்பட்ட மூவர்களுள் சொக்கலிங்கம் செட்டியார் ஒருவரல்லவா ?

பதில் :—ஆம்; அடுத்து அவர் காலஞ்சென்றார்.

கேள்வி :—அதன்பிறகு, வாதி, ஒரு பிரதிநிதியாக நியமனம் பெற்றது தேர்தல் மூலமாக நேர்ந்திருக்கலாமா? அல்லது, காலி ஸ்தானத்தை நிறப்ப எண்ணி, தங்கள் காரியாலயத்தினின்று பிறந்த சுற்றுக் கடிதம்மூலமாக இருக்கலாமா ?

பதில் :—எனக்கு நினைவில்லை.

வாதி சாட்சி கூ. ஸ்ரீமான்
மெ. செ. ச. சிதம்பரம்செட்டியார் அவர்களின் சாட்சியம்.

என் நாமதேயம் சிதம்பரஞ்செட்டியார்; லேவாதேவி; விலாசம் காரைக்குடி.

கேள்வி:—தங்கள் ஊரில் வாசகசாலை இருக்கின்றதா ?

பதில்:—ஆம்.

கேள்வி:—அதில் என்னென்ன தருவித்து வாசிப்பீர்கள் ?

பதில்:—பத்திரிகைகள், தினசரிகள், வாராந்தங்கள் முதலியனவும் மாஸிகைகளும் அங்கு தருவிக்கப் படுகின்றன.

கேள்வி:—"ஊழியன்" என்ற பத்திரிகையும் அங்கு தருவிக்கப்படுகிறதா?

பதில்:—ஆம்.

கேள்வி:—"ஊழியன்" எங்கு நடக்கிறது?

பதில்:—காரைக்குடியில் அது அச்சடித்துப் பிரசுரிக்கப் படுகிறது.

கேள்வி:—எவ்வளவு காலமாக நடந்து வருகிறது?

பதில்:—ஐந்தாறு வருடங்களாகவே அது நடந்து வருகிறது; ஆனால், முன்னர், அதற்கு "தனவைசிய ஊழியன்" என்ற பேர் இருந்தது. இப்பொழுது "ஊழியன்" என்ற பேரோடு அது வெளிவருகிறது.

கேள்வி:—தங்களுக்கு வாதி ஸ்ரீமான் சிதம்பரஞ்செட்டியாரைத் தெரியுமா?

பதில்:—ஆம்.

கேள்வி;—"ஊழியன்" பத்திரிகை காரைக்குடியில் மட்டுந்தான் வாசிக்கப்படுகிறதா? அல்லது வெளியூர்களுக்கும் போகின்றதா?

பதில்:—"ஊழியன்" பத்திரிகை காரைக்குடியில் மட்டுந்தான் அது வாசிக்கப்படுகிறதென்பதில்லை வெளியூர்களுக்கும் அப்பத்திரிகை போகிறது.

கேள்வி:—உங்களுக்குக் கடைகள் இருக்கின்றனவா?

பதில்:—ஆம். சிங்கப்பூரிலும், ஈப்போவிலும், ரங்கூனிலுமாக மூன்று கடைகள் இருக்கின்றன.

கேள்வி:—உங்கள் கடைகளுக்கு இப்பத்திரிகை போகிறதா?

பதில்:—எப்போ கடைக்குப் போகிறது; மற்றக் கடைகடைகளுக்குப் போவதும் போகாததும் தெரியாது.

கேள்வி:—வாதியைத் தெரியுமா?

பதில்:—ஆம்.

கேள்வி:—எதிரியைத் தெரியுமா?

பதில்:—ஆம்.

கேள்வி:—அவருக்கும் பத்திரிகைக்கும் சம்பந்தம் என்ன?

பதில்:—இப்பத்திரிகை அவரால் பதிப்பிக்கப்படுவதாகத்தான் பத்திரிகையினின்றும் தெரிகிறது.

கேள்வி:—தாவா விஷயமான வியாசம் வாதியைப்பற்றி பத்திரிகையில் வெளி வந்திருப்பது தெரியுமா?

பதில்:—ஆம்.

கேள்வி:—எங்கு வைத்துத் தெரியும்?

பதில்:—வாசகசாலையில் நான் படித்தேன்.

கேள்வி:—நீங்கள் மாத்திரமே படித்தீர்களோ?

பதில்:—மற்றவர்களும் படித்துக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது நானும் படித்தேன்.

கேள்வி:—இதைப் படித்ததிலிருந்து உங்கள் புத்தியில் என்ன பட்டது?

பதில்:—இதைப் படித்ததிலிருந்து, வாதி, தலைவர் சொல்லுகிறபடி அவரது விருப்பத்துக்கிணங்கவே நடந்துவந்தார் என்ற கருத்து என்மனதில் படிந்தது.

கேள்வி:—அதிலிருந்து தாங்கள் எண்ணியதென்ன?

பதில்:—தலைவர் சொல்லுகிறபடி கேட்டுக்கொண்டிருப்பதற்குத்தானு இங்கிருந்து இவர் போகிறார்? ஜனங்களுக்கான காரியங்களை எடுத்துச் சொல்ல வேண்டாமா என்று எண்ணிக்கொண்டேன்.

கேள்வி:—இதைப் படித்ததிலிருந்து இந்த அபிப்பிராயம் தங்களுக்கு மாத்திரந்தான் பட்டதா? மற்றவர்களுக்கும் பட்டதா?

பதில்:—மற்றும் படித்தவர்களும் இப்படியேதான் கருதினார்கள்.

கேள்வி:—அதன் பிறகு வாதியைச சந்தித்தீர்களா?

பதில்:—ஆம். வாதியைச் சந்தித்தேன்.

கேள்வி:—சந்தித்து என்ன செய்தீர்!

பதில்:—அவரிடம் வியாசத்தைப் பற்றி நான் கேட்டேன். நன்மை தின்மைகளைத் தெரிந்துகொண்டு ஜனங்களுடைய க்ஷேமநலங்களைக் கவனியாதிருக்கலாமா என்று கேட்டேன்.

கேள்வி:—அதற்கு வாதி என்ன சொன்னார்?

பதில்:—பேபரில் போட்டிருப்பது பிசகு; அதாவது குறித்த வியாசம் தவறாக எழுதப்பட்டிருக்கிறது நான் பொது ஜனங்களின் நன்மைக்காக நான் வேலை செய்து தான் வந்திருக்கிறேன்.

கேள்வி:—தாங்கள் ஏதாவது வரிசெலுத்துகிறீர்களா?

பதில்:—இவ்விடத்தும் பர்மாவிலுமாக ௫000 ரூ. வருமானவரி செலுத்துகிறேன்.

குறுக்கு விசாரணை.

கேள்வி:—வாதியைக்கண்டு பேசியதாகச் சொன்னீரல்லவா? அப்பொழுது வாதி எங்கிருந்தார்?

பதில்:—அவர் தன் பங்களாவாசலில் நின்றுகொண்டிருந்தார்.

கேள்வி:—உங்களுடைய இடத்துக்கும் அவருடைய பங்களாவுக்கும் எவ்வளவு தொலைவிருக்கும்?

பதில்:—அரை மைபில் இருக்கும்.

கேள்வி:—இதை மட்டும் கண்டு பேசுவதற்கென்று நீர் போனீரோ?

பதில்:—இல்லை, இதைக்கண்டு கேட்பதற்கே நான் செல்லவில்லை; நான் வெளியே செல்ல, அவர் வீட்டுவழியாகத்தான் செல்ல வேண்டும்; அப்பொழுது வெளியில் அவரும் நின்றுகொண்டிருந்தார்; ஆதலால் இதைப்பற்றி அவரிடம் கேட்டேன்.

கேள்வி:—அப்பொழுது என்ன நேரமிருக்கும்?

பதில்:—ஏழரை மணி சுமார் இருக்கும்.

கேள்வி:—அவர்கூட வேறுயாரேனும் இருந்தார்களா?

பதில்:—இல்லை, அவர் தனியே உலாத்திக்கொண்டிருந்தார்.

கேள்வி:—உங்கள் கூடவேனும் யாரேனும் இருந்தனரோ?

பதில்:—என் கூடவும் யாரும் இல்லை.

கேள்வி:—இந்த வியாசத்தை நீர் படித்ததெப்பொழுது?

பதில்:—பத்திரிகை வெளிவந்த மற்ற நாள், நான் படித்தேன்.

கேள்வி:—அப்பொழுது உம்மைச் சாட்சியாகப் போடுவதாக வாதி சொல்லவில்லையா?

பதில்:—அந்த சமயம் அவர் சொல்லவில்லை.

கேள்வி:—'கேஸ்' போடுவதாகவாவது அவர் சொன்னாரா?

பதில்:—இல்லை.

கேள்வி:—இந்த விஷயத்தைப்பற்றி உங்களுக்கும் அவருக்கும் ஏதாவது பேச்சு நடந்ததா?

பதில்:—இல்லை.

கேள்வி.—'சமன்' வரவும்தான் 'கேசைப் பற்றிப் பேச்சு வந்ததோ?

பதில்:—இல்லை. சமன் வருவதற்கு இரண்டு நாள் முந்தி இதைப்பற்றிப் பேசினேன்.

கேள்வி:—நன்றாக நினைத்துப்பார்த்துச் சொல்லும். முதலில் கண்டு பேசியபிறகு யாதொருபேச்சுமே நடக்கவில்லை என்றீர். பிறகு, இரண்டு நாளைக்கு முந்தி ஒருதரம் பேசினேன் என்றீர். இந்த இரண்டுதரத்துக்கு மேலாக இதைப்பற்றி பேச்சே நடந்தது கிடையாதே?

பதில்:—இல்லை. இரண்டு தடவைக்கு மேல் நாங்கள் இதைப்பற்றி பேசியதில்லை.

கேள்வி:—இரண்டாவது விசை வாதியே நேரில் தங்களுடன் பேசினாரா? அல்லது யாராவது ஆள் மூலமாக தகவல் சொல்லி அனுப்பினாரா?

பதில்:—நேரிலேயே என்னுடன் பேசினார்.

கேள்வி:—இடம் நினைவிருக்கிறதா?

பதில்:—எனது அறையில் வைத்து.

கேள்வி:—முதல் விசை நீங்கள் பேசிக்கொண்டதற்கு எத்தனை நாட்களுக்குப் பிறகு இந்த பேச்சு நடந்தது?

பதில்:—சுமார் கரு நாளுக்குப் பிறகு.

கேள்வி:—அதாவது, 'சமன்' இரண்டு நாளுக்கு முந்தி?

பதில்:—ஆம்.

கேள்வி:—அப்பொழுது எத்தனை மணி இருக்கும்?

பதில்:—காலை கூ மணி இருக்கும்.

கேள்வி:—'அப்போ' உங்களைத்தவிர வேறு யாராவது இருந்தாரா?

பதில்:—இல்லை.

கேள்வி:—அவர்கூடவேனும் யாராவது வந்தாரா?

பதில்:—இல்லை. தனியாகத்தான் அவர் வந்தார்.

கேள்வி:—இந்த வியாசத்தைப்பற்றி இவரிடம் மட்டும்தான் நீர் பேசினீரா? இன்னும் வேறு யாரிடமேனும் இதைப்பற்றி பேசியிருக்கிறீரா?

பதில்:—'பேபரை,' ரீடிங்ரூமி'ல் வைத்துப் படித்துக்கொண்டிருந்த பொழுது மற்றவர்களுடன் இதைப்பற்றிப் பேசியிருப்பேன். பிறகு பேசினதே இல்லை.

கேள்வி:—வாசகசாலையில் நீர் எப்பொழுது வாசித்தீர்?

பதில்:—பத்திரிகை வெளியான மறுநாள்.

கேள்வி:—எந் நேரத்தில்?

பதில்:—மாலை கூ மணிக்கு.

கேள்வி:—யார் யார் அங்கு இருந்தனர்?

பதில்:—சில 'மெம்பர்' கள் இருந்தார்கள். அவர்களது பெயர்கள் எனக்கு நினைவில்லை.

கேள்வி:—அப்பொழுது எத்தனை பேர் இருந்தனர்?

பதில்:—௨௦, ௨௫ பேர் இருந்திருப்பர்.

கேள்வி:—அந்த வாசகசாலையில் எத்தனை பேர் வந்து படித்துக்கொண்டிருப்பர்?

பதில்:—௪௦, ௪௫ பேரும் வந்திருக்கிறார்கள்; ௨௦ பேருக்குக் குறைந்ததே இல்லை.

கேள்வி:—'ஊழியன்' 'கம்பெனி' யில் தாங்கள் பங்குகள் வாங்கியிருக்கிறீர்களா?

பதில்:—இல்லை.

கேள்வி:—'ஊழியன்' அச்சுக்கூடத்துக் கேனும் சென்றதுண்டா?

பதில்:—இல்லை.

கேள்வி:—இந்த 'பேபரை' நீர் முதலிலிருந்தே வாசித்துத்தானே வருகிறீர்? அதாவது, அது 'தனவைசிய ஊழிய''னா யிருக்கும் காலம் முதற்கொண்டே வாசித்துத்தான் வருகிறீர்?

பதில்:—இப்படி வேளா வேளைகளில் படிக்கிறதுதான்.

கேள்வி:—இந்த 'பேபர்' 'காங்கிரசு'க் குச்சாதகமானதா? பாதகமானதா?

பதில்:—இன்னதென்று எனக்குத் தெரியவில்லை.

கேள்வி:—இந்த 'பேப்பர்' கவர்ன்மெண்டுக்குச் சாதகமானதா? பாதகமானதா?

பதில்:—அதுவும் தெரியாது.

கேள்வி:—இப்பத்திரிகையின் சமுதாயக் கொள்கை யாவது இன்னதென்று தெரியுமா?

பதில்:—ஒவ்வொரு காலத்தில் அதன் கொள்கை ஒவ்வொரு விதமாக இருந்திருப்பதால், உறுதியாக இன்னதென்று எனக்குத் தெரியவில்லை.

கேள்வி:—கஅஉ௫ டிசம்பர் மாதத்தில் அதன் சமுதாயக் கொள்கை என்ன?

பதில்:—தெரியாது.

கேள்வி:—இதன் கொள்கைகள் மாறுவதாகச் சொன்னீரே? முதலில் இதற்கு என்ன கொள்கை இருந்ததென்று தெரியுமா?

பதில்:—தெரியாது.

கேள்வி:—அதன்பிறகு, சமுதாயக்கொள்கையில் இதற்கு எப்பொழுது மாற்றம் வந்தது என்றும் சொல்லமுடியாது அல்லவா?

பதில்:—முடியாது.

கேள்வி:—செட்டி (மார்) பிள்ளைகள் அனுவசியமாக ஜாஸ்திபணங்களைச் செலவுசெய்யப்படாது, அது அவர்களுக்குத்தான் பாதகம், என்று இப்பத்திரிகையில் எழுதியிருக்க வாசித்திருக்கிறீரா?

பதில்:—ஆம.

கேள்வி:—இப்பத்திரிகையின் அபிப்பிராயம் வீண்டாம்பீகங்களில் ஜாஸ்தியாகப் பணச் செலவு செய்யப்படாது என்பது தானே? அதாவது, இப்பத்திரிகையின் தலையங்கத்தில் எழுதப்பட்டிருக்கும் அபிப்பிராயங்களைப் பற்றித்தான் நான் கேட்கிறேன்?

பதில்:—ஆம்.

கேள்வி:—கஷ்டமான காலங்களில் சாப்பாட்டிலே அதிகச் செலவு கூடாது என்பது தானே இதன் கொள்கை?

பதில்:—ஆம்.

கேள்வி:—சர்க்கார் அதிகாரிகள் பெரிய மனுஷ்யர் (உயர்ந்த உத்தியோகங்கள் வகிப்பவர்) இவர்கள் வரும்பொழுதும், போம்பொழுதும் ஊர்வலங்களிலும் விருந்துகளிலும் பெருவாரியாகப் பணம் செலவு செய்யப்படாது; இது சொல்லும் அல்லவா?

பதில்:—ஆம்.

கேள்வி:—இப்படி யில்லாமல், பெரிய மனுஷ்யாள் வந்துபோவதனால் செட்டி (மார்) நாட்டுக்கு நன்மைவரும் என்றுகருதும் சிலர் இருக்கின்றனரல்லவா?

பதில்:—சில ஜனங்கள் அப்படியும் எண்ணுவார்கள்.

கேள்வி:—இதற்கு வேறான அபிப்பிராயங்கொண்டவர்களும் இருப்பாரல்லவா?

பதில்:—ஆம்.

கேள்வி:—இப்படிவேறுபட்ட அபிப்பிராயம், 'ஊழிய' னுக்கு உண்டா?

பதில்:—ஆம்.

கேள்வி:—உங்களுடைய அபிப்பிராயம் என்ன?

பதில்:—இரண்டுவித அபிப்பிராயமும் எனக்கில்லை.

கேள்வி:—வாதி என்ன அபிப்பிராயம் கொண்டிருக்கிறார்?

பதில்:—தெரியாது.

கேள்வி:—'கவர்னர்' வந்தபொழுது அவருக்கு உபசாரம் செய்யும் 'கமிட்டி'யில் அவரும் சேர்ந்துகொண்டிருந்தாரல்லவா?

பதில்:—ஆம்.

கேள்வி:—இந்த வியாசத்தைப்பற்றி வாதியைக்கண்டு கேட்பதற்கு என்ன காரணம் நேர்ந்தது?

பதில்:—இவர் ஜனங்களுக்குச் சாதகஞ்செய்வாரென்று எண்ணியிருந்ததாலும், எல்லாரும் இதைப்பற்றிப்பேசிக்கொண்டிருந்ததாலும் நான்கண்டுகேட்டேன்.

கேள்வி:—ஜனங்கள் சாதகமாக ஜில்லா சபையில் இவர் ஏதாவது வேலை செய்வர் என்று நினைத்ததற்கு ஏதாவது முகாந்தா முண்டா?

பதில்:—எங்கள் ஊரிலே அவர் ஜனங்களுக்கு சாதகமாக வேலைசெய்து வந்திருப்பதால், அங்கு சென்றும் அப்படியே வேலை செய்வார் என்று நினைத்தோமே. அவ்வாறு செய்ய வில்லை என்று பத்திரிகையில் சொல்லியிருப்பதால், அதைப்பற்றி அவரிடம் கேட்டேன்.

கேள்வி:—இப்படி வேறு யாரையாவது குறைவாக (அதாவது தவறுகளை கடிந்து) 'ஊழியன்' பத்திரிகை எழுத நீர் வாசித்திருக்கிறீரா?

பதில்:—நான் தொடர்ச்சியாக வாசித்திருப்பதில்லை. விஷயத்தைக் குறிப்பிட்டால், ஒரு வேளை சொல்லலாம்.

கேள்வி:—வேறு யாரையாவது பத்திரிகைக் குறை

வாகச் சொல்ல, இவரைக் கேட்பதுபோல, அவ ரையும் நீர் கண்டு கேட்டதுண்டா?

பதில்:—இல்லை.

கேள்வி:—காரைக்குடி 'ரீடிங்ரூமு'க்கு தமிழ் 'சுயரா ஜ்யா' வருவதுண்டா?

பதில்:—வருகிறது.

கேள்வி:—ஒரு விசையாவது அதைப் பார்த்திருக்கிறீர்களா?

பதில்:—இல்லை.

கேள்வி:—சுதேசமித்திரன் வருகிறதா?

பதில்:—வருகிறது.

கேள்வி:—அதை வாசிப்பீர்களா?

பதில்:—அதை நான் வாசிப்பதில்லை. எப்பொழுதாவது முக்கியமான விஷயங்கள் அதில் வந்தால் அப்பொழுது அதைப் பார்ப்பேன்.

கேள்வி:—ஊழியனையும் எப்பொழுது படிப்பீர்கள்?

பதில்:—முக்கியமான விஷயங்கள் வந்திருப்பதாக யாராவது சொன்னால்தான், ஊழியனையும் நான் படிப்பேன்.

கேள்வி:—வேறு பத்திரிகைகளை நீர் படிப்பீரா?

பதில்:—செட்டி(மார்)நாடு சம்பந்தமான விஷயங்கள் வந்ததாக யாராவது சொன்னால், அப்பொழுது அவற்றையும் நான் பார்ப்பேன்.

கேள்வி:—ஊழியன் பத்திரிகையில் வெளிவந்திருக்கும் இந்த வியாசத்தைப் படித்திருக்கிறீரா? வேண்டுமானால் இதைப் படித்துப் பார்த்துவிட்டுச் சொல்லும்?

பதில்:—இல்லை.

கேள்வி:—இது பள்ளத்தூர் ஸ்ரீமான் முருகப்பசெட்டியாரைப்பற்றி எழுதப்பட்டிருக்கிறதல்லவா? இதுவும் செட்டி(மார்)நாடு சம்பந்தம் பெற்றதல்லவா?

பதில்:—இதைப்பற்றி வேறு யாரும் என்னிடம் சொன்னதில்லை. ஆதலால் இதை நான் முன்னம் படித்ததில்லை.

கேள்வி:—ஸ்ரீ சங்கராச்சாரியரை உங்கள் நாட்டுக்கு அழைக்கும் விஷயமாக இரண்டுவித அபிப்பிராயமுண்டா?

பதில்:—எல்லோரும் ஒத்துத்தான் அவரைச் செட்டி(மார்) நாட்டுக்கு அழைத்து வந்தார்களாதலால், இரண்டு டபிப்பிராயம் இல்லை.

கேள்வி:—அவர் செட்டிநாட்டுக்கு வந்தபிறகு அவருக்கு உபசாரம் செய்வது பிசகு என்று 'ஊழியன்' எழுயதுண்டா?

பதில்:—ஆம.

கேள்வி:—அதைப்பற்றி 'ஊழியன்' எழுதியதை வாசித்தீரா?

பதில்:—ஆம்.

கேள்வி:—ஸ்ரீ சங்கராச்சாரியர் வந்தபொழுது அவரை வரவேற்கச் சென்ற கூட்டத்தில் நீரும் போயிருந்தீரா?

பதில்:—ஆம்.

கேள்வி:—அப்பொழுது வாதியும் வந்திருந்தாரா?

பதில்:—ஆம்.

கேள்வி:—நீங்கள் அந்த வியாசத்தைப் படித்தபொழுது அது தப்பு என்று உங்கட்குப்பட்டதா?

பதில்:—ஆம்.

கேள்வி:—அந்த வியாசத்தைப்பற்றி நீர் யாரிடமாவது சொன்னீரா?

பதில்:—இல்லை.

கேள்வி:—ஸ்ரீ சிதம்பரம் செட்டியாருக்கும் உங்கட்கும் விவகாரம் நடந்ததா?

பதில்:—எங்கள் இருவருக்கும் நேரில் விவகாரம் இல்லை; எங்கள் குடியானவருக்கும் அவருடைய குடியானவருக்குமிடையில் வியாஜ்ஜியம் நடந்தது.

கேள்வி:—விசாலயங்கோட்டை சொத்துவிஷயமாகத்தானே?

பதில்:—ஆம். எனது குடியானவருக்கும் வாதிக்கும். அதாவது அவருடைய குடியானவருக்கும் வியாஜ்ஜியம் நடந்தது.

கேள்வி:—வாதிபேரில், அவரை "பிராஸிகூட்" செய்ய (Prosecute) அனுமதி பிரியாது' போட்டதுண்டா? அதன் பிறகு, அவர் விசாலயங்கோட்டையில் தமக்குற்ற பாத்தியத்தை இழந்ததன்மேல் ராஜி பெற்பட்டதா?

பதில்:—அனுமதி பிரியாதைப் (Sanction Petition) பற்றி எனக்கு நினைவில்லை. ஆனால் பிறகு அவர் விசாலயங்கோட்டையில் தனது பாத்தியத்தை, இழந்தும் வேறு இடத்திலுள்ள எங்கள் பாத்தி

பத்தை, அவருக்கு விட்டு கொடுத்தும், நாங்கள் உபரி அ000 ரூ. உண்டியல் கொடுத்தும் பரிவர்த்தனை செய்து கொண்டதன் மூலமாகத்தான் ராஜியேற்பட்டது.

கேள்வி:—உங்கள் ஊரிலே, 'குமரன்' என்ற பத்திரிகை இருக்கிறதா?

பதில்:—ஆம்.

கேள்வி:—அதைத் தொடர்ச்சியாகத் தாங்கள் படிப்பதுண்டா?

பதில்:—இல்லை.

கேள்வி:—சங்கராச்சாரியார் விஷயமாக 'குமரன்' பத்பத்திரிகையில் வாசித்ததுண்டா?

பதில்:—பார்த்ததாக ஞாபகமில்லை.

கேள்வி:—ஸ்ரீ சங்கராச்சாரியார் வருவதைக் கண்டித்து 'குமரனில்' எழுதியதைப் படித்ததாக தங்கட்கு நினைவில்லையா?

பதில்:—குமரனில் படித்ததாக நினைவில்லை.

இதன்மேல் தம் பக்கத்துக்கு வேறு சாட்சிகள் விடப்போவதில்லை என்று சொல்லிக்கொண்டு, வாதி வக்கீல், ஸ்ரீ ராய. சொக்கலிங்கன் பத்திரிகை அச்சிட்டு வெளிப்படுத்துவர் என்று தன்னைத் தெரிவித்து சர்க்காரில் செய்த 'வாய்மொழி' யின் நகலும், அதன் மூலம் பத்திரிகையின் பெயர் மாறியதைப் பற்றிய அனுமதித்தின் (Endorsement) நகலையும், இவ்வழக்குச் சம்பந்தமாக 'ஊழியன்' காரியஸ்தர் செய்த வாக்குமூலத்தின் (Affidavit) நகலையும் நீதிபதியிடம் சமர்ப்பித்தார். இவ்வித சமர்ப்பணம் சட்ட ரீதியான

துதானு! என்ற தர்க்கம் நிகழ்ந்ததன் மேல், சட்ட முறைப்படி சமர்ப்பிக்குமாறும், வாக்குமூலத்தின் அசலையே கொண்டுவந்து சமர்ப்பிக்குமாறும் சொல்லி, நீதிபதி அக்கடிதங்களை வாதிவக்கீலிடமே திருப்பிக் கொடுத்துவிட்டார்.

அடுத்து, பாமக்குடியில், ஆகஸ்டுமீ ௫-ந் தேதி வாயிதாப் போடப்பட்டு, அவ்வாறே பரமக்குடியில் விசாரணைக்கு வந்தது. வாதி வரவில்லை. வாதி தரப்பிற்கு காரைக்குடி யூனியன் போர்டு பிரதம குமாஸ்தா திரு. நடேசய்யருப், திரு. சு. ராஜா மணி அய்யரும் வக்கீல்களான திரு. டி. வி. ஸ்ரீனிவா சய்யங்காரும். ஆர். சோமசுந்தரய்யரும், கிருஷ்ண சாமி அய்யங்காரும் வந்திருந்தனர். எதிரி தரப்பிற்கு எதிரியும் காரியஸ்தரும் அவர்தம் நண்பர்களும் பாரிஸ்டர் ஜோசப்பும் வந்திருந்தனர். வழக்கு சுமார் ௧௨ மணிக்கு விசாரணைக்கெடுத்துக்கொள்ளப்பட்டது.

டி. சி. எழுந்து எதிரியால் பூர்த்திசெய்யப்பட்ட டிக்களரேஷன் அசலை போதுமானதெனவும் சொன்னார். அதற்கு மாஜிஸ்டிரேட் ராய. சொக்கலிங்கம் என்னும் ஒருவர் டிக்களரேஷன் செய்திருக்கிறதாக நீங்கள் ருசுப்படுத்தியுள்ளீர்கள். ஆனால் இந்த ராய. சொக்கலிங்கன்தான் அந்த ராய. சொக்கலிங்கன் என நீங்கள் ருசுப்படுத்தவில்லை என்றார். உடனே டி. சி. ராஜாமணி அய்யர் எனக் கூப்பிட்டார். உடனே ஊழியன் காரியாலயத்திலிருந்து நீக்கப்பட்ட சு. ராஜாமணி அய்யர்

வந்து நின்றார். பின்னர் சாட்சியாக அவர் விசாரிக்கப் பட்டார்.

டி. சி. :—தனவைசிய ஊழியன் பத்திரிகையை உமக்குத் தெரியுமா ?

சாக்ஷி :—தெரியும்.

டி. சி. :—ஊழியன் பத்திரிகை நடப்பது தெரியுமா?

சாக்ஷி :—தெரியும்.

டி. சி. :—தனவைசிய ஊழியன் பத்திரிகையும் ஊழியன் பத்திரிகையும் வெவ்வேறு பத்திரிகைகளா அல்லது தொடர்ந்து நடக்கும் பத்திரிகையா ?

சாக்ஷி :—வெவ்வேறு பத்திரிகை.

டி. சி. :—தனவைசிய ஊழியனுக்கு யார் பத்திராதிபர் ?

சாக்ஷி :—முதலில் சொ. முருகப்ப செட்டியார் பத்திராதிபராகவிருந்தார். அவருக்குப்பிறகு ராய. சொக்கலிங்கம் பத்திராதிபராகவிருக்கிறார்.

டி. சி. :—ஊழியன் பத்திரிகைக்கு யார் பத்திராதிபர்?

சாக்ஷி :—ராய. சொக்கலிங்கம்தான் பத்திராதிபர்.

டி. சி. :—ஊழியன் பத்திரிகைக்கு பிரிண்டர் அன் பப்ளிஷர் யார் ?

சாக்ஷி :—ராய. சொக்கலிங்கம்தான்.

டி. சி. :—தனவைசிய ஊழியனுக்கு யார் யார் இருந்தார்கள் ?

சாக்ஷி :—ஆரம்பத்தில் சொ. முருகப்ப செட்டியாரும் அதற்குப்பிறகு ராய. சொக்கலிங்கமும் இருந்தார்கள்.

டி. சி. :—ஊழியன் பத்திரிகை வெளிவந்த பிறகு தன வைசிய ஊழியன் பத்திரிகை வெளிவருகிறதா?

சாக்ஷி :—இல்லை. தனவைசிய ஊழியன் என்பதற்கு மாறுதல் பெயர்தான் ஊழியன்.

டி. சி :—எதிரியின் கையெழுத்து உமக்குத்தெரியுமா?

சாக்ஷி :—தெரியும்.

டி. சி:—தனவைசிய ஊழியன் ஆபீசிலும் ஊழியன் ஆபீசிலும் நீர் வேலையாயிருந்தீரா?

சாக்ஷி:—ஆம். குமாஸ்தா வேலை பார்த்தேன்.

டி. சி:—எந்த வகையில் குமாஸ்தாவாக விருந்தீர்?

சாக்ஷி:—மானேஜிங் டிபார்ட்மெண்டில்.

டி. சி:—(அசல் டிக்ளரேஷனைச் சாக்ஷிக்கு காண்பித்து) இக்கையெழுத்து யாருடையது எனக்கேட்டார்?

சாக்ஷி:—இது எதிரி ராய சொக்கலிங்கம் கையெழுத்துதான்.

டி. சி:—ஊழியன் பத்திரிகைக்குச் சந்தா என்ன விருக்கும்?

சாக்ஷி:—நான் வேலையிருந்த போது சுமார் கசங௦ சந்தா இருக்கும்.

டி. சி:—நீர் எப்போது வேலையை விட்டீர்?

சாக்ஷி:—ககஉகூ-மே மீ வாக்கில நான் வேலையை விட்டேன். அப்போது மொத்தம் பத்திரிகை கசஉ௦ பிரதிகள் வெளிப்போய்க்கொண்டிருந்தன.

டி. சி:—இந்தப் பத்திரிகை பெரும்பாலும் யாருக்குப் போகிறது?

சாக்ஷி:—பெரும்பாலும் நாட்டுக்கோட்டைச் செட்டியார்கட்கே போகிறது.

டி. சி:—உள்ளூரிலிருக்கிற செட்டியார்கட்குத்தானா? அல்லது வெளியூர்கட்கும் போகிறதா?

சாட்சி:—உள்ளூருக்கும் வெளியூர்களில் தொலையில் இருப்பவருக்கும் பத்திரிகை போகிறது.

குறுக்கு விசாரணை.

ஜோசப்:—நீர் வேலையிலிருந்து தள்ளப்பட்டீரா?

சாட்சி:—ஊழியன் "ஆபீஸ்" வேலையிலிருந்து நான் நீக்கப்பட்டேன்.

ஜோசப்:—ஊழின், 'ஆபீஸில்' உமக்கு என்ன வேலை கொடுத்திருந்தார்கள்?

சாட்சி:—நான் மானேஜிங் டிபார்டு மெண்டில், குமாஸ்தா வேலையை மாத்திரம்தான் பார்த்துக்கொண்டு வந்தேன்.

ஜோசப்:—உமக்கு அருணாசலஞ்செட்டியாரைத் தெரியுமா?

சாட்சி:—ஆம். அவர்தான் மானேஜர்.

ஜோசப்:—ராய சொக்கலிங்கஞ்செட்டியார் 'மானேஜிங் டிபார்ட்டுமெண்டு' வேலைகளைப் பார்க்கமாட்டாரோ?

சாட்சி:—அவர் அந்த வேலைகளையும் மேற் பார்த்து வருவர்.

ஜோசப்:—மானேஜர் இருக்கும் பொழுது, எதிரி எதற்காக இந்த வேலைகளைப் பார்க்கிறார்?

சாட்சி:—ஊழியன் கம்பெனிக்கு, எதிரிதான் மானேஜிங் டைரெக்டராயிருப்பதால், எல்லா வேலைகளையும் அவர் மேற்பார்த்து வருவார்.

ஜோசப்:—அவர் எப்பொழுது அப்படி செய்திருக்கிறார்?

சாட்சி:—'மானேஜர்' இல்லாத சமயங்களில், எதிரி எங்கட்கும் ஏவல்கள் கொடுப்பது வழக்கம்.

ஜோசப்:—வாய் வார்த்தையாகத்தானே?

சாட்சி:—ஆமாம். வாயால்தான் சொல்லுவார்.

ஜோசப்:—எழுத்தால் உத்திரவுகள் செய்ய மாட்டாரே?

சாட்சி:—அவசியமான சந்தர்ப்பத்தில் எழுத்தாலும் 'தாக்கீதுகள்' அனுப்புவர்.

ஜோசப்:—நீர் பார்த்த வேலைகள் என்னென்ன?

சாட்சி:—நான் கணக்குகள், சந்தாதாரர்கள், கடிதம் போக்கு வரவு, (அதாவது பத்திரிகையில் பிரசுரமாகும் நிருபங்களில்லை,) சந்தாக்கள் சம்பந்தமாகவும் அச்சு வேலைகள் சம்பந்தமாகவும் உள்ள கடிதப்போக்கு வரத்துகள் விளம்பரங்கள் சம்பந்தமான கணக்குகளையும், நானே பார்த்து வந்தேன். 'மானேஜர்' இல்லாத போது பொதுவாக எல்லாவற்றையும் நான் மேற் பார்த்துவந்தேன்.

ஜோசப்:—பத்திராதிபர் 'டிபார்டுமெண்டு'க்கும் உங்கள் 'மானேஜிங் டிபார்டு மெண்டுக்கும் ஏதாவது பொதுவாக சம்பந்தம் உண்டா?

சாட்சி:—இந்த இரண்டு 'டிபார்டு மெண்டு' க்கும் பொதுவாக ஒன்றுமில்லை.

ஜோசப்:—எதிரி 'பத்திராதிபர்' வேலையைத்தானே பார்த்து வந்தார்?

சாட்சி:—எதிரி, பத்திராதிபர் வேலையைத்தான் செய்வார்; என்றாலும் பாக்கியுள்ள சகல வேலைகளையும் பொறுத்து மேற்பார்த்துக் கொள்ளுவார்.

ஜோசப்:—அவருக்கு என்று ஒரு தனி அறை உண்டா?

சாட்சி:—ஆம். அவருக்கு ஒரு தனி அறை உண்டு. நானும் மானேஜரும் வேறு ஒரு அறையிலிருந்து காரியங்கள் பார்ப்போம்.

ஜோசப்:—நீர் எதற்காக வேலையினின்று தள்ளப்பட்டீர்?

சாட்சி:—கணக்குகளில் நான் தவறு செய்ததற்காக.

ஜோசப்:—தவறென்று நீரே ஒப்புக்கொண்டிருக்கிறீரா? இது சம்பந்தமாக அவர்களுக்கு ஒரு 'புரோநோட்' எழுதிக்கொடுத்திருக்கிறீரா?

சாட்சி:—ஆமாம். ரூ. கரு௦-க்கு ஒரு புரோ நோட்டு எழுதிக்கொடுத்திருக்கிறேன்.

ஜோசப்:—கணக்குத் தவறென்றால் எம்மாதிரியான தவறு?

சாட்சி:—அவர்களுடைய பணத்தை அவர்களைக் கேட்காமல் எனக்காகச் செலவழித்துக் கொண்ட குற்றத்திற்காக என்னை வேலையினின்று தள்ளினார்கள்.

பின்னர், 'மாஜிஸ்ட்ரேட்' எதிரி வக்கீலைப் பார்த்து, என் 'சார்ஜை பிரேம்' பண்ணக்கூடாது என்பதற்கு காரணங்கள் கேட்டார். அதற்கு தாம் எழுத்து மூலம் ஒரு 'ஸ்டேட்மெண்டு' போடப்போவதாகவும், அவசியமானால் ஏதேனும் சொல்லுவதாகவும் எதிரி

வக்கீல் சொன்னார். பின்னர் 'மேஜிஸ்திரேட், வாதி வக்கீலைப் பார்த்து, 'சார்ஜு பிரேம்'—பண்ணுவதற்கு என்ன காரணம் சொல்லுகிறீர் என்று கேட்டார். அதற்கு திரு. டி. ஸி. ஸ்ரீனிவாசய்யங்கார் சுமார் ௩௦ நிமிஷம் வரை தம் வாதங்களை எடுத்துச் சொன்னார். பின்னர், எதிரி வக்கீல், இதை ஆட்சேபித்து பிரதி வாதம் கூறினார். அதற்கும் திரு. டி. ஸி. ஸ்ரீனிவாசய்யங்கார் சமாதானம் சொன்ன பிறகு, 'மேஜிஸ்திரேட்' 'சார்ஜு பிரேம்' பண்ணி, எதிரியைப் பார்த்து 'நீர் குற்ற வாளியா' என்று கேட்டார்.

எதிரி, "தாம் குற்றவாளியல்ல' என்று கூறினார். மாஜிஸ்திரேட், "நீர் ஏதாவது சொல்லவேண்டியதிருக்கிறதா?" என்று எதிரியைக் கேட்டார். எதிரி, "எழுத்து மூலம் ஸ்டேட்மெண்டு" போடுவதாக பதிலளித்தார்.

பின்னர் "வாதியையும் அவரது சாட்சிகளையும் நீங்கள் மறுபடியும் குறுக்கு விசாரணை செய்யப்போகிறீர்களா? அப்படியானால் நீங்கள் யார் யாரை விசாரிக்கப்போகிறீர்கள்" என்று ஜோசப்பை, மேஜிஸ்திரேட் கேட்டதற்கு, "இன்னார் இன்னாரை என்று என்னால் குறிப்பிட்டுச் சொல்ல முடியவில்லை. இப்பொழுது எல்லோரையுமே குறுக்கு விசாரணை செய்ய விரும்புவதாகவே வைத்துக்கொள்ளவேண்டும்" என்று ஜோசப் சொன்னார். வாதி தாப்பை மறுபடியும் குறுக்கு விசாரணை செய்ய, ஆகஸ்டுமீ" ௨௦ தேதி இராமனுதபுரத்தில் வாயிதா போடப்பட்டது

முன்னர் குறிப்பிட்டபடி ஆகஸ்ட்-மீ உ௦வ இராமநாதபுரத்தில் விசாரணை நடைபெற்றது. வாதியும் அவர்தம் சாட்சிகளில் திருவாளர்களான வான். கோவில் பிள்ளை, டி. மாணிக்கம் பிள்ளை, சு. இராஜாமணி முதலியோர் வந்திருந்தனர். அவர் தம் வக்கீல் திரு. டி. சி. ஸ்ரீநிவாசய்யங்காரவர்கள் தம் சகாக்களுடன் ஆஜராகியிருந்தார். எதிரியும் அவர் தம் நண்பர்களுடன் வந்திருந்தார். எதிரி வக்கில் பாரிஸ்டர் ஜோசப்பும், தம் சகாவுடன் ஆஜராகியிருந்தார். கோர்ட்டில் வேடிக்கைபார்க்க ஏராளமான ஜனங்கள் கூடியிருந்தனர். சுமார் உவ-மணிக்கு வழக்கு எடுத்துக்கொள்ளப் பட்டதும், மாஜிஸ்டிரேட் எதிரியை விளித்து யார் யாரைக் குறுக்கு விசாரணைசெய்யப்போகிறீர்களெனக் கேட்டார். அதற்கு எதிரி எல்லோரையுமே குறுக்கு விசாரணை செய்ய விரும்புவதாக பதில் அளித்ததும் மாஜிஸ்டிரேட் பாரிஸ்டரை விளித்து யார்யாரை முன்னதாக விசாரிக்கப்போகிறீர்கள் என்று கேட்டார். அதற்கு திருவாளர்களான, கோயில் பிள்ளை மாணிக்கம் பிள்ளை இவர்களை முன்னதாக விசாரித்துவிடலாமென பாரிஸ்டர் ஜோசப் விடையிறுத்தார். பின்னர் திரு. கோயில் பிள்ளை கூப்பிடப்பட்டார்.

திரு. கோயில் பிள்ளையின் விசாரணை.

ஜோசப்:—தேவகோட்டை தாலூகா போர்டு ஆதீனத்துக்குட்பட்டு இதற்கு முன் ஆயுர்வேத வைத்தியசாலை இருந்ததில்லையா?

சாட்சி:—என்னுடைய காலத்திலிருந்ததில்லை.

ஜோசப்:—உங்களுடைய காலத்துக்கு முன் உப்பூரில் ஒரு ஆயுர்வேத வைத்தியசாலை இருந்திருக்கவில்லையா ?

சாட்சி :—என்னுடையகாலத்திற்குமுன் உப்பூரில் ஒரு ஆயுர்வேத வைத்தியசாலை இருந்ததா அல்லவா என்று என்னால் சொல்லமுடியாது.

ஜோசப்:—உங்கள்காலத்தில் ஒரு ஆயுர்வேத வைத்திய சாலையைப்பற்றிய தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டது என முன் சொல்லியுள்ளீர்களே அது எப்போது ?

சாட்சி:—என்னால் குறிப்பிடப்பட்ட அத்தீர்மானம் 23—12—25ல் கூடிய கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

ஜோசப்:—அத்திர்மானம் வாதி பிரேரேபித்தார் என முன் சொல்லியுள்ளீர்களே அப்படி ஒன்றும் தாலூகா போர்டு நடவடிக்கைகளில் காணப்படவில்லையல்லவா ? எனச்சொல்லி தாலூகா போர்டு நடபடிக்கைக் குறிப்புகளை சாட்சியிடம் கொடுத்தார்.

சாட்சி:—அத்தீர்மானம் வாதி அனுப்பியதாகத்தான் எனக்கு ஞாபகமிருககிறது.

ஜோசப்:—வாதி தீர்மானம் மட்டும் அனுப்பினாரா ? அல்லது அதைத் தெளிவுபடுத்திக்கூறி ஏதும் கடிதமும் அனுப்பினாரா ?

சாட்சி:—நகல் தீர்மானத்துடன் அதைத்தெளிவுபடுத்திக்கூறிய கடிதமொன்று வந்ததா என்பது எனக்கு ஞாபகமில்லை.

ஜோசப் :—ஆயுர்வேத வைத்யசாலைக்கு ஒரு டாக்டரை, டாக்டர் லக்ஷ்மிபதிமூலம் நியமிக்கும்படி வாதி சிபார்சு செய்தாரா ?

சாட்சி:—வாதி அப்படி சிபார்சு செய்ததாக நான் நினைக்கவில்லை.

ஜோசப்:—அந்நியமனத்தை தாங்கள் எப்படிப்பூர்த்தி செய்தீர்கள் ?

சாட்சி:—ஆயுர்வேத வைத்தியசாலைக்கு வைத்தியர் வேண்டும்பொழுது பொதுவாக நாங்கள் டாக்டர் லட்சுமிபதியைக் கலந்துகொள்வது வழக்கம். அவரைக் கலந்துகொண்டு செய்தோம்.

ஜோசப்:—டாக்டர் லட்சுமிபதி தேவகோட்டைக்கு வந்தாரா ?

சாட்சி:—ஆயுர்வேத வைத்தியசாலையைப்பற்றித் தீர்மானம் நிறைவேறியபின்னர், நான் சிவகெங்கையிலிருக்கையில் டாக்டர் டிசம்பர் மாதத்தில் வந்தார்.

ஜோசப்:—அவர் வருமுன் தாம் தேவகோட்டைக்கு வரப்போவதாக உங்களுக்குக் கடிதம் ஏதும் எழுதியிருந்தாரா ?

சாட்சி:—ஆம். எனக்கு எழுதியிருந்தார்.

ஜோசப் :—ஜலசப்ளை ஸ்கீம் விஷயமாக ஏதோ கஷ்டமிருந்தது. அதற்காக வாதியை காரைக்குடி யூனியன் போர்டு மெம்பராக நியமித்ததாக முன் சொன்னீர்களல்லவா ? அவர் நியமிக்கப்பட்டு ஒன்றரை வருடங்களுக்கு மேலாகியும் ஸ்கீம்

விஷயமாக இன்னும் ஒன்றும் முடிவு ஏற்படவில்லை அல்லவா ?

சாட்சி:—ஜல சப்ளை ஆராய்ச்சிச் செலவைப்பற்றிய தொகை யூனியன் போர்டாரால் அனுமதிக்கப் பெற்றபோதிலும் ஜலசப்ளைத் திட்டத்தை இன்னும் விசாரிக்கவில்லை.

ஜோசப்:—காரைக்குடி யூனியன்போர்டு அங்கத்தினர் நியமனத்திற்கு சிறு தொகையினரில் யாரும் அகப்படவில்லையென்று முன் சொன்னீர்களல்லவா ?

சாட்சி:—ஆம்.

ஜோசப்:—இங்கிலீஷ், தமிழ், ஹிந்தி, சமஸ்கிருதம் முதலிய பாஷைகளில் தேர்ச்சியுள்ள இராமகிருஷ்ண ஆசாரியையும், இரத்தினத்தொழிலாளரான இராமசாமி நாயுடுவையும், வைர நகைகள் செய்யும் அந்தோணியையும் உங்களுக்குத்தெரியாதா ?

சாட்சி :—இவர்களைப்பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது.

ஜோசப் :—ஆசாரி, நாயுடு, கிறிஸ்தவர் வகுப்புகளினின்றும் காரைக்குடி யூனியன் போர்டு அங்கத்தினர் பதவிக்கு நியமனத்திற்குத் தகுதிபெற்ற எவரையாவது உங்களுக்குத் தெரியுமா ?

சாட்சி:—எவரையும் எனக்குத் தெரியாது.

ஜோசப்:—காரைக்குடியில் இந்த வகுப்பார்கள் சிறு தொகையினர்கள்தானே ?

சாட்சி:—இருக்கலாம்.

மாஜிஸ்டிரேட் திரு. டி. சி. ஸ்ரீநிவாசய்யங்காரை விளித்து மறு விசாரணை உண்டா எனக்கேட்டதற்கு இல்லையென டி. சி. விடையளித்தார். பின்னர் மாணிக்கம் பிள்ளை விசாரிக்கப்பட்டார்.

திரு. மாணிக்கம் பிள்ளையின் விசாரணை.

ஜோசப்:—உப்பூரில் ஒரு ஆயுர்வேத வைத்தியசாலை இருந்ததல்லவா?

சாட்சி:—நான் தேவகோட்டை தாலூகா போர்டு தலைவராயிருக்கையில் உப்பூரில் ஆயுர்வேத வைத்தியசாலை ஒன்றிருந்தது.

ஜோசப்:—நீங்கள் தாலூகா போர்டு தலைவர் பதவியிலிருந்து நீங்கியபோது அது இருந்ததா?

சாட்சி:—அப்போது அது இருந்ததா இல்லையா என்று என்னால் சொல்லமுடியாது. பண உதவிக்காக தாலூகா போர்டுக்கு மனுச்செய்துகொள்ளப்பட்டது எனக்குத்தெரியும். ஆனால் உதவிக்கு அனுமதி தரப்படவில்லை.

ஜோசப்:—உப்பூர் ஆயுர்வேத வைத்தியசாலை திறக்கப்பட்டது தாங்கள் தேவகோட்டை தாலூகா போர்டு பதவிக்கு எற்கு முன்னரா அல்லது விடு முன்னரா?

சாட்சி:—எற்கு முன்னர் அல்லது அதை விடுமுன்னர் அது திறந்து வைக்கப்பெற்றதா என்று என்னால் சொல்லமுடியாது.

மாஜிஸ்டிரேட்:—திரு. டி. சி. ஸ்ரீநியாசய்யங்காரை விளித்து மறு விசாரணை உண்டா எனக்கேட்டதற்கு இல்லையென விடை இறுத்தார்- பின்னர் பாரிஸ்

டர் ஜோசப்பை விளித்து அடுத்தாற்போல் யாரை விசாரிக்கப் போகிறீர்களெனக் கேட்டார். அதற்கு ஜோசப் வாதியையே அடுத்தாற்பொல் விசாரிக்கப் போவதாகப் பதிலிறுத்ததும் வாதி கூட்டில் எற்றப் பட்டார்.

வாதியின் விசாரணை.

ஜோசப்:—பிராதில் நீர் சொன்னதின் பேரில்தானே உமது வக்கீல் நீர் ஜில்லாக் கல்விச்சபையின் அங்கத்தினரென்று எழுதியிருக்கிறார்?

வாதி:—ஆம். நான் சொல்லித்தான் வக்கீல் எழுதினார்.

ஜோசப்:—நீர் ஜில்லா கல்விசபையின் அங்கத்தினர் அல்லவென்று நான் சொல்லுகிறேன். இதற்கு என்னசொல்லுகிறீர்?

வாதி:—அதாவது, நடுத்தரக் கல்விச்சபை என்று கூறு கின்றேன்.

ஜோசப்:—இராமனாதபுரம் ஜில்லா கல்வி சபையின் அங்கத்தினரென்று நீர் உமது வக்கீலிடம் சொன்னது தவறுதானே?

வாதி:—இராமனாதபுரம் ஜில்லா கல்வி சபையின் அங்கத்தினரென்று நான் வக்கீலிடம் சொல்லவே யில்லை.

ஜோசப்:—சபையென்றால் ஜில்லா போர்டு தாலூகா போர்டு, யூனியன் போர்டு எனப் பொருள் என்று நீர் முன்கூறியிருக்கிறீரல்லவா? சபைஎன்றால் கூட்டம் என்றும் பொருள் உண்டு என்று உமக்குத் தெரியுமா?

வாதி:—சபையென்றால் கூட்டம் என்றும் பொருள் உண்டென்று என்னால் சொல்லமுடியாது.

ஜோசப்:—தமிழ்ச்சங்கத்தினின்றும் வெளியிடப் பட்டுள்ள தமிழ்ச் சொல்லகராதிப் புத்தகத்தை வாதிக்குக் காட்டி இந்த அகராதியைப் பார்த்திருக்கிறீரா? என ஜோசப் கேட்டார்.

வாதி:—நான் சாதாரணத்தமிழைப் பார்த்திருக்கிறேன். ஆனால் அகராதித் தமிழைப் பார்த்ததில்லை.

ஜோசப்:—தமிழ்ச் சொல்லகராதியில் காண்கிறபடி சபை என்பதற்கு கூட்டம்—சபாமண்டபம்—சிதம்பரம் என மூன்று அர்த்தங்கள் உண்டென உமக்குத் தெரியாதா?

வாதி:—தெரியாது.

ஜோசப்:—தமிழ்ச் சங்கத்தினின்றும் வெளிவந்த அந்த நூலை நீர் படித்ததில்லையா?

வாதி:—நான் அதைப்படித்ததில்லை.

ஜோசப்:—ஆயுர்வேத வைத்யசாலை விஷயமாய் நகல் தீர்மானம் அனுப்பியதாக முன் சொல்லியிருக்கிறீர். அது எக்ஸ்பிட் பீ-க்கு முன்னால் அனுப்பப்பட்டதா? அல்லது பின்னால் அனுப்பட்டதா?

வாதி:—நகல் தீர்மானம் எக்ஸ்பிட் பீ-க்கு முன்னால் அனுப்பினேனோ அல்லது பின்னால் அனுப்பினேனோ அது எனக்குத் தெரியாது.

ஜோசப்:—டாக்டர் லட்சுமிபதி காரைக்குடிக்கு வந்திருந்தாரா?

வாதி:—ஆம் வந்திருந்தார்

ஜோசப்:—ஷை தீர்மானம் அவர் வருவதற்கு முன்ன னுப்பப்பட்டதா? அல்லது பின்னனுப்பப்பட்ட தா?

வாதி:—அத்தீர்மானம் அவர் வருவதற்கு முன் அனுப் பட்டது.

ஜோசப்:—டாக்டர் லட்சுமிபதி காரைக்குடிக்கு வரு முன் அவருக்கும் உமக்கும் கடிதப் போக்கு வர த்து உண்டா?

வாதி:—காரைக்குடிக்கு அவர் வருவதற்கு முன் அவ ரை எனக்குத் தெரியாது. கடிதப் போக்கு வர த்தும் இல்லை.

ஜோசப்:—நீர் தாலூகாப் போர்டுத் தலைவரல்லவா? தாலூகா போர்டு ஆதீனத்திலுள்ள கோட்டைப் பட்டணம் ஆயுர்வேத வைத்யசாலையின் வைத்ய ரின் பெயரென்ன?

வாதி:—அவர் பெயர் எனக்குத் தெரியாது. அவர் ஒரு பிராமணர். ஆனால் நேரே அவரை எனக்குத் தெரியாது.

ஜோசப்:—அவரை யார் நியமனம் செய்தது?

வாதி:—எனது உ-வது சாட்சி கோயில்பிள்ளை நியம னம் செய்தார்.

ஜோசப்:—ஆயுர்வேத வைத்தியசாலை சம்பந்தமாய் ஒரு தீர்மானம் அனுப்பினீரே அத்துடன் ஏதும் கடிதம் அனுப்பினீரா?

வாதி:—தீர்மானத்தைத் தவிர வேறு யாதொரு கடித மும் நான் அனுப்பவில்லை.

ஜோசப்:—உமது மருமகனிறந்தது பதினெட்டு மாதத்திற்கு முன் என நீர் சொல்லி இருக்கிறீர்? அதாவது ரக்தாக்ஷிவருஷம் தைமீத்தில் தானே?

வாதி:—இரத்தாட்சி வருஷம் தை மாதத்தில்தான் எனது மாப்பிள்ளை இறந்துபோனார்.

ஜோசப்:—உமது தாலூகா போர்டு தேர்தலைப்பற்றி யாருக்கும் நீர் கடிதம் எழுதவில்லையா?

வாதி:—எனது தாலூகாபோர்டு தேர்தலைப்பற்றி யாதொரு கடிதமும் நான் யெழுதியதாக எனக்கு ஞாபகமில்லை.

ஜோசப்:—எம். ஆர். கோவிந்தராவைத் தெரியுமா?

வாதி:—எனக்கு அவரைத்தெரியும்.

ஜோசப்:—அவர் குன்றக்குடி தேவஸ்தானம் ரிசீவராகவும், டிரஸ்டியாகவுமிருந்தாரா?

வாதி:—அவர் குன்றக்குடி தேவஸ்தானம் மானேஜராகயிருந்தார்.

ஜோசப்:—தேர்தலைப்பற்றி நீர் அவருக்குக் கடிதங்கள் எழுதியிருக்கிறீரல்லவா?

வாதி:—தேர்தலைப்பற்றி அவருக்கு எழுதினதாக எனக்கு ஞாபகமில்லை.

ஜோசப்:—நீர் அவருக்குக் கடிதமே யெழுதவில்லையென்று சொல்லமுடியுமோ?

வாதி:—அவருக்கு நான் கடிதம் எழுதவில்லை யென்று நான் சொல்லமுடியாது.

ஜோசப்:—தேர்தல் நிறைவேறிய பின்னர் நீர் ஏதும் செய்வதாகக் கடிதம் எழுதியதுண்டா?

வாதி:—தேர்தல் நிறைவேறிய பின்னர் நான் எதாவது செய்யமுடியுமென்று நான் யெழுதியதாக என்னுல் சொல்லமுடியாது.

ஜோசப்:—வைகையாற்றுப் பாலம் விஷயமாக நீர் தீர்மானம் போட்டிருப்பதாகச் சொன்னீரே அது ௩—அ—௧௯௨௫-ம் தேதியா?

வாதி:—ஆம்.

ஜோசப்:—வைகையாற்று விஷயம் டிஸ்டிரிக்ட்போர்டு தலைவரின் குறிப்பின்படியல்லவா பணம் அனுமதிக்கப்பட்டது?

வாதி:—வைகைப் பாலத்தைப்பற்றி தலைவர் எழுதிய குறிப்பு எதாவதிருக்கலாம். அதைப்பற்றி தகரார் நடந்தது. முடிவாக நிறைவேறிற்று.

ஜோசப்:—ஜில்லா போர்டுத் தலைவரின் குறிப்பின்படி தானே நிறைவேறிற்று.

வாதி:—ஆம்.

ஜோசப்:—நீர் நாலு தீர்மானம் ஜில்லா போர்டில் போட்டதாகமுன் சொன்னீரே அதுநடவடிக்கை குறிப்புப் புத்தகத்தில் காணப்படுகிறதா?

வாதி:—அதுகள் நடவடிக்கைக் குறிப்புத்தகத்தில் காணப்படவில்லை.

ஜோசப்:—'ஊழியன்' ரிப்போர்ட்டாக வந்த மானேஜர், அருணுசலம் செட்டியார் தவறுக எழுதினுர் என்று சொன்னீரே அது என்ன விஷயம்?

வாதி:—ஒரு கூட்டத்தில் ஒன்பதாவது தீர்மானம் ஒன்று தீர்மானிக்கப்படவில்லை என எழுதியிருந்தார். அத்தீர்மானம் நடந்திருக்கிறது.

ஜோசப்:—அது தவறென்று பத்திரிகைக்கு எழுதி னீரா?

வாதி:—இல்லை, குமான் பேப்பரிலும் அப்படியே பிர சுரிக்கப்பெற்றதாக குமாஸ்தா சொன்னார்.

ஜோசப்:—குமரன் பேப்பருக்காவது நீர் திருத்தம் அனுப்பினீரா?

வாதி:—இல்லை. நான் அனுப்பினால் அவர்கள் போட மாட்டார்கள் என்று நினைத்து அனுப்பவில்லை.

ஜோசப்:—குமரனுக்கும் அஜண்டா பேப்பர் நீங்கள் அனுப்புகிறதா?

வாதி:—நான் குமரனுக்கு நோட்டீஸ் ஒன்றும் அனு ப்பவில்லை.

ஜோசப்:—ஒருக்காலும் அனுப்பும் வழக்கமிருந்ததில் லையா?

வாதி:—அதற்கு நோட்டீஸ் அனுப்புவது வழக்க மல்ல.

ஜோசப்:—குமரன் பத்திராதிபர் யூனியன் போர்டு மெம்பரா?

வாதி:—ஒரு வருடமாக அவர் யூனியன் போர்டு மெம் பர்.

ஜோசப்:—குமரன் ஆசிரியர் ககூஉநிம் வருஷம் மார்ச்சு மாதத்தில் மெம்பரானாரல்லவா?

வாதி:—ககூஉநி-ம் வருஷம் மார்ச்சு மாதம் முதல் கும ரன் ஆசிரியர் யூனியன் போர்டு அங்கத்தினராக யிருக்கிறார்.

ஜோசப்:—அதனால் தானே அஜண்டாப் பேப்பர் அனுப்பவில்லை.

வாதி:—அவர்கட்கு எப்பவும் அனுப்பவேயில்லை.

ஜோசப்:—கூவது தீர்மானத்தைப்பற்றித் தவருகப் பிரசுரித்திருப்பதாகச் சொன்னீரே அது அவர் மெம்பரானதற்குப் பிறகா அல்லது முன்பா?

வாதி:—அவர் அங்கத்தினரான பிறகுதான் அந்தத் தவறு பத்திரிகையில் தோன்றிற்று.

ஜோசப்:—அந்தத் தீர்மானத்தைப் பற்றி ஒன்றும் பிசகு இல்லையா?

வாதி:—வேலை ஒழுங்காக நடைபெற்றது என்ற உண்மை எனக்குத் தெரியும்.

ஜோசப்:—நீங்கள் குமரன் பேப்பரிலும் தவறுதலாக வெளியிட்டதற்கு என் குமாஹுக்குத் திருத்தம் அனுப்பவில்லை.

வாதி:—குமரன் தவறைத் திருத்துவது அவசியமென எனக்குத் தோன்றவில்லை.

ஜோசப்:—ஏன்?

வாதி:—அனுப்பினுல் அவர்கள் பிரசுரம் செய்யமாட்டார்களென்று நினைத்தே அனுப்பவில்லை.

ஜோசப்:—சுதேசமித்திரன் நிருபர் சி. முரு. நாராயணன்செட்டியாரைத் தெரியுமா?

வாதி:—அவரையும் தெரியாது. அவர் சுதேசமித்திரன் நிருபர் என்றும் எனக்குத் தெரியாது.

ஜோசப்:—அவர் யூனியன் போர்டிற்கு குறிப்பு எடுக்க வந்தாரல்லவா?

வாதி:—ஓரிரண்டு சமயங்களில் அவர் வந்தார்.

ஜோசப்:—அவர் மனுச்செய்துகொண்டபிறகும் நீங்கள் அவருக்கு அஜண்டாப்பேப்பர் அனுப்பவில்லையா?

வாதி:—அவர் மனுச்செய்துகொண்டார்.

ஜோசப்:—நீங்கள் அஜண்டாப்பேப்பர் அனுப்பாததி னுல் அவர் ஜில்லாபோர்டிற்கு மனுச்செய்து கொண்டாரா?

வாதி:—அவர் ஜில்லாபோர்டிற்கு மனுச்செய்துகொண் டாரோ என்னமோ தெரியாது. ஜில்லாபோர் டுத் தலைவரிடமிருந்து எனக்கு ஒரு உத்திரவு கிடைத்தது.

ஜோசப்:—ஜில்லாபோர்டுத் தலைவரின் உத்திரவில் என்ன கூறியிருந்தார்?

வாதி:—அவர் நிருபராயிருந்தால் அஜண்டா அனுப்பும் படி ஜில்லாபோர்டுத்தலைவர் உத்திரவில் எழுதி யிருந்தார்.

ஜோசப்:—ஜில்லாப்போர்டு உத்திரவுக்குப் பிறகு அவ ருக்கு எத்தனை முறை அஜண்டா அனுப்பினீர் கள்?

வாதி:—இரண்டு மூன்று முறைகளில் நான் அவருக்கு அஜண்டா அனுப்பினேன்.

ஜோசப்:—பிறகு என் அவருக்கு அஜண்டா அனுப்ப வில்லை?

வாதி:—கூட்டங்களுக்குத் தவறுமல் அவர்வாராததைக் கண்டு நான் அஜண்டா அனுப்புவதை நிறுத்திக் கொண்டேன்.

ஜோசப்:—அவர் சுதேசமித்திரன் நிருபர் என்று உமக் குத் தெரிந்த பிறகுதானே அஜண்டா அனுப்ப ஆரம்பித்தீர்?

வாதி:—அவர் சுதேசமித்திரன் நிருபர் என்று எனக் குத் தெரியாது.

ஜோசப்:—இன்ன பத்திரிகை நிருபரெனத் தெரிந்து கொள்ளாமலா அஜண்டா அனுப்பிவைத்தீர்?

வாதி:—ஜில்லா போர்டிற்கு அவர் எழுதினார் என்று கேள்வி. ஜில்லாபோர்டிலிருந்தும் உத்திரவு வந்தது. அதனால் நான் அனுப்பினேன்.

ஜோசப்:—அவர் இப்பொழுது நிருபரா?

வாதி:—எனக்குத் தெரியாது.

ஜோசப்:—குன்னக்குடி—கோவிலூர் ரோடு தாலூக்காப்போர்டில் ஒப்பிவித்தாய் விட்டதா?

வாதி:—நான் உண்டாக்கிய ரோட்டையா? கோவிலூர் வரைக்கும் இந்த ரஸ்தா தாலூகா போர்டாரால் எடுத்துக்கொள்ளப்பட்டு செப்பனிட வேணுமென்று ஜில்லா போர்டு தலைவர் உத்திரவு விட்டு விட்டார்?

ஜோசப்:—அந்த ரோட்டை ஒப்படைக்கத் தயாரென்று நீர் கடிதம் எழுதியதுண்டா?

வாதி:—ரோட்டை ஒப்படைக்க நான் தயாரென்று நான் எழுதவில்லை. ரோட்டை எடுத்துக்கொள்ள தாலூகாபோர்டு மறுத்துவிட்டது.

ஜோசப்:—ஷை ரோட்டை *பரிபாலனம் செய்ய ஜில்லாபோர்டினிடமிருந்து தாலூகாபோர்டார் பண உதவி கேட்டார்களா?

வாதி:—ரோட்டை பரிபாலனம் செய்வதற்கு தாலூகா போர்டு ஜில்லா போர்டினிடமிருந்து பண உதவி கேட்டதா என்று எனக்கு ஞாபகமில்லை. அந்தக் கூட்டத்தில் நான் ஆஜராகமலிருந்திருக்கலாம். கரு00 ரூபாய் கொடுக்கமுடியுமென்றும் அதை

வைத்துக்கொண்டு தாலூகா போர்டார் ரஸ்தா வை எடுத்துக்கொண்டு பழுதுபார்க்கலாமென்று ஜில்லா போர்டார் எழுதினார்கள்.

ஜோசப்:—ஷை ரோட்டை தாலூகா போர்டிற்கு நீர் ஒப்புவிக்கும்பொழுது ரூ கஉ000 கொடுக்கிற தாக ஒப்பந்தம் உண்டா?

வாதி:—ரோடு ஒப்புவிக்கும்பொழுதுதான் ரூ கஉ000 தாலூகாபோர்டிற்குக் கொடுக்கவேண்டும்.

ஜோசப்:—ஜில்லாபோர்டிற்கும் தாலூகாபோர்டிற்கும் உள்ள நடவடிக்கைகளைப் பார்க்கும்பொழுது ஷை ரோட்டை தாலூகாபோர்டு எடுத்துக்கொண்ட தாக ஆகிறதல்லவா?

வாதி:—தாலூகாபோர்டு ரஸ்தாவை எடுத்துக்கொள்ள வில்லை. நான் பணம் கொடுக்கவுமில்லை.

ஜோசப்:—ஷை ரஸ்தாவை எடுத்துக்கொள்ள முடியா தென்று தாலூகாபோர்டார் டிஸ்டிரிக்ட்போர்டா ருக்குப் பதிலிறுத்தனரா?

வாதி:—ரஸ்தாவை எடுத்துக்கொள்ள முடியாதென்று தாலூகா போர்டார் ஜில்லாபோர்டாருக்கு பதி லெழுதவில்லை.

ஜோசப்:—தாவா வியாசத்தைப்பற்றி உமக்கு ஆட்சே பனை இருக்கிறதெனக் குறிப்பிட்டு நீர் எதிரிக்கு ஏதும் நோட்டீஸ் அனுப்பினீரா? அல்லது மறுப் பாவது எழுதினீரா?

வாதி:—வியாசத்தைப்பற்றி எதிரிக்கு நோட்டீசு அனுப்பவில்லை. அதற்கு மறுப்பும் எழுதவில்லை?

ஜோசப்:—(இராமநாதபுரம் ஜில்லாத் தமிழ் படமொன்

றை வாதி கையில் கொடுத்து) இது என்ன பாரு மென்று சொன்னார்.

டி. சி.:—இவ்வழக்கில் படத்தைக் கொடுத்து குறுக்கு விசாரணை செய்யவேண்டியது ஒன்றுமில்லை யென்றும் அது என்ன படமென தமக்குத் தெரிய வில்லை யெனவும் சொன்னார்.

மாஜிஸ்டிரேட்:—ஜோசப்பை விளித்து இது என்ன படம்? எதற்காக இப்படத்தைக் காட்டி விசா ரிக்கவேண்டுமெனக் கேட்டார்.

ஜோசப்:—இது இராமனாதபுரம் ஜில்லாவின் தமிழ்ப்படம். வாதி ஏதோ ஸ்கெச்சை வைத்து தாலூ காபோர்டில் விளக்கிச்சொன்னதாக வாதியின் இரண் டாவது சாட்சி கூறியிருக்கிறார். ஆனால் அவருக்கு ஸ்கெச்சைவைத்து விளக்கிச் சொல்லும்படியான திற மை இல்லை என ரூபிப்பதற்கே இப்படத்தைக் கொ டுத்து வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு முதலியன கூட அவரால் சொல்லமுடியாதெனை ரூபிப்பதற்கே இப்படத்தைக்கொடுத்து கேள்விகேட்கவிரும்பினேன்.

டி. ஸி.—இது பரீக்ஷைபண்ணும் பள்ளிக்கூட மல்ல. இக்கேள்வி அனுமதிக்கக்கூடாது என மிகவற் புறுத்திக் கோர்ட்டாருக்குச் சொன்னார்.

மாஜிஸ்டிரேட்:—ஜோசப்பை விளித்து இக் கேள்வி வேண்டாமென சமாதானமாகச் சொன்னார்.

ஜோசப்:—வாதி ஸ்கெச்சைவைத்துத் தாம் விளக் கிக்காட்டும்படியான திறமை உள்ளவரென சாட்சியம் விட்டபிறகு இதற்குப்பதில் சொல்லவேண்டியது மிக நியாயமே யாகும் எனக்கூறினார்.

டி. ஸி. படத்தின் வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு எல்லாருக்கும் சொல்லிவிடத் தெரியாதென்றும் ஒரு ஜட்ஜ்கூட வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு காட்டுவதில் தவறிவிட்டாரெனவும் ஆதலால் இக்கேள்வி அனுமதிக்கப்படக்கூடாதென்றார்.

மாஜிஸ்டிரேட் ; இக்கேள்வி கேட்கக்கூடாதென உத்திரவிட்டுவிட்டார்.

மாஜிஸ்டிரேட், டி. ஸி. யை விளித்து மறுவிசாரணை செய்யப்போகிறீர்களா எனக் கேட்டதற்கு திரு. டி. ஸி. இல்லையென விடையளித்தார். பின்னர் திரு. ராஜாமணி கூட்டிலேற்றப்பட்டார்.

ராஜாமணியின் விசாரணை.

ஜோசப் :—கஅஉடு-ம் வருஷம் டிசம்பர் மாதம் கஉ எதிரி காரைக்குடியில் இல்லையல்லவா ?

சாட்சி :—கஅஉடு-ம் வருஷம் டிசம்பர் மாதம் முதல் தேதியில் எதிரி காரைக்குடியில் இல்லையென்பது எனக்கு ஞாபகம்.

ஜோசப் :—எதிரி காஞ்சிபுரம் மகாநாட்டிற்குச் சென்று அங்கிருந்து சென்னைக்குச் சென்றாரா ?

சாட்சி :—ஆம். காஞ்சிபுரம் மகாநாட்டிற்குச் சென்றிருந்தவர்கள் அங்கிருந்தே அவர் சென்னைக்குச் சென்றார்.

ஜோசப் :—(ஒரு புத்தகத்தை ராஜாமணி அய்யரிடம் கொடுத்து) இது என்ன என்று கேட்டார்.

சாட்சி :—அப்புத்தகத்தை வாங்கிப் படித்துப் பார்த்துவிட்டு இது ஊழியன் கம்பெனிக் குறிப்புப் புத்தகம் என்று சொன்னார்.

ஜோசப் :—இந்தக் குறிப்புப் புத்தகத்தில் கசஉடு-ம் வருஷம் நவம்பர் மாதம் கஅவ கணக்கில் எதிரியிடம் கம்பெனிக்குச் சாமான் வாங்குவதற்கு ரூ அ௫௦ கொடுத்து கணக்கு வரையப்பட்டிருக்கிறதா?

சாட்சி :—ஆம், கசஉடு-ம் வருஷம் நவம்பர் மாசம் கஅவக் குறிப்பில் அவ்விதம் எதிரியிடம் பணம் கொடுத்துக கணக்கெழுதப்பட்டிருக்கிறது.

ஜோசப்:—அச்சமயத்தில் அவர் காஞ்சிபுரம் போனாரா?

சாட்சி :—ஆம். போனார் அந்தக் கணக்கு எழுதியது மானேஜர் அருணாசலம் செட்டியார்.

ஜோசப்:—நீர் அப்போது ஊழியன் ஆபீஸில் குமாஸ்தாவாக விருந்தீரா?

சாட்சி:—ஆம். நான் ஊழியன் ஆபீஸில்தான் வேலை பார்த்து வந்தேன்.

ஜோசப்:—கஅ-கக-உடு-க்குப் பிறகு எதிரிக்கு ஏதும் பணம் அனுப்பப்பட்டிருக்கிறதா? எங்கே கணக்கைப் பார்த்துச் சொல்லும்.

சாட்சி:—க-கஉ-உடு-ல் எதிரிக்கு சென்னைக்கு ஒரு உண்டியல் அனுப்பிக் குறிப்பில் எழுதப்பட்டிருக்கிறது. (இதிலிருந்து எதிரி சென்னையிலிருந்தாரென்பதை இது காண்பிக்கிறது.)

ஜோசப்:—எதிரி சென்னையிலிருந்து எப்பொழுது வந்தார்? கணக்கைப் பார்த்து சொல்லமுடியுமா?

சாட்சி:—குறிப்புப் புத்தகத்தின் பல இதழ்களைப் புரட்டிப் பார்த்துவிட்டு கஎ-கஉ-உடு-வபில் ஒரு குறிப்பு இருக்கிறது. அப்போதுதான் அவர் சென்

ணையிலிருந்து திரும்பி வந்தாரென்று சொல்லுகிறேன்.

ஜோசப்:—அந்தக் குறிப்பு யாரால் எழுதப்பட்டது ?

சாட்சி:—என்னால் அது எழுதப்பட்டிருக்கிறது.

ஜோசப்:—க௮-கக-உ௫ முதல் கஎ-கஉ-உ௫ வரை பத்திரிகையை யார் பொறுப்பாய் நடத்தினது ?

சாட்சி:—உதவிப் பத்திராதிபர் கிருஷ்ணய்யர் என்னுமொருவர் பத்திரிகையை நடத்தினார்.

ஜோசப்:—க௯உ௫-ம் வருஷம் டிசம்பர் மாதம் கஉ பத்திரிகையில் "இவர்களால் யாது பயன் ?" என மகுடமிட்டு எழுதப்பட்ட வியாசத்தை சாட்சியிடம் காண்பித்து இந்த வியாசத்தை யார் எழுதினார்கள்? என்று கேட்டார்.

சாட்சி:—அதை யார் எழுதினாரென்று என்னால் சொல்ல முடியாது. யார் யார் என்னென்ன வியாசமெழுதினாரென்று என்னால் சொல்லமுடியாது.

ஜோசப்:—நான் உம்மிடம் காட்டிய வியாசத்தை யார் எழுதியதென்றே கேட்கிறேன். யார் எழுதினது தெரியுமா?

சாட்சி:—வியாசத்தை மறுமுறையும் பார்த்துவிட்டு யார் எழுதினார்களென என்னால் சொல்லமுடியாதென்று பதிலிறுத்தார்.

மாஜிஸ்டிரேட்:—டி. ஸி. யை விளித்து மறு விசாரணை செய்யப்போகிறீர்களா எனக்கேட்டதற்கு அவர் ஒரே கேள்விதான் என்று சொன்னார்.

ராஜாமணியின் மறு விசாரணை.

டி. ஸி:—எதிரி காரைக்குடியிலிருந்து வெளியூர்களுக்குப் போனால் அவர் அங்கிருந்து வியாசங்கள் அனுப்புவது வழக்கமா?

சாட்சி:—ஆம். காரைக்குடியிலிருந்து எதிரி வெளியே போனால் அவர் அங்கிருந்து வியாசம் எழுதி அனுப்புவது வழக்கம்.

பின்னர் மாஜிஸ்டிரேட்டு கேட்ட கேள்விக்கு க அ-கக-உ௫ லிருந்து கஎ-கஉ-உ௫ வரையில் எதிரி காரைக்குடியில் இல்லை என சாட்சி பதிலிறுத்தார்.

பின்னர் மாஜிஸ்டிரேட்டு இருதரப்பு வக்கீல்களையும் கலந்துகொண்டு ஆகஸ்டு மாதம் ௩௦வ திங்கட்கிழமை, இராமநாதபுரத்தில் இவ்வழக்கு மீண்டும் விசாரிக்கப்படுமெனத் தெரிவித்தார். பின்னர் மாஜிஸ்டிரேட், பாரிஸ்டர் ஜோசப்பை விளித்து பாக்கி சாட்சிகள் எல்லோரையுமே மீண்டும் குறுக்கு விசாரணை செய்ய விரும்புகிறீர்களா என்று கேட்டார். அதற்கு ஸி. சுந்தரமய்யரை குறுக்கு விசாரணை செய்ய விரும்பவில்லை. மாணிக்கவாசகம் பிள்ளையும், மெ. செ. ச. சிதம்பரம்செட்டியாரும் மீண்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவேண்டும் என்று ஜோசப் கூறினார். பின்னர் மாஜிஸ்டிரேட் டி. ஸி. யை விளித்து ஆகஸ்டு-மீ ௩௦வ யன்று மேற்கண்ட இருவரையும் ஆஜர்படுத்த நீங்கள் பொறுப்பு எடுத்துக்கொள்ளுகிறீர்களா எனக் கேட்டதற்கு டி. ஸி. வாதியைக் கலந்துகொண்டு தாம் குறித்தபடி ஆஜர்படுத்த முடியுமென்று சொல்லிய

துடன் மெ. செ. ச. சிதம்பரம்செட்டியாருக்கு, குற்றா லத்திற்கு அட்ரஸ் தருவதாயும் கோர்ட்டிலிருந்து அவருக்கு ஒரு தந்திச் சொல்லப்பட வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார். அதற்கு மாஜிஸ்டிரேட்டு தந்தி அடிக்கப்படவேண்டியது அவசியமென்று சொன்னார். இத்துடன் இவ்வழக்கு முடிந்ததும் கோர்ட்டில் குழுமியிருந்த ஒரு பெருங்கூட்டம் கலைய ஆரம்பித்தது. இதனால் இவ்வழக்கின் நடவடிக்கையைக் கவனிக்க ஏராளமானவர்கள் அக்கறை கொண்டிருக்கிறார்களெனத்தெரிகிறது.

வாதியின் எ-வது சாட்சி ராஜாமணியிடம் க-கஉ-ககூஉறில் வெளி வந்ததாகக் காட்டப்பட்டு கேள்வி கேட்கப்பட்ட வியாசம் வருமாறு:—

இவர்களால் யாது பயன் ?

இராமநாதபுரம் ஜில்லா ஸ்தலஸ்தாபன சபையின் கூட்டம் இம்மதி ரு-ம் நாள் மதுரையில் கூடியது. அது காலே சேர்ந்தாற்போல் மூன்று மாதம் கூட்டங்கட்கு வாராத எண்மர் அக்காரணம்பற்றி அங்கத்தினர் பதவிகளை இழந்துவிட்டனரெனும் தலைவரது குறிப்புப் படிக்கப்பட்டது. இவ களில் சிலர் அரசாங்கத்தாரால் நியமனம் செய்யப்பட்டவர்கள். ஏனையோர் பொதுஜனப் பிரதிநிதிகள் என்ற முறையில் ஸ்தானம் பெற்றவர்கள். நியமனம் செய்யப்பட்டவர்களைப் பற்றி நாம் ஏதும் கூற விரும்பவில்லை. பொது ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தவர்கள் கூட்டங்கட்குச் செல்லாது வாளா விருந்து விடுவார்களாயின் பொது ஜனங்களின் நலவுரிமைகள் எவ்வாறு பாதுகாக்

கப்படும்? கூட்டங்கட்குச் செல்வதற்குங் கூட அவ காசமில்லாதவர்கள் அபேட்சகர்களாக முன்வாராதிரு க்கவேண்டும். பொது ஜனங்களும் அவகாச மில்லாத வர்களைத் தேர்ந்தெடுக்கலாகாது. ஒன்றிரண்டு கூட்ட ங்கட்கு போகமுடியாமலிருக்கக் கூடியவாறு சிற்சில சமயங்களில் அசந்தர்ப்பம் எற்படுவது இயற்கையே. சேர்ந்தாற்போல் மூன்று மாதங்கள் போகாமலிருப்ப தற்கு இவர்கள் எவ்வித காரணங் கூறமுடியும்? இவ் வாறு செல்லாதவர்களுள் நம் நகர் ஆவி. பழ. சிதம்ப ரம்செட்டியாரும் ஒருவர் என்பதைப் பொது ஜனங் கள் கவனித்தல் அவசியம். இவரும் இவர் போன்ற ரும் சபைகட்குச் சென்றுவிட்டாலும் பேசுவது என்ற கெட்ட வழக்கம் இவர்களிடம் கிடையாது. அதிகாரி கட்குச் சார்பாக ஒட்டுக் கொடுக்கமட்டும் தயாராக யாவருக்கும் முன்னதாக எழுந்து விடுவார்கள். நாற் காலிகளை அலங்கரித்து அரசாங்கத்தார்களிடம் நல்ல பிள்ளைகள் என்ற பெயர் வாங்கக்கூடியவாறு நடந்து கொள்ளுவதே இவர்களது வேலை. கூட்டங்கட்குச் செல்ல வசதி யில்லாதவர்களுங்கூட எப்படியோ கமி ட்டிகளிலும் ஸ்தானம் பெற்று விடுகின்றனர். இது நகைப்பிற்கிடமாதும். பொதுக் கூட்டங்கட்கே வர வியலாதவர்கள் கமிட்டிக் கூட்டங்கட்கு எவ்வாறு வரப்போகின்றனர்? ஸ்தானம் பெறும்வரை பொது ஜனங்களிடம் தாங்கள் அங்கு சென்று ஏதேதோ செய்யப்போவதாகக் கூறுவது இவர்கள் வழக்கம். பின்னர் வாய் மூடி மௌனிகாளாக நாற்காலிகளில் அமர்ந்திருப்பார்கள். ஸ்தலஸ்தாபனங்களில் அங்கம்

பெறுவதைக் கௌரவப் பட்டங்களும் பதவிகளும் பெறுவதற்கு ஓர் சாதனமாக வைத்துக்கொண்டிருப்பவர்கள் பொது ஜன நலனை எவ்வாறு கவனிக்கப் போகின்றனர்? பொது ஜனங்களை ஏமாற்றி வந்த காலம் மலையேறிப் போய்விட்டதென்பதையும் இனியும் இவ்வாறு காலங்கழிக்க வியலாதென்பதையும் அறிந்து தக்கபடி நடந்துகொள்ள இவர்கள் முற்படவேண்டும்.

வாதியின் நாலாவது சாட்சியும் ஆறுவது சாட்சியும் ஆகஸ்ட்-மீ க அ-ம் நாள் மீண்டும் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

குறித்தவாறு வாதியின் நாலாவது சாட்சியான ராவ்சாகிப் மாணிக்கவாசகம் பிள்ளை வரவில்லை. அவருக்கு மதுரை அடிஷனல் செஷன்ஸ் கோர்ட்டில் ஒரு தப்புக் கையெழுத்துக் கேஸ் விஷயமாய் ஆஜராகி இருக்கும்படி நேர்ந்ததென வாதி தரப்பில் சொல்லப்பட்டது. வாதியின் ஆறுவது சாட்சியான திரு. மெ. செ.ச. சிதம்பரஞ் செட்டியார் வந்திருந்தார். வாதி தரப்பு வக்கீல்களில் திருவாளர்களான, சோமசுந்திரம் ஐயர், கிருஷ்ணசாமி ஐயங்கார் ஆகிய இருவரும் ஆஜராகி இருந்தனர்.

எதிரி தரப்பில் எதிரி தம் நண்பர்களுடன் வந்திருந்தார். எதிரி வக்கீல் திரு. ஜார்ஜ் ஜோசப் போட்மெயிலில் வந்தார். போட்மெயில் ஒரு மணி நேரம் தாமதமாக வந்தபடியால் சுமார் மூன்று மணிக்கே திரு. ஜோசப் கோர்ட்டுக்கு வர முடிந்தது.

சுமார் 3—30 மணிக்கு இவ்வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. திரு. மெ. செ. ச. சிதம்பரஞ் செட்டியார் கூட்டில் ஏற்றப்பட்டார்.

குறுக்கு விசாரணை.

ஜோசப்:—நாட்டுக்கோட்டை செட்டியார்களுக்கு குருஸ்தான மெது?

சாட்சி:—பாதரக்குடி மடம்.

ஜோசப்:—உங்கள் ஊரில் காரைச்சிவனடியார் திருக்கூட்டம் என ஒரு அமைப்பு இருக்கிறதா?

சாட்சி:—ஆமா, அப்படி ஓர் சங்கமிருக்கிறது.

ஜோசப்:—அத்திருக்கூட்டத்திற்கு முத்த. வெ. சொக்கலிங்கஞ்செட்டியார் காரியதரிசியா?

சாட்சி:—அதற்கு காரியதரிசியாரென்று எனக்குத் தெரியாது.

ஜோசப:—சிருங்ககிரி சங்காரச்சாரியார் உங்களூருக்கு வந்திருந்தபொழுது பல்லக்கோடும் பாதரக்ஷையோடும் நகரச் சிவன்கோவிலுக்குள் போகக் கூடாதென ஓர் கிளர்ச்சி இருந்ததா?

சாட்சி:—ஆமா.

ஜோசப்:—திருக்கூட்டத்திலிருந்து சங்காரச்சாரியருக்கு பல்லக்கோடும் பாதரக்ஷையோடும் நகரச் சிவன்கோவிலுக்குள் பிரவேசிக்கக் கூடாதென ஒரு நோட்டீசு சார்வு செய்யப்பட்டதா?

சாட்சி:—சங்காராச்சாரியார் பேரில் அப்படியொரு நோட்டீசு சார்வு செய்யப்பட்டதாக நான் கேள்விப்பட்டேன்.

ஜோசப்:—சங்கராச்சாரியர் நகரச் சிவன் கோவிலுக்குள் போனரா?

சாட்சி:—போகவில்லை.

ஜோசப்:—சங்கராச்சாரியரை வரவேற்ற கூட்டத்தில் நீர் ஒரு உறுப்பினரு?

சாட்சி:—இல்லை.

ஜோசப்:—அவரை வரவேற்பதற்கு நீர் சாதகமாயிருந்தீரல்லவா?

சாட்சி:—ஆமா.

ஜோசப்:—சங்கராச்சாரியர் கோவிலுக்குள் போக வேண்டுமென முதலில் ஏற்பாடு செய்யப்பெற்றிருந்ததா?

சாட்சி:—ஆம்.

ஜோசப்:—குமரன் பத்திரிகையில் சங்கராச்சாரியரைப் பற்றி பிரசுரிக்கப்பட்டிருக்கிறதா?

சாட்சி:—குமரன் பத்திரிகையில் சங்கராச்சாரிரைப் பற்றி வெளிவந்த வியாசங்களை நான் வாசிக்கவில்லை.

மாஜிஸ்ட்ரேட்:—இக்கேள்வி அவசியமா?

ஜோசப்:—காரைக்குடி ரீடிங் ரூமுக்கு தலைவராக இருக்கும் இவர் தாவா வியாசத்தை மாத்திரம் படிக்கவும் மற்ற ஒரு உள்ளூர் பத்திரிகையில் அதிலும் சங்கராச்சாரியர் அபிமானியாகிய இவர் சங்கராச்சாரியரின் கொள்கைக்கு விரோதமாக வெளிவந்துள்ளவைகளைப் படித்திருக்கவேணுமல்லவா?

மாஜிஸ்டிரேட்:—அதை குமரனில் இருப்பதாக நிரூபிக்கவில்லையே.

ஜோசப்:—இதோ நிரூபிக்கிறேன் எனச் சொல்லி குமரன் பத்திரிகை பயிலே சாட்சியிடம் கொடுத்து சில கேள்விகள் கேட்க ஆரம்பித்தார்.

மாஜிஸ்டிரேட்:—இது போன்ற கேள்விகள் அனாவசியமெனத் தீர்மானித்தார்.

ஜோசப்:—நான் இது பற்றியே சில கேள்விகள் கேட்கவிருந்தேன். ஆனால் மாஜிஸ்டிரேட் அனுமதிக்கவில்லை எனச் சொல்லிவிட்டு தாம் கேள்வி கேட்காது ஆசனத்தில் அமர்ந்துவிட்டார்.

பின்னர் மேஜிஸ்டிரேட் வாதி வக்கீல் சோமசுந்தர ஐயரைப் பார்த்து புனர் விசாரணை செய்யும்படி சொன்னார். புனர் விசாரணை எதும் கேட்கப்போவதில்லை என சோமசுந்தர ஐயர் கூறினார். பின்னர் வாதிதரப்பு நாலாவது சாட்சியான திரு. மாணிக்கவாசகம் பிள்ளையை மீண்டும் எதிரி தரப்பார் குறுக்கு விசாரணை செய்ய ஆகஸ்ட்-மீ இருபத்தாராம் நாள் சனியன்று காலை ௧௦-௩௦ மணிக்கு பரமக்குடியில் இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படுமென மேஜிஸ்டிரேட் அறிவித்தார்.

இன்றும் இவ்வழக்கின் நடவடிக்கைகளைக் கவனிக்கப் பலர் கூடி இருந்தனர்.

முன்னர்க் குறிப்பிட்டிருந்தபடி ஆகஸ்ட்-மீ உசுவ காலை ௧௦-சரு-க்கு வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

வாதிக்காக வக்கீல்களான கிருஷ்ணசாமி ஐயங்காரும் சோமசுந்தரய்யரும் ஆஜராகியிருந்தனர்.

எதிரி அவர்தம் நண்பர்களுடன் வந்திருந்தார். எதிரிக்காக பாரிஸ்ட்டர் ஜோசப் ஆஜராகியிருந்தார்.

மீண்டும் குறுக்கு விசாரணை.

வாதியின் நாலாவது சாட்சி மாணிக்கவாசகம் பிள்ளை (ஜில்லா போர்டு உப தலைவர்) விசாரிக்கப்பட்டார்.

ஜோசப்:—உங்களுக்கு எஸ். எம். நாராயணய்யங்காரைத் தெரியுமா? அவர் ஜில்லா போர்டுக்கு அங்கத்தினராக இருந்தாரா?

சாட்சி:—எனக்கு அவரைத் தெரியும். அவர் இருந்தார்.

ஜோசப்:—எப்பொழுது போன தேர்தல் நடந்தது?

சாட்சி:—எனக்கு ஞாபகமில்லை. போன தேர்தல் வரையில் எஸ். எம். நாராயணய்யங்கார் அங்கத்தினராக இருந்தார்.

ஜோசப்:—அவரைத் தாங்கள் ஒன்றும் கவனியாமல், எதிர்ப்பதற்காகவே எதிற்கும் அங்கத்தினர் என்று நினைக்கிறீரா?

(இந்த சமயத்தில் மிஸ்டர் ஜோசப் சில குறிப்புக்களில் மாணிக்கவாசகம்பிள்ளை சில அங்கத்தினர் ஒன்றும் கவனியாமல் எதிர்க்கிறார்களென்று சொல்லியிருந்ததை வாசித்துக் காண்பித்தார்.)

சாட்சி:—அந்தக் குறிப்பில் கண்ட அங்கத்தினர்களில் இவரை நான் சேர்க்க யோசிப்பேனே யொழிய வேறில்லை.

ஜோசப்:—நீர் நிச்சயமாய் சொல்லுவீரா?

சாட்சி:—நான் சொல்லமாட்டேன்.

ஜோசப் :—ஸ்ரீமான் எஸ். நாகலிங்கம்பிள்ளையை தாங்கள் எதிர்ப்பவர் என்று சொல்வீரா ?

சாட்சி :—நான் அப்படிச் சேர்க்கமாட்டேன். தாங்கள் என்னை ஒவ்வொருவரையும் பற்றிக் கேட்பது சரியல்ல.

மாஜிஸ்ட்ரேட் :—இது பொதுஜன விஷயம். ஆகையால் தாங்கள் அவர்கள் கூட்டத்தில் எப்படி நடந்துகொண்டார்கள் என்பதைச் சொல்லலாம். அதனால் ஒன்றும் இல்லை.

ஜோசப் :—ஸ்ரீமான் எஸ். எம். நாராயணய்யங்கார் எதிர்ப்பவரா ?

சாட்சி :—அவர் சில சமயம் எதிர்ப்பதற்கு வேண்டி எதிர்ப்பார்.

ஜோசப் :—ஸ்ரீமான் ஆர். வி. ராமசுந்தரம் பிள்ளையும் அப்படியா ?

சாட்சி :—ஆமாம். அவரும் சில சமயங்களில் அப்படியே செய்வார்.

ஜோசப் :—ஸ்ரீமான் அளகிரிசாமி நாயுடு அப்படிப்பட்டவரா ?

சாட்சி:—அடிக்கடி அவர் எதிர்த்து, வீணாகச செய்வதுண்டு.

ஜோசப் :—ஸ்ரீமான் எஸ். எம். நாராயணய்யங்கார் பிரேரேபணைகள் கொண்டுவருவதுண்டா ?

சாட்சி :—சில சமயங்களில் அப்படிச் செய்வதுண்டு.

ஜோசப் :—கேள்விகள் கேட்டு, அவைகள் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றனவா ?

சாட்சி :—அவர் எப்பொழுதாவது ஒரு தடவை கேள்வி கேட்பார்.

ஜோசப் :—அவர் ஒரு தடவை பாதையோரங்களில் மரங்கள் நடுவதைப்பற்றி எழுதின அறிக்கைப்படி தீர்மானிக்கப்பட்டதா ?

சாட்சி :—அவருடைய அறிக்கையை அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டது.

ஜோசப் :—இவைகளிலிருந்து அவர் வாதியைவிட நன்ருய் வேலை செய்தாரென்று தெரியவில்லையா ?

சாட்சி :—இல்லை. நான் அப்படி நினைக்கவில்லை.

ஜோசப் :—நீர் காரைக்குடி யூனியன் போர்டில், வாதி அக்கிராசனுதிபதியாய் இருந்தபொழுது போயிருந்ததாகச் சொல்லியிருக்கிறீர். அவருக்குமுன் அங்கு யூ. போ. தலைவராக திரு. முத்துராமஞ் செட்டியார் இருந்தாரா ?

சாட்சி :—நான் போயிருந்தேன். அவருக்குமுன் யார் அக்கிராசனுதிபதி என்ற தெரியாது. ஸ்ரீமான் கிருஷ்ணமாச்சாரி அப்பொழுது கலெக்டராக விருந்தார். அவரும் எங்களுடன் வந்திருந்தார்.

ஜோசப் :—உமக்கு ஸ்ரீமான் வெங்கட்டராமையரை (பள்ளிக்கூடத்து தலைமை உபாத்தியாயர்) தெரியுமா ?

சாட்சி :—தெரியாது.

ஜோசப் :—அங்கத்தினர்கள் சேர்ந்தாற்போல் கூட்டங்களுக்கு வாராததினுல் தங்களுடைய ஸ்தானம் காலியாகிறது. அப்படி உள்ளவர்களை மறுபடியும் நியமனம் செய்யாமலிருப்பதுண்டா ?

சாட்சி :—அக்கிராசனாதிபதி ஒரு கடிதம் எழுதி அனுப்புவார். அதற்கு அவர்கள் கொடுக்கும் பதில் சரியாயில்லையென்றால் அவர்களை விலக்கிவிடுவோம். அதே மாதிரி "நாயக்" என்னும் பெயருடையவர் தன்னுடைய ஸ்தானம் காலியானதற்காக காரணம் கேட்டபொழுது சரியான தகவல் கொடுக்காததினால் அவர் நீக்கப்பட்டார்.

ஜோசப் :—அவர் அப்படி தன்னுடைய ஸ்தானத்தை காலி செய்தது, ஒரு தடவையா, அல்லது இரண்டு தடவையா ?

சாட்சி :—எனக்கு ஞாபகமில்லை.

ஜோசப் :—வாட்சன் ரெஸ்ட்டோர் பண்ணும்போது ஒரு ஸ்பெஷல் மீட்டிங்கும் சாதாரண மீட்டிங்கும் நடந்ததா ?

சாட்சி :—ஆம்.

ஜோசப் :—அந்த தேதியில் சாதாரண மீட்டிங்கில் முதல் அயிட்டத்தில் (Restored before special Meeting) ஸ்பெஷல் மீட்டிங்குக்கு முன்னால் ரெஸ்ட்டோர் பண்ணப்பட்டது என குறிப்பிட்டிருக்கிறதா ?

சாட்சி :—ஆமாம்.

ஜோசப் :—வாதியை ரெஸ்ட்டோர் பண்ணும்போது இப்படி ஸ்பெஷல் அயிட்டம் போடவில்லையே ?

சாட்சி :—இல்லை.

ஜோசப் :—உமக்கு ஊழியன் கம்பெனி லிமிடெட் மானேஜர் ஸ்ரீமான் அருணாசலம் செட்டியாரைத் தெரியுமா ? என்று கேட்டு அவர் ஜில்லா போர்டு

கூட்டத்தில் நடந்த விஷயங்கள் எழுதி இருக்கும் புத்தகங்களைப் பார்க்கவேண்டுமென்று எழுதி இருந்தும் அதற்கு அனுமதி, சாட்சியும் அக்கிரா சனுதிபதியும் கொடுக்கவில்லை என்பதை மாத்திரம் எடுத்துக் காட்டினுர். அதற்கு, மாஜிஸ்டிரேட் அதைப்பற்றி கேள்வி கேட்பது இந்த வழக்குக் குச் சம்மந்தம் இல்லையென்றும் கேட்க்க் கூடா தென்று சொல்லிவிட்டார்.

ஜோசப் :—பணகால் ராஜா வந்திருந்தபோது வாதி யாக வந்தாரா? அல்லது ஜில்லா போர்டு தலைவர் அவரை வரும்படி கேட்டாரா?

சாட்சி :—ஜில்லா போர்டு தலைவர் அழைத்ததின்மீது தான் வாதி வந்தார்.

ஜோசப் :—வாதி அங்கு வந்து என்ன செய்தார்?

சாட்சி :—தொழில்வரி பற்றிப் பேசினுர்.

ஜோசப் :—வாதி எழுதியிருந்ததைப் படித்தாரா? அல் லது பேசினுரா?

சாட்சி :—எழுதிப் படிக்கவில்லை. வாயினுல் பேசினுர்.

ஜோசப் :—அவர் எவ்வளவு நேரம் பேசினுர்?

சாட்சி :—பத்து நிமிஷம் பேசினுர்.

ஜோசப் :—இன்னும் யாராவது பேசினுர்களா?

சாட்சி :—ஒருவரும் பேசினதாக எனக்குத் தெரிய வில்லை.

பிறகு சாட்சி விசாரணை முடிந்தது.

டிவிஷனல் ஆபீஸர் வாதி வந்திருக்கிருரா என்று கேட்டார். அவர் வக்கீல், அவர் வரவில்லை என்றும்,

ஏதோ சொந்தக்காரர் ஒருவர் நேற்று இராத்திரித் தான் இறந்துவிட்டார் என்றும் சொன்னார்.

ஜோசப்:—அவர் பல வாய்தாக்கள் வாராமலிருந்திருக்கிறார்.

அதற்கு மாஜிஸ்ட்ரேட், அப்படிவாராததை அவர் தெரியப்படுத்தி அனுமதிபெறாமல் இருக்கிறது தப்பிதமென்று சொன்னார் மேலும் நான் உங்களை கௌரவமாய் நடத்த வேண்டுமென்றால் நீங்களும் கௌரவமாய் நடந்து கொள்ளவேண்டும். என்னுடைய சக்தியைக் காட்டமுடியும். ஆகையால் அவர் வாராதிருந்தது தப்பிதம் என்றார்.

மாஜிஸ்டிரேட்:—பிறகு பிரதிவாதி ஸ்ரீமான் சொக்கலிங்கம் செட்டியாரைக் கூப்பிட்டு வாக்குமூலம் (Statement) எப்பொழுது தாக்கல் செய்கிறீரென்றும், இன்னும் ஏதாவது சொல்லவேண்டி இருக்கிறதா என்றும் கேட்டார். அவர் ஒன்றும் இப்போது சொல்லவேண்டியதில்லை யென்றும், இன்னும் சாட்சிகளின் நகல் கிடைக்கவில்லை யென்றும், அது கிடைத்தவுடன் (வாக்குமூலம்) கொடுப்பதாகவும் சொன்னார்.

பிறகு வழக்கு அக்டோபர் மாதம் எ-ந் தேதிக்கு போடப்பட்டது. டிபன்ஸ் தரப்பு சாட்சிப் பட்டியல் கஎ—கூ—௨கூ-ந் தேதியிலாவது அல்லது அதற்கு முன்பாகவாவது தாக்கல் செய்துவிட வேண்டுமென மாஜிஸ்டிரேட் கூறினார்.

எதிர்தரப்பு சாட்சிப் பட்டியல் வருமாறு:—

க. க. வெ. சித. வெங்கிடாசலஞ் செட்டியார், காரைக்குடி... கானாடுகாத்தான்.

உ. வி. என். ரெங்கசாமி அய்யங்காரவர்கள், ஆசிரியர், சுதேசமித்திரன்... சுகோதயம், ஆரணி.

ங. டாக்டர் பி. வரதராஜலு நாயுடுகார், ஆசிரியர், தமிழ்நாடு, சேலம்.

ச. திரு. வி. கல்யாணசுந்தர முதலியார், ஆசிரியர், நவசக்தி, சென்னை.

ரு. அரு. காளிராஜா அவர்கள், தேவகோட்டை ஜெமீன்தாரவர்கள் குமாரர், ஜில்லா போர்டு அங்கத்தினர், தேவகோட்டை.

சு. தி. அ. சு. அ. இராமனாதன் செட்டியாரவர்கள், ஆனரரி மாஜிஸ்டிரேட், தேவகோட்டை.

எ. வெ. அழ. அழகப்ப செட்டியாரவர்கள், மாந்தோப்பு, தேவகோட்டை.

அ. பி. எஸ். குமாரசாமி ராஜா அவர்கள், ஜில்லா போர்டு அங்கத்தினர், ராஜபாளையம்.

கூ. முத்து. க. மா மு. சோமசுந்தரம் செட்டியாரவர்கள், தேவகோட்டை.

கO. ஸ்ரீநிவாசாச்சாரியாரவர்கள், ஜில்லாபோர்டு அங்கத்தினர், ஸ்ரீவில்லிபுத்தூர்.

கக. முரு. பழ. அண்ணாமலைச் செட்டியாரவர்கள், தாலூகா போர்டு அங்கத்தினர், நெய்க்குப்பை.

கஉ. கே. நாராயணசாமி நாயுடுகாரு, மாஜி ஜில்லாபோர்டு அங்கத்தினர், குண்டுருட்டிப்பட்டி.

௧௩. இராமனுஜ ஐய்யரவர்கள், தாலூகாபோர்டு அங்கத்தினர், தொண்டி.

௧௪. ஸ்ரீநிவாசப்பெருமாள் ரெட்டியாரவர்கள், ஜில்லாபோர்டு அங்கத்தினர், மெட்டுக்குண்டு.

௧௫. எம். ஆர். பி. செய்யத்மகமத் சாகிப்பவர்கள், யூனியன்போர்டு தலைவர், ஜில்லாபோர்டு அங்கத்தினர், தொண்டி.

௧௬. கே. அழகரிசாமி நாயுடுகார், மாஜி ஜில்லா போர்டு அங்கத்தினர், கோயில்பட்டி.

௧௭. என். எஸ். வெங்கிட்டராமய்யர், எம். ஏ. எல். டி. காரைக்குடி யூனியன்போர்டு தலைவரின் பிரதிநிதி. (சில ரிக்கார்டுகளுடன்.)

இவ்வழக்கு மீண்டும் அக்டோபர்-மீ ௬-உ விசாரணைக்கு வந்தது.

மேற்படி வழக்கிற்கு சாட்சிகளாக அழைக்கப்பட்டிருந்த சென்னை "நவசக்தி" ஆசிரியர் திரு. வி. கலியாணசுந்தர முதலியார், ஆரணி "சுதேசாதயம்" ஆசிரியர் ஸ்ரீமான் வி. என். ரங்கஸ்வாமி அய்யங்கார் முதலியோரும் ஆஜராகியிருந்தனர்.

முதல்நாள் நடந்த விவரம்.

இவ்வழக்கு ௬ழாம் தேதி விசாரிக்கப்பட்டபொழுது எதிரிதரப்பில் ஆஜராகியிருந்த மதுரை பாரிஸ்டர் திரு. ஜியார்ஜ் ஜோசப் அவர்கள் எதிரியின் சார்பாக ஒரு ஸ்டேட்மெண்டு கோர்ட்டில் தாக்கல்செய்து கொண்டார்.

அது வருமாறு:—

"௧. வாதியின் பிராது காரணம் இல்லாததாக வும் பொருள் இல்லாததாகவும் இருக்கிறது; ஒருவிதத் தவறான உணர்ச்சி வேண்டும், வாதங்களையும் சர்ச்சை களையும் அடிப்படையாகக்கொண்ட பொதுஜனஊழிய வாழ்க்கையின் நிலைமைகளையும் சம்பிரதாயங்களையும் அறிந்துகொள்ளாமலும் இந்தப்பிராது செய்யப்பட் டிருக்கிறது.

"௨. குறித்த விஷயம் பிரசுரமாயிருக்குங்காலத் தில் (௧௯௨௫-ம் ஆண்டு, டிசம்பர் மீ ௧-ந் தேதி) எதிரி காரைக்குடியிலில்லை; அதன் பிறகு இரண்டு வாரத் திற்கு மேலான பிறகுதான் காரைக்குடிக்கு வந்தார். சிறப்பாக, எந்தக்காலத்திலும் ஊழியனை எதிரி பொ றுத்துப் பார்த்துவரவில்லை. வாதி பக்கத்திய எழாவது சாட்சியின் சாட்சியத்திலிருந்து, உதவி ஆசிரியர் கிருஷ்ணய்யரிடம் பத்திரிகையின் பொறுப்பு இருந்து வந்ததென்பது தெளிவாகின்றது. ஆகவே, பிரஸ்தாபக் கட்டுரையில் கண்டிருக்கிற விஷயத்திற்கு இந்த எதிரி குற்றவாளியாகமாட்டார்.

"௩. எதிரி வாதியுடன் ஒருபொழுதும் நெருங் கிப்பழகியதில்லை; சொந்த ஹோதாவில் வருத்தமே னும் விரோதமேனும் உண்டாக யாதும் சந்தர்ப்ப மில்லை. ஊழியனில் வெளியான ஒரு விஷயம் சம்பந்த மாகத் தாம் எதிரியைக் கண்டித்ததாக வாதி கூறும் கதை உண்மையல்ல

"௪. குறித்த விஷய சம்பந்தமாக வாதிக்கு ஏதேனும் வருத்தமேற்பட்டிருந்து தக்க காரணம்

காட்டிப் பதில் நிருபம் ஒன்று ஊழியனுக்கு அனுப்பி யிருந்தால், அச்சமயம் பத்திரிகையைப் பொறுத்துப் பார்த்துவந்த கிருஷ்ணய்யரே, ஊழியன் பத்திரிகை யின் கொள்கைகளின்படி, அத்தகைய பதிலேயும் பிர சுரித்திருப்பார். எதனுலாவது அதைப்பற்றி, வாதியின் அந்தஸ்தைக் கருதி, அவருக்கு ஏதேனும் சந்தேகங் கள் ஏற்பட்டிருந்தால் எதிரி காரைக்குடிக்கு வரும் வரை, வாதியின் கடிதத்தை அப்படியே வைத்திருந் திருப்பார்; எதிரி எவ்விதத் தயக்குதலுமின்றி அதை வெளியிட்டிருந்திருப்பார். இம்முறைதான் வழக்கமா னது. (இப்படி நடந்திருந்தால்) பொதுஜன ஊழியத்தி லுள்ளவர்களுக்கும் பத்திரிகைகளுக்கும் உள்ள சம்பந் தங்களுக்கு அது முற்றிலும் பொருத்தமானதாயிருந் திருக்கும். வாதி அவ்விதம் செய்யத் தவறியதால்தான் இந்த வழக்குத் தோன்றியுளது என்று எதிரி நம்பு கிறார்.

"ரு. பிராதில் கண்டுள்ள விஷயமானது, ககூஉரு-ம் ஆண்டு நவம்பர்மீ உo-ந் தேதி ராமனாத புரம் ஜில்லாபோர்டு கூடியகூட்டத்தின் நிகழ்ச்சிகளின் பொதுஜன நலன் சம்பந்தப்பட்ட விஷயங்களின்மீது செய்யப்பட்ட நியாயமான மதிப்புரையே ஆகும். அதில் துவேஷம் எதுவும் இல்லை; சந்தர்ப்பத்தின் தெ ளிவான தேவைக்கு மேற்பட்ட வியாக்கியானமெது வும் அதில் இல்லை.

"சு. குறித்த விஷயத்தில் வாதி சிறப்பாய்ச் சுட்டிக்காட்டியுள்ள பகுதிகள் வாதியைக் குறித்தவை யே அல்ல. அந்த விஷயம் இயற்கையாக இரு பாகங்

கள் கொண்டதாகும். ஜில்லாபோர்டின் கூட்டங்களுக்கு மூன்று மாதம் ஆஜராகமலிருந்ததால் தங்கள் ஸ்தானங்களை இழந்தவர்களுக்கு அங்கப் பதவியைத் திருப்பி அளித்ததைப்பற்றி முதல் பகுதி விவகரிக்கிறது. அந்த நிகழ்ச்சியைப்பற்றிக் காரணத்தோடு விரிவாக எழுதுங்காலையில், வாதியின் பெயர், தங்கள் ஸ்தானங்களை இழந்தவர்களில் ஒருவராகக் குறிப்பிடப் பட்டிருக்கிறது. இந்தப்பகுதி "நமது நகரிலுள்ள ஆ. வி. பழ. சிதம்பரம் செட்டியார் அவ்விதம் ஆஜராகமலிருந்தவர்களுள் ஒருவர் என்பதைப் பொதுஜனங்கள் கவனிக்கவேண்டியது அவசியமாகும்" என்ற சொற்றொடருடன் முடிவுபெறுகின்றது. பிறகு விஷயத்தின் இரண்டாம்பகுதி துவங்குகின்றது. இந்த நிகழ்ச்சியினின்றும் தோன்றிய பொதுஜன கருத்துக்கள் அதில் அடங்கியுள்ளன. அவற்றில் வாக்காளர்களும் அபேட்சகர்களும் பொதுஜன சம்பந்தமான விஷயங்களில் நடந்துகொள்ளவேண்டிய முறையைப்பற்றி அவர்களுக்கு ஒரு வேண்டுகோளும் அடங்கியிருக்கின்றது. அதிகாரிகளை எதிர்த்தாவது அல்லது அதிகமாய்ப் பேசியாவது அவர்களைத் திகைக்கச்செய்ய இஷ்டமின்றி அவர்களுடன் ஒத்துழைக்கும் பட்டாதாரிகளான ஒருவகைப் பொதுஜன ஊழியரைப்பற்றிய குறிப்பாகும் அது. குறித்த விஷயத்தை எழுதியவர் அத்தகைய பொதுஜன ஊழியர்களிடம் அதிருப்தி கொண்டவர் என்பது வெளிப்படையாயிருக்கிறது; ஆகவே குத்துதலாகவும், நகைச்சுவையிலும் அவர் எழுதியிருக்கிறார். ஆனால் அதை நடுநிலைமையுடன்,

முற்றும் ஒரே விஷயமாகப் படித்தால், இரண்டாம் பகுதி வாதியைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை; ஆனால் ஒரு வகுப்பாரைப் பற்றியே சொல்லுகிறது. குறித்த விஷயம் அவதூறாகக் கருதப்பட்ட போதிலும் வழக்குத் தொடர வாதிக்கு உரிமையில்லை.

எ. பிராதில் குறிப்பிடப்பட்டிருப்பனவும் பிராஸிகியூஷன் தரப்பாரால் சாட்சியங்களாக (எக்ஸிபிட்ஸ்) குறிப்பிடப்பட்டிருப்பனவுமான பகுதிகள், பொது ஜனங்களிடை நடைபெறும் பத்திரிகைகளின் விசேஷ அர்த்தத்தில் வழங்கிவரும் மரபுச் சொற்களையும் வழக்கச் சொற்களையுமே முக்கியமாகக்கொண்டிருக்கின்றன. உபயோகிக்கப்பெற்ற வார்த்தைகளை எடுத்துக்கொண்டு, அப்படியே சொல்லுக்குச் சொல் அப்பகுதிகளுக்குப் பொருள் கொள்ளலாகாது. வளர்ந்துவரும் எந்த மொழியிலும் அத்தகைய வார்த்தைகளும் பதத்தொடர்களும் சாதாரணமாயிருக்கின்றன.

(அ) 'வாய்மூடி மௌனிகள்' என்ற பதத்தொடர், சொல்லுக்குச் சொல் அர்த்தங்கொண்டால், 'பேசமுடியாத ஊமைகள்' என்றாகும். ஆனால் ஜனசபைகளின் உறுப்பினர்களைப்பற்றிக் குறிப்பிடும்பொழுது அவற்றை உபயோகித்தால் "வாதங்களில் விசேஷமான பங்கு எடுத்துக்கொள்ளாதவர்கள்" என்றே பொருளாகும். ஆங்கிலத்தில் கூட "காமன்ஸ் சபையின் மௌன உறுப்பினர்" என்ற பதத்தொடர் உள்ளது. அதன் பொருள் பேசும் உறுப்பில்லாத அங்கத்தினர் என்பதன்று; ஆனால் வாதங்களில் முக்கி

யப்பங்கு எடுத்துக் கொள்ளாதவர் என்பதே அதன் பொருள். செயலிலும் ஆலோசனையிலும் திறமை கொண்ட ஒரு அங்கத்தினருக்கு அவ்வார்த்தை பொருந்தும். 'தமிழ் சுயராஜ்யா' (௨அ—அ—௨௫) வெளிவந்த பத்திரிகையில் இதை ஒத்த குறிப்பொன்றை உதாரணமாகக் காட்டலாம்:— "சபையில் மௌனம் சாதிக்கும் அங்கத்தினர் சிலர் இருக்கின்றனர். அதில் பள்ளத்தூர் முருகப்பசெட்டியார் ஒருவர்."

(ஆ) "பேசுவதென்ற கெட்டவழக்கம்" இவ்வார்த்தைகளுக்குச் சொல்லுக்குச்சொல் பொருள் கொண்டால், பேச்சே கெட்டவழக்கம் என்று பொருள் கொள்ளலாம். ஆனால் பொது ஜனசபையொன்றைப் பற்றிப் பேசும்பொழுது இவற்றை உபயோகித்தால், பேச்சு கெட்டவழக்கம் அல்லது என்று மாத்திரமல்ல, அது ஒரு முக்கியத்தகுதி என்றுமாகும்; வாதங்களைக்கொண்டு நடைபெறும் நிர்வாகம் அது இன்றி நடக்க முடியாது. இப்பதத் தொடர் ஆங்கிலத்திலுள்ள 'பேசுவதென்ற கெட்ட வழக்கம்' என்ற பதத்தொடரின் மொழி பெயர்ப்பாகும். ஆங்கிலத்திற் போலவே, நாவைக்கட்டுப் படுத்தாமல், அதிகப்பேச்சுப் பேசுவதில் நம்பிக்கையில்லாத செயல் திறன் படைத்த, வலிமைகொண்ட, மௌனமான மனிதர்களை அது குறிப்பதாகும். தற்காலத்தமிழ் எழுத்தில் இப்பதத்தொடர் அடிக்கடி உபயோகிக்கப்படுகின்றது. உதாரணமாக, 'தமிழ் சுயராஜ்யா' ௨அ—அ—௨௫ தினத்திய பத்திரிகையில், ஒரு அங்கத்தினரைப்பற்றி எழுதுகையில், பின்வரும் குறிப்பு காணப்

படுகிறது:—"பேசுவதென்ற கெட்ட வழக்கம் இவரிடம் கிடையாது. இவர் கவர்ன்மெண்டுக்கு ஓட்டுக் கொடுக்கத் தயாராய் எழுந்து நிற்பார்."

(இ) "நாற்காலிகளை அலங்கரித்து அரசாங்கத்தாரிடம் நல்ல பிள்ளை என்ற வாறு நடந்துகொள்வதே இவர்களது வேலை" நாற்காலிகளை அலங்கரித்தலென்பதைச் சொல்லுக்குச் சொல் பொருள் கொண்டால், அது அர்த்தமில்லாததாகும்; ஏனெனில் ஒரு மனிதனை அது உயிரற்ற பொருளுக்குச் சமானமாக்கிவிடுகிறது. ஆனால் தற்கால உபயோகத்தில் அது தரும் பொருளெல்லாம், அத்தகைய மனிதன் விவாதங்களில் முக்கியமாய்த் தலையிடாமல் நாற்காலியிலேயே அமர்ந்திருப்பவர் என்பதே யாகும். 'நல்ல பிள்ளை' என்பதையும் சாதாரணப் பொருளில்தான் கொள்ளவேண்டும்; குற்றம் காண ஆவல்கொண்ட ஒரு மனிதனால் உபயோகிக்கப்பட்டதாகக் கபடமாய் பொருள் கொள்ளலாகாது. இதைப் போன்று 'தமிழ்நாடு' (உ௭-௪-உ௪) பத்திரிகையில் வெளியாயிருக்கிறது:—'மிதவாதிகளுக்கு மகஜர்கள் விண்ணப்பங்கள் முதலியன அனுப்புவதிலும் பேட்டிகள் கண்டு பேசுவதிலும் நம்பிக்கை இருக்கும் வரையும், அதிகாரிகளுக்கு நல்ல பிள்ளைகளாக நடக்கவேண்டுமெனும் எண்ணம் இருக்கும் வரையும், பிரிட்டிஷ் அரசாங்கத்தாரிடமிருந்து எவ்வித உரிமையும் அடைய முடியாதென்பது நிச்சயம்."

"அ. குறிப்பிட்ட விரிவுரைகள் பொதுவானவையே என்றும், ஏற்கனவே வேறு பத்திரிகைகளில் உபயோகிக்கப்பட்டுள்ளவையே என்றும் வாதியைக் குறி

ப்பவையல்ல என்றும், மேலே குறிப்பிட்ட வாக்கியங்கள் தெளிவாய்க் காட்டுகின்றன.

"கூ. குறித்த பகுதிகள் தீர்மானமாக வாதியையே குறிப்பிடுவனவாகவும் எதிரி அதற்குக் குற்றப் பொறுப்பு உள்ளவரென்றும் எந்த முகாந்திரத்தினலாவது கோர்ட்டார் தீர்மானித்தால், அப்பகுதிகள் இயல்பிலேயே அவதூறனவையல்லவென்று எதிரி தெரிவித்துக் கொள்ளுகிறார்.

"கo. மேலும், குறித்த பகுதிகள் இயல்பில் அவதூறனவை என்று கோர்ட்டார் தீர்மானித்தால், குறித்த விஷயம் பொதுஜன நன்மைக்கான ஒரு பதிப்புரை என்றும், அந்த விரிவுரை நேர்மை கொண்டதென்றும். இ. பி. கோ. ௪கூகூ-வது பிரிவின் ௩-௯-வது விலக்குகளின் கீழ்ப் பாதுகாப்புக் கொண்டவை யென்றும் எதிரி தெரிவித்துக்கொள்ளுகிறார்.

"கக. மேலும், குறித்த விஷயத்தில் நிகழ்ச்சிகளைத் தாக்கிய பாகங்கள் இருப்பதாகக் கோர்ட்டார் தீர்மானித்தால், குறித்த விஷயத்தில் கண்ட விஷயங்கள் பொருளில் உண்மையானவை யென்றும் சரியானவை யென்றும் அவற்றை வெளியிட்டது பொது நன்மையை உத்தேசித்தே யாதலால், இ. பி. கோ. ௪கூகூ பிரிவின்படி க-வது விலக்கின்படி காப்புக்கொண்டது என்றும் ஆகும்."

சப்டிவிஷனல் மாஜிஸ்திரேட் மேற்படி ஸ்டேட்மெண்டை முறையே பதிவு செய்துகொண்டபின், மேற்படி ஸ்டேட்மெண்டில் கூறப்பட்டிருந்ததன்

முதல் அங்கத்தைப்படித்தார். அதில், வழக்கில் கூறப்பட்ட பாகம் ஷெ பத்திரிகையில் பிரசுரிக்கப்பெற்ற பொழுது மேற்படி பத்திரிகையாசிரியரும், இவ்வழக்கில் எதிரியுமான திரு. சொக்கலிங்கம் சென்னையிலிருந்ததாகச் சொல்லப்பட்டிருந்தது. இது படிக்கப்பட்டதும் வாதி தரப்பு வக்கீலான ஸ்ரீமான் டி. வி. ஸ்ரீனிவாசய்யங்கார் மேற்படி விஷயத்தை நிரூபிக்க எதிரி தரப்பில் ஏதாவது சாக்ஷியம் இனிமேல் விடப்படுமா வென்று தாம் தெரிந்துகொள்ள விரும்புவதாகவும், இன்னும் மேற்படி ஆசிரியர் சென்னைக்குச் செல்லுங்கால் உதவி ஆசிரியரிடமாவது அல்லது வேறு பொறுப்பான உத்தியோகஸ்தரிடமாவது, தன் பொறுப்பை ஒப்புவித்துவிட்டுச் சென்றதாக நிர்ணயிக்க ஏதாவது சாக்ஷியம் விடப்படுமா என்றும் கேட்டார். அப்பொழுது ஸ்ரீமான் ஜோஸப் எழுந்து இது விஷயத்தை நிரூபிக்க வாதி தரப்பில் விடப்பட்ட ஏழாவது சாக்ஷியின் சாக்ஷியமே போதுமென்றும், இனிமேல் இது விஷயத்திற்கு யாதொரு சாக்ஷியும் தாம் எதிரி தரப்பில் விடப்போவதில்லை யென்றும் சொன்னார்.

பின்பு திரு. ஜோஸப் தாம் தாக்கல் செய்த ஸ்டேட்மெண்டைப் படித்துக் கோர்ட்டாருக்கு அதிலுள்ளவைகளை சுருக்கமாக எடுத்துச் சொன்னார்.

இத்துடன் கோர்ட்டுக் கலைந்தது. மறுநாள் எதிரி தரப்பு சாக்ஷிகள் விசாரிக்கப்பட வேண்டுமெனவும், மேற்படி ஸ்டேட்மெண்டு முறையே இரு தரப்பார்களாலும் வாதிக்கப்பட வேண்டுமென்றும் கோர்ட்டாரால் அப்பொழுது அறிவிக்கப்பட்டது.

இரண்டாம் நாள் நடவடிக்கைகள்.

இரண்டாம் நாள் மீண்டும் விசாரணைக்கு வந்தபொழுது சப் டிவிஷனல் மாஜிஸ்திரேட், எதிரி வக்கீலைப் பார்த்து, எதிரிதரப்பில் விசாரிக்கப்பட வேண்டிய சாக்ஷிகளின் விசாரணை முடிந்தபின் எதிரியின் ஸ்டேட்மெண்டை வாசிப்பது முறையாயிருக்குமென்று அபிப்ராயப்படவே எதிரி தரப்பில் சாக்ஷிவிசாரணை ஆரம்பமாயிற்று.

எதிரி தரப்பில் முதலாவது சாக்ஷியாக தேவகோட்டை

திரு. அழகப்பச்செட்டியார் விசாரிக்கப்பட்டார்.

ஜோசப்:—நீங்கள் வசிப்பது எங்கே?

சாட்சி:—தேவகோட்டையில்.

ஜோசப்:—நீங்கள் எந்தெந்த தமிழ்பத்திரிகை வாசிப்பது?

சாட்சி:—'ஊழியன்,' 'குமரன்,' 'நவசக்தி' முதலியன.

ஜோசப்:—'ஊழியன்' 'குமரன்' எங்கிருந்து பிரசுரிக்கப்படுவது?

சாட்சி:—காரைக்குடியில்.

ஜோசப்:—செட்டிமார் நாட்டில் உலவிவரும் அபிப்பிராயங்களைப்பற்றி எதாவது தங்களுக்குத் தெரியுமா?

சாட்சி:—ஆம். ஆடம்பரமில்லாது வாழ வேண்டுமென்பது ஒரு சாரத்தாருடைய அபிப்பிராயம். மற்றொன்று ஆடம்பரத்துடன் வாழவேண்டுமென்பது.

௧௬.

ஜோசப்—ஆடம்பரமில்லாத வாழ்வு என்றால் என்ன?

சாட்சி:—சமூகம் முதலிய விஷயங்களில் வீண்செலவு செய்யாதிருத்தலே.

ஜோசப்:—'ஊழியன்' பத்திரிகை எந்த அபிப்பிராயத்தை ஆதரிக்கிறது?

(இக்கேள்வியை வாதி வக்கீல் ஆக்ஷேபித்தார்)

சாட்சி:—ஆடம்பரமில்லாத வாழ்வு என்பதையே.

ஜோசப்:—வாதியை உங்களுக்குத் தெரியுமா?

சாட்சி:—ஆம்.

ஜோசப்:—அவர் எந்த அபிப்பிராயத்தை ஆதரிப்பவர்?

சாட்சி:—அவர் ஆடம்பரமாய் வாழவேண்டுமென்ற அபிப்பிராயத்தை ஆதரிப்பவர்.

ஜோசப்:—பொது ஜனங்களுடைய அபிப்பிராயமென்ன?

சாட்சி:—இருதரப்பிலும் அபிப்பிராயப்பட்ட பொது ஜனங்களுண்டு.

ஜோசப்:—அவர்களில் பணக்காரர்களும், பட்டதாரிகளுமிருக்கிறார்களா?

சாட்சி:—இருதரப்பிலும் பணக்காரர்களுண்டு. ஆனால் முதல் கூறப்பட்டவர்களில் பட்டதாரிகள் கிடையாது.

ஜோசப்:—இவ்விஷயங்கள் உங்களுக்கு எவ்வளவு காலமாய்த் தெரியும்?

சாட்சி:—ஐந்து அல்லது ஆறுவருஷங்களாக.

ஜோசப்:—செட்டிமார் நாட்டிலுள்ள பட்டதாரிகளின் பெயர்கள் ஏதாவது தங்களுக்குத் தெரியுமா?

சாட்சி:—எனக்குத் தெரிந்தமட்டில் ஐந்து, ஆறு பெயர்களிருக்கின்றார்கள்.

ஜோசப்:—அவர்களுக்குப் பட்டம் வழங்கப்படு முன்பு அவர்கள் ஸ்தல ஸ்தாபனங்களிலாவது, சட்ட சபைகளிலாவது ஸ்தானங்கள் வஹித்ததுண்டா?

சாட்சி:—நிச்சயமாய்ச் சொல்ல முடியாது.

பின்பு ஸ்ரீமான் ஜோசப் கேட்ட இரண்டொரு கேள்விகளுக்கு, சாக்ஷி கனம் முத்தையா செட்டியார் ராவ்பகதூர் சோமசுந்தரஞ் செட்டியார் முதலியோர் பட்டாதாரிகள் தானென்று தமக் தெரியுமென்றும், ஆனால் அவர்களுக்குப் பட்டங்கள் வழங்கப்படுமுன்பு, ஸ்தலஸ்தாபனங்களிலாவது சட்ட சபைகளிலாவது ஸ்தானங்கள் வஹித்திருந்தார்களா, இல்லையா என்பதைப் பற்றித் தம்மால் நிச்சயமாய்க் கூறமுடியாதென்றும் சொன்னார்.

பின்பு சாக்ஷி வாதிதரப்பு வக்கீலால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார். அப்பொழுது அவர் சொல்லியதாவது:—"தாம் ஆடம்பரம், ஆடம்பரமற்ற வாழ்வு என்று சொல்லியதைப் பற்றி விவரமாய்ச் சொல்லும்படியாக அவ்வளவு படித்தவரல்லவென்றும் தாம் அநேக வருஷங்கள் மலேயநாடுகளில் வசித்திருந்ததாகவும், தாம் செட்டிமார் நாட்டில் ஒரு பொழுதும் பிரசார வேலை செய்ததில்லையென்றும், தாம் எந்தப் பத்திரிகையின் காரியாலத்திலும் ஆசிரியராகவாவது, நிருபராகவாவது, வேறுவித மாகவாவது உத்தியோகம் வஹிக்கவில்லையென்றும், பள்ளிக்கூடங்கள் வைப்பது, வைத்தியசாலைகள் ஏற்படுத்துவது

முதலியன ஜனோபகாரம்தானென்றும், ஆனால் கோயில்கள், திருப்பணி, முதலியன செய்வது சில கூலி ஜனங்களுக்குப் பிழைப்பு அளிக்குமேயல்லாது அது அவ்வளவு ஜனோபகாரமாகக் கருதமுடியாதென்றும், இந்த அபிப்பிராயம் பெரும்பாலோருடைய அபிப்பிராயமா, இல்லையா என்பதைத் தாம் முடியாதென்றும், ஸ்தலஸ்தாபனங்கள் என்ற பதத்திற்கு நிச்சயமான பொருள் தமக்குத் தெரியாதென்றும், ஆனால் அந்த வார்த்தையைத் தாம் பத்திரிகைகளில் படிக்குங்கால், அது தாலூகாபோர்டு, யூனியன் போர்டு முதலியவைகளைக் குறித்ததாக விருக்கலாமென்று தாம் யூகித்துக்கொண்டதாகவும், ஷை ஸ்தலஸ்தாபனங்களில் ஸ்தானங்கள் வகிப்பது பொது ஜனநன்மையைக் குறித்தா, இல்லையா என்பதைப் பற்றித் தாம் நிச்சயமாய்க் கூறமுடியாதென்றும், செட்டிமார் நாட்டிலுள்ள பட்டதாரிகளில் எவரையாவதுசந்தித்து அவருக்குப் பட்டம் யாது காரணம்பற்றி வழங்கப்பட்டதென்று தாம் வினவியதில்லையென்றும், வாதி ஒரு பள்ளிகூடம் ஏற்படுத்தியிருப்பது தமக்குத் தெரியுமென்றும் கூறினார்.

அதன்பின் எதிர்தரப்பு வக்கீல் மறுவிசாரணையில் சாக்ஷியை இரண்டொரு கேள்விகள் கேட்டார்.

அதன்பின் காரைக்குடி யூனியன் டெலிகேட் அக்கிராசனரான திரு. வெங்கிட்டராமய்யர் மேற்படி யூனியன் கஅ௨௨-௨௩, கஅ௨௩-௨௪-வது வருஷங்களின் கணக்குப் பரிசோதகரின் அறிக்கையின் நகலை (எதிர்தரப்பின் சார்பாக) கோர்ட்டில் ஆஜர் படுத்தினார்.

இத்துடன் விசாரணை முடிந்தது.

மீண்டும் இவ்வழக்கு அக்டோபர்மீ உநும் நாள் திங்களன்று இராமனாதபுரம் முதல் வகுப்பு சப் டிவிஷனல் மாஜிஸ்திரேட்டின் முன்பாக பரமக்குடி முகாமில் விசாரிக்கப்பட்டது.

சென்னை "நவசக்தி" ஆசிரியர், ஆரணி "சுகோதயம்" ஆசியர் இவர்களது சாக்ஷியம் அவசியமில்லை யென்று எதிரி தரப்பு வக்கீல் கோர்ட்டில் தெரிவித்துக்கொள்ளவே, அவர்களது பெயர்கள் சாக்ஷி ஜாபிதாவிலிருந்து நீக்கப்பட்டன.

மறுபடி ஐப்பசிமீ கூ-ம் நாள் பரம்பக்குடி முகாமில் இராமநாதபுரம் சப்-டிவிஷனல் ஆபீசர் திரு. கோவிந்த நாயரவர்கள் முன்பாக, குறித்தவாறு, காலை அ-மணிக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

எதிரி அவர்தம் நண்பர்களுடனும பாரிஸ்டர் ஜோசப் உடனும் ஆஜராயிருந்தார். வாதி, தேவகோட்டை வக்கீல் சோமசுந்தரமய்யருடன் ஆஜராயிருந்தார். வழக்கின் நடவடிக்கைகளை கவனிக்க, ஏராளமான மக்கள் குழுமியிருந்தனர். எதிரி தரப்பு கூ-வது சாக்ஷியாக, பிரபல வக்கீலும், சிவகெங்கை தாலூகா போர்டு தலைவரும், இராமநாதபுரம் ஜில்லா போர்டு அங்கத்தவரும் ஆகிய திருவாளர் M. G. முகுந்தராஜா அவர்கள் விசாரிக்கப்பட்டார். விபரம் வருமாறு:—

முகுந்தராஜய்யங்கார் சாட்சியம்.

ஜோசப்:—உங்கள் தொழிலென்ன ?

முரு:—நான் ஒரு வக்கீல்.

ஜோசப்:—எவ்வளவு காலமாய் நீங்கள் அத்தொழில் செய்து வருகிறீர்கள்?

முரு:—கக௯ வருட காலமாய்.

ஜோசப்:—நீங்கள் எங்கு தொழில் செய்கிறீர்கள்?

முரு:—தேவகோட்டையிலும் சிவகெங்கையிலும்.

ஜோசப்:—நீங்கள் இராமநாதபுரம் ஜில்லாபோர்டில் ஒரு அங்கத்தினரா?

முரு:—ஆம்.

ஜோசப்:—நீங்கள் எந்த தாலூகா போர்டுக்காவது தலைவராக இருக்கிறீர்களா?

முரு:—ஆம். சிவகெங்கை தாலூகா போர்டின் தலைவராக இருக்கின்றேன்.

ஜோசப்:—நீங்கள் எப்போதாவது இந்தியா சட்டசபையின் அங்கத்தினராக இருந்ததுண்டா?

முரு:—ஆம்.

ஜோசப்:—நீங்கள் இப்பொழுது என் அங்கத்தவராக இருக்கவில்லை?

முரு:—சபையின் முதற்பகுதி முடியுமுன் நான் ராஜிஞமாச் செய்துவிட்டேன். பின்னர் அபேக்ஷகராக நிற்க நான் விரும்பவில்லை.

ஜோசப்:—வாதியை உங்களுக்குத் தெரியுமா?

முரு:—தெரியும்.

ஜோசப்:—எப்படி?

முரு:—இராமநாதபுரம ஜில்லாபோர்டு அங்கத்தினராகவும் அதற்கு முன் தேவகோட்டை தாலூகா

போர்டு அங்கத்தினராகவுமிருந்த முறையில் தெரியும்.

ஜோசப் :—வருமானவரி நீங்கள் எவ்வளவு செலுத்து கிறீர்கள் ?

முது:—சுமார் ௩௩௦௦ ரூபா செலுத்துகின்றேன்.

ஜோசப் :—வாதி போர்டு கூட்டங்களில் பேசியதுண்டா?

முது:—நான் ஆஜாராயிருந்த தாலூகா அல்லது ஜில்லா போர்டு கூட்டங்களில் வாதி ஒரு பொழுதும் பேசியதில்லை.

ஜோசப்:—அவர் எப்போதுமுதல் ஜில்லா போர்டில் இருந்துவருகிறார் ?

முது:—அவர் ௧௯௨௫ ஜனவரிக்கு முன்னரே ஜில்லா போர்டில் இருந்து வருகிறார் ?

ஜோ:—௧௯௨௫ ஜனவரி தொடங்கி எத்தனை கூட்டங்களுக்கு ஆஜராகி இருந்திருக்கிறீர்கள் ?

முது:—௧ அல்லது ௨ கூட்டங்களுக்கு ஆஜராயிருந்திருக்கிறேன்.

ஜோ:—ஆரம்பமுதல் நீங்கள் ஆஜராயிருந்த கூட்டங்கள் எத்தனை ? அதில் வாதி எத்தனை கூட்டத்தில் இருந்தார் ?

முது:—நான் நான்கு கூட்டங்களில் ஆஜராயிருந்தேன். அதில் ஒரு கூட்டத்துக்கு வாதி ஆஜராகியிருந்தார்.

ஜோ:—அந்தக் கூட்டத்தில் அவர் பேசவில்லையா ?

முது:—இல்லை.

ஜோ:—வாதியோடுகூட தேவகோட்டை தாலூகா

போர்டில் நீங்கள் எவ்வளவுகாலம் அங்கத்தின ராக இருந்தீர்கள் ?

முரு:—கக௨௩ஆம் அக்டோபர் மாதத்துக்கு முன் இரண்டுவருஷகாலம் ஒன்றாக இருந்திருக்கிறோம்.

ஜோ:—எத்தனை கூட்டங்களில் தாலூகா போர்டில் நீங்கள் இருவரும் ஆஜராகியிருந்தீர்கள் ?

முரு:—சில கூட்டங்களில்.

ஜோ:—அவர் அந்தக் கூட்டங்களில் பேசினாரா ?

முரு:—இல்லை.

ஜோ:—வாதி பட்டாதாரியா ?

முரு:—ஆம். ராவ்பகதூர் பட்டம் பெற்றவர்.

ஜோ:—வாதிக்குப் பட்டம்தர ஒரு தர்பார் நடந்ததா?

முரு:—ஆம். நடந்தது.

ஜோ:—நீங்கள் அந்த தர்பாருக்கு சென்றிருந்தீர்களா ?

முரு:—ஆம்.

ஜோ:—அவ்வமயம் தலைமை வகித்தது யார் ?

முரு:—அப்போது ஜில்லா கலெக்டராக இருந்த திரு. எஸ். வி. ராமமூர்த்தி அவர்கள்.

ஜோ:—அது எப்பொழுது நடந்தது ?

முரு:—இரண்டு அல்லது மூன்று வருஷத்துக்கு முன்.

ஜோ:—வாதிக்கு சன்னதையும் விருதையும் கலெக்டர் கொடுக்கும்போது எந்த பாஷையில் பேசினார் ?

முரு:—ஆங்கிலத்தில்.

ஜோ:—என்ன பேசினார் ?

முரு:—“ வாதி காரைக்குடி யூனியனில் கூ வருஷங்கள் அங்கத்தினராகவும் அதில் ௩ வருஷங்கள் தலைவ

ராகவும் இருந்து செய்த ஊழியத்துக்காக மேன்மைதங்கிய இராஜப்பிரதிநிதி அவர்கள் மனமுவந்து கொடுத்த ராவ்பகதூர் பட்டத்தின் சன்னதையும் விருதையும் அளிக்கவே இந்தக் கூட்டத்தைக் கூட்டப்பட்டது” என்று கலெக்டர் சொன்னார்.

ஜோ:—வேறு என்ன சொன்னார்?

முரு:—“வாதி தேவகோட்டை தாலூகா போர்டிலும் இராமநாதபுரம் ஜில்லா போர்டிலும் விடுதலை பெற்ற கைதிகள் உதவிச் சங்கத்திலும் அங்கத்தினராக இருந்தவர்” என்றும் கலெக்டர் சொன்னார்.

ஜோ:—ஜில்லாபோர்டில் ககூஉ௩ வருஷத்தில் உங்களோடு வாதி எத்தனை கூட்டத்துக்கு ஆஜராகியிருந்தார்?

முரு:—ஒரே ஒரு கூட்டத்துக்குத்தான் ஆஜராகியிருந்தார்.

குறுக்கு விசாரணை.

தேவகோட்டை வக்கீல் சோமசுந்தரம் அய்யர் செய்த குறுக்கு விசாரணை வருமாறு:—

சோம:—(ஜில்லாபோர்டு கூ-ச-உ௩ நடபடிக்கையைக் கொடுத்து) உ௩-வது தீர்மானத்தைப் பாருங்கள்.

முரு:—இராமேசுவரம் ஜலசப்ளை விஷயமான தீர்மானம் இது.

சோம:—அது விஷயமாக விவாதம் ஏதும் நடந்ததா?

முரு:—யாதொரு விவாதமும் நடக்கவில்லை.

சோம:—அந்த விஷயமாய் அபிப்பிராயபேதம் ஏதும் இருந்ததா?

முகு:—எவ்வித அபிப்பிராய பேதமுமில்லை.

சோம:—யார் செலவை ஏற்றுக்கொள்வது என்ற கேள்வி எழுந்ததா?

முகு:—அதுவுமில்லை.

சோம:—வேறு என்ன கேள்விதான் எழுந்தது?

முகு:—இராமேசுவரம் யூனியனில் வீட்டுவரியை ௧00க்கு ௩ லிருந்து எஇ விகிதத்துக்கு உயர்த்தும் விஷயமான ஒரே பிரச்னைதான் எழுந்தது.

சோம:—அதில் வாதி ஏதேனும் யோசனை கூறினாரா?

முகு:—இல்லை.

சோம:—வேறு யாரேனும் யோசனை கூறியதுண்டா?

முகு:—ஜில்லாபோர்டு தலைவரே ஆலோசனைகூறியவர்.

சோம:—அவர் யாருக்கு எடுத்துச்சொன்னார்?

முகு:—இராமேசுவரம் யூனியன்போர்டு தலைவருக்கு.

சோம:—முடிவு என்ன ஆயிற்று?

முகு:—அந்த ஆலோசனைக்கு ராமேசுவரம் யூனியன் போர்டு தலைவர் சம்மதித்தார்.

சோம:—வரி உயர்த்தும் விஷயமாய் வாதி ஏதும் சொன்னாரா?

முகு:—ஒன்றும் சொல்லவில்லை.

சோம:—தாலூகா போர்டு கூட்டங்களில் வாதி எப்போதாவது பேசியதுண்டா என்று ஞாபகப்படுத்திச் சொல்லுங்கள்.

முகு:—என்னுடைய தேர்ந்த ஞாபகத்தில் அவர் ஒரு போதும் பேசியதே இல்லை.

சோம:—தேவகோட்டை தாலூகா போர்டைப் பிரிக்க நீங்கள் தீர்மானம் கொண்டுவந்தீர்களா?

முரு:—உ௯-௬-கக௬உஉ-ல்.

சோம:—வாதி எந்தப்பக்கம் வாக்குதவினர் ?

முரு:—என் தீர்மானத்திற்கு விரோதமாய் வாக்குதவினர்.

சோம:—இதிலிருந்து எந்த கக்ஷியை ஆதரித்தார் என்று தெரிந்துகொண்டீர்கள் ?

முரு:—எதிர்க் கக்ஷியை ஆதரித்தாரென்று தெரிகிறேன்.

சோம:—அவர் அதில் பேசினாரா ?

முரு:—அவர் ஒருபோதும் பேசவேயில்லை.

சோம:—அவர் பேசவில்லை. என்பதற்கு நீங்கள் கொள்ளும் அர்த்தம் என்ன ?

முரு:—அவர் ஒருபோதும் காரணங்களை எடுத்துக் கூறினதில்லை என்பது நான் கொள்ளும் பொருள்

சோம:—கூட்டங்களில் முக்ய விஷயங்கள் ஆலோசனைக்கு வந்தபோதாவது வாதியும் அதில் கலந்து கொண்டிருக்கிறாரா ?

முரு:—தீர்மானங்களைப் பார்க்காமல் என்னால் சொல்ல முடியாது.

சோம:—வாதி ஒரு பள்ளிக்கூடம் கட்டி இருக்கிறாரா ?

முரு:— ஆம்

சோம:—அந்தக் கட்டிடத்திற்கு எவ்வளவு செலவாகி இருக்கும்?

முரு:—அது எவ்வளவு ரூபாய் பெறுமென்று எனக்குத் தெரியாது. ஆனால் அது ஒரு பெறுமதி உடைய கட்டிடம்.

சோம:—வாதி சிதம்பரத்தில் ஒரு கட்டளை வைத்திருக்கிறாரா?

முரு:—அப்படிக் கேள்வி உண்டு.

சோம:—வாதி காரைக்குடியில் ஒரு தலைவரா?

முரு:—நான் அப்படிச் சொல்ல முடியாது.

சோம:—உங்களுக்கு வாதியுடன் எத்தனை வருஷகாலமாகப் பழக்கம்?

முரு:—சென்ற பதினைந்து வருஷங்களாகப் பழக்கம்.

சோம:—ஆரம்பம் முதல் உங்கள் நேசப்பான்மை எப்படி இருந்திருக்கிறது?

முரு:—ஒரே விதமாகத்தான்.

சோம:—இப்பொழுது எவ்வளவு காலமாக அவர் உங்கள் கக்ஷிக்காரராக இல்லை?

முரு:—சென்ற ௭, ௮ வருஷங்களாக,

சோம:—உங்களுக்கும் அவருக்கும் விரோதமில்லையா?

முரு:—இல்லை.

சோம:—பாதரக்குடி பழைய சாமியார் உங்களுடைய கக்ஷிக்காரரா?

முரு:—ஆம்.

சோம:—அந்தக்கேசை வாதிதானே நடத்தச் சொன்னார்?

முரு:—சாமியாரே எனக்கு வாக்குறுதி தந்தார். அந்தக்கேசில் சாமியார் ௧-வது பிரதிவாதி.

சோம:—உங்களுக்கு பீஸ் இந்த வாதி தானே தந்தார்?

முரு:—சாமியார் தரச்சொன்னார். இவர் கொடுத்து வந்தார்.

சோம:—வாதி பழையசாமியார் கக்ஷியைச் சார்ந்தவரா?

முரு:—ஆம்.

சோம:—தேவகோட்டை சப்கோர்ட்டில் ராவ்பகதூர் பட்டம் வாதிக்குக் கிடைத்ததைப்பற்றி ஒரு வழக்கில் குறுக்கு விசாரணை செய்தது உண்டா?

முரு:—என்னுடைய கக்ஷிக்காரர்கள் கொடுத்த தகவலின் பேரில நான் வாதியைக் குறுக்கு விசாரணை செய்தேன்.

சோம:—உங்களுக்கும் வாதிக்கும் நேசக்குறைவு இல்லையா?

முரு:—இல்லை; இன்று காலையில் கூட வாதி என்னைக் கும்பிட்டார்.

சோம:—உங்களுக்கும் வாதிக்கும் தூஷணவார்த்தைகள் நடந்தது உண்டா?

முரு:—இல்லை.

சோம:—இந்த வழக்கில் உங்களைச் சாக்ஷியாகப் போடுமுன் எதிரி தரப்பில் உங்களைக்கண்டு பேசினார்களா?

முரு:—இல்லை.

சோம:—வேறு எப்படித் தெரிந்தது?

முரு:—என்னை சாக்ஷிபோட்டிருப்பதாய் வாதி வக்கீல் சோமசுந்தரய்யர்தான் சொன்னார்.

மாஜிஸ்திரேட்:—(சாக்ஷியை குறுக்குவிசாரணைசெய்து கொண்டிருந்த வக்கீல் சோமசுந்தரய்யரைச் சுட்டிக்காட்டி) இவரா சொன்னார் (என்று ஆச்சரியத்துடன் கேட்டார்)

முரு:—ஆம்; இவர்தான்.

சோம:—ஊழியன் மானேஜர் உங்களிடம் வரவில்லையா?

முரு:—சம்மன் சார்வு செய்யவந்தார்.

சோம:—ஊழியன் மானேஜர் அதற்கு முன் உங்களிடம் பேசவில்லையா?

முரு:—இவ்வழக்கு சம்பந்தமாய் சம்மன் சார்வு செய்வதற்கு முன் ஒரு போதும் என்னிடம் பேசியதில்லை.

மறு விசாரணை.

எதிரி வக்கீல் ஜோஸப் அவர்களால் விசாரிக்கப்பட்டது வருமாறு:—

ஜோசப்:—உங்களுக்குரிய பீஸை பழய சாமியாருக்காக வாதி கொடுத்த காரணமென்ன?

முரு:—பாதரக்குடி மடத்துக்குச் சேர்ந்த சில சொத்துக்களை வாதி குத்தகை வாங்கி இருப்பதால், சாமியார் வாதியைப் பணம் கொடுக்கும்படி சொன்னார்.

மாஜிஸ்ட்ரேட்:—தர்பாரில் கலெக்டர் பேசியபிறகு வாதி ஏதும் பதில் சொன்னாரா?

முரு:—வாதி தமது சட்டைப் பையிலிருந்து, ஒரு காகிதத்தை எடுத்துப்படித்தார்,

எதிரியின் ௬-வது சாக்ஷியாக இராமநாதபுரம் ஜில்லாபோர்டு அங்கத்தினரும் ஸ்ரீ வில்லிபுத்தூர் கோவாபரேட்டிவ் யூனியன் தலைவரும் லெச்சுவான் தாருமான திரு. பி. எஸ். குமாரஸாமி ராஜா அவர்கள் விசாரணை செய்யப்பட்டார். விபரம் வருமாறு:—

ஜோசப் :—நீங்கள் இராமநாதபுரம் ஜில்லா போர்டில் அங்கத்தினரா ?

குமா :—ஆம்.

ஜோசப் :—எவ்வளவு காலமாக.

குமா :—சென்ற சஇ ஆண்டுகளாக.

ஜோசப் :—வாதியைத் தெரியுமா ?

குமா :—தெரியும்.

ஜோசப் :—எப்படித் தெரியும் ?

குமா :—சென்ற உ வருஷங்களாக அவர் ஜில்லா போர்டு அங்கத்தினர் என்ற முறையில் தெரியும்.

ஜோசப் :—கசூஉஙு-வருடத்தில் ஜில்லா போர்டின் ஒன்றுக்குப் பிரதம மந்திரி பணகால் ராஜா வந்திருந்தாரா ?

குமா :—ஆம்.

ஜோசப் :—அப்பொழுது வாதி ஜில்லா போர்டில் அங்கத்தவரா ?

குமா :—இல்லை.

ஜோசப் :—கசூஉஙு-வருடம் எப்பிரல்-மீ நி-உ காரைக்குடி யூனியன் போர்டு தொழில்வரி விஷயமாய்ப் பிரஸ்தாபம் நடந்ததா ?

குமா :—ஆம். காரைக்குடி யூனியன் தொழில்வரி விஷயமாய் விவாதம் நடந்தது.

ஜோசப் :—நீங்கள் அந்தக் கூட்டத்தில் இருந்தீர்களா ?

குமா :—ஆம். இருந்தேன்.

ஜோசப் :—அந்தத் தீர்மானத்தை பிரேரேபணை செய்ததும் ஆமோதித்ததும் யார் யார் ?

குமா:—இராமானுஜ அய்யங்கார் பிரரேபனை செய்ய, வெங்கிடசப்பய்யர் ஆமோதித்தார்.

ஜோசப்:—வாதி அந்தக்கூட்டத்தில் ஆஜராயிருந்தாரா?

குமா:—ஆம்.

ஜோசப்:—அந்தக் கூட்டத்தில் அவர் பேசினரா?

குமா:—அவர் பேசவில்லை. அவர் அப்பொழுது அங்கத்தவருமில்லை.

ஜோசப்:—அவர் அங்கத்தினரானபிறகு நீங்களும் அவரும் சேர்ந்து கூட்டங்களில் ஆஜராயிருந்திருப்பீர்களா?

குமா:—ஆம். வாதியும் நானும் சில கூட்டங்களில் ஆஜராயிருந்திருக்கிறோம்.

ஜோசப்:—அந்தக் கூட்டங்களில் வாதி எப்பொழுதாவது பேசியதுண்டா?

குமா:—ஒருபொழுதும பேசியதில்லை.

ஜோசப்:—அவர் ஏதாவது கேள்விகள் கேட்டதுண்டா?

குமா:—அவர் எவ்வித கேள்வியும் கேட்டதில்லை.

ஜோசப்:—வாதி சபையில் ஓட்டுக்கொடுக்கும்பொழுது எப்படி நடந்துகொள்ளுவார்?

குமா:—எப்பொழுதும் அனேகமாய் பிரசிடெண்டுக்குச் சாதகமாகவே வாக்குக்கொடுப்பார். ஒருபொழுதும் பிரசிடெண்டுக்கு விரோதமாக ஓட்டுக்கொடுத்ததில்லை.

ஜோசப்:—போர்டு தலைவரின் அபிப்பிராயத்திற்கு மாருக அவர் ஒரு சந்தர்ப்பமாவது நடந்துகொண்டதுண்டா?

குமா:—ஒரு சமயத்திலும் தலைவர் அபிப்பிராயத்திற்கு மாறாக இருந்தாரென்று எனக்குத் தெரியவில்லை.

ஜோசப்:—வாதி எப்பொழுதாவது எவ்விஷயத்தையேயும்பற்றி கூட்டத்தில் பேசியிருக்கிறாரா?

குமா:—இல்லை.

ஜோசப்:—லோகல்போர்டு கான்பரன்ஸ் மதுரையில் கூடியதுண்டா?

குமா:—ஆம்

ஜோசப்:—அக்கூட்டத்திற்கு நீர் போயிருந்தீரா?

குமா:—ஆம்.

ஜோசப்:—அங்கு வாதி வந்திருந்தாரா?

குமா:—நான் அவரைப் பார்த்ததாக ஞாபகமில்லை.

ஜோசப்:—தேவகோட்டை யூனியன்போர்டு பிரசிடெண்ட் திரு. தி. அ. சு. அ. சுப்பிரமணியன் செட்டியார் வந்திருந்தாரா?

குமா:—ஆம்.

ஜோசப்:—தேவகோட்டை தாலூகா போர்டு தலைவர் மாணிக்கம் பிள்ளை வந்திருந்தாரா?

குமா:—ஆம்.

ஜோசப்:—தேவகோட்டை வக்கீல் சி. சுந்தரமய்யர் வந்திருந்தாரா?

குமா:—எனக்கு ஞாபகமில்லை.

ஜோசப்:—கூட்டம் எத்தனை நாள் நடந்தது?

குமா:—இரண்டு நாள்.

ஜோசப்:—இரண்டு நாளும் நீர் ஆஜராயிருந்தீரா?

குமா:—ஆம். இடையில் வெளியே போய் வருவதுண்டு.

ஜோசப்:—கிராம உத்தியோகஸ்தர்கள் லோகல்போர்டு களில் ஸ்தானம் வகிக்கும் விஷயமாய் தீர்மானம் வந்தபொழுது நீங்கள் இருந்தீர்களா?

குமா:—இருந்தேன்.

ஜோசப்:—வாதி அந்தக் கூட்டத்தில் பேசினரா?

குமா:—எனக்கு ஞாபகமில்லை.

ஜோசப்:—யூனியன் போர்டுக்கு ஒரு வைஸ் பிரஸி டெண்டு இருக்கவேண்டும் என்ற கேள்வி கூட் டத்தில் எழுந்ததா?

குமா:—ஆம்.

ஜோசப்:—அப்பொழுது நீங்களிருந்தீர்களா?

குமா:—ஆம்.

ஜோசப்:—அந்தத் தீர்மான விஷயமாய் வாதி பேசி ஞரா?

குமா:—இல்லை.

ஜோசப்:—தலைவருக்கு விரோதமாக வேண்டுமென்றே பேசும் அங்கத்தினர் ஜில்லாபோர்டில் யாரேனு முண்டா?

குமா:—அப்படி எவருமில்லை.

ஜோசப்:—நீங்கள் தீர்மானம் கொண்டுபோயிருக்கிறீர் களா?

குமா:—ஆம்,

ஜோசப்:—நீங்கள் கேள்விகள் கேட்டதுண்டா?

குமா:—கேட்டதுண்டு?

ஜோசப்:—நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தின ரா?

குமா:—ஆம்.

ஜோசப்:—நீங்கள் கமிட்டிகளில் ஸ்தானம் பெற்றிருக்கிறீர்களா?

குமா:—பெற்றிருக்கின்றேன்.

ஜோசப்:—நீங்கள் கூட்டங்களில் என்னென்ன செய்திருக்கிறீர்கள்?

குமா:—தீர்மானங்கள் கொண்டுவந்திருக்கின்றேன். ஆதரித்திருக்கின்றேன். திருத்தங்கள் கொண்டுவந்திருக்கின்றேன். தீர்மானங்களையும் திருத்தங்களையும் எதிர்த்துப் பேசியிருக்கின்றேன்.

ஜோசப்:—நீங்கள் உங்கள் ஸ்தானத்தை எப்பொழுதாவது இழந்ததுண்டா?

குமா:—சென்ற நாலரை வருஷங்களுக்கிடையில் ஒருமுறை ஸ்தானமிழந்து மீண்டும் ஸ்தானம் பெற்றிருக்கிறேன்.

குறுக்கு விசாரணை.

சோம:—பனகால் ராஜா ஜில்லா போர்டு கூட்டத்துக்கு வந்தபொழுது வாதி காரைக்குடி யூனியன் போர்டு தலைவர் என்று உமக்குத் தெரியுமா?

குமா:—எனக்கு அது தெரியாது.

சோம:—ஜில்லாபோர்டு கூட்டத்துக்கு வாதி அப்பொழுது அழைக்கப்பட்டிருந்தார் என்றாவது உமக்குத்தெரியுமா?

குமா:—அது எனக்குத்தெரியக் காரணமில்லை.

சோம:—தாங்கள் ஒரு ஜில்லா போர்டு அங்கத்தவர் என்ற முறையிலாவது வாதி காரைக்குடி யூனியன் போர்டு தலைவர் என்று அறியீரா?

குமா:—நான் மதுரையிலிருந்து ௫௦ மைலுக்கப்பால் வசிக்கிறேன். இந்த ஜில்லாவில் ௪௦ யூனியன் போர்டு தலைவர்களையும் தெரிந்துகொள்ளுவது இயலாத காரியம்.

சோம:—அந்தக் கூட்டத்தில் யாராவது பேசினார்களா?

குமா:—ஆம். சிலர் பேசினார்கள்.

சோம:—வாதியை முதன்முதலாக நீங்கள் எப்பொழுது சந்தித்திருக்கிறீர்கள்?

குமா:—பனகால் ராஜா வந்திருந்த அந்தக் கூட்டத்தில் தான் பார்த்தேன்.

சோம:—காரைக்குடி தொழில்வரி விஷயமாக அந்தக் கூட்டத்தில் யாரும் பேசினார்களா?

குமா:—காரைக்குடி ஹெட்மாஸ்டர் ஒருவர் (பிராமணர்) பேசினார். அந்த ௪, ௫ வார்த்தைகள் பேசினார். உடனே நீர் அங்கத்தவரல்லாததால் பேசக்கூடாது என்று ராஜா தடுத்து உட்காரச்சொல்லிவிட்டார்.

ஜோசப்:—நீங்களும் வாதியும் சேர்ந்து ஜில்லாபோர்டு கூட்டங்களில் எத்தனை தரம் ஆஜராயிருந்திருக்கிறீர்கள்?

குமா:—அ-கக-உ௪, உ௭-௯-உ௪ ஆகிய இரண்டு கூட்டங்களில்.

சோம:—திருப்புல்லாணி டிராம்வே விஷயம் விவாதத்திற்கு வந்தபொழுது நீங்கள் இருந்தீர்களா?

குமா:—ஆம்.

சோம:—அப்பொழுது வாதி பேசினாரா?

குமா:—வாதி அப்பொழுது அங்கத்தவருமில்லை. பேசவுமில்லை.

சோம:—விவாதத்தில் கலந்துகொள்ளும் அங்கத்தவர்களின் பெயர்களை நடவடிக்கைகளில் குறித்துக் கொள்ளும் வழக்கமுண்டா?

குமா:—வாக்குப் பதிவு எடுக்க நேர்ந்தாலன்றி, பெயர்களைக் குறித்துக்கொள்ளும் வழக்கமில்லை.

சோம:—அந்தச் சந்தர்ப்பத்தில் யார் யார் பெயரை பதிவுசெய்துகொள்ளுவது?

குமா:—பிரரேபணை செய்பவர்களின் பெயரையும் எதிர்ப்பவர் பெயரையும் குறித்துக்கொள்வதுண்டு.

சோம:—கூட்டத்தில் யார் யார் பேசினார்கள் என்று உமக்குத் தெரியுமா?

குமா:—குறிப்பிட்டுக் கேட்டாலன்றி யார் பேசினார்கள் என்று சொல்லமுடியாது.

சோம:—அ—கக—உச கூட்டத்தில் தாங்கள் எவ்விஷயத்தைப்பற்றியாவது பேசியதுண்டா?

குமா:—ஞாபகமில்லை.

சோம:—வாதி எப்பொழுதாவது, எவ்விஷயத்தைப் பற்றியாவது பேசியதுண்டா?

குமா:—வாதி பேசி நான் கண்டதேயில்லை.

சோம:—உ௦—கூ—உச கூட்டத்தில் தாங்கள் பேசியதுண்டா?

குமா:—இல்லை.

சோம:—லோகல்போர்டு கான்பரன்சில் வாதி நிச்சயமாய் வரவில்லை என்று நீர் நிச்சயமாய்ச் சொல்ல

முடியாது ?

குமா:—இதைப்பற்றிச் சொல்லமுடியாது. நான் அக் கூட்டத்தில் அவரைப் பார்க்கவில்லை.

எதிரியின் ரு-வது சாக்ஷியாக இராமநாதபுரம் ஜில்லாபோர்டு மெம்பரும், பிரபல மிராசுதாருமானமடத்துப்பட்டி திரு. எஸ். கோபால நாயக்கர் அவர்கள் விசாரிக்கப்பட்டார்கள். விவரம் வருமாறு:—

ஜோசப்:—நீங்கள் எதுமுதல் ஜில்லாபோர்டு அங்கத்தினராயிருக்கிறீர்கள் ?

கோ:—கூஉஉ௫ எப்ரல்மீ முதல் நான் ஜில்லா போர்டு அங்கத்தினராயிருந்துவருகிறேன்.

ஜோசப்:—நீங்கள் எந்தப்பகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பெற்ற அங்கத்தினர் ?

கோ:—நான் சிவகாசி தாலூகா முழுமைக்கும் தேர்ந்தெடுக்கப்பெற்ற அங்கத்தினர்.

ஜோசப்:—தங்களுக்கு வாதியைத் தெரியுமா ?

கோ:—எனக்கு அவரைத் தெரியும்.

ஜோசப்:—அவர் எவ்வளவு காலமாக ஜில்லா போர்டு அங்கத்தினராயிருந்துவருகிறார் ?

கோ:—இரண்டு மூன்று வருஷங்களாக அவர் ஜில்லா போர்டு மெம்பராயிருக்கிறார்.

ஜோ:—நீங்களும் அவரும் சேர்ந்து எத்தனை கூட்டங்களில் ஆஜராயிருந்திருக்கிறீர்கள் ?

கோ:—அ—கக—உசல் ஒரு தடவை.

ஜோ:—பனகால் ராஜா கூஉ௩-ல் வந்திருந்தபொழுது நீங்கள் ஆஜராயிருந்திருக்கிறீர்களா ?

கோ:—ஆம்.

ஜோசப்:—அப்பொழுது வாதி ஜில்லா போர்டு மெம்பராயிருந்தாரா?

கோ:—இல்லை.

ஜோ:—அக்கூட்டத்தில் காரைக்குடி தொழில் வரியைப்பற்றி ஏதும் பிரச்னை எழுந்ததா?

கோ:—ஆம்.

ஜோசப்:—அப்பொழுது வாதி பேசினாரா?

கோ:—இல்லை.

ஜோசப்:—வேறு யார் பேசினர்?

கோ:—வாதியுடன்கூட யாரோ ஒரு பிராமணர் வந்திருந்தார். அவர் அவ்வமயம் ஆரம்பித்தார். ஆனால் பிரசிடெண்டு தடுத்துவிட்டார்.

ஜோசப்:—கககஉரு-ம் வருஷம் தாங்கள் அங்கத்தினராயிருந்தீர்களா?

கோ:—நான் அவ்வருஷத்தில் ரு, கூ மாதம் அங்கத்தினராயிருக்கவில்லை.

ஜோசப்:—காரணமென்ன?

கோ:—எங்கள் தாலூகா போர்டில் தேர்தல் நடத்துவதில் தாமதமேற்பட்டுவிட்டதால்தான்.

ஜோசப்:—அ—கக—உகூ-ல் நடந்த ஜில்லா போர்டு கூட்டத்தில் வாதி ஏதாவது பேசினாரா?

கோ:—அவர் ஒன்றும் பேசவில்லை.

வாதி வக்கீல் தேவகோட்டை சோமசுந்தரமய்யரால் சாக்ஷி குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

வருமாறு:—

சோம:—அ—கக—உச-உ அன்று நடந்த ஜில்லா போர்டு கூட்டத்தில் நீங்கள் ஏதாவது பேசினீர்

களா ?

கோ:—இல்லை.

சோம:—அக்கூட்டத்தில் ஏதும் முக்கிய விஷயங்கள் விவாதத்துக்கு வந்ததா ?

கோ :—எனக்கு ஞாபகமில்லை.

சோம :—நீங்கள் எப்பொழுதாவது பேசியிருக்கிறீர்களா ?

கோ :—எங்கள் தாலூகா போர்டு சம்பந்தப்பட்ட விஷயங்களில் நான் பேசியிருக்கிறேன்.

சோம :—நீங்கள் எவ்விஷயத்தைப்பற்றிப் பேசினீர்கள் ?

கோ :—அது எனக்கு ஞாபகமில்லை.

சோம :—வாதி காரைக்குடி யூனியன் போர்டு தலைவராய் ககஉரு-ம் வருஷத்தில் ஜில்லா போர்டில் ஆஜராயிருந்தது உங்களுக்குத் தெரியுமா ?

கோ :—பார்த்திருக்கிறேன்.

சோம:—காரைக்குடி யூனியன் போர்டு தலைவர் முறையில் அங்கு ஏதும் பேசினாரா ?

கோ :—இல்லை.

சோம :—நீங்கள் ஏதும் பேசினீர்களா ?

கோ :—நான் அவ்வமயம் ஒன்றும் பேசவில்லை.

சோம :—அவ்விஷயம்பற்றி அவ்வமயம் அங்கும் யாரும் பேசவில்லையா ?

கோ :—அது எனக்கு ஞாபகமில்லை.

மறு விசாரணை.

ஜோ :—அவ்வமயம் தொழில் வரி பற்றிய ஒரு தீர்மானம் செய்யப்பெற்றதா ?

ஜோ :—ஆம். ராமானுஜய்யங்காரால் பிரரேபிக்கப்பட்டு வெங்கடசுப்பய்யரால் ஆமோதிக்கப்பட்டுத் தீர்மானம் ஏகமனதாய் நிறைவேறியது.

திரு. கரு. முத்துசிவலிங்கம் சாட்சியம்.

பின்னர் பிரபல தனவணிகர் திருவாளர் கரு. முத்து சிவலிங்கம் அவர்கள் [ஆ. தெக்கூர்] எதிரியின் கூ-வது சாக்ஷியாக விசாரிக்கப்பெற்றார்.

ஜோசப் :—உங்களுக்கு எதிரியைத் தெரியுமா?

சிவ :—ஆம்; தெரியும்.

ஜோ :—உங்களுக்கு வாதியைத் தெரியுமா?

சிவ :—ஆம்; அவரையும் தெரியும்.

ஜோசப் :—தற்காலம் தனவணிகர்களுக்கிடையே இருக்கும் சமூக நிலை உங்களுக்குத் தெரியுமா?

சிவ :—ஆம்; எனக்குத் தெரியும்.

ஜோசப் :—நீங்கள் அந்த சமூகத்தைச் சேர்ந்தவர்கள் தானே?

சிவ :—ஆம்.

ஜோசப் :—நீங்கள் பத்திரிகை படிக்கும் வழக்கமுண்டா?

சிவ :—ஆம், நான் பல சமாசாரப் பத்திரிகைகள் வாசிக்கும் வழக்கமுடையவன்.

ஜோசப் :—உங்கள் ஜாதியாரின் முன்னோர்கள் எவ்வழியில் பணம் செலவு செய்து வந்தார்கள்?

சிவ :—கோயில்கள் கட்டுவதிலும், புதுப்பிப்பதிலும் பணம் செலவழித்து வந்தார்கள்.

ஜோசப் :—இந்நாட்களில்?

சிவ :—பள்ளிக்கூடங்களும் ஆஸ்பத்திரிகளும் கட்டு

வதிலும், சமூகத்தைச் சீர்திருத்துவதிலும் பணம் செலவழித்து வருகிறார்கள்.

ஜோசப்:—சீர்திருத்த சம்பந்தமாக எத்துணைவித அபிப்பிராயங்கள் இருக்கின்றன?

சிவ:—இருவித அபிப்பிராயங்களிருந்து வருகின்றன.

ஜோசப்:—அவற்றின் விபரமென்ன?

சிவ:—கல்யாணம் முதலியவற்றில் செலவழிப்பதில் குறைப்பதொன்று; பழைய வழக்கத்தை டம பத்தோடு வற்புறுத்தல் மற்றொன்று.

ஜோசப்:—சபைகளைப்பற்றிய அபிப்பிராயமென்ன?

சிவ:—சட்டசபைகளுக்கும், ஸ்தலஸ்தாபன சபை களுக்கும், இதரக் கமிட்டிகளுக்கும் போக வேண்டுமென்பது ஒரு அபிப்பிராயம்; இவ்விஷ யங்களில் செலவழிக்கலாகாது என்பது மற்றொரு அபிப்பிராயம்.

ஜோசப்:—பட்டங்களைப்பற்றி அபிப்பிராயமென்ன?

சிவ:—பட்டங்கள் பெறவேண்டுமென்றும், அதைப் பெறுவதற்கு வழி பொது ஸ்தாபனங்களுக்கும், சட்டசபைகளுக்கும் செல்லுவதே யென்றும் ஒரு அபிப்பிராயம்.

ஜோசப்:—பட்டங்கள் பெறுவதற்காகவே பொது அமைப்புகளில் பிரவேசிக்க வேண்டு மென்று பட்டம் பெற்றிருப்பவர் கருதுகிறார்களா?

சிவ:—ஆம்

ஜோசப்:—அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கு விருந் தளிப்பதைப்பற்றி அபிப்பிராயமென்ன?

சிவ:—விருந்தளிக்க வேண்டு மென்பது ஒரு சாரரின்

கருத்து. அது தேவையில்லை என்பது மற்றொரு கூட்டத்தாரின் எண்ணம்.

ஜோசப் :—இவ்வித அபிப்பிராய பேதம் உங்கள் நாட்டில் உண்டாகி எத்தனை வருஷங்களாகின்றன ?

சிவ:—ககூஉ௦-ம் ஆண்டு முதல் இவ்வபிப்பிராய பேதம் துவக்கிற்று.

ஜோசப்:—காரணமென்ன ?

சிவ:—எங்கள் மாயினரைத் திருத்தும் பொருட்டு, "தனவைசிய ஊழியர் சங்கம்" என ஒரு சங்கம் ஸ்தாபிக்கப்பெற்றது. அச்சங்கத்திலிருந்து "தனவைசிய ஊழியன்" என்று ஒரு பத்திரிகை வெளியிடப்பெற்றது. அப்பத்திரிகை வெளியானது முதல் இவ்வபிப்பிராய பேதம் துவக்கிற்று.

ஜோசப் :—நீங்கள் அப்பத்திரிகைக்கு ஒரு சந்தாதாரா?

சிவ :—ஆம்.

ஜோசப் :—அச்சங்கம் கூட்டிய மகாநாடுகளுக்கு நீங்கள் போவதுண்டா ?

சிவ :—ஆம் ; போவதுண்டு.

ஜோசப் :—அப்பத்திரிகை எக்காலம்வரை 'தனவைசிய ஊழியன்' ஆகவும், எக்காலம் முதல் 'ஊழியனாக' வும் தோன்றிற்று.

சிவ :—ஆரம்பமுதல் 'தனவைசிய ஊழியனா'கவே யிருந்தது. ககூஉ௫-ம் வருஷம் முதல் 'ஊழியன்' எனத்தோன்றி வருகிறது.

ஜோசப் :—'ஊழியன்' கொள்கை என்ன ?

சிவ :—தேசவிடுதலை, எளிய வாழ்க்கையை வற்புறுத்துவது முதலியன.

ஜோசப் :—பட்டதாரிகள் எந்தக் கோஷ்டிகளிற் சேர்ந்தவர்கள் ?

சிவ:—'ஊழிய'னுக்கு மாறான கருத்துக் கொண்ட கூட்டத்தைச் சேர்ந்தவர்கள்.

வக்கில் சோமசுந்தரமய்யரால் குறுக்கு விசாரணை செய்யப்பெற்றார்.

சோம:—பாடசாலை வைப்பது பழைய கூட்டத்தாரின் கருத்தல்லவா ?

சிவ:—வேத பாடசாலை மட்டும் வைப்பது பழைய கூட்டத்தாரின் கருத்து.

சோம:—குளங்கள் வெட்டுவது பழைய கூட்டத்தாரின் கருத்தல்லவா ?

சிவ:—கோவில்களுக்கு முன்னால் குளங்கள் வெட்டுவதென்பது பழைய கூட்டத்தாரின் கருத்து.

சோம:—ரஸ்தாக்கள் அமைப்பதும், ஆஸ்பத்திரிகள் வைப்பதும் தருமந்தானே ?

சிவ:—இவைகள் தருமமாகக் கருதப்படவில்லை.

சோம:—உங்கள் குடும்பத்தார் ஒரு ரஸ்தா போட்டிருக்கிறார்களே ?

சிவ:—ஆம்; மூன்று வருடங்களுக்குமுன் ஒரு ரஸ்தா போட்டார்கள்.

சோம:—உமக்கு வாதியைத்தெரியுமா ?

சிவ:—ஆம்; தெரியும்.

சோம:—அவர் பள்ளிக்கூடமொன்றை நடத்திவருகிறாரா ?

சிவ:—ஆம்; நடத்திவருகிறார்.

சோம:—அவர் அப்பள்ளிக்கூடத்துக்கு ஒரு கட்டிடம்

கட்டிக்கொடுத்திருக்கிறாரா?

சிவ:—அவர்தான் கட்டினாரா என்று நான் சொல்ல முடியாது. முழுச்செலவும் அவருடையதுதானா என்று சொல்லமுடியாது.

சோம:—குன்னக்குடி ரஸ்தா ஒன்று போட்டிருக்கிறாரே, அது உங்களுக்குத்தெரியுமா?

சிவ:—கோவிலூர்—குன்னக்குடி ரஸ்தாவை அவர் சொந்தச்செலவில் ஆக்கினாரென்று நான் சொல்ல முடியாது. ஏதோ ஒரு பகுதி அவரும் கொடுத்திருக்கிறார் என்று நான் கேள்விப்பட்டேன்.

சோம:—எவ்வளவு தொகை கொடுத்திருக்கிறார்?

சிவ:—எவ்வளவு தொகை கொடுத்திருக்கிறாரென்று நான் சொல்லமுடியாது.

சோம:—வேறு யார் யார் கொடுத்தது உமக்குத்தெரியுமா?

சிவ:—வீரப்ப செட்டியார் கரு00-ம் கோவிலூர் மடத்தார் கரு00-ம் வேறு பலரும் கொடுத்திருக்கிறார்கள். இந்த ரோட்டுத் திறப்புவிழாவுக்கு எங்கள் குடும்பத்தாருக்கு ஒரு அழைப்பு வந்தது. அதில் சிதம்பரம் செட்டியார் பெயர் போடவில்லை. வீரப்ப செட்டியார் பெயரே போட்டிருந்தது.

சோம:—குழந்தை பாதுகாப்புக்கும், பிரஸவ ஆஸ்பத்திரிக்கும் வாதி நன்கொடையளித்திருப்பது உமக்குத் தெரியுமா?

சிவ:—ஏதோ பொருள் கொடுத்திருப்பதாய் பத்திரிகைகளில் படித்தேன்.

சோம:—தொண்ணூற்றுரூர்க் கூட்டத்தில் நீங்கள்

ஆஜராயிருந்தீர்களா ?

சிவ:—ஆம். ஒவ்வொரு கூட்டத்திலும் ஆஜராயிருந்திருக்கிறேன்.

சோம:—வாதியும் ஆஜராயிருந்தாரா ?

சிவ:—ஆம். சில கூட்டங்களில் ஆஜராயிருந்தார்.

சோம:—அக்கூட்டத்தில் வாதி பேசினாரல்லவா ?

சிவ:—வாதி ஒருபொழுதும் பேசினதேயில்லை.

சோம:—நீங்கள் பேசியிருக்கிறீர்களா ?

சிவ:—நான் இரண்டு கூட்டங்களிலும் பேசியிருக்கிறேன்.

சோம:—அந்தக் கூட்டத்தில் அரசியல் விஷயம் ஏன் பேசப்படுவதில்லை?

சிவ:—அக்கூட்டம் கலியாணச் செலவைக் குறைப்பதே கருத்தாகக்கொண்டது. அதனால் அரசியல் பேசப்படுவதில்லை.

சோம:—பொது ஸ்தாபனங்களைப்பற்றிய கேள்விகளில் செட்டியார்களுக்குள் ஏகமனதான அபிப்பிராயந்தானே ?

சிவ:—இல்லை.

சோம:—'தனவைசிய ஊழியன்' 'ஊழியன்' ஆக மாறுதலடைந்ததும், கொள்கையிலும் மாறுதல் உண்டாய் விட்டதல்லவா ?

சிவ:—இல்லை. 'ஊழியனின்' மாறுதல் அளவிலே தான்; கொள்கையிலில்லை.

இத்துடன் இருதரப்பு சாக்ஷி விசாரணையும் முடிந்தது. கோர்ட்டு மறுநாள் காலை அ மணிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. மீண்டும் உக-கo-உக காலை அ

மணிக்கு கோர்ட்டு கூடிற்று, மாஜிஸ்ட்ரேட், ஜியார்ஜ ஜோசப் அவர்களைப்பார்த்து, "நீங்கள் இன்னும் சாக்ஷி விசாரிக்கப்போகிறீர்களா" எனக் கேட்டார். அதற்கு தாம் இனி சாக்ஷி விடப்போவதில்லை யென்று ஜார்ஜ ஜோசப் விடையிறுத்துவிட்டு, காரைக்குடி யூனியன் போர்டு பிரசிடெண்ட் என்ற முறையில் ராவ்பகதூர் சிதம்பரம் செட்டியார் மீது ஆடிட்டர் ரிப்போர்ட்டின் பேரில் கவர்ன்மெண்டார் பிறப்பித்த உத்திரவுகளையும், இராமனாதபுரம் ஜில்லா போர்டு கக௨௫—கக௨௬-ம் வருஷத்து அறிக்கையில் க௨, ௬௭, ௬௮-வது பக்கங்களை யும் எக்ஸிபிட்களாக எதிரி தாப்பில் தாக்கல் செய்து கொள்ளவேண்டுமெனச் சொன்னார். அதை டி. ஸி. சீனிவாசய்யங்கார் மிகப் பலமாக ஆட்சேபித்தார். முடிவில் மேற்கண்ட ரிக்கார்டுகள் எக்ஸிபிட்டுகளாகத் தாக்கல் செய்யப்பட்டன. பின்னர் மாஜிஸ்ட்ரேட் டி. ஸி. சீனிவாசய்யங்காரை விளித்து, கேசை ஆர்குமெண்டு செய்யச் சொன்னார்.

இருதரப்பு ஆர்குமேண்டு

வாதி வக்கீலான திரு. டி. ஸி. சீனிவாசய்யங்கார் அவர்கள் ஆர்குமெண்ட் பேசினார். எதிர் தாப்புக்கு பாரிஸ்டர் ஜோசப் அவர்கள் ஆர்குமெண்ட் பேசினார். இதற்கு விடையாக, திரு. டி. ஸி. அவர்கள் மறுமொழி கூறினார். அந்த சமயம் பாரிஸ்டர் ஜோசப் அவர்கள் இல்லை. கோர்ட் கலைகிற தருணத்தில் பாரிஸ்டர் ஜோசப் அவர்கள் மதுரையிலிருந்து கோர்ட்டுக்கு விரைந்து வந்து, தமது ஆர்குமெண்டில்

சிறப்பான இரண்டொரு, சட்ட சம்பந்தமான ஆட்சேபணைகளைக் குறிப்பிட வேண்டுமென, கோர்ட்டாருக்குத் தெரிவித்துக்கொண்டார். கோர்ட்டுக் கலைந்து விட்டதென்று, டெபுடி மாஜிஸ்டிரேட் அவர்கள் தமது கோட்டை (சட்டையை)க் கழற்றிவிட்டார். கீழ்க் காணப்படும் அறிக்கை விண்ணப்பத்தை, பாரிஸ்டர் ஜோசப் அவர்கள் கோர்ட்டாரிடம் சமர்ப்பித்தார். நவம்பர்-மீ கூஉ வழக்குத் தீர்ப்புச் சொல்லப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

அறிக்கை விண்ணப்பம்.

எதிரியின் சார்பாக, எதிரியின் வக்கீல், ஸப்டிவிஷனல் மாஜிஸ்திரேட் அவர்களுக்குச் செய்துகொண்ட அறிக்கை விண்ணப்பம் (மிமோராண்டம்) வருமாறு:—

"இந்த வழக்கின் விசாரணையும், எந்தக் குற்றச் சாட்டின் மீது இவ்விசாரணை நடைபெற்றதோ அக் குற்றச் சாட்டும், கீழ்க்கண்ட குறையினால், கெடுபட்டு விட்டன என்று எதிரி வினயமாய்த் தெரிவித்துக் கொள்கிறார்.

தனித்தனியான அவதூறானதும், பழியானதுமான எட்டு விஷயங்களை எதிரி பிரசுரித்ததாக, வாதி குற்றஞ் சாட்டுகிறார். அவை பி. க. முதல் பி. அ. வரையுள்ள சாட்சிய தஸ்தாவேஜுகளாக (எக்ஸிபிட்களாகக்) குறிப்பிடப்பட்டிருக்கின்றன. தனித்த அவதூறில் எதுவேனும் நிரூபணமாகவில்லை என்று கோர்ட்டார் கண்டாலும், தொடரின் மற்ற அவதூறுகள் அல்லது அவதூறின்மேல், எதிரி குற்றவாளி என்று தீர்மானிக்கலாம்.

ஆகையால், அவதூறான ஒரு தொடர்பதிகள் பிரசுரிக்கப்பட்டன—எல்லாம் ஒரே நாளில் பிரசுரிக்கப் பட்டன என்பதில் ஐயமில்லை—என்பதே வாதியின் முறையீடு என்று தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

எதிரிமீது இப்பொழுது அமைக்கப்பட்டிருக்கும் குற்றச்சாட்டு, அவர் எட்டுக் குற்றங்கள் சம்பந்தமாக எதிர்வாதம் செய்யும்படி செய்திருக்கிறது. அந்த எட்டுக்குற்றங்களும் கஉ மாத காலத்தில் செய்யப்பட்ட ஒரே இனமானவையாகும். இந்தக் குற்றச் சாட்டு, கி. பு. கோ. உ௩௪ பிரிவை மீறியதாகும்.

பிராசிகியூஷன் தரப்பார் எல்லாக் குற்றச்சாட்டு களின் மீதும் சாட்சியம் விடலாம்; ஆனால், குற்றப்பத்திரிகை படிக்கும் நிலைமை வந்துவிட்டால், ஒன்று அல்லது இரண்டு அல்லது மூன்று குற்றங்களைப்பொறுக்கி எடுத்து அவற்றின்கீழ் எதிரி குற்றவாளி என்று குறிப்பிடுவது கோர்ட்டாருடையவும் பிராசிகியூஷன் தரப்பாருடையவும் கடமையாகும்.

இந்தக் குற்றச்சாட்டு சட்டத்தை மீறியதாயிருப்பதால், இதைத் தள்ளிவிடவேண்டுமென்று எதிரி வினயமாய்த் தெரிவித்துக்கொள்ளுகிறார்.

மேலும் கி. பு. கோ. உ௩௫-வது பிரிவு வழக்கிற்கு பொருத்தமுள்ளதல்லவென்று தெரிவித்துக்கொள்ளப் படுகிறது. ஏனென்றால், வாதி புகார் செய்யும் அவதூறுத் தொடர் ஒரே காரியமல்ல; ஒன்றுக்கு மேற்

பட்ட குற்றங்கள் அதே நபரால் செய்யப்பட்டன வல்ல. இவ்வழக்கில், "ஒரே இனத்தைச்சேர்ந்த, ஒன்றுக்கு மேற்பட்ட குற்றங்கள்" செய்யப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

"அதே காரியம்" என்ற கோட்பாடு பல வழிகளால் பரீட்சித்துப் பார்க்கப்படலாம். ஒரே காரியமாகும் தொடர் ஒரே சாட்சியத்தால் நிரூபணமாகுமா என்று யோசிப்பது அவ்வழிகளில் முக்கியமான ஒன்றாகும்.

சாட்சிய தஸ்தாவேஜி பி. க. முதல் பி. அ-வரையிலுள்ள, அவதூறெனப்படும் விஷயங்களை எடுத்துக் கொள்க. பி. க-ஐ நிரூபிக்க அவசியமான சாட்சியத்தை எடுத்துக்கொள்வோம். அது, "வாதி எளிதில் பேசக்கூடியவர். அவரை மௌன அங்கத்தினர் என்று எதிரி சொல்லிருப்பதால் எதிரி அவதூறு செய்தவராவார்" எனபதாகும். இந்த சாட்சியம் பி. ங-ஐ நிரூபிக்கத் தேவையான சாட்சியத்தினின்றும் வேறானதாயிருக்கவேண்டியது அவசியமாகும். பி. ங-ஐ நிரூபிப்பதற்கான சாட்சியம், "வாதி ஒரு பொழுதும் தேர்தல் வாக்குத்தத்தம் எதுவும் செய்ததில்லை. அவர் தேர்தல் வாக்குத்தத்தம் ஒன்று செய்து, பின்னால் அதை மீறி நடந்துகொண்டார் என்று எதிரி சொல்லியிருப்பதால், எதிரி அவதூறு செய்தவராவார்" என்பதாகும். இது போலவே தொடரின் மற்றவை பற்றியும்.

ஒரே காரியத்தைச் செய்யும்பொழுது, பல குற்றங்கள் செய்திருப்பதாய் வரும் சகஜமான வழக்குக்குத்தான் உருநி-பிரிவு பொருந்தும். உதாரணமாக,—தங்கள் நிலத்தை வசப்படுத்திக் கொண்டிருக்கும் ஒரு கூட்டத்தாரை ஐந்துக்கு மேற்பட்ட மனிதர்கள் தாக்கிச் சண்டையிட்டு, ஒருவரைக் கொன்று, மற்றவருக்கு காயம் உண்டாக்கினல் இ. பி. கோ. கசள, நஉந, சசள, ந0உ-பிரிவுகளின் கீழ்க் குற்றஞ்சாட்டுவது சரியாகும். அத்தகைய குற்றங்களை ஒரு தொடர் இனங்களின் கீழ் ஒரே குற்றச் சாட்டின்மேல் விசாரணை செய்வது சரியாகும்; சட்டத்திற்கும் அது இணங்கியதாகும். சாட்சியம் ஒன்றேயாயிருக்கும்; இடமும் ஒன்றேயாயிருக்கும்; காலமும் ஒன்றேயாயிருக்கும்.

அவ்வாறன்றி, இந்த வழக்கிலோ, சாட்சியங்கள் யாவும் வெவ்வேறாகும்—அவை வெவ்வேறாயிருந்துதானாகவேண்டும். சாட்டப்படும் குற்றங்கள் தனித்தனியானவை; வெவ்வேறு குற்றங்கள் ஒரே கடிதத்தில் குறிக்கப்பட்டிருப்பது தான் இதிலுள்ள சங்கதி.

ஆகவே, குற்றச் சாட்டிலுள்ள பிசகையும், ஒழுங்கீனத்தையும் எதிரி வினயமாய் ஆட்சேபிக்கிறார். இந்த ஆட்சேபமானது சுத்தமாய் சட்டசம்பந்தமானது; யாராலும் கேட்டுக்கொள்ளப்படாமலே, கோர்ட்டார் இதைக் கவனிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, இந்த ஆட்சேபணை உசிதமான

தன்று. ஆனாலும், கோர்ட்டாரது சௌகரியத்திற்காகவும், எதிரியின் நலன்களுக்குக் காப்பாகவும், இந்த ஆட்சேபணையை எழுத்து மூலமாய்ச் செய்துகொள்ளப்படுகிறது.

கீழ்க் கையெழுத்திட்டிருப்பவர் ஒரு குறிப்பைச் சேர்க்க, வினயமாய் அனுமதி கேட்டுக்கொள்கிறார். இந்த வழக்கில் (இருதரப்பாரது) ஆர்குமெண்ட்கள் இன்று காலை கோர்ட்டாரால் கேட்கப்பட்டன. அது, கோர்ட்டார் இரு தரப்பாரது சம்மதத்தையும் பெற்றுச்செய்த, மரியாதையான ஏற்பாடாகும். ஏனெனில், அது கோர்ட்டின் நடவடிக்கைக்கு நல்ல சௌகரியமாகும். கீழ்க் கையொப்பமிட்டிருப்பவர், மேற்குறித்த ஆட்சேபணைகளை வாய்மொழியாகச் சொல்லுவதற்காக மதுரையிலிருந்து இவ்வளவு தூரம், இன்று காலை, வந்திருக்கிறார்; இவ்விதம் தாம் செய்யக்கொண்ட உத்தேசத்தைக் கோர்ட்டாருக்கும், வாதி வக்கீலுக்கும் தந்தி மூலம் (முந்தியே) தெரிவித்துக்கொண்டிருக்கிறார். கோர்ட் நடந்துகொண்டிருந்த பங்களாவை, இவ்விஷயம் சம்பந்தமான விண்ணப்பத்தைச் செய்துகொள்வதற்காக, அடைந்த பொழுது, வாதியும் அவரது வக்கீல்களும் கோர்ட்டைவிட்டுச் சென்றுவிட்டதாகக் கோர்ட்டார் சொன்னார்கள். கீழ்க் கையொப்பமிட்டவர் இது சம்பந்தமாய் 'எக்ஸ்பார்ட்டி' விண்ணப்பம் ஒன்றைச் செய்ய உத்தேசித்து, அவ்விதம் செய்யத் தாம் கொண்ட உத்தேசத்தைத் தெரி

வித்துக்கொண்டார்; ஆனால் கோர்ட்டார் எழுந்திருந்து, கோர்ட்டு கலைந்துவிட்டதாகச் சொல்லிவிட்டார்கள். கோர்ட்டார் (கோர்ட்டைக் கலைக்க) எப்பொழுது எழுந்திருப்பது என்பதைத் தீர்மானிக்க, கோர்ட்டாருக்குப் பூரண உரிமையுண்டு என்பதை ஒத்துக்கொள்ளவேண்டியதே; என்றாலும், ஒரு வக்கீலிடம் காட்டவேண்டிய மரியாதையுடன் தாம் நடத்தப்படவில்லை என்பதைப்பற்றி, கீழ்க் கையொப்பமிட்டவர் உணர்ச்சி கொள்ளாமலிருக்க முடியவில்லை. இவ்வழக்கின் இருதரப்பு வக்கீல்களும் தொடர்ச்சியாக கோர்ட்டாரிடம் மிகுந்தமரியாதையுடன் நடந்துகொண்டு, அவருடைய உத்திரவுக்குக் கீழ்ப்படிந்து, காலமில்லாக் காலங்களில், மகத்தான சொந்த அசௌகரியத்தையும் கவனியாது, நாகரிகவாழ்வுக்கு வற்ற வசதிகள் நிறைந்திராத ஒரு இடத்தில் ஆஜராயிருந்திருக்கிறார்கள்; இவ்வுண்மை அவ்வுணர்ச்சியை ஆழ்ந்த தாக்குகிறது.

(ஒப்பம்) ஜார்ஜ் ஜோசப்.

௨௬—௧௦—௨௯.

எதிரி வக்கீல்.

——

ஒரு ரூபா அபராதம்.

வழக்கு நவம்பர்-மீ ௲-உ ஜட்ஜ்மெண்டு கூற வாய்தாப் போடப்பட்டிருந்தபடி கூறப்படாத தால், மறுபடியும், இராமனுதபுரத்தில் ௬-ம் தேதிக்கு ஒத்திப் போடப்பட்டது. அன்று பிற்பகல் ௩-மணிக்கு மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றத்துக்கு வந்தார். வந்ததும் வழக்கம்போல் பிராது கூப்பிடப் பட்டவுடன் இவ்வழக்கில் மாஜிஸ்ட்ரேட் கோவிந்த நாயர் தீர்ப்புக் கூறினர். இவ்வழக்கில் எதிரியாகிய ராய. சொக்கலிங்கன் ஆசிரியர் முறையில் விடுதலை செய்யப்பெற்றாரென்றும் அச்சிட்டு வெளி விடுவோர் என்ற முறையில் "இவர்களால் யாது பயன்" என்ற கட்டுரை வெளிப்போந்தமைக்காக ஒரு ரூபாய் அபராதம் கட்டவேண்டுமென்றும் அல்லது ஒரு நாள் வெண்காவல் தண்டனையென்றும் தீர்ப்பளித்தார். எதிரி ஒரு ரூபா அபராதத்தைக் கோர்ட்டில் கட்டிவிட்டுப் போட்மெயிலில் ௬இ-மணிக்குப் புறப்பட்டுவிட்டார்.

மாஜிஸ்ட்ரேட்டின் தீர்ப்பு.

மாஜிஸ்ட்ரேட் கூறிய தீர்ப்பின் முழு விபரம் வருமாறு :—

ராமனாதபுரம் சப் டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட் ஜாபிதா (பைல்) விலுள்ள காலண்டர் வழக்கு ௧௯௨௫-ம் வருஷத்திய ௨௩-ம் எண் கொண்டதில் (சொல்லப்பட்ட) தீர்ப்பு.

வாதி, காரைக்குடி பழனியப்ப செட்டியார் குமாரன் ஆவி. பழ. சிதம்பரஞ் செட்டியார்.

எதிரி, காரைக்குடி ராயப்ப செட்டியார் குமாரன் ராய. சொக்கலிங்கஞ் செட்டியார்.

இவ்வழக்கு ௪-௨-௧௯௨௫ ௳ பிரியாது கொடுக்கப்பட்டு, ௨௫-௨-௧௯௨௫ முதலிய தேதிகளில் விசாரணைக்கு வந்து இன்றுவரை ஆலோசனைக்கு நின்றது; நான் தீர்ப்புச்செய்து கீழ்க்கண்டதை உத்திரவிடுகிறேன்.

தீர்ப்பு.

வாதி, தேவகோட்டை டிவிஷனைச் சேர்ந்த காரைக்குடியில் வசிப்பவர்; நாட்டுக்கோட்டை செட்டிமார் சமூகத்தைச் சேர்ந்தவர். அவர் காரைக்குடி யூனியன் போர்டின் தலைவர்; தேவகோட்டை தாலுக்கா போர்டின் ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர். (௩௦-௭-௨௫ ௳ யிட்ட தமிழ் நிகழ்ச்சி விவரங்

களைப் பார்க்க). ராமநாதபுரம் ஜில்லா போர்டிலும் ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர். அவர் வருமான வரி செலுத்துபவர்; ௬௦௦௦ ரூபாய் அவர் வருமான வரி செலுத்துகிறார். அவர் கக௯உ௪-ம் ஆண்டில் ராவ் பகதூர் பட்டம் அளிக்கப்பெற்றிருக்கிறார்; ஜில்லா ஸகிண்டரிக் கல்வி போர்டில் ஒரு உறுப்பினர்; காரைக்குடி எஸ். எம். எஸ். ஹைஸ்கூலின் ஆயுட்காலத் தலைவர். மதுரையில் உள்ள, மதுரை—ராமநாதபுரம் ஜில்லா சுகாதார, பிரசவ சகாய, குழந்தைகள் நலச்சங்கத்தின் தலைவர்; குன்றக்குடி அஞ்சுகோவில் தேவஸ்தான நிர்வாக போர்டில் ஒரு அங்கத்தினர்.

உ. எதிரி, ராய. சொக்கலிங்கம் செட்டியார். இவரும் காரைக்குடி வாசியே; 'ஊழியனுக்கு' நிர்வாக அத்தியட்சகர்; எக்ஸிபிட் 'எப்' ஆக தாக்கல் செய்யப்பட்டிருப்பதும், காரைக்குடி மூன்றாவது வார்டில், கக௯௯-ம் இலக்கமுள்ள கட்டிடத்தில் பிரசுரிக்கப் பெறுவதுமான, 'ஊழியன்' என்ற பத்திரிகைக்குத் தாமே அச்சிடுவோரும் வெளியிடுவோரும் என்பதாக அறிவிப்பு (டிக்ளேர)ச் செய்துகொண்டிருப்பவர். முதலில் அப்பத்திரிகை 'தனவைசிய ஊழியன்' என்று வழங்கி வந்தது. அதன் பெயர் கக௯உ௫-ம் ஆண்டு ஜூன் மாதத்தில் "ஊழியன்" என்று மாற்றப் பட்டது. திருத்தப்பட்டபடிக்கான க௮௬எ-ம் வருடத்திய அச்சு—புஸ்தகப்பதிவு சட்டத்தின் எ-வது பிரிவின்படி, அப்பத்திரிகையில் யார் பெயர் ஆசிரியர் என அச்சிடப்பெற்றிருக்கிறதோ அவர் ஆசிரியர் எனக் கருதப்படவேண்டும். பத்திரிகையில் எதிரியின்

பெயர் ஆசிரியர் எனக் காணப்படுகிறது. ஆகையால், எதிரி அதன் ஆசிரியராகக் கருதப்படுகிறார்.

௩. 'ஊழியன்' காரைக்குடியில், எதிரியால், செவ்வாய்க்கிழமை தோறும் பதிப்புவித்து, அச்சிட்டு, வெளியிடப்பெறும் ஓர் தமிழ்ப் பத்திரிகை.

௪. அதன் க–௧௨–௧௯௨௫ ௳ இதழில் "இடி முழக்கம்" என்ற தலைப்பின் கீழ், பற்பல விஷயங்களைக் குறித்து விரிவுரைகள் கொண்ட ஒரு சில்லரைத் திரட்டு அடங்கியிருக்கின்றது. விரிவுரை செய்யப் பெற்ற விஷயங்களில், எக்ஸிபிட் 'பி'யாக தாக்கல் செய்யப்பட்ட 'இவர்களால் யாது பயன்' என்ற தலைப்புடன் கூடியது ஒன்றாகும்.

௫. தனது மதிப்புக்குப் பங்கம் செய்ய உத்தேசங்கொண்டு அல்லது தனது மதிப்புக்குத் தீங்கிழைக்கக்கூடியதெனத் தெரிந்து அல்லது நம்பக் காரணமிருந்து எழுதப்பெற்ற தம்மைப்பற்றிய அவதூறுகள் இவ்வுரையில் அடங்கியிருப்பதாக, வாதி கருதுகிறார். அவதூறு பிறரைப் பற்றியதாகவும் இருக்கிறது. ஆனால் பிறரைப்பற்றிய அவதூறுகளில் வாதிக்கு சம்பந்தமில்லை. அவாது பிரியாது தமது சொந்த விஷயமாகச் செய்யப்பெற்றது.

௬. எக்ஸிபிட் 'எ' ஆகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள பிரியாது தேவகோட்டை ஸப்டிவிஷனல் மாஜிஸ்டிரேட்முன் ௬-௧௨-௨௬ தேதி கொடுக்கப்பெற்றது. ஜில்லா மாஜிஸ்திரேட்டால், அவருடைய ௩0-௧-௨௭ தேதியிட்ட உத்திரவு மூலம் என்னிடம அது மாற்றப்

பெற்றது. முழுக்கட்டுரை (எக்ஸிபிட் 'பி')யும் அவ தாறு விஷயமாகும். பி-க முதல் அ வரையுள்ள எக்ஸிபிட்கள் பல பழிகளும், சாடைக் குறிப்புகளும், விரிவுரைகளுமாகும்.

எ. வாதியைத் தவிர, பிராசிகியூஷன் தரப்பு எழு சாட்சிகள் விசாரணை செய்யப்பெற்றனர். பிராசிகியூஷன் தரப்பு உ, ரு சாட்சிகள் தேவகோட்டை ரெவினியூ டிவிஷனல் ஆபீஸர்களும் எக்ஸ் அபிஷியோ (உத்தியோகமும் வகித்த) தேவகோட்டை தாலூக்கா போர்டு தலைவருமாவர். அவர்களது சாட்சியத்தின்படி, வாதி மௌன அங்கத்தினரன்று. அவர் கூட்டங்களில் வாதங்களில் கலந்துகொள்வதுடன், கூட்டங்களில் புத்திசாலித்தனமான யோசனைகள் கூறுவதும் வழக்கம். வாதி சாரைக்குடி யூனியன் ஜல சப்ளை சம்பந்தமான சில கடின விஷயங்களைத் தீர்க்க விசேஷமாய் அனுப்பப்பெற்றதை, பிராசிகியூஷன் தரப்பு இரண்டாவது சாட்சி ஒரு உதாரணமாய்க் கூறுகிறார். தாலூக்கா போர்டின் பல கூட்டங்களுக்கு வாதி ஆஜரானதாக, பிராசிகியூஷன் தரப்பு ரு-ம் சாட்சி கூறுகிறார். கூட்டங்களில் வந்த விஷயங்களில் வாதி சிரத்தை எடுத்துக்கொண்டார் என்று அவரும், முதல் சாட்சி சொல்லியவண்ணமே கூறுகிறார். வாதி கூட்டங்களில், சில விஷயங்களின் மீது, எழுந்து பேசியதும், வாதி தமது திட்டங்களுக்கு விரோதமாகப் போனதுகூட, ஞாபகமிருப்பதாக, அவர் கூறினார். மேலும், ககூஉச-ம் ஆண்டு மதுரையில் நடந்த ஸ்தலஸ்தாபன மகாநாட்டுக்கு வாதி வந்திருந்தார் என்றும், அவர் அம்மகாநாட்

டின் விஷயாலோசனைக் கமிட்டியில் ஒரு உறுப்பினரா யிருந்தார் என்றும், ஸ்தல ஸ்தாபனங்களில் கிராம உத்தியோகஸ்தர்களைச் சேர்த்துக் கொள்ளக்கூடாது என்பது பற்றிய விஷயத்தில் அவர் தமது அபிப்பிராயத்திற்கு மாறுபட்டதாகவும், யூனியன் போர்டு தலைவர் முறையில் வாதி பொது நலத்திற்கான சில வேலை செய்ததாகவும், பிராசிகியூஷன் தரப்பு ஐந்தாம் சாட்சி கூறுகிறார்.

அ. பிராஸிகியூஷன் தரப்பு நான்காம் சாட்சி ராமநாதபுரம் ஜில்லாபோர்டின் உதவி தலைவர். போர்டு முன் வந்த விஷயங்களில் செட்டிமார் நாடு சம்பந்தப்பட்டவைகளில் முக்கியமாய்த் தமது யூனியன் சம்பந்தப்பட்டவற்றிலும், விவாதங்களில் வாதி உற்சாகமான பங்கு எடுத்துக்கொண்டார் என்று அவர் கூறுகிறார். வாதி ஒரு தடவை ஜில்லா போர்டு தலைவரால் கேட்டுக் கொள்ளப்பட்டு, தான் அப்பொழுது ஜில்லா போர்டு அங்கத்தினராக இராமலிருந்தும், ஜில்லா போர்டு கூட்டமொன்றுக்குச் சென்று, காரைக்குடி யூனியனில் தொழில்வரி விதிப்பைப்பற்றிப்பேசிய ஒரு சம்பவத்தைச் சாட்சி குறிப்பிடுகிறார். ராமநாதபுரம் ஜில்லா போர்டின் ககூஉரு-உ௬-ம் வருஷத்திய நிர்வாக அறிக்கைகளும், காரைக்குடி யூனியன்மீது தேவகோட்டை தாலுக்காத் தலைவர் செய்த மேற்குறிப்பு (எண்டார்ஸ்மெண்ட்) மான இ, இ-க எக்ஸிபிட்களையும் அவர் தாக்கல் செய்துள்ளார்.

௬. இந்த எக்ஸிபிட்களில் வாதியின் வேலையைப் புகழும் மொழிகள் அடங்கியிருக்கின்றன. (எதிரி

தாப்பு) எக்ஸிபிட் அ, (வாதி தாப்பு) இ; இ-௧ எக்ஸி
பிட்களுக்கு எதிரிடையாக தாக்கல் செய்யப்பட்டிருக்
கிறது. வழக்கு சம்பந்தப்பட்ட வரையில், இரண்டும்
அவசியமில்லை. ஆடிட்ரிபோர்ட்டும் (கணக்குப் பரி
சோதனை அறிக்கையும்) அவசியமே இல்லை. வாதியின்
நடத்தைக்கு விரோதமாக (பிரதி?) வாதி எவ்வித
ஒழுக்கக்குறைவு கொண்டவராகவும் இதுகாட்டவில்லை.

௧௦. பிராசிக்யூஷன் தாப்புமூன்றும் சாட்சிதேவ
கோட்டையில் ஒரு வக்கீல். தாலுக்கா போர்டிலும்
ஜில்லா போர்டிலும் அவர் அங்கத்தினர். கூட்டங்களில்
(மீட்டிங்குகளில்) வாதி தம் அபிப்பிராயத்தைத் தெரி
விக்கக்கூடியவர் என்பதை அவரது சாட்சியம் காட்டு
கிறது. தாமும்வாதியும் ஸ்தலஸ்தாபனமகாநாட்டுக்குப்
பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதாகவும், அம்
மகாநாட்டில், வாதி, யூனியன் போர்டுக்கு உப தலைவர்
கள் நியமிப்பதும், ஸ்தல ஸ்தாபனங்களில் கிராம உத்
தியோகஸ்தர்களைச் சேர்த்துக்கொள்ளாதிருப்பதும்
கூட, விருப்பத்தக்கவை என யோசனை கூறியதாக
சாட்சி கூறுகிறார். வாதி அவரது 'ரிபோர்ட்டு'க்காக
அனுப்பப்பெற்ற ஆக்கிரமண சம்பந்தமான 'பேப்பர்'
களின் மீதும் தொழில்வரி அப்பீல்களின் மீதும்
ரிபோர்ட் செய்வது வழக்கம் என்றும் சாட்சி கூறு
கிறார். வாதி அதிகாரிகளுடன் சும்மா சேர்ந்துகொள்
வதில்லையென்றும், அவர் பொதுஜன ஊழியத்தில் உற்
சாகம் கொண்டவரென்றும் முடிவில் சாட்சி கூறுகிறார்.

௧௧. பிராசிக்யூஷன் தாப்பு ஆறும் சாட்சி காரைக்
குடியிலுள்ள வாசகசாலைத் தலைவர். சம்பந்தப்பட்ட

கட்டுரையை அவர் படித்தார். அவரோடு கூடவிருந்த வேறு பலரும் படித்தார்கள். எல்லா ஜனங்களுடைய பொதுமான நன்மைக்கு மாறாக, வாதி ஜில்லா போர்டு தலைவரது விருப்பங்களுக்கு இணங்கிவிட்டார் என்ற அபிப்பிராயத்தை சாட்சி கொண்டார். கட்டுரையைப் படித்த மற்றவரும் அதே அபிப்பிராயத்தைத் தெரிவித்தார்கள். வாதி நன்மை தீமைகளைப் பகுத்தறிய வேண்டாமா என்றும், ஜனங்களுடைய நன்மையை வாதி கவனிக்கவேண்டாமா என்றும், சம்பந்தப்பட்ட கட்டுரை கூறுவதுபோல் வாதி நடப்பது சரியா என்றும் வாதியை அவர் கேள்விகள் கூடக்கேட்டார். இந்த சாட்சி வருமானவரி செலுத்துபவர்; இங்கும் பர்மாவிலுமாய் அவர் ௬,000 ரூபாய் வருமானவரி செலுத்துகிறார்.

௧௨. எதிரி 'ஊழியன்' பத்திரிகைக்கு ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவருமாக இருக்கிறார் என்று பிராசிகியூஷன் தரப்பு ஏழாம் சாட்சி கூறுகிறார்.

௧௩. வாதிக்கும் எதிரிக்குமுள்ள சம்பந்தம் மிகுதியும் நேசப்பான்மை கொண்டதாக இருக்கவில்லையென்று பிராசிகியூஷன் தரப்பாரால் குறிப்பிடப் பெற்றிருக்கிறது. இதற்கு ஆதாரமாக, ஸி. டி. எக்ஸிபிட்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. 'ஊழியன்' காரியாலயத்துக்குக் கூட்ட (மீட்டிங்கு) அறிவிப்புகள் ஒழுங்காகக் கிடைத்து வரவில்லையெனப்புகார் செய்து வாதிக்கு ஊழியன் காரியாலயத்தாரால் எழுதப்பெற்ற கடிதங்கள் இவை. யூனியன் போர்டு கட்டிடத்தில் தற்செயலாய் வாதியும் எதிரியும் ஒரு தடவை சந்தித்த

தாகவும் குறிப்பிடப்பெற்றிருக்கிறது. வாதி சொல்லிய புத்திமதியை அலட்சியம் செய்து, 'என்னிஷ்டப்படியே நான் செய்வேன்' என்று அப்பொழுது எதிரி சொன்னதாகவும் கூறப்படுகிறது.

கச. இந்த சாட்சியத்தின்மேல், எதிரியின் மீது இ. பி. கோ. ருOO-வது பிரிவின்கீழ், அவர் (க) ஆசிரியர், (உ) அச்சிடுவோர், (ரு) வெளியிடுவோர் என்ற முறையில், குற்றப்பத்திரிகை படிக்கப்பட்டது; அதற்கு அவர் தாம் குற்றவாளியல்லவென வாதித்தார்.

எதிரியின் எழுத்து மூலமான வாக்குமூலத் (ஸ்டேட்மெண்ட்,)தில் கண்டுள்ளபடி, எதிரியின் வாதம் யாதெனில்,

(க) இக்கட்டுரை வெளியான காலத்தில் எதிரி காரைக்குடியில் இல்லை; ஆகவே பிரியாது செய்யப்பட்ட கட்டுரைக்கு அவர் குற்றப் பொறுப்புடையவரன்று;

(உ) வாதியிடம் எதிரிக்கு வருத்தமாவது விரோத எண்ணமாவது கிடையாது;

(ரு) சம்பந்தப்பட்ட விஷயத்திற்கு வாதி காரணங்காட்டிய மறுப்பு அனுப்பவில்லை;

(ச) ராமனாதபுரம் ஜில்லாபோர்டு உO-கஉ-உரு வ கூடிய கூட்டத்தின் நிகழ்ச்சிகளில் பொதுஜன நன்மைக்கான விஷயங்களின்மீது எழுதப்பெற்ற நேர்மையான வியாக்கியானமாகும் இக்கட்டுரை. இதில் துவேஷமொன்றும் இல்லை; இது சந்தர்ப்பத்தின் தேவைக்கு அதிகப்படியானதல்ல;

(௬) பி-௧ முதல் அ-வரையிலுமுள்ள எக்ஸிபிட்கள் வாதியைக் குறிப்பனவே அல்ல; ஆகவே வழக்குத் தொடர வாதிக்கு உரிமை இல்லை;

(௭) பட்டதாரியும், எதிர்ப்பினுலாவது அதிகமாகப் பேசுவதனுலாவது அதிகாரிகளுக்குத் திகைப்பு உண்டாக்க விரும்பாது அவர்களுக்கு உதவியாக அவர்களுடன் ஒத்துழைப்பவருமான ஒரு வகைப் பொது ஜன ஊழியரைப்பற்றிய ஒரு குறிப்புரை யாகும் அது;

(௮) பி-௧ முதல் அ-வரைக்குமுள்ள எக்ஸிபிட்களில் மரபுச் சொற்களும் வழக்கச் சொற்களும் அடங்கியிருக்கின்றன; பொது ஜனங்களுக்கிடையே வழங்கி வரும் பத்திரிகைகளில் அவை ஒரு விசேஷ அர்த்தத்தைப் பெற்றிருக்கின்றன; அவற்றைச் சொல்லுக்குச் சொல் அப்படியே பொருள் கொள்ளக்கூடாது;

(௯) கூறப்படும் குறைகள் தாமே அவதூறானவை அல்ல;

(௧) அந்தக் குறிப்புரை பொது நலத்திற்கான ஒரு விஷயத்தைப்பற்றியது; இ. பி. கோ. ௫௱௯ பிரிவின் ௩, ௬-வது விலக்குகளின் கீழ் அது காப்புக் கொண்டது;

(௧௦) கூறப்பட்ட விஷயங்கள் பொருளில் உண்மையும் சரியானவையுமாகும்; அவற்றை வெளியிட்டது பொது நலத்திற்காகவே; இது இ. பி. கோ. ௫௱௯ பிரிவின் முதல் விலக்கின்படிக்கானதாகும்.
என்பதே.

௧௫. எதிரி தரப்புக்கு ஆறு சாட்சிகள் விசாரிக்கப்பெற்றனர். நாட்டுக்கோட்டை செட்டிமாரிடையே

எளிய வாழ்வு வாழவேண்டுமென்றும், ஆடம்பர வாழ்வு வாழ வேண்டுமென்ற மற்றதுமான இரு வகை அபிப்பிராயம் கொண்டோர் இருந்து வருவதைக் காட்டவே, அநேகமாக முதல் சாட்சியும் ஆறும் சாட்சியும் விசாரிக்கப்பெற்றனர். எதிரிதரப்பு முதல் சாட்சி வாதி பிந்திய வகுப்பைச் சேர்ந்தவர் என்று கூறுகிறார்; எதிரி தரப்பு ஆறுவது சாட்சியின் சாட்சியத்தின்படி, அவர் இரு வகுப்பையும் சேர்ந்தவராவர். எதிரி தரப்பு இரண்டாம் சாட்சி அ-எக்ஸிபிட்டைத் தாக்கல் செய்வதற்கான சம்பிரதாயமான சாட்சி அந்த எக்ஸிபிட், காரைக்குடி யூனியன் போர்டின் ௧௯உ௩, உ௪, ௧௯உ௪, உ௫ ஆண்டுகளின் ஆடிட்டிரிபோர்ட் (கணக்குப் பரிசோதனை அறிக்கை) ஆகும். எதிரி தரப்பு மூன்றும் சாட்சி ஒரு வக்கீல்; சிவகங்கை தாலுக்கா போர்டின் தலைவர்: ஜில்லா போர்டின் ஒரு உறுப்பினர். எதிரி தரப்பு நாலு ஐந்தாம் சாட்சிகளும் ஜில்லா போர்டு அங்கத்தினர்களே. எதிரி தரப்பு மூன்றும் சாட்சி பிராஸிகியூஷன் தரப்பார் சொல்வதை மறுத்து, வாதி ஜில்லா போர்டு கூட்டங்களில் ஒரு பொழுதும் பேசினதில்லை என்று சொல்லுகிறார். ஆனால், வாதியும் எதிரி தரப்பு மூன்றும் சாட்சியும் சேர்ந்தாற்போல் ஒரே ஒரு சந்தர்ப்பத்தில் தான் ஜில்லாபோர்டு கூட்டங்களில் ஆஜராயிருக்கிறார்கள். ஆகவே, எதிரி தரப்பு மூன்றும் சாட்சியின் சாட்சியம் அதிக மதிப்புடையதன்று. எதிரி தரப்பு மூன்றும் சாட்சி தாமும் வாதியும் தேவகோட்டை தாலுக்கா போர்டில் ஏறக்குறைய இரண்டு ஆண்டுகள் இருந்த

தாகவும், அக்காலத்தில் வாதி பேசியதில்லை யென்றும் கூறுகிறார். இதுவும் ப்ராசிக்கியூஷன தரப்பு ஐந்தாம் சாட்சியின் சாட்சியத்தால் மறுக்கப்படுகிறது. பிராஸிக்யூஷன் தரப்பு ஐந்தாம் சாட்சி இந்தக்காலத்தில் தேவகோட்டை தாலுக்கா போர்டு தலைவராக இருந்திருக்கிறார். பிராஸிக்யூஷன் தரப்பு இரண்டாம் சாட்சியின் சாட்சியத்தை எடுத்துக்கொண்டாலுங்கூட, இது சம்பந்தமான எதிரி தரப்பு மூன்றாம் சாட்சியத்தை முடிவானதாக ஏற்றுக்கொள்ள முடியாது. பிராஸிக்யூஷன் தரப்பு இரண்டாம் சாட்சியின் சாட்சியம் தாலுகா போர்டு கூட்டங்களில் வாதி பேசுவதுண்டு என்பதாகும். ஜில்லாபோர்டு கூட்டத்தில் காரைக்குடி யூனியன் தொழில்வரி விதிப்பைப்பற்றி விவாதிக்கப்பட்டபொழுது, அதைப்பற்றி வாதி பேசவில்லை யென்று எதிரிதரப்பு நான்காம் சாட்சி கூறுகிறார். ஜில்லாபோர்டு கூட்டங்களில் வாதி ஒரு பொழுதும் பேசவில்லையென்றும், அவர் எப்பொழுதும் ஜில்லா போர்டு தலைவரைத் தாங்கியே வந்தாரென்றும் கூட சாட்சி சொல்லுகிறார். தொடர்ந்து மூன்று மாதங்கள் தாமும் கூட்டங்களுக்கு ஆஜராகவில்லையென்றும், தாமும் திரும்பப் பதவியளிக்கப்பெற்றதாகவும் சாட்சி ஒப்புக்கொள்ளுகிறார். வாதியும் எதிரி தரப்பு நான்காம் சாட்சியும் சேர்ந்து ஆஜராயிருந்தது இரண்டே தடவைகளில் தான். ஆகையால், வாதி எப்பொழுதும் ஜில்லா போர்டு தலைவரை ஆதரித்தார் என்று சாட்சி கூறிய வாக்குமூலம் மற்றக்கூட்டங்களில் நடந்தவற்றை ஆதாரமாகக்கொண்டிருக்கவில்லை; எனவே, அதற்கு அனு

பவ பூர்வமாய் மதிப்பில்லை. எல்லாவற்றிற்கும் மேலாக எதிரி தரப்பு நான்காம் சாட்சியுமுள்பட எவரும் இந்தக்கூட்டங்களில் ஜில்லாபோர்டு தலைவருடன் வேற்றுமைப்படவில்லை. தொழில்வரி விஷயம் விவாதிக்கப்பட்ட ௮-௧௧-௨௪ தேதி வாதி ஜில்லா போர்டில்உறுப்பினரல்லவென்றும், அவர் அந்த சந்தர்ப்பத்தில பேசவில்லையென்றும் எதிரிதரப்பு ஐந்தாம்சாட்சிகூறுகிறார். வாதியுடன் வந்திருந்த யாரோ ஒரு தலைமை உபாத்தியாயர் பேச எழுந்ததாக, அவர் சொல்லுகிறார். என்றாலும், அவர் ஜில்லாபோர்டு உறுப்பினரல்லவாதலால், ஜில்லா போர்டு தலைவரால் அவர் நிறுத்தி விடப்பெற்றார் என்றும் கூறுகிறார். வாதி பேசவில்லை யென்பது நிச்சயம் என்றும் வேறு யாரும் அந்த சந்தர்ப்பத்தில் பேசியது தமக்கு ஞாபகம் இல்லையென்றும் அவர் கூறுகிறார். இதற்கு எதிரிடையாக பிராசிக்யூஷன் தரப்பு நான்காம் சாட்சியான உதவித்தலைவரின் சாட்சியம் இருக்கிறது. வாதி ஆஜராகியிருந்ததைப்பற்றிய அதிக விவரங்களை அவர் சொல்லுகிறார். அவர் ஜில்லா போர்டு தலைவரால் வரவழைக்கப்பெற்றாரென்றும், சில விஷயங்களைப்பற்றி விளக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டாரென்றும் அவர் சொல்லுகிறார். இந்த சந்தர்ப்பங்களில், தொழில்வரி விதிப்புக்கு சாதகமாகவோ பாதகமாகவோ வாதி அவ்விஷயத்தைப்பற்றி ஏதேனும் சொல்லியிருப்பார் என்பது சம்பாவிதமே. ஜில்லா போர்டு கூட்டங்களில் தாம் எந்த விஷயத்தைப்பற்றியேனும் பேசியதாகத் தமக்கு ஞாபகமில்லையென்றும், ௮-௧௧-௨௪ ல் நடந்த விவாதத்திற்கு ஏதும் பிரமே

யம் ஏற்பட்டதா என்பதும் தமக்கு நினைவில்லையென்றும் எதிரி தரப்பு ஐந்தாம் சாட்சியே கூறுகிறார். இதை எடுத்துக்கொண்டால் தராசு வாதிக்குச் சாதகமாகச் சாய்கிறது. எனவே, அவர் (வாதி) அந்த சந்தர்ப்பத்தில் பேசினார் என்ற முடிவுக்கு நான் வந்தேன்.

கரு. உ௦-க-உரு-வயில் ஜில்லா போர்டு கூட்டம் ஒன்று நடந்தது. 'ஊழியனின்' க-கஉ-உரு-வ வெளியீட்டில், வழக்குத் தொடரப்பெற்றுள்ள கட்டுரை வெளிவந்திருக்கிறது.

கஎ. துவக்கத்தில், தாக்குதல்கள் எவ்வளவு தூரம் உண்மை விஷயங்களை ஆதாரமாகக் கொண்டிருக்கின்றன என்பதை நிச்சயித்துக்கொள்வது ஒரு வேளை அதிக சௌகரியமாயிருக்கும்.

கஅ. பி-அ எக்ஸிபிட்டை பி எக்ஸிபிட்டின் முந்திய பகுதிகளுடன் சேர்த்துப்படித்தால் பி எக்ஸிபிட்டில் உள்ள தாக்குதல் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அங்கத்தினராகிய வாதி தொடர்ந்து மூன்று மாதங்கள் கூட்டங்களுக்கு ஆஜராகவில்லையென்பதும், மற்றவர்களுடன் அவரும் திரும்பப் பதவி அளிக்கப்பெற்றார் என்பதுமாகும். ஜில்லா போர்டு அங்கத்தினர் என்ற முறையில் வாதியின் வேலையை இது குறிப்பிடுகிறது என்பது தெளிவு. அவர் ௩க—௩—உச-வ தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் ஆஜரான அடுத்த கூட்டம் உஎ—௯—உசஉ யில் கூடியது. அக்கூட்டத்தில் அவர் ராஜவிசுவாசப் பிரமாணம் செய்தார். அவர் மறுபடி தேர்ந்தெடுக்கப்பட்டார். பிறகு அ—கக—உச-வ

கூட்டத்துக்கு ஆஜரானர். அதில் மறுபடியும் ராஜவிசுவாசப்பிரமாணம் செய்தார். மறுபடியும் ஆஜராகத் தவறி, ஸ்தானத்தை இழந்தார். ஆனல், கO—ரு—உருவ கூட்டத்தில், அதில் அவர் ஆஜராகாமலிருந்தும், திரும்ப அவருக்கு பதவி அளிக்கப்பட்டது. க-ச-உருவ ஆஜராகி, மறுபடியும் ரு—அ—உரு-வ வரையில், அவர் ஆஜராகவில்லை. ரு—அ—உச-வ ஆஜரானர். இக்காலத்தில் அவர் பதவியை இழந்திருந்ததால், அக்கூட்டத்தில் திரும்பப் பதவி அளிக்கப்பெற்ருர். மறுபடியும் ஆஜராகத்தவறி, தமது பதவியை இழந்தார். மறுபடியும், அந்தத்தேதியில் அவர் ஆஜராகாதிருந்தும் அவர் திரும்பப் பதவி யளிக்கப்பெற்றதுடன், அன்று தினமே இரு சப் கமிட்டிகளிலும் அங்கத்தினராக நியமிக்கப்பெற்ருர்.

கக. பிரசுரிக்கப் பெற்றிருக்கிற ஜில்லாபோர்டு நிகழ்ச்சி விவரங்களில் காண்கிறபடி, ருக—ரு—உசவ முதல் உO—கக—உருவ வரையில் மொத்தம் கரு கூட்டங்கள் நடைபெற்றிருக்கின்றன. வாதி ச கூட்டங்களில் ஆஜராகியிருக்கிருர்; மற்றவைகளில் ஆஜராகவில்லை. உக மாத காலத்தில் மும்முறை வாதி திரும்பப்பதவி பெற்ருர் என்பதும் தெளிவு. தாம் ஆஜராகாமைக்குக் காரணம் தமது மருமகன் நோயுற்றிருந்தமையென்றும், மாதக்கூட்டங்களில் ஆஜராகாத விஷயத்தில் மூன்று மாதவிதி தம்மீதும் பிறர் மீதும் கடினமாயிருந்ததென்றும், அதன் பயனக, தம்மைப்போலவே பல உறுப்பினர்களுக்குப் போர்டில், திரும்பப் பதவி யளிக்கவேண்டி வந்ததென்றும் வாதி சமாதா

ணம் கூறுகிறார். இது செல்லத்தக்க சமாதானமாயி ருக்கலாம்; ஆனால், அ எக்ஸிபிட்டில் குறிக்கப்பட்டி ருப்பது போன்ற ஒரு வியாக்கியானத்தைப் பொது ஜன சாதனமான ஒரு பத்திரிகை எழுத நியாயமானகார ணங்கள் கொண்டிருக்க வில்லையா என்பது கேள்வி. மேற்சொல்லப்பட்ட விஷயங்கள் மீது எக்ஸிபிட் பி-அ முற்றிலும் நியாயமானது என்று நான் கருதுகிறேன்.

உ௦. வாதியும் அவர் போன்றோரும் எந்தக்கூட்டங் களுக்காவது ஆஜராகும்பொழுது கூட, பேசுவதென்ற கெட்ட வழக்கம் அவர்களிடம் கிடையாதென்பது அடுத்த தாக்குதல். இது வாதி ஒருபொழுதும் பேச வில்லை என்ற பொருளைக்கொண்ட பரிகாசமான சொற் றொடராகும். பிராசிகியூஷன் தரப்பு உ, ௩, ௪, ௫ சாட்சிகள் இதை மறுக்கிறார்கள். நான் ஏற்கனவே அவர்களது சாட்சியங்களின் பகுதிகளை ஆய்ந்திருக் கிறேன்.

உக. தாலூக்கா போர்டுகளின் இரு பிரிவினை, சர்க்கார் கிராண்டைப் (உதவிதனம்) பங்கிடுசெய்தல், திருப்புல்லாணி டிராம் பாதை, ராமேஸ்வரம் ஜலவேலை முதலிய பல விஷயங்களில் வாதி பேசியிருப்பதாகச் சொல்லப்படுகிறது. இதை மறுக்க, பிரசுரிக்கப்பெற்ற ரிக்கார்டு (தஸ்தாவேஜி) களில் அவற்றைப்பற்றிக் குறிப்பிடவில்லை என்பதைத் தவிர (வேறு) ஒன்றும் இல்லை.

உஉ. எதிரியின் கட்சி பிரசுரம் செய்யப்பெற்ற கூட்ட நிகழ்ச்சிகளைத் தாம் சார்ந்ததாகவும், பிரசுரிக்

கப்பெற்ற நிகழ்ச்சி விவரம் அக்கூட்டங்களில் நடந்த வைப்பற்றிய உத்தியோகமுறை தஸ்தாவேஜி ஆகும் எனவும் சொல்வதாகும். நிகழ்ச்சி விவரங்களிற் காணப் படுவதன்படி, வாதி ஒரு பொழுதும் பேசவில்லை என் பதில் சந்தேகமில்லை. அவ்விதமே வேறு பலரும். ஆனால், பிரசுரிக்கப்பெற்ற நிகழ்ச்சி விவரம் கூட்டங் களில் நடந்த எல்லாவற்றினுடையவும் முழு அறிக்கை (ரிபோர்ட்) என்று சொல்லமுடியாது. பிராசிகியூஷன் தரப்பு நான்காம் சாட்சி, உபதலைவர், அப்படியல்ல என்று கூறுகிறார். ஸ்தல ஸ்தாபனங்களின் சட்டப் படி, நடந்த எல்லாவற்றையும் பற்றிய விரிவான விவ ரத்தைப் பிரசுரிக்கவேண்டியது தேவையில்லை. இந் நிகழ்ச்சிக் குறிப்புகளை மேலெழுந்தவாரியாகப் படித் தாலும், பிரசுரிக்கப்பட்டதைவிட அதிகமாகச் சில விஷயங்களும் அக்கூட்டங்களில் நிகழ்ந்துள்ளன என் பதை அவைகாட்டும். இக்கூட்டங்களில் என்ன நிகழ் கின்றன என்பதை, பிறர் நடத்தையின் மீது தாம் எவ் விதக் குறிப்பையும் செய்யுமுன், அப்படியே நிச்சய மாய்த் தெரிந்துகொண்டிருக்கவேண்டியது எதிரியின் வேலையாகும். எதிரி புத்திமதி சொல்லும் வேலையை ஏற்றுக்கொண்டார். அது தானாக மேற்போட்டுக் கொண்ட கடமை என்பதில் சந்தேகமில்லை. நாட்டின் சமுதாய நன்மைக்கும் அரசியல் நன்மைக்கும் பணக் காரர் எவ்வளவு அவசியமோ அவ்வளவு அவசியமான வர் அவரும். ஏனெனில், வழிதப்பிப்போவோருக்கு இவர் ஒரு திருத்தக்காராராக உழைக்கிறார். ஆனால், அவ்வேலையை இவர் ஏற்றுக்கொள்ளுமுன், புத்திமதி

சொல்லும் கடமைச் சுமையைத் தம்மீது போட்டுக்கொள்வதற்கு அவசியமானதகவல்களெல்லாம் தம்மிடமிருக்கிறதா என்பதை அவர் கவனித்திருக்க வேண்டும். கூட்டங்களின் நிகழ்ச்சி விவரங்களை எழுதியனுப்ப நம்பத்தகுந்த நிருபர்களை நியமிக்கப்போதிய அளவு தாம் செல்வவானல்ல என்பது வாத மாகாது. பிறரைப்பற்றிய விஷயங்களைப் பிரசுரிப்பதில் தகுந்த கவலையும் எச்சரிக்கையும் அவர் எடுத்துக்கொண்டிருக்க வேண்டியதுடன், அவை சரியா என்பதைத் தமக்குத் திருப்திகரமாய்த் தெரிந்துகொண்டிருக்கவும் வேண்டும். இது செய்யப்படவில்லை.

உகூ. ஸ்தல ஸ்தாபன மகாநாட்டில் வாதி பேசியதாகச் சொல்லப்படுகிறது. மகாநாட்டின் உறுப்பினராக வாதி தேர்ந்தெடுக்கப்படவில்லை என்று வாதிக்கப்படுகிறது. அதற்கு ஆதாரமாக (எதிரி தரப்பு) எக்ஸிபிட் ரு-எ தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது அதில் வேறு இருவர் பெயர்கள் குறிக்கப்பட்டிருந்தாலும், வாதியின் பெயர் குறிக்கப்பட்டிருக்கவில்லை. ஆனால், (தேர்தலுக்குப் பிறகு இறந்துபோன) சொக்கலிங்கச் செட்டியாரது ஸ்தானத்தில் வாதி அம்மகாநாட்டுக்குப் பிரதிநிதியாக ஆஜரானார் என்று பிராசிகியூஷன் தரப்பு ருந்தாம் சாட்சி கூறுகிறார். மேலும், வாதி வாஸ்தவமான தேர்தல்மூலம் பிரதிநிதியானரா அல்லது சுற்றறிக்கை (ஸர்க்குலேஷன்) மூலம் பிரதிநிதியாக எடுக்கப்பட்டாரா என்பதைத்தாம் சொல்ல இயலாது என்றும் அவர் கூறுகிறார். பிராசிகியூஷன் தரப்பு ருந்தாம் சாட்சி அந்தக்காலத்தில் தாலுக்காபோர்டு தலைவர்.

எக்ஸிபிட் ௫-௭ இருந்தாலும், வாதி சுற்றுக்கடித மூலம் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கக் கூடியது சாத்தியமே. எப்படியிருப்பினும் சரி, வாதி மகாநாட்டுக்கு ஒரு பிரதிநிதியாய் ஆஜரானார் என்பது நிச்சயமே என்று பிராஸிகியூஷன் தரப்பு ஐந்தாம் சாட்சி கூறுகிறார். வழக்கின் தேவைக்கு அதுபோதும்.

௨௪. அடுத்த தாக்குதல் (எக்ஸிபிட் பி-௨௩) வாதியும் அவர்போன்ற பிறரும் எழுந்திருந்து அதிகாரிகள் பக்கம் ஓட்செய்யத் தயாராயிருப்பார்கள் என்பதும், இவ்விதம் சர்க்காரிடம் 'நல்ல பிள்ளைகள்' என்ற பெயரைப் பெறுவார்கள் என்பதுமாகும். இதற்கு விரோதமாக, பிராஸிகியூஷன் தரப்பு ௩, ௪, ௫-ம் சாட்சிகளின் சாட்சியம் இருக்கிறது. பிராசிகியூஷன் தரப்பு மூன்றும், சாட்சி வாதி பொதுஜன ஊழியத்தில் உற்சாகம் கொண்டவரென்றும், சும்மா அதிகாரிகள் பக்கம் சேரமாட்டாரென்றும் கூறுகிறார். காரைக்குடி யூனியன் தொழில் வரி விதிப்பு சம்பந்தமாயும், கண்டனூர் யூனியன் இரு பிரிவு விஷயத்திலும், வாதி ஜில்லாபோர்டு தலைவர் அபிப்பிராயத்திற்கு வேறுபட்டார் என்று பிராசிகியூஷன் தரப்பு ஐந்தாம் சாட்சி வாதிக்குச் சொல்லியிருக்கிறார் என்றாலும், வாதி அவரினின்றும் வேறுபட்டு, ஒதுக்குவதற்குச் சாதகமாகப் பேசினார். பிராசிகியூஷன் தரப்பு ஐந்தாம் சாட்சி தேவகோட்டை தாலுக்காபோர்டு தலைவர்; அதோடு கூட அந்த இடத்தின் ரெவின்யூ டிவிஷனல் ஆபீஸர். கூறப்பட்ட குறைக்கு அவரது சாட்சியம் நன்கு விரோதமாயிருக்கிறது. இது சம்பந்தமாய் ஜில்லாபோர்டு

தலைவர் உத்தியோகஸ்தரல்லாத ஒரு கனவான் என்பதைக் குறிப்பிடலாம். (எனவே,) 'அதிகாரிகள் பக்கம் ஓட்டுச் செய்தல்' என்பதினுடையவும், சர்க்காரிடமிருந்து 'நல்ல பிள்ளைகள்' என்ற பெயரை வாங்குதல் என்பதினுடையவும் சரியான கருத்து விளங்கவில்லை. இக்கூற்றுக்கு ஆதாரமாக எதிரிதரப்பு வக்கீல் ஒரு தனித்த உதாரணத்தையும் வெளிப்படுத்தவில்லை.

௨௫. சாதாரணக் கூட்டங்களுக்குக்கூட ஆஜராக முடியாவிட்டாலும், வாதியும் பிறரும் எப்படியோ கமிட்டிகளில் பதவிபெற்று விட்டனர் என்பது பி-௪௫ எக்ஸிபிட்களிலுள்ள தாக்குதல். ௨௦-௧௧-௨௫ம் தேதிக் கூட்டத்தில் வாதி இரண்டுகமிட்டிகளில் உறுப்பினராய் நியமிக்கப்பட்டார் என்று காண்கிறது. வாதி அக்கூட்டத்தில் ஆஜராகவில்லை என்பது தெளிவாக விருக்கிறது. கமிட்டியில் அவர் உறுப்பினராயிருப்பதுபயனாயிருக்கும் என்று அக்கூட்டம் கருதக்கூடிய அவ்வளவு பயனுடையவராக வாதி இருக்கலாம்; அதனால், வாதி தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கலாம். ஆனால் குறிப்புரை தரும் பொருள், வாதி தாம் தேர்ந்தெடுக்கப் பெறுவதற்கு முயற்சி செய்திருக்கிறார் என்னும்படி யிருக்கிறது. ௨௦-௧௧-௨௫ம் தேதிக் கூட்டத்தில் அவர் ஆஜராகாதிருப்பது, தேர்தலில் அவர் முயற்சி யெடுத்துக்கொண்டார் என்ற உத்தேசத்தை மறுப்பதாக இருக்கிறது. கமிட்டிக்குத்தாம் தேர்ந்தெடுக்கப்பட்ட வாதி என்ன முயற்சி எடுத்துக்கொண்டார் என்பதை எதிரிதரப்பார் ருசுப்பிக்கவில்லை.

உ௬. வாதியும் பிறரும் தாங்கள் இதைச்செய்யப்போவதாகவும் அதைச் செய்யப்போவதாகவும் பொது ஜனங்களிடை கூறி உள்ளே சென்றபின் வாய்மூடி, மௌனமாக, அமைதியாக நாற்காலிகளில் அமர்ந்திருக்கிறார்களென்பதும், இவ்விதம் ஜனங்களை ஏமாற்றுகிறார்களென்பதும் பி-ரு, எ எக்ஸிபிட்களில் அடங்கியுள்ள தாக்குதல். தாம் எவ்விதச் சுற்றறிக்கையும் விடுக்கவில்லையென்றும், ஒட்டருக்கு எவ்வித வாக்குத்தத்தமும் செய்யவில்லையென்றும் வாதி கூறுகிறார். இதற்கு எதிரிடையான சாட்சியமொன்றும் இல்லை. இத்தகைய சந்தர்ப்பங் (கேசு)களில், எப்பொழுதும் தானாகவே அடங்கியுள்ள ஒரு வாக்குத்தத்தம் இருக்கிறது என்பதாக வாதிக்கப்படுகிறது. இந்த அம்ச (பாயிண்ட்)த்தின்மீது வாதியைக் குறுக்கு விசாரணையில் கேட்டிருக்கவேண்டியது எதிரியைச்சேர்ந்தது. இது செய்யப்படவில்லை. 'இம்போஸிங்' (ஏமாற்றல்) என்ற வார்த்தை ஆங்கிலத்தில் தீய கருத்துக்கொண்டது, தமிழில் உபயோகிக்கப்பட்டுள்ள சொல் 'ஏமாற்ற' என்பதாகும். இது எதிர்பார்த்தபடி நடவாமை என்ற பொருள்கொண்டதென எடுத்துக்கொண்டால், அதில் அவதூறு எதும் நான் காணவில்லை. ஆனால், இந்தக் குறைகூறலை மற்றவற்றுடன் சேர்த்துப்படித்தால், வாதியின் ஒழுக்கத்தையும் அறிவையும் ஓரளவு குறைபடுத்துவதாகக் காணப்படுகிறது.

உ௭. வாதி தமது சாட்சியத்தில். குன்றக்குடி ரஸ்தாவைத் தாம் பாதுகாத்துவருவதாகக் கூறுகிறார்.

இதைப்பொய்யென்று ருசுப்பிக்க (எதிரிதரப்பு) எக்ஸிபிட் அ தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. க—ச—உ௬ முதல் அந்த ரஸ்தா தேவகோட்டை தாலூகாபோர்டுக்கு மாற்றப்பட்டது என்று அது கூறுகிறது. ஆபீஸ் நடபடிக்கை முறையை அறிந்த எவரும் ஒரு கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட ஒரு வெறும் தீர்மானத்தால் அதன்படியே நிறைவேற்றப்பட்டுவிட்டது என்ற பொருள்படாது என்பதை அறிவர். தேவகோட்டை தாலுக்கா போர்டு தலைவர் ரஸ்தாவை எடுத்துக்கொள்வதைப் பின்னும் ஆட்சேபிக்கலாம். எவ்விதமாயினும் சரி, வாதி பொய்சொல்லுவதாகக் காண்பிக்க, எக்ஸிபிட் அ முடிவான உரு௬ ஆகாது.

உஅ. போர்டுகளில் தாங்கள் ஸ்தானம்பெற்றிருப்பதை, தாங்கள் பட்டங்களும் பதவிகளும் பெற வாதியும் பிறரும் உபயோகப்படுத்திக் கொள்ளுகிறார்கள் என்பது பி-௬ எக்ஸிபிட்டில் அடங்கியிருக்கும் தாக்குதல். வாதி பட்டம்பெற்றவர். கலெக்டர் திரு. ராமமூர்த்தி, சன்னதை அளிக்கும்பொழுது, வாதி காரைக்குடி யூனியனில் உறுப்பினராகவும், தலைவராகவும் செய்த தொண்டுகளுக்காகவும், தாலுக்கா போர்டு, ஜில்லா போர்டு, விடுதலைபெற்ற கைதிகள் சகாயச் சங்கம் முதலியவற்றில் உறுப்பினராய்ச் செய்த தொண்டுகளுககாகவும் பட்டம் கொடுக்கப்பெறுவதாகச்சொன்னதாக, எதிரி தரப்பு மூன்றும் சாட்சி கூறுகிறார். கல்வி விஷயங்களுக்காக வாதி ஒரு கட்டிடத்தைத் தர்மமாகக் கொடுத்திருப்பதாகவும், குன்றக்குடி ரஸ்தா அமைப்பதில் அவர் ஊக்கமான பங்கு எடுத்துக்

கொண்டதாகவும், அவர் குழந்தைகள் நல-பிரசவசகாய ஆஸ்பத்திரிக்கும் வேறு பயனுள்ள விஷயங்களுக்கும் நன்கொடை யளித்துள்ளதாகவும் கூட ஒப்புக்கொள்ளப்படுகிறது. சம்பந்தப்பட்ட கட்டுரை தவராகக் காரணத்தைக் காரியமாய்க் கொண்டுவிட்டது என்பது தெளிவு. வாதியின் வேலைகள் பட்டங்கள் பெறவேண்டுமென்ற எண்ணத்தால் நிகழ்த்தப்பெற்றதாகச் சொல்ல முடியாது. அவ்விதமின்றி, அந்தப்பயனுடைய காரியங்களைச் செய்தபின்னர், அவற்றைப் பாராட்டுவதற்கு அறிகுறியாக அவர் பட்டமளிக்கப் பெற்றிருக்கலாம்.

உ௯. பத்தாவது எதிர்வாதத்தை எடுத்துக் கொள்க. பி எக்ஸிபிட்டில் அடங்கியுள்ள தாக்குதல்கள் பொருளில் உண்மையானவையல்லவென்றும் சரியானவை அல்லவென்றும் மேலே கூறியுள்ளவை காட்டும். ஆகவே, வாதியின் ௧0-வது எதிர்வாதம் தள்ளி விடப்படலாம்.

௩0. இரண்டாவது எதிர்வாதத்தைக் எடுத்துக் கொள்க. பிராசிகியூஷன் தரப்பாரால் சாட்சியமாகக் கூறப்பட்டவை (க) எதிரியின் பத்திரிகைக்கு யூனியன் போர்டின் கூட்ட அறிக்கைகள் அனுப்புவதில்லை, (உ) வாதியும் எதிரியும் யூனியன் போர்டு கட்டிடத்தில் சந்தித்தது என்ற இரு விஷயங்களாகும்.

௩௧. சந்திப்பில் சங்கராச்சாரியாரைப்பற்றி 'ஊழி'யில் வெளியான கட்டுரையைப்பற்றிப் (பேசியதாக) குறிப்பிடப்படுகிறது. அந்தக் கட்டுரை கஎ—கக—உ௫ தேதி 'ஊழிய'னில் வெளியாயிருக்

கிறது. எதிரி ௧௮-௧௧-௨௫ தேதி முதல் ௧௭-௧௨-௨௫ தேதிவரை காரைக்குடியில் இல்லை யென்று ஒப்புக்கொள்ளப்படவேண்டியதாயிருக்கிறது. ஆகவே, அந்தச் சம்பாஷணையில் சங்கராச்சாரிய ஸ்வாமியைப்பற்றிய கட்டுரைபற்றிய பேச்சு அடங்கியதாகச் சொல்வது சம்பாவிதமன்று. குறிப்பிட்ட கடிதங்கள் மறுபடி ஞாபகப்படுத்தி எழுதப்பட்ட வெறும் கடிதங்களேயன்றி, அதற்குமேல் அவை அதிகமாக வேறெதையும் காட்டவில்லை. இருவருடைய மனப்பான்மையும் பரஸ்பரம் மிகுதியும் பிடித்தமானதாயிராதிருக்கலாம். இந்த இரு சாட்சியங்களைக்கொண்டு, விரோத எண்ணமாவது சொந்த வருத்தங்களாவது இருந்தனவென்று உத்தேசித்துக்கொள்வது முடியாது என்பது நிச்சயம்.

௬௨. மூன்றாவது எதிர்வாதத்தை எடுத்துக்கொள்க. இரண்டில் எந்தக்கட்சியாராவது அல்லது இரு கட்சியாருமாகவாவது இவ்விஷயத்தை ஒருநெருக்கடிக்குக்கொண்டுவாராமலிருந்திருந்தால், அது நேர்மையாயிருந்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை. சம்பந்தப்பட்ட கட்டுரை உண்மைகளை ஆதாரமாகக்கொண்டிருக்கவில்லையென்றும், அதற்குத் திருத்தம் வெளியிடவேண்டும் என்றும் எதிரிக்குச் சொல்லியிருக்கலாம். அவ்விதமே, எதிரி நீதி ஸ்தலத்திற்கு இழுக்கப்பட்ட பின்னருங்கூட, பாதகமாய் நினையாது, பரிகாரங்கள் செய்திருக்கலாம். வாதி ஒரு பொதுஜன ஊழியர். எதிரி பொதுஜன சாதனமான ஒரு பத்திரிகைக்காரர். பரஸ்பரம் அதிகமாய் விட்டுக்கொடுத்திருக்கவேண்டி

யது இரு பக்கத்தாரிடமும் அவசியமாகும். இந்த வழியைக் கைக்கொள்ளும் நல்ல எண்ணம் இரு கட்சியாரிலெவரும் கொள்ளவில்லை. 'எதிர்க் கட்சிக்காரருக்கு நியாயமான சந்தர்ப்பங்கள் தரவேண்டுமென்ற உணர்ச்சி' Sportsman like spirit இருவரிடமும் இல்லாதுபோனது வருந்தத்தக்கதே.

௩௩. நான்காவது எதிர்வாதத்தை எடுத்துக் கொள்க. சம்பந்தப்பட்ட கட்டுரை ராமனாதபுரம் ஜில்லா போர்டின் ௨௦—௧௧—௨௯ தேதிக் கூட்டம் சம்பந்தமானது என்று எதிரி கூறுகிறார். பி-அ எக்ஸிபிட்டில் அடங்கியுள்ள தாக்குதல் சம்பந்தப்பட்ட வரையில், இந்த வாதம் செல்லத்தக்கதே. ஆனால், கூறப்படும் குறைகள் மிக அதிகதூரம் செல்லுகின்றன; ஆகையால், அந்த வாதம் நில்லாது. உதாரணமாக, வாதி தமது தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் பதவியைப் பட்டங்களும் பதவிகளும்பெற உபயோகித்துக்கொண்டார் என்பதை ஜில்லா போர்டு ௨௦—௧௧—௨௯ கூட்டத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளைக்கொண்டு, சொல்லமுடியாது.

௩௪. நேர்மையான வியாக்கியானமா அல்லவா என்பது பின்னால் ஆராயப்படும். வாதி தமது பதவியைப் பட்டங்கள் பெறுவதற்கு உபயோகப்படுத்திக் கொண்டார் என்ற குறிப்பும், 'நல்ல பிள்ளைகள்' என்ற பெயர் சம்பாதிப்பதற்காக அவர் சர்க்காருடன் ஒட்டிசெய்கிறார் என்ற குறிப்பும் பொது நலத்திற்கான நன்மை துளிகூடச் செய்துவிடவில்லை என்பது போதும்.

கரு. விஷயங்களைக்கொண்டாவது சட்டப்படிக்காவது எதிரிக்கு அவரை (வாதியை)த் தாக்குவதற்குத் துவேஷம் எதுவும் இருந்ததாக, திருப்திகரமாகப் பிராசிகியூஷன் தரப்பார் நிரூபிக்கவில்லை.

கசு. ஐந்தாவது எதிர்வாதம், சம்பந்தப்பட்ட கட்டுரை வாதியைக் குறிப்பிடுவதல்ல. எனவே, வழக்குத்தொடர அவருக்கு உரிமையில்லை என்பதாகும். ஏற்கனவே சொல்லியபடி, அவதூறு விஷயம் 'இடிமுழக்கம்' என்ற தலைப்பின்கீழ் வியாக்கியானங்கள் செய்யப்பட்ட இனங்களில் ஒன்று ஆகும். அது ஒரே ஒரு 'பாரா' வைக்கொண்டது. எதிரி அதை இருபாதிகளாகப் பிரிக்கிறார். முதற்பாதி பொதுவான கூற்றுகளைக்கொண்டது; 'ஆனால், மூன்றுமாதம் தொடர்ந்து அவர்கள் ஆஜராகாததற்கு அவர்கள் என்ன காரணம் சொல்லமுடியும்' என்ற வாக்கியத்துடன் அது முடிவு பெறுகின்றது; இதற்கு அடுத்த வாக்கியம் வாதி ஆஜராகாத அத்தகையோர்களில் ஒருவர் என்பதாகும். அதற்கு அடுத்த வாக்கியம், 'அவரும் அவரைப் போன்ற பிறரும் முதலியவை' முதற்பாதி முழுவதும் வாதியையும் அவர்போன்றாரையுமே இயற்கையாகக் குறிக்கும் என்பதை வாசிப்பவர் எவரும் அறிந்துகொள்ளுவார். அடுத்த வாக்கியத்தில் 'இவர்கள்' என்ற சொல் உபயோகிக்கப்பட்டிருக்கிறது; இதன் பொருள் 'அவர்கள்' அல்லது 'இந்த மனிதர்கள்' என்பதாகும்; 'வாதியும் அவர் போன்றாரும்' என்பதைக்குறிக்கும் சுட்டுச்சொல் (புரோநௌன்) ஆகும். இது இந்த சந்தர்ப்பங்களில், வாதி நேரே சம்பந்தப்

பட்டவான்று எனவும் அவருக்கு வழக்குத்தொடர உரிமையில்லை யென்றும் வாதிப்பது பயனற்றதாகும்.

௩௭. கட்டுரையில் உபயோகிக்கப் பெற்றுள்ள சொற்களுக்குச் சொல்லுக்குச்சொல் பொருள் கொள்ளக்கூடாதென்பதும், ஆனால் பொதுஜனங்களுக்கிடை வழங்கிவரும் பத்திரிகைகளில் அவற்றிற்கு உண்டாயிருக்கும் விசேஷ அர்த்தத்தை அவைகள் கொண்டிருப்பதாகக் கொள்ளவேண்டுமென்பதும் ஏழு, எட்டு எதிர் வாதங்களாகும். இதைப் பற்றி அதிகமாய் ஆராயத் தேவையில்லை. இவைகள் இவற்றின் பொதுவான பொருளிலேயே பொருள் கொள்ளப்பெறவேண்டுமென்பது ஒப்புக்கொள்ளப்பட்ட ஒரு விஷயம். ஒரு பெரிய பிரமாணக்காரர் (அதாரிட்டி) சொல்லியது போல, "அந்தக் கட்டுரையைப் படிக்கும் ஜனங்கள் என்ன பொருள் கொள்வர்" என்பதுதான் பரிட்சையாகும். இப்பரிட்சையை இந்த செய்தால், பிராசிக்யூஷன் தரப்பு ஆறும் சாட்சியின் சாட்சியம் இருக்கிறது. அவர் சாதாரண அறிவு படைத்த ஒரு மனிதராக எடுத்துக்கொள்ளப்படலாம். மேலும், அவர் வாதியும் எதிரியும் எந்த சமூகத்தைச் சேர்ந்தவரோ அதே சமூகத்தைச் சேர்ந்தவர். அவர் தாம் அந்தக் கட்டுரையைப் படித்ததாகவும், வாதி நன்மை தீமைகளைப் பகுத்தறியவில்லை யென்றும் பொது ஜன நலத்தைக் கவனிக்கவில்லை யென்றும் எல்லா ஜனங்களது மான நலங்களுக்குமாறாக (ஜில்லா போர்டு)த் தலைவரது விருப்பங்கட்கு இணங்கிவிட்டாரெனவும் தாம் அபிப்பிராயம் கொண்டதாகவும் கூறுகிறார். அதைப்

படித்த பிறரும் அதே அபிப்பிராயத்தை வெளியிட்டார்கள். சம்பந்தப்பட்ட கட்டுரை வாதியின் ஒழுக்கத்தையும் அறிவையும் பற்றிய மதிப்பிற்குப் பாதகம் விளைத்துளதெனவும், ஆகவே அதை அவதூறாகக் கருதலாம் என்றும் அபிப்பிராயம் கொள்வதற்கு அது, எதிரிடையான எதுவும் இல்லாததால், ஒரு நல்ல சாட்சியமாகும்.

௩அ ௯, ௯ எதிர்வாதங்களை எடுத்துக்கொள்க. கட்டுரை, பட்டதாரிகளும் அதிகாரிகளுக்கு உதவியான ஒத்துழைப்பாளர் முதலியவருமான ஒரு வகைப் பொதுஜன ஊழியரைப்பற்றியது என்றும், குறிப்புரை பொதுநலத்திற்கானதென்றும், வியாக்கியானம் நேர்மையானதென்றும், அது இ. பி. கோ சஙசக பிரிவுகளின் ௩, ௯ விலக்குகளின் கீழ்க்காப்புக் கொண்டதென்றும் வாதிக்கப்படுகிறது.

௩௯. இதற்கு மூன்று விஷயங்கள் அடிப்படையானவை:—

(க) விஷயம் பொதுநன்மைக்கானது;
(உ) சொல்லப்பட்ட விஷயங்கள் சரியானவை;
(௩) வியாக்கியானம் நேர்மையானது.

சொல்லப்பட்ட விஷயங்கள் பொருளிலுங்கூட சரியாயில்லையென்று நான் ஏற்கனவே சொல்லியுள்ளேன். அவைகள் எவ்வளவு தூரம் பொது நலத்திற்கானவை என்பது மேலே யோசிக்கப்படவேண்டும். பட்டதாரிகள் முதலிய ஒருவகைப் பொது ஜன ஊழியருக்கு விரோதமான கட்டுரை அது என்று வாதிக்க

கப்படுகிறது. எதிரிதரப்பு ௧,௫ சாட்சிகளால் சொல்லப் பெற்ற இரண்டாவது வகை அபிப்பிராயக்காரர்களான ஒருவகை மனிதர்களாயிருக்கலாம் அவர்கள். இவ்வபிப்பிராயக்காரரில் ஒருவராவர் வாதி. கூட்டங்களுக்கு அஜராகாத ஒரு மனிதனைத் தேர்ந்தெடுக்கலாகாதென்பது முற்றிலும் நல்லதே. ஆனால், அம்மனிதர் பட்டங்கள் பெறுவதற்காகத் தமது ஸ்தானத்தை உபயோகப்படுத்திக்கொள்ளுகிறார் என்று கூறுவதால், என்ன பொது நலம் உண்டாகிறது என்பதை நான் அறிய இயலவில்லை. இது சம்பந்தமாய், ஒரு தனி நபருக்குள்ள உரிமையைக் காட்டிலும் ஒரு பத்திரிகைக்காரருக்கு அதிக உரிமையில்லை. ஆகையால், பி-௫ எக்ஸிபிட்டில் அடங்கியுள்ள சாடைக்குறிப்பு விஷயங்கள் பொருளில் உண்மையானவையே என்று வாதத்திற்காக ஒப்புக்கொண்டாலுங் கூட, காப்புக் கொண்டதல்ல. ஒரு பொதுஜன ஊழியர் பொது விஷய சம்பந்தமாய்ச் செய்த எதுபற்றியேனும் அவரை ஒருவர் தாக்கலாம். எந்த நிமிஷத்தில் அவர் அதற்கு அதிகமாய்ப்போய், அவர் தீய தன்மை கொண்டவரெனப் பழி கூறுகிறாரோ அந்த நிமிஷமே, அம்மனிதர் சட்டத்தின் பிடிப்புகளுக்குள்ளாகிறார். கடைசியாக, வியாக்கியானம் விஷயங்களின் மீது நேர்மையும் நாணயமும் கொண்டதாக இருக்கவேண்டும். பொதுஜன சாதனமான ஒரு பத்திரிகை மற்றொருவருடைய நடத்தையையாவது நோக்கங்களையாவது வியாக்கியானிக்கவாவது கண்டனம் செய்யவாவது பகிரங்கமாக மேற்போட்டுக் கொள்ளும்பொழுது, அவ்

வேலையை, நாணயமான நேர்மையுணர்ச்சி மட்டிலுமன்று. நியாயமான அளவு அறிவும் நிதானமும் கொண்டும் செய்யவேண்டும். அதன் பயனாக ஏற்படுவது, கண்டனத்திற்காளான மனிதரது நடத்தையின் மீதும் நோக்கங்களின் மீதும் நேர்மையானதும் சட்டப்படிக்கானதுமான குறிப்புரையாயிருக்கும். இவ்வழக்கில், வாதி தொடர்ந்து கூட்டங்களுக்குப் போகாத ஒரே விஷயத்தை மாத்திரமே ஆதாரமாகக் கொண்டு குறிப்புரை எழுதப்பெற்றிருக்கிறது. எதிரியின் நோக்கில், அவ்விஷயம் முற்றிலும் உண்மையானது என்று நிரூபிக்கப்பட்டுவிட்டது. அடுத்த கேள்வி, எழுதப்பட்டுள்ள வியாக்கியானங்களுக்கு ஆதாரமுண்டா என்பதாகும். ஏனெனில், வாதி சர்க்கார்டம் 'நல்ல பிள்ளைகள்' என்ற பெயரைச் சம்பாதிக்க இன்னவிதம் நடந்து கொண்டார் என்றாவது, எப்படியோ கமிட்டிகளில் நுழைந்து கொண்டார் என்றாவது, இதைச் செய்வதாகவும் அதைச் செய்வதாகவும் வாக்குத்தத்தம் செய்து ஜனங்களை ஏமாற்றிப் பின்னால், குற்றமாகக் கூடியவாறு அவ்விதம் செய்யத் தவறினார் என்றாவது, போர்டுகளில் தமது தேர்ந்தெடுக்கப்பட்ட பதவியைப்பட்டங்கள் பெறச்சாதனமாக்கிக் கொண்டார் என்றாவது எப்படி ஒருவர் சொல்ல முடியும்? தாக்கப்பட்ட விஷயங்களின் ஆதாரத்துக்கு மேல், அவ்வியாக்கியானங்கள் மிக அதிகப்படியாகும். வாதி எப்பொழுதும் ஒரு மௌன உறுப்பினர் என்று (அது உண்மையல்லவெனினும்) எதிரி உண்மையில் நம்பியிருக்கலாம். அப்பொழுதும் கூட, இந்த வியாக்

யானங்கள் ஆதாரமற்றவை; இன்னும் என்னவெனில், இது பொது நலத்திற்கு எதும் செய்யவில்லை. குறை கூறுவதற்கு எதிரிக்கு ஏதேனும் நியாயமான ஆதாரம் இருந்திருக்கவேண்டும். அது உண்மையானது என்று வதா அல்லது தகவல் கிடைத்த வழியை நோக்க, அது உண்மையானதென நம்பத் தமக்கு நியாயமான காரணமிருந்ததென்றாவது அவர் காட்டியிருக்கவேண்டும். கட்டுரையில் கூறப்பட்டுள்ள விஷயங்கள் அற்பமானவை. வாதிக்கு விரோதமாக எதிரி எவ்விஷயங்களைப்பற்றி யெல்லாம் ருசுப்பிக்க உத்தேசம் கொண்டாரோ அவ்விஷயங்களைப்பற்றியெல்லாம் வாதி சாட்சிக் கூண்டில் ஏறியிருக்கும்பொழுது, அவரைக் குறுக்கு விசாரணை செய்திருக்கவேண்டும் இதில் எதிரி பரிதபிக்கத்தக்க விதமாய்த் தவறிவிட்டார். விஷயங்களாலும் சந்தப்பங்களாலும் ஆதரிக்கப்படாது, வியாக்கியானம் தனித்து நிற்பதுடன், எவ்வித பொது நலத்தையும் செய்யாததாகவுமிருக்கிறது என்பது பலன். எதிரி சாதாரணக் கவலையிலும், எச்சரிக்கையிலுங்கூடப் பொறுப்பின்றி அலட்சியமாய் இவற்றைச் செய்தவராயிருக்கிறார்.

௪௦. முதல் எதிர் வாதத்தை எடுத்துக்கொள்க; கட்டுரை பிரசுரமான காலத்தில் வாதி காரைக்குடியில் இல்லை. ஆகவே அவர் குற்றப் பொறுப்புடையவரன்று என்பது மிகுந்திருக்கும் எதிர்வாதம். பிராசிகியூஷன் தரப்பு எழாம் சாட்சி மேலே குறுக்கு விசாரணையில் எதிரி ௧௮—௧௧—௨௫ தேதியில் காரைக்குடியைவிட்டுச் சென்று, ௧௫—௧௨—௨௫ தேதி வாக்கில் திரும்பி வந்

தார் என்று கூறுகிறார். வழக்குத் தொடரப்பெற்றுள்ள கட்டுரை க—௧உ—உ௫ தேதி வெளியீட்டில் வெளியாயிருக்கிறது. அவர் இல்லாதகாலத்தில் பத்திரிகை உதவி ஆசிரியர் கிருஷ்ணய்யரால் நடத்தப்பெற்றது. எதிரி காரைக்குடிக்கு வெளியிற்போயிருக்கும் காலங்களில் வெளியிடுவதற்கு எதிரி விஷயங்கள் அனுப்புவது வழக்கம் என்றும் பிராசிகியூஷன் தரப்பு ஏழாம் சாட்சி கூறுகிறார். அவர் (க) ஆசிரியர் (உ) அச்சிடுபவர் (௩) பிரசுரிப்பவர் என்ற முறைகளில் குற்றம் சாட்டப்பெற்றிருக்கிறார். தாம் இல்லாக்காலத்தில் பத்திரிகைக்குத் தாம் என்ன ஏற்பாடு செய்தார் என்பதை ருசுப்பிக்கச் சாட்சியம் விட அவர் தவறிவிட்டார். உதவி ஆசிரியர் பத்திரிகையை நடத்தினார் என்று மட்டில் பிராசிகியூஷன் தரப்பு ஏழாம் சாட்சி கூறுகிறார். பத்திரிகையை நடத்த இந்த கிருஷ்ணய்யர் எவ்வளவு தூரம் தகுதியுடையவராயிருந்தார் என்பதை, அல்லது குறைந்தது தாம் இல்லாக்காலத்து அவர் தமக்குப்பதிலாக இருந்து நடத்த எவ்வளவுதூரம் தகுதியுடையவர் என்று எதிரி கருதினார் எனபதையாவது நிச்சயிக்க வேண்டியதாயிருக்கிறது. தாம் போதிய ஏற்பாடுகள் செய்ததாக ருசுப்பிக்கவேண்டியது எதிரியின் கடமையாயிருந்தும், தாம் இல்லாக் காலத்துப் பத்திரிகை சட்ட சம்மதமும் சரியானதுமான வகையில் நடக்கத்தகுந்த கவலையும் எச்சரிக்கையும் எதிரி எடுத்துக்கொண்டதாக, ரிககார்டி (தஸ்தாவேஜி)ல் எதுவுமில்லை. கிருஷ்ணய்யர், உதவி ஆசிரியர் என்று சொல்லப்பட்டிருக்கிறது. தலைமை ஆசிரியர் இல்

லாக் காலத்து உதவியாசிரியர் அவர் ஸ்தானத்தை வகிப்பது வழக்கமாகையால், கிருஷ்ணய்யர் பத்திரிகையில் ஆசிரியர் சம்பந்தமான பகுதிகளைத் தாம் இல்லாக்காலத்து நடத்திவரத்தக்கவரென்று எதிரி உண்மையில் கருதினார் என்று நான் உத்தேசித்துக்கொள்ளுகிறேன். ஆனால், பத்திரிகை அச்சிடுவதற்கும் பிரசுரிப்பதற்கும் அவர் தகுதியுடையவர் என்று உத்தேசித்துக்கொள்ளுவது மிகவும் அதிகப்படியாகும். அச்சிட்டுப் பிரசுரிக்கப்படாவிட்டால், கட்டுரையை இயற்றுவதால் எவ்விதப் பலனும் ஏற்படாது. ஆகையால் பத்திரிகை சட்ட சம்மதமும் சரியானதுமான வகையில் அச்சிட்டுப் பிரசுரிக்கப்பெறுமாறு கவனிப்பதில் எதிரி போதிய கவலையும் எச்சரிக்கையும் எடுத்துக்கொள்ளவில்லையென்று கருதுகிறேன். சம்பந்தப்பட்ட கட்டுரையை இயற்றியது சம்பந்தப்பட்ட வரையில், எதிரி குற்றப்பொறுப்பினின்றும் விடுவிக்கப்படவேண்டியவர் என்பதை நான் கருதுகிறேன். ஆனால், அச்சிடுவித்தது, பிரசுரித்தது சம்பந்தப்பட்ட மட்டில் அதே சாதகமான அபிப்பிராயத்தை நான் கொள்ள முடியாது. இயற்றுவதைவிட அதிக ஆபத்தானது அல்லாவிட்டாலும், அதுவும் இயற்றுவதவ்வளவு ஆபத்தானதே. அதை எதிரிக்குப் பதிலியாய்ச் செய்ய கிருஷ்ணய்யர் தகுந்தவர் என்று ருசுப்பிக்கப்படவில்லை. அவதூறு தமது அதிகாரத்துக்குட்படாது, தமக்குத் தெரியாமல், தமது சம்மதமின்றிப் பிரசுரிக்கப்பெற்றது என்று எதிரி ருசுப்பிக்கவேண்டும். இது செய்யப்படவில்லை. ஆகவே அவரது குற்றப்பொறுப்பு இன்னும் நிற்கிறது.

சக. உ௫—கO—உகூ-ல எதிரி தரப்பு சாட்சி விசாரணை முடிந்தது. வாதி வக்கீல் ஆர்குமெண்ட் உகூ—கO—உகூ-ல காலை அ-மணிக்குத் துவங்கி மாலை ரு—ருO மணிக்கு முடித்தார்; இடையில் ஓய்வு ஏறக்குறைய கஇ-மணி இருக்கும். எதிரி வக்கீல் ஆர்குமெண்ட் உஅ—கO—உகூ-ல காலை அ-மணிக்குத் துவங்கி மணி ரு—ருO-க்கு முடித்தார்; இடை ஓய்வு அதே அளவு. மறுநாள் வாதி வக்கீலின் பதில் கேட்கப்பட்டது. கO-மணிக்கு வழக்கு முடிக்கப்பட்டு, தீர்ப்புச் சொல்லுவதற்கு கூ—கக—உகூ-லக்கு ஒத்திப்போடப்பட்டது. குறிப்பிட்ட வழக்கிற்காகவே நடைபெற்ற கோர்ட்டை வாதியும் அவர் வக்கீல்களும் விட்டுச் சென்றார்கள்.

சஉ. சிறிது நேரத்திற்குப் பிறகு, எதிரி வக்கீல் வந்து, ஏதோ பேச விரும்பினார். மற்றக் கட்சிக்காரர் கோர்ட்டிலில்லாதபடியாலும், கோர்ட் கலைந்துவிட்டபடியாலும், சொல்ல விரும்புவதை எழுத்துமூலம் செய்துகொள்ளுமாறு அவர் சொல்லப்பெற்றார். அதன்மேல் குற்றச்சாட்டில் சில ஆட்சேப அம்சத்தைக் குறிப்பிட்டு, அவர் ஒரு மனுவைக் கொடுத்தார்.

சரு. குற்றப்பத்திரிகை படிக்கப்பட்ட வாய்தாவுள்பட எல்லா வாய்தாக் காலங்களிலும் முற்றிலும் வாதி வக்கீல் ஆஜராயிருந்திருக்கிறார் என்பது குறிப்பிடப்படலாம். புகார் செய்யப்பட்ட ஆட்சேபணையை (அந்தக் காலத்தில்) குறிப்பிட்டிருக்கவேண்டியது அவர் கடமை. குறைந்த பட்சம் அது அவர் கோர்ட்டாரிடம் காட்டியிருக்கவேண்டிய மரியாதை

என்று நான் கருதவேண்டும். எதிரியின் வக்கீலைப் போன்ற அளவு பெரிய வக்கீல் அப்பொழுது அந்த ஆட்சேபகா அம்சத்தைக் கவனிக்கவில்லை என்று வாதிக்கமுடியாது. இதை அவர் செய்யவில்லை. மறு புறம் சொல்லுமிடத்து, வழக்கு (கேசு) தமக்கு விரோதமாகப் போகுமானால், அப்பீலுக்குத் தமது அம்பறாத் துணியில் இதைக் கடைசி அம்பாக வைத்திருக்கிறார் என்னலாம்.

௪௪. (கோர்ட்டாரது) காண்கை (Finding) ஒன்றை ஒரு ஆட்சேபகா அம்சம் (மிஸ் ஜாயிண்டர்) கெடுத்துவிட்டதா என்பதை நிர்ணயிப்பதில், ஆட்சேபப் நிகழ்ச்சி முறையில் முந்திய ஒரு நிலைமையிலேயே எழுப்பியிருக்க முடியுமா என்பதை அறிவது பொருத்தமாகும். (சி. பு. கோ. ருகூஎ-வது பிரிவின் தெளிவுரை) எதிரி முந்தியே தமது ஆட்சேபணையை எழுப்ப எவ்வித வசதியும் இருந்தும், அவர் அவ்விதம் செய்யவில்லையென்பது முற்றிலும் தெளிவாயிருக்கிறது. இது கோர்ட் கலைந்த பின் ஆட்சேபணை எழுப்பியதன் பொருத்தம் பற்றியமட்டிலுமாகும்.

௪ரு. இவ்விஷயத்தை, அதன் தகுதிபற்றி ஆராயும்பொழுது, அதை எழுப்புவது, அதுவும் கோர்ட் கலைந்த பின்னர் எழுப்புவது, பயனுடையதென வாதி வக்கீல் கருதினார் என்பது எனக்கு உண்மையிலேயே ஆச்சரியத்தையளிக்கின்றது.

௪௬. கஉ மாத காலத்திற்குள் செய்யப்பெற்ற ஒரே மாதிரியான அ தனித்தனி அவதூறான பழிகளை

(எக்ஸிபிட்கள் பி—க முதல் அ—வரை) எழுதியதாக வாதி எதிரி மீது குற்றஞ் சாட்டுகிறார் என்றும், அது இ. பு. கோ. உ௱௪-வது பிரிவுக்கு முரணாகுமென்றும் பிராசிக்யூஷன் தரப்பார் இந்த எல்லாத் தாக்குதல்கள் பற்றியும் சாட்சியம் விட்டிருந்தாலும், குற்றப்பத்திரிகை படிக்கும்பொழுது ஒன்று அல்லது இரண்டு அல்லது மூன்று குற்றங்கள் மாத்திரம் எடுத்துக்கொள்ளப் பட்டிருக்கவேண்டுமென்றும் கூறப்படுகிறது. பி. எக்ஸிபிட்டில் அடங்கியுள்ள அவதூறுக்காக குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது. அது ஒரே நாளில் பிரசுரிக்கப் பெற்றிருக்கிறது. பி—க முதல் அ—வரைக் குமுள்ள எக்ஸிபிட்கள் எக்ஸிபிட்—பியின பாவும் ஊடுமாகும். வேலையை எளிதாக்குப்பொருட்டு அவைகளுக்கு உட்பிரிவு எண்கள் கொடுக்கப்பெற்றுள்ளன; அவை ஒவ்வொன்றும் தனித்தனி குற்றங்களல்ல. ஒவ்வொன்றையும் தனித்தனி எடுத்துக்கொண்டால், பொருள் தராது. முழுக்கட்டுரையும் படிக்கவேண்டும்; படிப்பவர்கொள்ளும் அபிப்பிராயமே வழக்கின் கருவாயாகும். பி—அ எக்ஸிபிட்டைத் தவிர, மற்ற யாவும் வியாக்கியான உருவத்தில் இருக்கின்றன. பி—க, உ எக்ஸிபிட்கள் சம்பந்தப்பட்ட வரையில், வியாக்கியானம் நடந்த விஷயங்களை ஆதாரமாகக் கொண்டிருக்கவில்லை யென்பதை ருசுப்பிக்கும் பலன்கொண்ட சாட்சியம் விடப்பெற்றுள்ளது. ஒவ்வொன்றும் தனித்தனி எடுத்துக்கொள்ளப்பட்டு, தனித்தனி விசாரணைகள் நடத்தப்பெற்றால், இது போன்ற ஒரு வழக்கில் விசாரணைகளுக்கு முடிவே இராது. இது ௩௯ கல்

கத்தா அஅ-ல் சொல்லப்பெற்றுள்ள கொள்கைக்கு முற்றிலும் முரணான வழக்கு. சென்னை வீக்லி நோட்ஸ் ருசுரு-ம் பக்கத்தையும் பார்க்கவும்; பல பொய்ப் பதிவுகள் (False entries) சம்பந்தமாக, அவை கி. பு. கோ. உகரு பிரிவின் கீழ் ஒரே விவகாரமாகும் என்று இதே அபிப்பிராயத்தை அநில் பென்ஸனும், ஜே. ஜே. சதாசிவய்யரும் கொண்டிருக்கின்றனர். எதிரிக்கு விரோதமாக எவ்விதமாகவும் ஒரு தலைச்சார்பு கொள்ளப்படவுமில்லை. அவாது எதிர்வாத சாட்சியங்களில் தடைகள் செய்யப்படவுமில்லை யென்று சொல்லப்படலாம். காலதாமதமாகச் செய்துகொள்ளப்பட்ட மனுவைக் கவனிக்க, வக்கீலின் வேண்டுகோள் எவ்வித ஆலோசனையையும் பெறத்தகுந்ததல்ல.

சஎ. முடிவாக, எதிரியை ஆசிரியர் என்ற முறையில் விடுதலை செய்து, ஆனால் அச்சிடுபவர், பிரசுரிப்பவர் என்ற முறையில் இ. பி. கோ. ருOO-வது பிரிவின் கீழ்க் குற்றவாளியாகத் தீர்மானித்து, அவர் ஒருரூபாய் அபராதம் செலுத்தவேண்டும் என்றும் செலுத்தத் தவறினால் ஒரு நாள் சாதாரணக்காவல் என்றும் தண்டனை விதிக்கிறேன்.

சஅ. இத் தண்டனையை விதிக்கும்பொழுது, இரண்டு முகாந்திரங்களை அபிப்பிராயத்திற்கொண்டேன். ஒன்று—எதிரி குற்றத்திற்குக் குற்றப் பொறுப்புடையவராயினும், சாதாரண எச்சரிக்கையிலும் கவலையிலும் பொறுப்பற்ற அலட்சியத்தை மட்டிலுமே காட்டும் சந்தர்ப்பங்களால் குற்றப்பொறுப்பின் தன்மை குறைவுபடுகிறது. மற்றது—பொதுஜன

சாதனமான ஒரு பத்திரிகைக்காரரான எதிரிக்கு ஒரு சந்தர்ப்பமளிக்காமல், ஒரு பொது ஜன ஊழியரான வாதி கோர்ட்டுக்கு ஓடி வந்திருக்கக்கூடாது.

ககூஉகூ-ம் ஆண்டு, நவம்பர்-மீ இந்த கூ-ம் நாள் திறந்த கோர்ட்டில் சொல்லப்பெற்றது.

(ஒப்பம்) **எம். கோவிந்த நாயர்,**

ஸப் டிவிஷனல் மாஜிஸ்திரேட்.

மாஜிஸ்டிரேட் தீர்ப்பின்மீது,
பத்திரிகை அபிப்பிராயங்கள்.

"ஊழியன்"

(அட்சய-௵ கார்த்திகை-மீ க-௳ தலையங்கம்.)

க

ஊழியன் ஆசிரியர்மீது ராவ்பகதூர் ஆவி. பழ. சிதம்பரச்செட்டியார் தொடுத்திருந்த அவதூறு வழக்கு இராமனாதபுரம் சப்டிவிஷனல் மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் முடிவடைந்த செய்தியை அன்பர்கள் அறிவார்கள். இவ்வழக்கில் நீதிபதி திரு. கோவிந்த நாயரிடம் வெற்றிபெற்றவர் யார், தோல்வியுற்றவர் யார் என்ற பொருள் குறித்துப் பொது மக்கள் மாறு பட்ட கருத்துடையாராக இருக்கின்றாரென அறிகின்றோம். இவ்வழக்குத் தோன்றிப் பத்துத் திங்கள்கள் ஆகின்றது. நம்மவருள் இவ்வழக்கை அறியாதார் இல்லையென்று இயம்பலாம். பத்துத் திங்கள்களாக இவ் வழக்குப்பற்றிப் பேசாத இடமில்லை. ஊழியன் ஆசிரியர்மீது திரு. சிதம்பரச் செட்டியாரால் தொடரப்பட்ட வழக்கு என்றே அனைவரும் பேசினர். ராவ் பகதூரால் தொடரப்பட்ட பிரியாதினும் முதற் கண் எதிரி காரைக்குடி ஊழியன் ஆசிரியர் ராய. சொக்க லிங்கன் என்றே பொறிக்கப்பட்டுளது. இவ்வழக்கின் இப்பொழுது நடந்த தீர்ப்புப்படி அந்த ஊழியன் ஆசிரியராகிய ராய. சொக்கலிங்கன் வெற்றிபெற்றார். அதாவது விடுதலையடைந்தார்.

பின்னை அபராதம் விதிக்கப்பட்டது யாருக்கு என்று வினவலாம். அது ஊழியன் ஆசிரியராகிய ராய. சொக்கலிங்கனுக்கு அன்று. ராய. சொக்கலிங்கனுக்குத்தான். ஆனால் எந்தச் சொக்கலிங்கனுக்கு? ஊழியன் பத்திரிகையை அச்சிடுவோனும் வெளியிடுவோனும் ஆகிய ராய. சொக்கலிங்கனுக்கு. இது சிலர்க்கு விளங்காமல் இருக்கலாம். பலர்க்கு விநோதமாகத் தோன்றலாம். விநோதமென்பது உண்மைதான். விளங்காதார்க்குச் சிறிது கூறுவோம். பத்திரிகை நடாத்துவதில் மூன்று பொறுப்பு. ஒன்று ஆசிரியப்பொறுப்பு. மற்றொன்று அச்சிடும் பொறுப்பு. இன்னொன்று வெளியிடும் பொறுப்பு. முன்னையவர் எழுதியதற்குப் பொறுப்பாளி; இரண்டாமவர் எழுதியவற்றை அச்சிட்டதற்குப் பொறுப்பாளி; மூன்றாமவர் அவற்றை யாண்டும் பரப்பியதற்குப் பொறுப்பாளி. இம்மூன்றும் தனித்தனியே மூவருடைய பொறுப்பில் நடப்பதுமுண்டு. இருவருடைய பொறுப்பில் நடைபெறுவதுமுண்டு. ஒருவருடைய பொறுப்பில் நடந்தேறுவதுமுண்டு. ஒரு கட்டுரையில் ஒரு குற்றம் நேருமானால் இம்மூன்று பொறுப்பாளரும் அதற்குப் பாத்தியப்பட்டவரே யாவர்.

இவ்வூழியன் பத்திரிகையில் மூன்று பொறுப்புக்களையும் ஒருவரே ஏற்றுள்ளார். இதில் ஆசிரியராகிய ராய. சொக்கலிங்கன் தம் பொறுப்பை மற்றொருவரிடம் கொடுத்து வேற்றூர் சென்றுறைந்த காரணமாக இவ்வழக்குக் கட்டுரையினின்றும் விடுதலை பெற்றார். எனவே, இக்கட்டுரை எழுதப்பட்ட முறையில்

தண்டனையில்லை. அச்சிட்டதற்கும் வெளியிட்டதற்குந்தான் இப்பொழுது தண்டனை. இவ்வழக்கில் அபராதம் விதிக்கப்பட்டது செய்த குற்றத்திற்கல்ல; உடந்தையாக இருந்த குற்றத்திற்காகவே. ஆசிரியர் வேறொருவராகவும் அச்சிடுவோர் வெளியிடுவோர் வேறாகவும் இருந்தால், உள்ளபடியே எழுதியது குற்றமென்று நிரூபணமானால் இவ்வழக்கில் பின்னை இரண்டு பொறுப்பைத் தாங்கியோர் அபராதம் பெறுதல் நியாயம். மூன்று பொறுப்பையும் ஒருவர் ஏற்றிருந்து அவர் தம் பொறுப்பை மற்றவரிடம் விட்டுச் சென்றிருக்குங்கால், அவர் ஊரின்மையை ஏற்று, அதில் ஒரு முறையில் தண்டிப்பதில் பொருளுண்டோ என்பது அறிஞர் ஆராய்ச்சிக்குறியது. ஆசிரியாகிய ராய. சொக்கலிங்கன் சென்னையிலிருந்தார்; அச்சிட்டு வெளியிடுவோராகிய ராய. சொக்கலிங்கன் காரைக்குடியிலிருந்தார்போலும்! அன்றி ஓரே ராய. சொக்கலிங்கன், ஆசிரியப் பொறுப்பைக் காரையிலிருந்த ஒருவரிடம் ஒப்பித்துவிட்டு, காரைக்குடியில் உள்ள ஊழியன் அச்சுக்கூடத்தில் அச்சிட்டுக் காரைக்குடியிலேயே பத்திரிகை வெளியிடும் பொறுப்பைச் சென்னையிலிருந்தே செய்தார் போலும்! அப்படி அற்புதஞ் செய்யும் ஆற்றல் சிறியோனாகிய ராய. சொக்கலிங்கனுக்கு இல்லையே. அற்புதம் என்று கூறும் மாய வித்தைகளையெல்லாம் அறவே வெறுப்பவனன்றோ ராய. சொக்கலிங்கன். பேஷ்! பேஷ்!! நல்ல தீர்ப்பு!!!

அன்பர் கோவிந்த நாயரின் இத்தீர்ப்பைவிட விந்தை வேறு என்ன இருக்க முடியும்? போகட்டும். குற்றமென்று தீர்ப்பளித்தவர், வழக்குத்தொடுத்த, இராமநாதபுரம் ஜில்லாக்கழக அங்கத்தவராகவும் தேவகோட்டைத் தாலூகாச் சபைத்தலைவராகவும் குன்றக்குடி தேவஸ்தான நிர்வாக உறுப்பினராகவும் இருப்பவரும், காரைக்குடி யூனியன் சபைத்தலைவராக இருந்தவரும், சுமார் இலட்ச ரூபாய்கள் செலவழித்துக் காரைக்குடி ஆங்கிலப் பள்ளியைக் கட்டியவரும், ஆண்டுதோறும் அப்பள்ளியில் தாம் பிறந்த உயர் பெருந்திருநாளை அதிகாரிகளைக்கொண்டு கொண்டாடிக்கொள்ளும் பெருமைவாய்ந்தவரும், சுமார் ஆறுயிரம்ரூபா வருமான வரி கட்டுபவரும், இன்னும் பல கௌரவங்கள் இவையைப் பெற்றவருமாகிய ராவ் பகதூர் ஆவி. பழ. சிதம்பரஞ் செட்டியாரின் பெருந்தகுதியைச் சிறிதேனும் உன்னி அதற்கேற்ற பெருந்தண்டனை விதிக்கலாகாதா? ஊழியனில் இக்கட்டுரை வெளிப்போந்ததால் அநியாயமாக என்மானம் போய்விட்டது என்று வருந்திய அன்பர் இன்னும் வருந்த, அவர் மானம் போனதற்கு ஈடாக ஒரு ரூபாதானா அபராதம் விதித்தல் வேண்டும்! அதுகிடக்க,

இவ்வழக்கிற்கிடனான கட்டுரையில் அவதூறு என்னை என்று நோக்குதல்வேண்டும். இவ்வழக்கை நன்கு தொடர்ந்து சிந்தனையோடு படித்தோர், கட்டுரையில் அவதூறு உண்டா இல்லையா என்பதையும் அதில் கூறபபட்டிருத்தல் அனைத்தும் மெய்யா பொய்யா என்பதையும் நோக்குதல் கடன். அக்கட்டுரையில்

ஆட்சேபப்பகுதியாக வழக்கிட்ட அன்பர் எடுத்துக் கொண்ட பகுதியைக் கீழேதருதும்.

"இவ்வாறு செல்லாதவர்களுள் நம் நகர் ஆவி. பழ. சிதம்பரம் செட்டியாரும் ஒருவர் என்பதைப் பொது ஜனங்கள் கவனித்தல் அவசியம். இவரும் இவர்போன்றாரும் சபைகட்குச் சென்றுவிட்டாலும் பேசுவது என்ற கெட்ட வழக்கம் இவர்களிடம் கிடையாது. அதிகாரிகட்குச் சார்பாக ஓட்டுக்கொடுக்கமட்டும் தயாராக யாவருக்கும் முன்னதாக எழுந்துவிடுவார்கள். நாற்காலிகளை அலங்கரித்து அரசாங்கத்தாரிடம் நல்ல பிள்ளைகள் என்ற பெயர் வாங்கக்கூடியவாறு நடந்துகொள்வதே இவர்களது வேலை. கூட்டங்கட்குச்செல்ல வசதியில்லாதவர்களுங்கூட எப்படியோ கமிட்டிகளிலும் ஸ்தானம் பெற்றுவிடுகின்றனர். இது நகைப்பிற்கிடமாகும். பொதுக்கூட்டங்கட்கே வர இயலாதவர்கள் கமிட்டிக் கூட்டங்கட்கு எவ்வாறு வரப்போகின்றனர்? ஸ்தானம்பெறும் வரை பொதுஜனங்களிடம் தாங்கள் அங்குசென்று ஏதேதோ செய்யப்போவதாகக் கூறுவது இவர்கள் வழக்கம் பின்னர் வாய்மூடி மௌனிகளாக நாற்காலிகளில் அமர்ந்திருப்பார்கள். ஸ்தல ஸ்தாபனங்களில் அங்கம்பெறுவதைக் கௌரவப் பட்டங்களும் பதவிகளும் பெறுவதற்கு ஓர் சாதனமாக வைத்துக்கொண்டிருப்பவர்கள் பொது ஜன நலனை எவ்வாறு கவனிக்கப்போகின்றனர்? பொது ஜனங்களை ஏமாற்றிவந்த காலம் மலையேறிப்போய்விட்டதென்பதையும் இனியும் இவ்வாறு காலங்கழிக்கவியலாதென்பதையும் அறிந்து தக்கபடி நடந்துகொள்ள முற்படவேண்டும்."

அன்பர்கள் ஆராய்வாராக. இன்று விரிவஞ்சி இன்னுஞ் சிறிதோடு நிறுத்துவோம்; தொடர்ந்து அடுத்த கிழ

மை அறைவோம். நமது ஆள் தீர்ப்பின் நகல் பெறும் பொருட்டு சில நாட்கள் இராமநாதபுரத்தில் தங்கி யிருந்தும் அது பெற இயலாது போனமையில் அதனை இக்கிழமை வெளிப்படுத்த இயலாது போயிற்று. அவதூறு சிறிதுமில்லை யென்று நாம் கருதும் இவ்வழக்கில் அவதூறுக் குறியதுதானென்னை என்பதற்கு நீதிபதி கோவிந்தநாயர் என்னதான் காரணங் கூறுகின்றாரென் பதை விரைவில் அறிய ஆவல். ஆனால் நகல் கிடைக்கத் தாமதப்படுகின்றது. கிடைத்ததும் அதுபற்றி வரைவோம். அநேகமாக அடுத்த கிழமைக்குள் தீர்ப்பின் பிரதி கிடைத்துவிடும் என்றெண்ணுகிறோம்.

ராவ் பகதூர் சிதம்பரம் செட்டியாரிடம், ராய. சொக்கலிங்கனுக்கு எவ்விதப் பகைமையும் இல்லை என்பது உண்மை. மிகவும் இழிகுணம் வாய்ந்தவர்களிடத் திங்கூட அவர் பகைமை கொள்வது கிடையாது. ஏன்? உலகம் பலவிதம் என்பதை அவர் அறிவார். இவ்வழக்கு நிற்கவேண்டுமென்பதற்காக, ராய. சொக்கலிங்கனுக்கும் தமக்கும் பகை இருப்பதாகச்சில பெரும் பொய்களை ஆவி. பழ. சிதம்பரச் செட்டியார் கூறி யிருக்கின்றார். அப்பொய்கள் உலகறிய ஏற்கனவே வெளிப்பட்டிருக்கின்றன. என்றாலும் அவற்றை இன்னும் நன்றாக அனைவரும் உணருமாறு அடுத்த கிழமைகளில் எழுதப்பெறும்.

ஈண்டு நமது அன்பர்கட்கு ஒன்றை அழுத்தமாக வற்புறுத்துவோம். இவ்வழக்கு நமக்கு வெற்றி என்று கருதுவோர் மகிழ வேண்டுவதுமில்லை. அபராதம் கட்டிய பிறகு வெற்றியேது, தோல்விதான் என்று கருது

வோர் வருந்தவேண்டுவதுமில்லை. வெற்றி குறித்து மகிழ்வதும தோல்விகண்டு வருந்துவதுமாகிய அற்பக் குணம் நமது அன்பர்கட்கு வேண்டாம். அன்றி வெற்றியும் தோல்வியும் பிரிட்டிஷ் நீதிபதிகள் தீர்ப்பினாலே யே என்பது நம்முடைக் கொள்கையுமன்று. இனி நமக்கு அது புதிதாக வரவேண்டிய நிலையிலில்லை என்றுப் எங்கும் எதற்கும் எவர்க்கும் எவைவரினும் அஞ்சாது எவர் மெய்ந்நெறியில் நிற்கின்றனரோ அவருக்கு வெற்றி உறுதி.

* * * *

(உ)

ஒருவர் மீது ஒருவர் அவதூறு வழக்குத் தொடர்வதானால் அவருக்கு இவர் மீது கெட்ட எண்ணம் இருந்தது என்பதை ருஜுப்படுத்துதல் வேண்டும்; இன்றேல் வழக்கிற்கு இடமில்லை என்பது ஆங்கில அரசாங்கச் சட்டம். எனவே ஆவி. பழ. சிதம்பரச் செட்டியார் மீது ராய. சொக்கலிங்கனுக்குக் கெட்ட எண்ணமிருந்தாலன்றி அவர் பீது வழக்குத் தொடர முடியாது. உண்மையில் சிதம்பரச் செட்டியார் மீது சொககலிக்கனுக்குக கெட்ட எண்ணமில்லை. அவதூறாக எடுக்கப்பட்ட கட்டுரை ராய. சொக்கலிங்கனால் எழுதப்பட்டதுமன்று; அவரால் அச்சிடப்பட்டது மன்று; அவரால் வெளியிடப்பட்டதுமன்று. அக் கட்டுரை ராய. சொக்கலிங்கனால் எழுதப்பட்டதன்று என்பதை அவர் நடையையும் போக்கையும் அறிந்த அறிஞர் அனைவரும் அறிவர். அச்சிட்டதும் வெளி

பிட்டதும் அவரன்று என்பதை அவர் ஊரிலின்மை வெளிப்படுத்தும். காரைக்குடியிலில்லா ஒருவர் காரைக்குடியில் அச்சிட்டு வெளிப்படுத்தும் பத்திரிகைக்கு எழுதியனுப்பவாவது முடியுமன்றி, அச்சிடவும் வெளிப்படுத்தவும் முடியாதென்பதை யாரே அறியார்? ஆகவே இக்கட்டுரையைப் பொருத்தமட்டில் எப்பொறுப்பும் ராய. சொக்கலிங்கனுடையதாக இருக்கவில்லை.

தன் பொறுப்பை மற்றவரிடம் விட்டுச் சென்றதாக மெய்ப்பித்தால், தான் நீங்கிக்கொள்ள இடனுண்டு எனச் சட்டம் சாற்றுகிறது. இதனை சிதம்பரச் செட்டியாரின் பொருட்டுச் சாட்சி கூறவந்தவர் மூலமே மெய்ப்பித்தாகிவிட்டது. வாதி தரப்புச் சாட்சியைக்கொண்டே இவ்வாறு செய்தது எதிரிக்கு மிகவும் பலமாகும். அதுகொண்டுதான் ஆசிரியர் விடுதலை பெற்றார். மற்ற விந்தைத் தீர்ப்பை இங்கு விரித்தல் வேண்டாம். கெட்ட எண்ணம் உண்டா இல்லையா என்பதை ஈண்டு நோக்குவோம்.

சிதம்பரச் செட்டியார் தன்மையையும் ராய. சொக்கலிங்கன் நீர்மையையும், இவ்விருவருக்கும் உள்ள தொடர்பையும் அறியாதார் கூடக் கெட்ட எண்ணம் கொண்டு இக்கட்டுரை வெளிப்போந்ததா இல்லையா என்பதைக்கூற முடியும். ராய. சொக்கலிங்கனுக்குச் சிதம்பரச் செட்டியார் மீது கெட்ட எண்ணம்—அதாவது அவரை வேண்டுமென்றே மானபங்கம் செய்யவேண்டுமென்ற எண்ணம் இல்லையென்பது ஒரு புறம் இருக்க, அவ்வெண்ணம் உண்டு என்று வைத்துக்கொண்டாலுங்கூட, இக் கட்டுரை சம்பந்தப்

பட்ட மட்டில் அவ்வெண்ணத்திற்கும் இதற்கும் சம்பந்தமில்லை. ஏன்? எழுதியதும் அவரல்ல; அச்சிட்டதும் அவரல்ல; வெளிப்படுத்தியதும் அவரல்ல. பொறுப்பையே மற்றொருவரிடம் விட்டுச் சென்றதாக கரி இருக்கின்றது. அது நிற்க, கெட்ட எண்ணங் கற்பித்தாற்றான் வழக்குத் தொடர முடியுமென்று கருதிய அன்பர் சிதம்பரச் செட்டியார் தாம் தொடுத்த பிரியாதில் கீழ்க்கண்டவாறு கூறுகின்றார்:—

௧—௧௨—௨௫-ல் வெளிவந்த ஷை பத்திரிகையின் இதழில் ௯-வது பக்கத்தில் 'இவர்களால் யாது பயன்' எனும் தலைப்பின் கீழ் எதிரி, வாதியை மானபங்கம் செய்யவேண்டுமென்றே கீழ்க்காணுமாறு எழுதியிருக்கிறார். அவ்வாறு எழுதுவது வாதியின் கௌரவத்திற்குப பங்கம் விளைக்கும் என்பதை எதிரி நன்கறிந்தே வெளியிட்டிருக்கிறார். ஆகவே பிரஸ்தாப வியாஸத்தில் கூறப்பட்டிருப்பவைகள் பெரும் அவதூறாக விருப்பதால் எதிரி இந்தியன் பினல்கோடு ௫௦௦-வது பிரிவுப்படி குற்றம்புரிந்தவராகிறார்.

ஆகவே பிரியாதை விசாரித்து எதிரியைத் தண்டிக்கும்படி கோர்ட்டார் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

ஆட்சேபப் பகுதி.

"இவ்வாறு செல்லாதவர்களுள் நம் நகர் ஆவி. பழ. சிதம்பரம் செட்டியாரும் ஒருவர் என்பதைப் பொது ஜனங்கள் கவனித்தல் அவசியம் இவரும் இவர் போன்றாரும் சபைகட்குச் சென்றுவிட்டாலும் பேசுவது என்ற கெட்ட வழக்கம் இவர்களிடம் கிடையாது. அதிகாரிகட்குச் சார்பாக ஓட்டுக்கொடுக்கமட்டும் தயாராக யாவருக்கும் முன்னதாக எழுந்துவிடுவார்கள். நாற்காலிகளை

அலங்கரித்து அரசாங்கத்தாரிடம் நல்ல பிள்ளைகள் என்ற பெயர் வாங்கக்கூடியவாறு நடந்துகொள்ளுவதே இவர்களது வேலை. கூட்டங்கட்குச் செல்ல வசதியில்லாதவர்களுங்கூட எப்படியோ கமிட்டிகளிலும் ஸ்தானம் பெற்றுவிடுகின்றனர். இது நகைப்பிற்கிடமாகும். பொதுக்கூட்டங்கட்கே வரவியலாதவர்கள் கமிட்டிக் கூட்டங்கட்கு எப்படி வரப்போகின்றனர்? ஸ்தானம் பெறும் வரைப் பொதுஜனங்களிடம் தாங்கள் அங்கு சென்று ஏதேதோ செய்யப்போவதாகக் கூறுவது இவர்கள் வழக்கம். பின்னர் வாய்மூடி மௌனிகளாக நாற்காலிகளில் அமர்ந்திருப்பார்கள். ஸ்தல ஸ்தாபனங்களில் அங்கம் பெறுவதைக் கௌரவப்பட்டங்களும் பதவிகளும் பெறுவதற்கு ஓர் சாதனமாக வைத்துக்கொண்டிருப்பவர்கள் பொதுஜன நலனை எவ்வாறு கவனிக்கப்போகின்றனர்? பொது ஜனங்களை ஏமாற்றி வந்த காலம் மலையேறிப்போய்விட்டதென்பதையும் இனியும் இவ்வாறு காலங்கழிக்க இயலாதென்பதையும் அறிந்து தக்கபடி நடந்துகொள்ளுதல் இவர்கள் முற்படவேண்டும்.''

''பிரஸ்தாப பத்திரிகையின் பிரதியொன்று இத்துடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது.''

திரு. சிதம்பரச்செட்டியார் அவதூறாகக் கொண்ட இந்தக் காட்டிய பகுதியில் கூறப்பட்டிருப்பவை முற்றும் மெய் யென்பதை அந்தச் சிதம்பரச் செட்டியார் கூறிய சாட்சியங்களினின்றும், அவர் சாட்சிகள் நமது சாட்சிகள் மொழிகளினின்றும் நிரூபிக்கப்போகின்றோம். அதற்கு இக்கிழமை இடங் கிடைக்காது. அது அடுத்தகிழமை வரும். இந்த எண்ணத்தைப் பற்றி மட்டும் நோக்குவோம். ''எதிரி

வாதியை மானபங்கம் செய்யவேண்டுமென்றே எழுதி யிருக்கின்றார்" என்று வாதியாகிய ராவ்பகதூர் வழுத்துகிறார். அவ்வாறு சிதம்பரச்செட்டியாரை மானபங்கஞ் செய்யவேண்டுமென்ற எண்ணம் எதிரியாகிய ராய. சொக்கலிங்கனுக்கு உண்டானதற்கு இரண்டு காரணங்கள் வாதி கூறுகிறார். அவ்விரண்டையும் ஆராயலாம்.

ஒன்று யூனியன் போர்டுக் கட்டிடத்தில் எதிரியை வாதி சந்தித்துப்பேசியது. மற்றொன்று எதிரியை ஆசிரியராகக்கொண்ட பத்திரிகாலயத்தின் காரியஸ்தரால் யூனியன் போர்டுத்தலைவர் என்ற முறையில் வாதிக்கு எழுதப்பட்ட கடிதம் பற்றியது. இவ்விரண்டில் முன்னையதை முதலில் எடுத்துக்கொள்வோம். வழியிற் சென்றுகொண்டிருந்த ஊழியன் ஆசிரியனாகிய ராய. சொக்கலிங்கனை ராவ்பகதூர் சிதம்பரச்செட்டியார் கூப்பிட்டு யூனியன் போர்டுக் கட்டிடத் தாழ்வாரத்தில், "நீங்கள் அப்படி எழுதக்கூடாது இப்படி எழுதக்கூடாது" என்று கூறினாராம். ராய. சொக்கலிங்கன் "அப்படித்தான் எழுதுவேன்" என்று கூறவிட்டு வந்துவிட்டாராம். வாதி மீது எதிரி கெட்டஎண்ணங் கொள்வதற்கு இஃதோர் காரணமாம். இவர் கூறுமாறு நடந்திருந்தாலும் இதனால் கெட்ட எண்ணம் வாதிக்கு உண்டாகவேண்டுமன்றி எதிரிக்கு உண்டாக நியாயமில்லை. அவர் கூற்றுப்படி, சொன்னவர் சிதம்பரச்செட்டியார்; மறுத்தவர் சொக்கலிங்கன் எனவே, சொக்கலிங்கன் மீது சிதம்பரச்செட்டியாருக்குக் கெட்ட எண்ணம் தோன்றவேண்டுமன்றி இவ-

ருக்கு அவர்மீது தோன்ற இதனால் இடமில்லை. அது நிற்க,

இந்நிகழ்ச்சி சிறிதும் உண்மையற்ற மிகப் பெரும் பொய். ராய. சொக்கலிங்கனைக் கூப்பிட்டுச்சொல்லச் சிதம்பரச்செட்டியாருக்கு என்ன உரிமை என்பது நமக்கு விளங்கவில்லை. அவருக்கும் இவருக்கும் என்ன சம்பந்தம்? அவர் எங்கே? இவர் எங்கே? அவர் கொள்கை என்ன? இவர் கொள்கைஎன்ன? தமக்கு அடிமைப் பட்ட வேறு யாரையும் கூப்பிட்டுச் சிதம்பரச்செட்டியார் சொல்லியிருக்கலாம். அவர் கேட்டுமிருக்கலாம். ராய. சொக்கலிங்கனைக் கூப்பிட்டு அப்படிச் செய்யாதே, இப்படிச் செய்யாதே என்று ஆவி. பழ. சிதம்பரச்செட்டியார் சொன்னாராம்! அம்மம்மா! ஏன் இப்படிப்பெரும் பொய் புகல்தல் வேண்டும்? வழக்கு வென்றாலென்ன? தோற்றழிந்தாலென்ன? முடிவில் பொய் வெளிப்படாதொழிந்ததோ? இல்லையே.

தாம் கூறியது பொய் என்பது அவர் வாயினின்றமே வெளிப்பட்டு விட்டது. முதல்விசாரணையில் இரண்டு மூன்று முறை கூப்பிட்டனுப்பிச் சொன்னதாகச் சொன்னார். குறுக்குவிசாரணையில் ஒரே ஒரு முறைதான் என்றியம்பினார். அது ஒரு பொய். முதலில் கூப்பிட்டனுப்பியதாகக் கூறியவர் பின்னர் கூப்பிட்டனுப்பவில்லையென்றும் வழியில் சந்தித்துக் கூப்பிட்டுப் பேசியதாகவும் சொன்னார். இது இரண்டாவது பொய். நவம்பர் முற்பகுதி யென்பது பதினைந்தாந்தேதிக்குமுன் என்பது எல்லோர்களுக்குந் தெரியும். நவம்பர் பதினேழாந்தேதிப் பத்திரிகையில் சங்காரச்

சாரியாரைப் பற்றி எழுதப் பட்டிருந்ததற்காகவே கூப்பிட்டுச் சொன்னதாகக் கூறினார். இது மூன்றாவது பொய். நவம்பர் ௧௭உ பத்திரிகையில் எழுதப்பட்டதற்கு ௧௩உக்கு முன் எப்படிக்கூறியிருக்க முடியும்? அன்றித் தேதியைத் தவறாகக்கூறிவிட்டாரோ என்று கொள்ள இடமில்லை. சங்கராச்சாரியாரைப் பற்றி பதினேழாந்தேதிப் பத்திரிகையில் எழுதியது பற்றியே சொன்னதாகக்கூறுகிறார். டிசம்பர்மீ ௧௨ப்பத்திரிகையில் இவ் அவதூறுக் கட்டுரை வெளிவந்துளது. அதற்கிடையில் ராய. சொக்கலிங்கனைச் சிதம்பரச்செட்டியார் சந்திக்க வழியில்லை. ஏன்? நவம்பர் பதினெட்டாந்தேதி முதல் டிசம்பர் பதினேழாந் தேதிவரை ராய சொக்கலிங்கன் காரைக்குடியில் இல்லை எனச் சிதம்பரச்செட்டியாரின் சாட்சியின் மூலமே வெளிப்பட்டிருக்கிறது. எனவே இதில் அன்பர் சிதம்பரச்செட்டியாரின் கூற்று மறுக்க முடியாத வெறும்பொய்யென்பது தேற்றம். அவர் கூற்றில் பொய்கள் இன்னும் பலப்பல உண்டு. எல்லாவற்றையும் எடுத்து எழுதின் மிக விரியும். அவசியமாயின் வேண்டுமிடத்து விளம்புவோம்.

“அவ்வாறு எழுதப்பட்டதால் எனது கௌரவம் போய் விட்டது” என்று சிதம்பரச்செட்டியார் செப்புகிறார். உண்மையைக் கூறுவதால் கௌரவம் ஒன்றும் போகாது. சிதம்பரச்செட்டியார் அது கௌரவக் குறைவென்று கருதுகிறார். நாம் பொய் புகல்வதை விடக் கௌரவக்குறைவு வேறொன்றில்லை எனக் கருது

கிறோம். இவ்வேறுபாடு அவருக்கும் நமக்கும் இருத்தல் இயல்பே.

கெட்ட எண்ணத்திற்குற்ற காரணமாக அவர் கூறும் பின்னையதைப் பார்ப்போம். யூனியன்போர்டுத் தலைவர் ஊழியன் பத்திரிகைக்கு அனுப்பியகூட்ட அறிவிப்பை நிறுத்திவிட்டார். அதுபற்றி ஊழியன் காரியஸ்தர் மிக மரியாதையாக, யூனியன்போர்டுத் தலைவருக்கு இரண்டு கடிதங்கள் எழுதினார். இதற்கும் கெட்ட எண்ணத்திற்கும் என்ன தொடர்பு? தலைவர் சிதம்பரச்செட்டியாராக இல்லாது வேறொருவராக இருந்த போதிலும் அவர் காரிய முறையில் கடிதங்கள் எழுதியே இருப்பார். இதிலென்னபிழை? இதிலிருந்து கெட்ட எண்ணம் எப்படி உண்டாகும்? அதினும் இது காரணமாக அக்கடிதங்கட்குச் சம்பந்தமில்லாத ராய. சொக்கலிங்கனுக்கு எவ்வாறு கெட்ட எண்ணம் தோன்றும்? அக்கடிதங்களில் கடுமையாகக் கூட எழுதப்படவில்லை. கடிதங்கள் கீழே வருகின்றன அன்பர்கள் பார்க்கலாம்.

(௧)

௪௨௦ நவம்பர் ௧௫௨, ௧௯௨௫

தலைவர்,

யூனியன் போர்டு, காரைக்குடி.

ஐயா,

சென்ற வாரம் நடந்த 'யூனியன்போர்டு' கூட்டத்திற்கு எங்கட்கு நோட்டீசு அனுப்பப்படவில்லை, முன்னும் இம்மாதிரியே இருந்து, நாங்கள் கடிதம் எழுதியதின்மேல், ஒரு கூட்டத்திற்கு மட்டும் நோட்டீசு

அனுப்பியிருந்தீர்கள். வரிச் செலுத்துவோரும், பிற பொது மக்களும், யூனியன்போர்டு கூட்ட நடவடிக்கைகள் பத்திரிகையில் வெளிவராததைக்கண்டு வருந்துவார்களென்பதில் ஐயமின்று. கூட்ட அறிவிப்பு எங்களுக்கு அனுப்பாதிருந்தது குமாஸ்தாக்களின் தவறுதலாகவே யிருக்குமென எண்ணுகிறோம்.

இனி வேண்டுவன செய்து முறையாக கூட்ட அறிவிப்புகள் எங்கட்கு கிட்டுமாறு ஏற்பாடு செய்து எங்களுக்கும் தெரிவிக்குமாறு விரும்புகிறோம்.

தங்கள்,

(ஒப்பம்) தே வே அருணசலன்

மானேஜர்.

உ

சஅஅ டிசம்பர் ச-உ ககூஉரு.

திருவாளர்,

ராவ்பகதூர், ஆவி. பழ. சிதம்பரம் செட்டியாரவர்கள்

தலைவர்,

ஸ்தலஸ்தாபன சபை, காரைக்குடி.

ஐயா!

சென்ற பல வாரமாக யூனியன் போர்டு கூட்ட அறிவிப்புகள் எங்கட்குக் கிடைக்கவில்லை. அதுபற்றி நவம்பர்-மீ கரு-ந் தேதி யன்று உங்கள் காரியாலய அட்ரசுக்கு ஒரு கடிதம் எழுதியுள்ளோம். அதற்கு எவ்வித பதிலும் அல்லது கூட்ட அறிவிப்பும் இதுகாறும் பெற்றோமில்லை. வரி செலுத்துவோரும், பிற பொது மக்களும் யூனியன் போர்டு கூட்ட நடவடிக்கைகளை படித்தறிய அவாவுடையவராய் இருப்பவான்

ரோ? நவம்பர்-மீ ௩௰-உ எழுதிய கடிதத்திற்கு நகல் ஒன்றும் இத்துடன் அனுப்பியுள்ளோம்.

இனியாவது கூட்ட அறிவிப்புகள் எங்கட்குக் கிடைக்கும்படி ஏற்பாடு செய்து எங்கட்கும் தகவல் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம். முன்னைய கடிதத்திற்கு இதுகாறும் பதிலில்லாததால் அக்கடிதம் தங்கட்குக் கிடைத்ததா அல்லவா எனச் சந்தேகித்து, இக்கடிதம் பதிவு செய்து அனுப்பப்பெற்றிருக்கிறது.

தங்கள்,

(ஒப்பம்) தே. வே. அருணாசலன்,

மானேஜர்.

இக்கடிதங்கட்குப் பதில் எழுதவில்லை. கடிதங்கள் கிடைத்ததாகக் கோர்ட்டில் கூறியிருக்கிறார்.

எனவே, கெட்ட எண்ணத்திற்குக் கற்பிக்கப்படும் இக்காரணமும், பொய்க்காரணம். இவ்விரண்டும் இவ்வளவு விளக்கமாக இருக்கும்பொழுது வழக்கே செல்லுபடியாகாது. ஆனால் நீதிபதி கோவிந்த நாயர், குற்றப் பத்திரிகையும் வாசித்து அபாரதமும் விதித்துவிட்டார். தீர்ப்பின் நகல் நேற்றுத்தான் கிடைத்தது. அது அடுத்த கிழமை வெளிவரும். அதன் ஆராய்ச்சியும் அடுத்த கிழமை வரலாம்.

*　　*　　*　　*

௩

இவ் அவதூறு வழக்கில் வாதியால் எடுத்துக் கொள்ளப்பட்ட ஆட்சேபப் பகுதியில் உண்மைக்கு மாறாக ஏதும் உளதா? அப்படியே இருந்த போதினும்

அதில் அவதூறுக்குரியதாக ஏதும் உளதா என்று ஈண்டு நோக்குவோம். அவதூறாகக்கொண்ட பகுதிகளைப் பகுத்து ஆராய்வோம். "இவர்களால் யாது பயன்?" என்பது கட்டுரையின் தலைப்பெயர். இது சிதம்பரச் செட்டியார் என்ற ஒருவரைக் குறிக்காது என்பதைத் தமிழறிந்தார் அறிவர். இவர்கள் என்பது பலரைக் குறிக்கும் பன்மைச்சொல். இக்கட்டுரையில் "இவ்வாறு செல்லாதவர்களுள்" என்பது முதலே ஆட்சேபப் பகுதியாக எடுக்கப்பட்டுளது.

> "இவ்வாறு செல்லாதவர்களுள் நம் நகர் ஆவி. பழ. சிதம்பரச் செட்டியாரும் ஒருவர் என்பதைப் பொது ஜனங்கள் கவனித்தல் அவசியம்"

என்பது ஒன்று. கூட்டங்கட்குப் பலர் செல்லவில்லை. அதில் சிதம்பரச் செட்டியாரும் ஒருவர் என்று இச் சொற்றொடர்கள் குறிக்கின்றன. அன்றியும், அவர் மீது வேண்டுமென்றே குறை கூற எழுதப்படவில்லை யென்பதையும் அவரைத் தெரிந்தெடுத்த பொதுமக்கட்கு எச்சரிக்கை செய்யும் முகத்தாலேயே வாக்கியங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன என்பதையும் மறக்கமுடியாது இக்கட்டுரையின் ஈற்றிலும் இதனை வற்புறுத்தும் சொற்றொடர் காணப்படுகின்றது ஜில்லாக்கழகக் கூட்டங்கட்குச்சிதம்பரசெட்டியார் செல்லவில்லை யென்பதில் பிழை யொன்றுமில்லை அது உண்மைக்கு மாறன்று. அதை அவரே ஒப்புக்கொண்டிருக்கிறார். அதை அவர் ஒப்புக்கொள்ளாமல் தீராதநிலையில் ஆதாரம் இருந்துவிட்டது சிதம்பரச்செட்டியார் தாம் ஜில்லாக்கழக உறுப்பினராக விருந்த சிலகாலத்திற்குள்

மூன்று முறை தமது பதவியை இழந்து மீண்டும் மீண்டும் பெற்றிருக்கிறார் இவர் அங்கத்தவராக இருந்த காலத்தில், பதிமூன்று கூட்டங்கள் நடைபெற்றிருக்கின்றன அவற்றுள் நான்கு கூட்டங்கட்கே இவர் சென்றிருக்கிறார் அவைகளுள் இரண்டு கூட்டங்கட்கு இராஜவிசுவாசப்பிரமாணம் செய்ததற்கு இன்றியமையாது போய்த்தீர வேண்டியநிலையிருந்தது. எனவே இம் முதற்பகுதி சரியே: இனிவருவன சிதம்பரச்செட்டியாரையே குறிப்பன. அன்று அவை ஒருபகுதியாரைக் குறிப்பன. அவற்றில் "எழுந்து விடுவார்கள்" "நடந்துகொள்ளுவதே இவர்களது வேலை" "எவ்வாறு வரப்போகின்றனர்?" எவ்வாறு கவனிக்கப்போகின்றனர்?" முதலிய எதிர்காலச் சொற்றொடர்களே மிகுதியும் இருக்கின்றன. இவை நிலைமையை விளக்கின்றன என்பதைத் தவிர, நடந்தவற்றைப் பற்றிக் கூறியதாகக் கூட வைத்துக்கொள்ளப்பட வேண்டியதில்லை. இவை அன்பர் சிதம்பரச்செட்டியாரையே குறித்து நிற்கின்றன என்று கட்சிக்காக வைத்துக்கொண்டாலும், அவை உண்மை என்று நிரூபணமாகியிருக்கின்றதென்றே நாம் கருதுகிறோம்.

"ஒருவரும் இவர் போன்றாரும் சபைக்குச் சென்று விட்டாலும், பேசுவது என்ற கெட்டவழக்கம் இவர்களிடம் கிடையாது.

என்பதை இரண்டாவதாக எடுத்துக்கொள்வோம். பேசுவது என்பது ஈண்டு தங்கருத்தை விளக்கிப்பிரசங்கஞ்செய்வது என்ற கருத்தில் எழுதப்பட்டிருக்கின்றது. தாம் பொதுக்கூட்டங்களில் ஒருநாளும்

பேசியதில்லை யென வாதியே வழுத்துகிறார். குறுக்கு விசாரணையில் வாதி சாட்சிகளில் ஒருவராகிய திரு. சுந்தரமய்யர் "எனக்குத் தெரிந்த வரை வாதி பேசிய தில்லை" என்று இயம்புகிறார். வாதியின் சாட்சிகள் பலரும் சிதம்பரச் செட்டியார் பேசியதாய்க் கண்ட தில்லை யென்று சாற்றுகிறார். எனவே, இரண்டாவ தாக எழுதப்பட்ட இதுவும் உண்மையே என்பதில் தடையில்லை.

"அதிகாரிகட்குச் சார்பாக ஓட்டுக்கொடுக்க மட்டும். தயாராக யாவருக்கும் முன்னதாக எழுந்து விடுவார்கள்."

என்பதை மூன்றாவதாக எடுத்துக்கொள்வோம் இதை யும் எதிரியின் சாட்சிகள் வற்புறுத்துகின்றனர். வாதி யின் சாட்சிகளுள் மிக முக்கியமானவராக மாஜிஸ்ரேட் டால் கருதப்படும் திரு. மாணிக்கவாசகப்பிள்ளையே தாம் அறியாமலோ அறிந்தோ இதனை ஒப்புக்கொண் டிருக்கின்றார். "**வாதி என்னோடு ஒத்துழைக்க ஒருபோதும் மறுத்தது கிடையாது**" என்று அச் சாட்சியாகிய ஜில்லாபோர்டு உதவித் தலைவராகிய அதி காரி கூறுகிறார். இதையே இப்பகுதி குறிக்கின்ற தன்றி, வேறென்?

"அரசாங்கத்தாரிடம் நல்ல பிள்ளைகள் என்று பெயர் வாங்கக் கூடியவாறு நடந்துகொள்வதே இவர்களது வேலை."

என்பதை நான்காவது எடுப்போம். ராவ்பகதூர் சிதம் பரச் செட்டியாரைப் பொறுத்தமட்டில், இதில் என்ன பிழை? அரசாங்கத்தார் நல்ல பிள்ளை என்பதற்கு

அடையாளமாகக் கொடுத்திருக்கும் இந்த ராவ்பகதூர் பட்டம் ஒன்றே இதற்குச் சான்றாகாதோ? அரசாங்கத்துக்கு நல்லபிள்ளையாக நடக்காவிட்டால், பட்டம் எவ்வாறு கிடைக்கும்? அரசாங்கத்துக்கு நல்ல பிள்ளையாக நடந்துகொண்டதற்குச் சான்று பல உண்டு. அரசாங்கத்துக்கு விரோதமாக எழுதக் கூடாது என்று எதிரியாகிய ராய. சொக்கலிங்கனைக் கூப்பிட்டுச் சொன்னதாக, சந்திப்புப் போய்க்கதையில் வாதியே கூறுகிறார். இதினின்றும் அரசியலில் அவர் மனப்பான்மை விளங்கவில்லையோ? கவர்னர்களை வரவழைத்து உபசரித்தல் அரசாங்கத்தாரிடம் நல்ல பிள்ளையாவதற்கில்லையோ? அதிகாரிகளோடு உறவாடுதல் அரசாங்கத்தாரிடம் நல்லபிள்ளை யென்ற பெயர் வாங்குதற்காக இல்லையா? ராய. சொக்கலிங்கன் அரசாங்கத்திற்கு விரோதமாக எழுதுகிறார் என தேவகோட்டையில் உள்ள அரசாங்க அதிகாரியாகிய மாஜிஸ்ரேட்டிடம் தாம் கூறியதாக, திரு. சிதம்பரச் செட்டியார் விசாரணையில் கூறினார். இது நல்ல பிள்ளைப் பெயர் வாங்கவா, இல்லையா? இவர் அரசாங்கத்திற்கு நல்லபிள்ளையாக நடந்துகொண்டிராவிட்டால், இவ்வழக்கில் இரண்டு மாஜிஸ்ட்ரேட்டுகள் இவர் பொருட்டுப் பரிந்து சாட்சி புகல வருமாறு நேர்ந்திருக்குமோ? இவர் அரசாங்கத்திற்கு நல்ல பிள்ளையாக நடக்கவேண்டுமென்னும் நோக்கமுடையார் என்பதற்கு இன்னும் எத்தனையோ பல சான்றுகள் உண்டு. விரிவஞ்சி நிறுத்துகிறோம்.

> "பொதுக் கூட்டங்கட்குச் செல்ல வசதியில்லாதவர்களுங் கூட, எப்படியோ கமிட்டிகளிலும் ஸ்தானம் பெற்றுவிடுகின்றனர்"

என்பதை மூன்றாவதாகக் கொள்ளலாம். இதில் என்ன பொய் இருக்கிறது? திரு. சிதம்பரச் செட்டியார் ஒன்றே முக்கால் வருடத்திற்குள், கூட்டங்கட்குப் போகாத காரணத்தால், மூன்று முறை இருக்கை இழந்தார். இந்த நிலைமையிலுள்ளவர் கமிட்டியிலும் ஸ்தானம் பெறுவாரானால், அது நகைப்பிற் கிடமில்லையா? நிலைமையை நோக்கும்பொழுது, எப்படியோ பெற்றார் என்பதில் என்ன பிழை? ஒரு முறையல்ல; இருமுறையல்ல; மூன்று முறை, சொற்ப காலத்திற்குள் பதவியிழந்த சிதம்பரச் செட்டியாருக்குக் கமிட்டியிலும் இடம் கிடைப்பது நகைப்பிற்கிடமென்பது முற்றும் சரியென்றே (மாஜிஸ்டிரேட் தீர்ப்பளித்தபோதிலும்) நாம் இன்னும் கருதுகிறோம்.

> "அங்குச் சென்று ஏதேதோ செய்யப்போவதாகக் கூறுவது இவர்கள் வழக்கம்"

என்பது ஆறாவது. இது உலகத்தில் எல்லாரிடமும் காணப்படுவது இயல்பாக இருக்கிறது. ஸ்தானம்பெறுமுன் இருக்கும் நிலை வேறாகவும், பின்னர் வேறாகவுமே பலரையும் காண்கின்றோம். இக்கூற்று முற்றும் உண்மை என்பது பொதுமக்கள் அறிந்த அநுபவம்.

ஏழாவதாக, வாய்மூடி மௌனிகள் பற்றியது இதுவும் பேசுவதில்லையென்பதைக் குறிப்பதேயாகும். வாய்மூடி மௌனிகள் என்பது வாயைத் திறந்தே பேசாதவர்கள் என்ற பொருளில் எழுதப்பட்டதன்று.

பொது ஸ்தாபனத்தில் வேண்டுமளவு பேசாது உழைத்திலையே, அது குறிக்கின்றதன்றி வேறில்லை. இதுபற்றிப் பேசுவதில்லையென்ற பகுதியில் விளக்கப்பட்டிருப்பதால், இங்கு விரிக்கவேண்டாம்.

"ஸ்தல ஸ்தாபனங்களில் அங்கம் பெறுவதைக் கௌரவப் பட்டங்களும் பதவிகளும் பெறுவதற்கு ஓர் சாதனமாக வைத்துக்கொண்டிருப்பவர்கள் பொதுஜன நலனை எவ்வாறு கவனிக்கப்போகின்றனர்"

என்பதை எட்டாவதாகக் கொள்ளலாம். இதைப்பற்றியும் விரிக்க அவசியமில்லை. இதற்கு திரு. சிதம்பரச் செட்டியாரைப் பொறுத்த அளவில், அச்சமயம் ஜில்லாக் கலெக்டராகவிருந்த திரு. இராமமூர்த்தி அவர்களே சான்றாக நிற்கின்றார். சிதம்பரச்செட்டியார் ஸ்தல ஸ்தாபனங்களில் செய்த வேலைக்காகவே ராவ்பகதூர் பட்டம் என திரு. இராமமூர்த்தி செப்புகிறார். இதற்கு இதைவிட வேறு சாட்சிவேண்டாம், எதிரியின் சாட்சிகளும் இதைக் கூறியிருக்கின்றார்.

"இவர்களால் யாது பயன்?" என்ற இக்கட்டுரையின் இறுதியில் இவர்கட்கு எச்சரிக்கை செய்யப்பட்டிருக்கிறது. பொதுநலன் கருதியே இக்கட்டுரை வெளிப்போந்ததன்றி, எவர்மீதும் கெட்ட எண்ணங் கொண்டன்று என்பது தேற்றம். கட்டுரையில் கூறப்பட்ட பொருள்கள் முற்றும் உண்மை. அவற்றில் ஒன்று கூட அவதூறுக்குரியது அன்று. அச்சொற்களில் எதுவும் அன்பர் சிதம்பரச் செட்டியாரை மானபங்கம் செய்துவிடவில்லை. இவ்வாறு சர்வ சாதாரணமாகப் பத்திரிகை உலகில் எழுதப்படுவதை உலக அறிவு படைத்தோர்

அறியாமல் இரார். இன்னும் விரித்து விளக்க விருப்பம். விரிவஞ்சி இப்பகுதியை விடுப்போம். நீதிபதி தீர்ப்பு எவ்வாறாயினும், நமது கூற்று உண்மையா அன்று என்பதை அறிஞர் அறியாமலா இருப்பர்? பிரிட்டிஷ் அரசியலில் சில சட்டங்கள் வேடிக்கையாக இருக்கும். ஒருவன் இரவில் வந்து ஊர் உறங்கிய பின்னர்த் திருடியிருப்பான். அவன் திருடியதற்குச் சாட்சி வேண்டும். இன்றேல் பயனில்லை. திருடியவன் சாட்சியை வைத்துக்கொண்டா திருடுவான்? ஆளைக்கண்டவுடன் அவன் ஓட்டம் பிடித்துவிடுவானன்றோ? சில பொருள்கள் உண்மையாக இருக்கும். ஆனால் ருஜுப்படுத்த முடியாது. இவ்வழக்குச் சம்பந்தப்பட்டமட்டில் அப்படிக்கூட அல்ல. எழுதப்பட்டதனைத்தும் உண்மை என்பது வெளிப்படை.

* * * *

௬

இவ்வழக்கில் நீதிபதிகூறிய தீர்ப்பு வேறு பக்கங்களில் வெளிப்போந்திருக்கின்றது. சிரமத்தைப்பாராது அதனை முற்றும் படிக்கும்படி அன்பர்களை வேண்டுவோம். வழக்கிற்கிடனை கட்டுரை குற்றத்திற்குரியதன்று என்பதுபற்றிச் சென்ற மூன்று பகுதிகளில் விளக்கி எழுதிவிட்டோமாதலின், தீர்ப்பின்மேல் விரித்துக்கூற வேண்டுவது அதிகமில்லை. இன்றியமையாத சில பொருள்களை மட்டும் செப்பி அமைவோம்.

நீதிபதியாகிய அன்பர் கோவிந்தநாயருக்கு முதலில் நன்றி செலுத்தவேண்டும். நல்லவேளையாக, வா

திக்கும் எதிரிக்கும் பகைமையிருப்பதாகச் சான்றில்லை யென அவர் ஒப்புக்கொண்டுவிட்டார். கெட்ட எண்ணத்திற்கு இரண்டு காரணங்கள் காட்டினார் வாதி. அதுபற்றிச் சென்ற கிழமை விளக்கமாக எழுதியுள்ளோம். அதனை அன்பர்கள் படித்திருக்கலாம். யூனியன் சபைத்தலைவருக்கு ஊழியன் காரியஸ்தர் எழுதிய கடிதம்பற்றியது ஒன்று. யூனியன் கட்டிடத் தாழ்வாரச்சந்திப்பு மற்றொன்று. முன்னையதில் பகைமைக்கு இடமில்லை யென்றும் பின்னையது நேராக ஒன்று எனவும் நீதிபதி கூறுகிறார். இவை உண்மையே. பின்னையதில் வாதி கூறிய பெரும்பொய்யை நன்கு உணர்ந்தார் நீதிபதி என்பது தெளிவாகின்றது. ஆனால், அது பெரும் பொய் என்று ஏன் நீதிபதி அழுத்தமாகக் கண்டித்தாரில்லை? இவர் கௌரவத்தைப் பாராட்டும் நீதிபதி. அதனை எண்ணியே, இவர் கூறிய பொய்யைப் பொய்யென்று கூறலாகாது எனக்கருதினார் போலும்! பாதகமில்லை. நீதிபதி விடுத்தபோதினும் மக்கள் மறப்பாரா, ராவ்பகதூரின் இப் பெரும்பொய்யை? கெட்ட எண்ணமில்லை என்பதை நீதிபதி ஒப்புக்கொள்ளுகிறார். எனவே, கெட்ட எண்ணம் இல்லை ஆகவே கேஸ் இல்லை. ஆனால், தீர்ப்பளித்திருக்கிறார். அஃதிருக்கட்டும்.

ஆசிரியர் ஊரிலில்லை; அவர் பொறுப்பை விட்டுச்சென்றார், என்பதை அங்கீகரிக்கின்றார். ஆனால் "ஆசிரியப் பொறுப்பைக் கொடுத்துச் செல்லப்பட்ட ஒருவர் அச்சிடுதல் வெளியிடுதல் ஆகிய பொறுப்புக்களை ஏற்கத்தகுதியுடையவரா என்பது மெய்ப்பிக்கப்படவில்லை" என்று அன்பர் கோவிந்த நாயர்கூறுகிறார்.

ஆசிரியப் பொறுப்பை ஏற்குந்தகுதியுடையவர் பின்னை இரண்டு சிறிய பொறுப்புக்களைத் தாங்குந் தகுதி வாய்ந்தவர் என்று சொல்லவாவேண்டும்? அச்சிடுதலை அச்சுக்கோர்ப்போர் செய்யமுடியும். வெளியிடும் பொறுப்பை எழுத்து வாசனையே அறியா மிகவும் சாதாரணமானவர்கூடச் செய்ய முடியுமே? ஆசிரியர் வேலை எல்லோர்க்கும் எளிதன்று. தகுதி அதற்கு வேண்டுமேயன்றி, மற்றவற்றைப்பற்றி என்ன கவலை? ஆசிரியப்பொறுப்பு நீக்கப்பட்டபிறகு, பின்னை இரண்டையும்பற்றி நிற்றல் பெருவிந்தையாகவே நமக்குத் தோன்றுகிறது. அறிஞர் பலரும் அவ்வாறே கருதுகின்றார். சாதாரண அறிஞர் மட்டும் அன்று; சட்டமறிந்தாரும் சாற்றுகின்றார். நீதிபதி கோவிந்த நாயர் கெட்ட எண்ணமுமில்லை என்கிறார்; ஆசிரியரையும் விடுதலைசெய்கின்றார். பின்னை இவ்வழக்கில் என்ன இருக்கிறது? விந்தை! விந்தை!!

நீதிபதி கூறும் பிற எல்லாப் பொருள்களையும் விரித்துச்சொல்ல, நாம் விரும்பவில்லை. ஏற்கனவே ஒரு முறை அவர் தீர்ப்பை எதிர்பாராமலேயே, நாம் ஆராய்ந்து எழுதியிருக்கின்றோம். அவற்றையும் அன்பர்கள் படித்திருப்பர். இக்கிழமை தீர்ப்பு வெளிப்போந்திருக்கிறது. இதனையும்படித்து மெய்காண்டல் மக்கள் கடமை. அவதூறுக்கு இன்றியமையாத கெட்ட எண்ணம், ஆசிரியப் பொறுப்பு ஆகிய இரண்டு பெரிய பொருள்களினும் நீதிபதி எதிரிக்குச் சாதகமாகவே தீர்ப்பளித்திருக்கின்றார். "இவர்களால் தீது பயன்" என்ற கட்டுரை அவதூறுக்குரியதல்லவெனவும், அது

மூற்றும் உண்மையெனவும் கட்டுரை குற்றமென்று ஒருகால் கருதப்பட்டாலும், அக்கட்டுரையைப் பொறுத்த ஆசிரியர் விடுவிக்கப்பெற்ற பின்னர், அவரே தாங்கி நிற்கும் மற்றைப் பொறுப்பின்மீது குற்றம் சாராதென்றும் நாம் கூறுகிறோம். நீதிபதி கட்டுரை அவதூறுக் குரியதுதான் என்று நினைக்கிறார்.

ஆனால், அதன் முதற்பகுதியாகிய கூட்டங்கட்குச் செல்லவில்லையென்பதை அவர் அங்கீகரிக்கிறார். அது வாதிமீது பிழையென உடன்படுகின்றார். மற்றையவற்றையெல்லாம் எடுத்துககொண்டு அவதூறாக மதிக்கின்றார் என்பதை அவர் தீர்ப்பைப் படிப்போர் தெரிந்துகொள்ளலாம். வேறு ஒன்றுமில்லை. வாதியின் சாட்சிகளை நம்புவதாகவும் எதிரியின் சாட்சிகளை நம்பாததாகவும் காட்டியிருக்கின்றார். இரண்டு தரப்பாரும் சாட்சிகள் விடுத்தனர். ஒரு சாராரை நம்பி, மற்றொரு சாராரை நம்பவில்லையென்றால், இதற்கு யாரென் செய்ய முடியும்?

அவர் முக்கியமாக நம்பும் சாட்சிகள் உண்மையே கூறுபவர்கள் என்று நம்மால் கூறமுடியாது. வாதியின் சாட்சிகளாகிய திருவாளர்களான கோவில் பிள்ளை, மாணிக்கம் பிள்ளை, மாணிக்கவாசகம் பிள்ளை முதலியவர்களின் சாட்சியங்களில், முன்னுக்குப்பின் மாறுபட்ட பல பொருள்கள் உண்டு. எல்லாம் எடுத்தெழுத விருப்பந்தான். ஆனால் அவதூறு வழக்குப்பற்றிய கருத்துக்களை இம்முறை இவ்வாரத்தோடு முடிக்க விரும்புவதால், விரும்பிய அனைத்தையும் இயம்ப முடியவில்லை.

வாதி எந்தக் கூட்டத்திலும் பேசியதாக ஆதாரம் இல்லை. மற்றைப் பலர் பெயர் ஜில்லா கெஜட்டில் இருக்கின்றது. இதுவே வாதி பேசவில்லையென்பதற்குப் போதிய சான்றாகும். இதைவிட அவர் பேசியதே இல்லை என்பதற்கு எதிரி தரப்பில் சாட்சியங்களும் இருக்கின்றன. ரிக்கார்டையும் தள்ளிவிட்டு, எதிரியின் சாட்சியங்களையும் நம்பாமல், வாதியின் சாட்சிகள் கூற்றையும் பெரும் பொய்யாகிய வாதி கூற்றையும் நீதிபதி நம்புகிறார். அத்தீர்ப்பில் அவர் கூறுவதிற்சில பொருள்கள் நமக்கு வேடிக்கையாக இருக்கின்றன. எதிரியின் சாட்சிகள் சிலரைக் குறிப்பிட்டு "வாதி பேசவில்லையென்று இவர்கள் சொல்லுகிறார்கள். இதனை மறுக்க வாதியின் இன்னின்ன சாட்சிகள் சாட்சியம் இருக்கின்றது" எனறு நீதிபதி கூறுகிறார். எதிரி சாட்சியின் சாட்சியங்களை மறுக்க வாதி சாட்சியின் சாட்சியங்கள் இருக்கின்றன என்று வழுத்தாமல் வாதி சாட்சிகளின் சாட்சியங்களை மறுக்க எதிரிசாட்சிகளின் சாட்சியங்கள் இருக்கின்றன என்று என் இயம்புதல் ஆகாது? விவாத முறையில் பார்த்தால், முன் பேசியதற்குப் பின் பேசியது மறுப்பன்றி முன் பேசியது பின் பேசியதற்கு மறுப்பாகாதன்றோ? முதலில் வாதி பேசினார்" என்று வாதியின் சாட்சிகள் சிலர் சொன்னார். "இல்லை; அவர் பேசவில்லை" என எதிரியின் சாட்சிகள் சொன்னார். இதில் எது மறுப்பு? முன்னையது மறுப்பு என மாஜிஸ்டிரேட் சொலகிறார். அன்பர்கள் தங்கள் தங்கள் அறிவிற்கெட்டியவாறு கொள்ளலாம்.

எதிரியின் சாட்சிகள் சிலரைக்குறிப்பிட்டு, "இவர் ஒரு கூட்டத்தில்தான் வாதியோடு சேர்ந்து ஆஜராகி யிருக்கின்றார்; இவர் இரண்டு கூட்டத்தில் தான் வாதி யோடு சேர்ந்து வந்திருக்கிறார்; ஆதலின், இவர் கூற்றை ஆதாரமாகக் கொள்ளமுடியாது" என்கிறார் நீதிபதி. வாதி வந்ததெல்லாம் நான்கு கூட்டங்களில் தானே? அவர் பல கூட்டங்கட்குச் சென்றிருந்தா லல்லவா, அவரைப் பல கூட்டங்களில் பார்த்திருக்க முடியும்? அவர் வந்த நான்கு கூட்டங்கட்கும் அவர் திறமையை அறிய, எல்லோரும் போய்விடவேண்டு மென்பது கட்டாயமா?

வாதியின் சாட்சிகளுள் ஒருவராகிய காரைக்குடி திரு. மெ. செ. சு. சிதம்பரச் செட்டியார் என்பவர் இக்கட்டுரையைப்பற்றிக்கொண்ட அபிப்பிராயத்தை யே பலரும் கொள்ள இடமுண்டு என நீதிபதி கருது கிறார். அந்தச் சிதம்பரச் செட்டியார் அபிப்பிராயத் தை நீதிபதி அவ்வளவு மதிப்பது அவர் வாசகசாலைத் தலைவராக இருப்பதற்கும் வருமானவரி ௬000 ரூபாய் செலுத்துவதற்காகவுமே எனவும் குறிப்பாகக் காட்டு கிறார். இவ்விரண்டின் பொருட்டு, ஒருவருக்கு மதிப் புக்கொடுப்பது நமக்கு உடன்பாடன்று. வாசகசாலைத் தலைமைப் பதவி சர்வ சாதாரணமான ஒன்றென்பதும், வருமானவரி அதிகம் செலுத்துவதால் மதிப்பு அதிகம் எனக் கருதுவது அறியாமை யென்பதும் நமது கொள் கை. வாசகசாலைத் தலைவர் நீர்மையை அவர் சாட்சியத் தைப் படித்தால் அறிந்துகொள்ளலாம். வருமானவரி

செலுத்துவதுகொண்டும் உத்தியோகங்களைக்கொண்டும் பிற ஆறவாரங்களைக்கொண்டுமே வாதியின் தப்பு சாட்சியங்களை மெய்யென்று அன்பர் கோவிந்த நாயர் நம்பினார் போலும்!

"பட்டங்கள் பெறுவதற்காகத் தமது ஸ்தானத்தை உபயோகப்படுத்திக்கொள்கிறார் என்று கூறுவதால், என்ன பொது நலம் உண்டாகிறது என்பதை நான் அறிய இயலவில்லை" என்று அன்பர் கோவிந்த நாயர் கூறுகிறார். ஏன் இதில் பொது நலமில்லை? பின் இணைப்பாகிய சில சொற்றொடர்களை அன்பர் மறந்துவிட்டார். அதைச் சேர்த்தால், இது பொது நலந்தான் என்பதை நீதிபதி அறிவார் என்று நம்புகின்றோம். சிலர் "பட்டங்கள் பெறுவதற்காகத் தமது ஸ்தானங்களை உபயோகப்படுத்திக்கொள்கிறார்; இந்நோக்கமே கொண்டவர் பொது ஜன நலனை எவ்வாறு எண்ணப்போகின்றார்" என்று கூறப்படுமானால், இவை பொது நலன் பற்றியதா, அன்று என்பதை அன்பரே தீர்மானிக்க. இக் கருத்துப்பட்ட சொற்றொடர்களே கட்டுரையில் இருக்கின்றன. இதனை ஏன் நீதிபதி திரித்துக்கொள்தல் வேண்டும்?

இறுதியாக, ஜோசப்பைப்பற்றி நீதிபதி சில செப்புகிறார். அவர் கோர்ட் நடந்துகொண்டிருக்கும் பொழுதே, தந்தியனுப்பியிருந்தார். அத் தந்தி பகிரங்கக் கோர்ட்டில், மாஜிஸ்டிரேட் கோவிந்த நாயரால் படிக்கப்பட்டது. பின்னர் கோர்ட் கலையுமுன், ஜோசப்பும் வந்துவிட்டார். அந்த நிகழ்ச்சி பத்திரிகை

களிலெல்லாம் அப்பொழுதே வந்தது. அதன் மூலம் அன்பர்கள் அவ் உண்மையை அறியக்கூடும். விரி வஞ்சி, இஃதோடு அவதூறு வழக்கு என்னும் கட்டுரையை முடிப்போம்.

பிரிட்டிஷ் அரசியலுக்கும் நமக்கும், அதன் சார்பு பற்றியவர்கட்கும் நமக்கும், அவ் வரசியலும் அவரும் உள்ளவரைக், கொள்கையில் என்றும் போராட்டந் தான். நமது கொள்கையை நாம் எவர் பொருட்டும் எதன் பொருட்டும் எந்த அதிகாரத்தின் பொருட்டும் விடப்போவதில்லை. ஆனால், இதுகொண்டு நாம் தாக்குதலையே கடனாகக் கொண்டிருக்கின்றோம் என எவரும் எண்ணவேண்டுவதில்லை. நமக்கு ஆளைப்பற்றிக் கவலையில்லை. நமக்கு ஆள்மீது பகையில்லை. செயலைப்பற்றியதே நமது கொள்கை. எவராயினும் செய்வது தவறானால், நாம் விடப்போவதில்லை. இந்த ராவ் பகதூர் சிதம்பரச் செட்டியாரேயாயினும், செய்வதில் நன்னோக்கமும் நன்மையும் இருக்குமேல், அச் செயல் பற்றியவரை அவரைப் போற்றுவதில் நாம் முன்னணியில் நிற்போம்; செயல் தவறினால், கண்டிக்கச் சிறிதும் பின்வாங்கப்போவதில்லை. எவராயினும் நமக்குக் குறி செயல். பிரிட்டிஷ் நீதிபதிகள் தீர்ப்பிற்காக, நாம் செய்தது குற்றமென்று ஏற்பட்டுவிடாது என்பதை மீண்டும் விளம்பி அமைவோம்.

"நவ சக்தி."

"ஊழியன்" என்னும் வாரப்பத்திரிகையைப் பற்றி நேயர்கட்குத் தெரியும். அப் பத்திரிகையில் வெளியான ஒரு சிறு கட்டுரை குறித்து, ஒருவர் அப் பத்திரிகை மீது வழக்குத் தொடுத்ததும் நேயர்கட்குத் தெரியும். வழக்கு முடிவில் பத்திரிகாசிரியர்க்கு ஒரு ரூபா அபராதம் விதிக்கப்பட்டதாகத் தெரிகிறது. தீர்ப்பு விவரந் தெரியவில்லை. "ஊழியனி"ல் வெளி வந்த கட்டுரைபோன்ற கட்டுரை பல பத்திரிகையில் வெளிவருதலுண்டு. பத்திரிகைக்கு உரிமையிருத்தல் வேண்டும். அவ்வுரிமை குலைக்கச் சிறு சிறு சொற்களையும் சொற்றொடர்களையும் காரணமாகக் கொண்டு வழக்குத் தொடுப்பது அறமாகத் தோன்றவில்லை. பத்திரிகையில் எழுதும் எழுத்து ஒவ்வொன்றிற்கும் வழக்குத் தொடுத்துக்கொண்டு போகவும் கூடும். இனி இத்தகைய வழக்குகள் எவரும் தொடுத்தலாகாது. வழக்கில் தளர்ச்சியுறாது போராடிய "ஊழியன்" ஆசிரியரைப் பாராட்டுகிறோம்.

"லோகோபகாரி."

காரைக்குடி ஊழியன் பத்திரிகையில் ராமநாதபுரம் ஜில்லா போர்டு அங்கத்தினரான அவ்வூர் ராவ்பகதூர் ஆ. வி. பழ. சிதம்பரம் செட்டியார் மீது அவதூறாக எழுதினதென்று அப் பத்திரிகையின் ஆசிரியரான திருவாளர் ராய. சொக்கலிங்கன் மீது ஏற்பட்ட

மான நஷ்ட வழக்கில் சென்றவாரம் தீர்ப்புச் சொல்லப் பட்டது. பதிப்பாசிரியர் என்ற முறையில் எதிரி ஒரு ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டார். இந்த வழக்குக் குக் காரணமாயிருந்த விஷயம் வாதியான ஸ்ரீமான் சிதம்பரம் செட்டியார் ராமநாதபுரம் ஜில்லாபோர்டுக் குப் பொது ஜனங்களால் தெரிந்தெடுக்கப்பட்ட அங் கத்தினர் என்ற முறையில், அந்த சபையின் கூட்டங் களுக்கு ஒழுங்காகப் போகாமல் அவர் தமது கடமை யில் தவறியதுபற்றி, ஒரு நியாயமான கண்டனமே யாகும். இதுபற்றி வாதி வழக்குத் தொடராமலிருந் திருந்தால், மிகவும் அழகாயிருந்திருக்கும். இதைவிட மிகப் பெரிதும் கடுமையான கண்டனங்களைப் பத்திரா சிரியர்கள் எழுதுகிறார்கள். ஆனால் இத்தகைய கண் டனங்களைக் காரைக்குடி வாசியான வாதி அதிகமாகக் கண்டிராதவராதலின் வழக்குத் தொடுத்துவிட்டார். இந்த வழக்கு விசாரணை சென்னை; பம்பாய் முதலிய ராஜதானி நகரங்களிலே நடந்திருந்தால் இதன் முடிவு வேறு மாதிரியாயிருக்கும். இதனால் வாதி உட்பட இரு கட்சியாருக்கும் அநாவசியமான சிரமமும் செல வுமே ஏற்பட்டிருக்க வேண்டும். வழக்கு நடத்தி வெற்றி பெற்றோம் என்ற திருப்தியை வாதி தமது மனத்தில் அடைவதைத் தவிர, இதனால் வேறு ஒரு பயனும் இல்லை.

இவ் வழக்கில் ஊக்கங்குன்றாது போராடிய ஊழி யன் ஆசிரியரை நாம் போற்றுகிறோம். வழக்கிலே வெற்றிபெற்ற ராவ்பகதூர் செட்டியாருக்கு மகிழ்ச்சிப் பரிசாக நாம் ஒரு செய்தி அறிவிக்க விரும்புகிறோம்.

பெரிய வக்கீலும், மாஜி அட்வகேட் ஜெனரலும், சென்னை சுயராஜ்யக் கட்சியின் தலைவரும், அசாம் காங்கிரஸ் மகாநாட்டுத் தலைவருமான ஸ்ரீமான் எஸ். ஸ்ரீநிவாச ஐயங்கார் மீது கண்டனமாக எதிர்க்கட்சிப் பத்திரிகைகள் சென்ற மூன்று மாதமாக எழுதிவரும் வியாசங்களைத் தயவு செய்து ஒரு முறை படிக்கவேண் மென்று நாம் அவரை வணக்கமாக வேண்டிக்கொள் கிறோம்.

"சுகோதயம்."

'அநீதியான தீர்ப்பு' என்ற தலைப்புடன் "சுகோதயம்" பத்திரிகை எழுதிய தலையங்கம் வருமாறு:—

காரைக்குடியிலிருந்து வெளிவரும் நமது சகோதர வாரப் பத்திரிகையான "ஊழியன்" மேல் சுமார் ௧௦ மாதகாலமாக ஒரு அவதூறு வழக்கு இராமநாதபுரம் டிப்டி மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் நடைபெற்றுவந்ததை நேயர்கள் அறிவார்கள். ஒரு கிரிமினல் வழக்கு சிவில் வழக்கைப்போல் இவ்வளவுகாலம் நீடித்து சென்ற வாரத்தில் முடிவெய்தியதற்கு நீதிபதி முதல் வழக்கில் சம்பந்தப்பட்டிருந்த எல்லாரும் சந்தோஷமடைவார்களென்பதில் யாதொரு சந்தேகமுமில்லை. இவ்வழக்கின் முடிவு, தீர்ப்பு, முதலிய விவரங்கள் மற்றொரு பத்தியில் காணப்படுகின்றன.

இவ்வழக்கின் தீர்ப்பைக் கவனிப்பதற்குமுன், பொதுக் குறிப்பொன்றை வெளியிட யாம் விரும்புகிறோம். சரீரத்தைத் தாக்குவது வெறுக்கத்தக்கதா

யிருப்பதுபோல் ஒருவன் அனுபவிக்கும் நன் மதிப்பை அல்லது யோக்கியதையை அநீதியாய்த் தாக்கிக் குறைவுபடுத்துவது ஆயிரம் மடங்கு வெறுக்கத்தக்கதா யிருப்பதோடு, பூரண தண்டனைக்குமுரியதாகிறது. கௌரவம் மனித பூஷணம் என்னும் மறுக்க முடியாத கொள்கையைப் போற்றி அதைக்காக்க முனைந்து நிற்கும் யாரும் மேற்கண்ட அபிப்பிராயத்தை கூசாமல் ஒப்புக்கொள்வார்கள். இது சம்பந்தமாய் தற்காப்பிற்காக சட்டப்படி நடவடிக்கை எடுத்துக்கொள்வதை யாரும் தடைசெய்யமாட்டார்கள். ஆனால் தனிப்பட்ட நபர்கள் துவேஷத்தால் ஒருவர்மேல் ஒருவர் அவதூறு பரப்புவதற்கும் பொது நன்மையைப்பேணி உழைக்கும் பத்திரிகையொன்று ஜனப்பிரதிநிதிகளின் தீய ஒழுக்கத்தை நிர்ப்பயமாய்க் கண்டித்து, அவர்கள் ஜன நாயக தத்துவங்களை யோம்பும்படி வற்புறுத்தும் கடமையை யனுசரித்து "அவதூறு" கூறுவதற்கும் மிகுந்த வித்தியாச முண்டென்பதை இந்தியன் பீனல் கோடு சட்டம் ஒப்புக்கொள்ளாவிட்டாலும், நியாயப் பற்றும் பொது நோக்கு முடையவர்கள் கண்டிப்பாய் ஒப்புக்கொண்டே தீரவேண்டும். மேலும் இந்தியன் பீனல் கோடு பொது வாழ்வென்றும் தனி வாழ்வென்றும் ஒப்புக்கொள்ளாமல், பிராது கொடுக்கும் ஆசாமிக்கு கிரிமினல் வழக்கில் மிகுந்த சலுகைகாட்டுகிறது. ஒருவன் அயோக்கியனாயிருக்கலாம்; பிரதிநிதி ஸ்தானத்தில் வாய்மூடி மௌனியாயிருக்கலாம். ஜனங்கள் சுதந்தரப் போராட்டம் புரியும் வேளையில் ஜனப்பிரதிநிதி என்போர் அன்னிய அரசாங்கத்தாருடன் பேடித்-

தனமாய் களியாட்டம் புரியலாம்; ஆனால் அத்தகை யோரை அயோக்கியரென்றும் வாய்மூடி மௌனி என்றும் கவர்ன்மெண்டின் நல்லபிள்ளைகளென்றும் உண்மையான அபிப்பிராயத்தை வெளியிடுவது பீனல் கோடு சட்டப்படி குற்றமாகிறது.

அக்கூற்றுகள் உண்மையா யிருந்தபோதிலும் அவைகள் "பொது நன்மையை யனுசரித்துச் சொல்லப்பட்டவை" என்று ருசு செய்யும் பொறுப்பு எதிரிக்கு வகுக்கப்பட்டிருப்பதால், ஒரு அயோக்கியனை அல்லது ஒரு வாய்மூடி மௌனியோ அவதூறு வழக்குக்கொடுத்தால் $\frac{3}{4}$ பாகம் கிரிமினல் சட்டம் வாதிக்குச் சாதகமாயிருக்கிறது. வாதி தான் யோக்கியனென்று ருசுசெய்து காட்ட வேண்டிய அவசியமில்லை. எனவே சாரமற்ற நியாயஸ்தலத்தில் ஜெயிக்கமுடியாத வழக்குகள் கிரிமினல் சட்டப்படி தொடரப்பட்டு, உண்மையைக் கூறுவோர்கள் தண்டிக்கப்படுகிறார்கள். ஆனால் இதே வழக்கை சிவில் சட்டப்படி தொடுப்பதானால், வாதி தான் மானநஷ்டமடைந்ததாகச் சொல்லும் அளவை ருசு செய்யாமற்போனால் வழக்கு தள்ளப்பட்டுப் போய் விடும். எனவே சிவில் சட்டப்படி மானநஷ்ட வழக்கு தொடருவதைவிட கிரிமினல் சட்டப்படி வழக்குப்போடுவது எளிதாயும் எதிரிக்குப் பலத்த நஷ்டத்தை விளைவிப்பதாயுமிருப்பதால், அட்டூழியம் செய்யும் அதிகாரிகளும், லஞ்சம் வாங்கும் உத்தியோகஸ்தர்களும் பேசாமடந்தைகளான பிரதிநிதிகளும் யதேச்சாதிகாரம் புரியும் தலையாட்டித் தம்பிரான்களும் வெகுலேசாய் கிரிமினல்

சட்டப்படி அவதூறு வழக்கு தேசீய பத்திரிகைகள் மேல் தொடுத்து வெற்றிபெறுகிறார்கள் என்பது நமது அனுபவம். பொது விவகாரங்களைக் குறித்த வழக்குகள் கிரிமினல் சட்டப்படி போடக்கூடாதென்ற விலக்கு ஏற்பட்டு பத்திரிகைகளின் உரிமை பாதுகாக்கப்படின், அவதூறு வழக்குகள் அநேகமாய் ஏற்பட அவசிய மிருக்காது. அவதூறு வழக்கில் குற்றவாளிகளெனத் தண்டிக்கப்படும் பத்திரிகாசிரியர்கள் அனைவரையும் நிரபராதிகளென யாம் கொள்ளத் தயாராயிருப்பதோடு, அவர்களுக்கு விதிக்கப்படும் தண்டனை அவ்வாசிரியர்களின் தேச பக்திக்கும், நேர்மைக்கும், அஞ்சாநெஞ்சத்திற்கும், பொது நலத்தை வாதித்து நல்ல அரசியல் ஏற்படவேண்டுமென்ற நன்னோக்கத்திற்கும் அபார அறிகுறியென நாம் கோபுரத்தின்மேலிருந்து கூவுவோம். நீதிபதிகள் தீர்ப்பு சட்டப்படி சட்டத்தை மதிப்போர் முன்னிலையில் செல்லலாமேயொழிய, நியாயப்படியும் சமூக முன்னேற்றத்தின் அவசியத்தை வற்புறுத்தும் பொது தர்மங்களையனுசரித்துப் கண்டிபபாய் ஒரு கணமேனும் செல்லாது.

"ஊழியன்" வழக்கின் தீர்ப்பின் முழு விவரம் எம்மிடமில்லை; "ஊழியனிலும்" பிரசுரமாகவில்லை. முடிவான அபிப்பிராயம் முழு தீர்ப்பைப்பார்வையிட்ட பின்னரே கூறுவது சாத்தியமாகும். எனினும் நீதிபதி ஸ்ரீ கோவிந்த மேனன் அவர்கள் "ஊழியன்" ஆசிரியர் அவர்களை ஆசிரியர் என்ற ஹோதாவில் விடுதலை செய்து, பிரசுரகர்த்தா என்ற முறையில் அவரை தண்டித்தது அநீதியும் சட்ட விரோதமுமாகும் என்று

யாம் அபிப்பிராயப்படுகிறோம். ஆசிரியர், அச்சிடுபவர், பிரசுரிப்பவர் என்ற மூன்று வேலைகளையும் ஒருவரே செய்கிறார். பினல் கோடு சட்டம் அவதூறு உற்பத்தி செய்கிறவர் அல்லது பிரசுரிப்பவரின் கெட்ட எண்ணமே குற்றத்திற்கு மூலகாரணமென்று கூறுகிறது. இந்த வழக்கில் ஆசிரியர் குற்றவாளியல்ல என்று தீர்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது; ஆசிரியர் வேறு; பிரசுரகர்த்தா, அச்சடிப்பவர் வேறு; என்றிருந்தால் நீதிபதி ஸ்ரீ கோவிந்தமேனன் அவர்கள் தீர்ப்பு ஒருவழியில் செல்லத்தக்கதாயிருக்குமென ஒப்புக்கொள்ளலாம். "ஊழியன்" ஆசிரியர், அச்சுக் கர்த்தா, பிரசுர கர்த்தா ஆகிய மூன்று வேலைகளையொருவரே பார்க்கிறார். இவ்வேலைகளைச் செய்யும் தேசாபிமானியும் நேர்மையாளருமான ஸ்ரீமான் ராய. சொக்கலிங்கஞ் செட்டியார் அவர்கள் வழக்கிற்கு ஆதாரமாய் நின்ற கட்டுரையை எழுதவில்லை என்றும், அது பிரசுரமானகாலத்தில் சென்னையிலிருந்தாரென்றும், ஆசிரியர் வெளியில் சொந்த அலுவலை முன்னிட்டுச் சென்ற இடைக்காலத்தில் அவருககுப்பதிலாய் வேறொருவர் வேலைபார்த்து வந்திருந்தார் மன்றும் வாதி சாட்சிகளாலும் எதிரியின் வாக்குமூலத்தாலும் ருசு செய்யப்பட்டு, கோர்ட்டாரால் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றன. எனவே ஆசிரியர் என்ற ஹோதாவில் ஸ்ரீ ராய. சொக்கலிங்கஞ் செட்டியார் நிரபராதி எனறு விடுதலை பெற்றிருப்பதுபோல், மற்ற இரண்டு ஹோதாவிலும் அவர் விடுதலையடைந்திருக்கவேண்டும். இம்மாதிரி செய்யாமல், நிரபராதியான எதிரிக்குத் தண்டனை விதித்தது சட்ட விரோத

யாயிருப்பதுடன் வழக்கில்ஸ்திரப்படுத்தப்பட்ட சாக்ஷியத்தைப் புறக்கணிப்பதுமாகும். நீதிபதி கோவிந்த மேனன் அவர்கள் பீனல் கோடு சட்டப் பிரிவைத் திருப்திசெய்யும்பொருட்டு விதித்த தண்டனை அற்பமான ஒரு ரூபாய் அபராதமாகையால், இதை அதிகமாய்ப் பொருட்படுத்த வேண்டியதில்லை என்று சிலர் எண்ணலாம். நாம் இதை ஒப்புக்கொள்ளமுடியாது. கௌரவம் அல்லது உரிமை தாக்கப்படுவது ஒரு ரூபாயால் ஏற்பட்டபோதிலும் ௧௦௦௦ ரூபாயால் ஏற்பட்டபோதிலும், கிரியாம்சையிலும் சட்டப்படியும் வித்தியாசங்கொள்ளாது. ஆகையால் சட்டவிரோதமான இந்தத் தீர்ப்பை யுடைத்தெறிய, "ஊழியன்" ஆசிரியர் "அப்பீல்" முயற்சி செய்வாரென்றெண்ணுகிறோம்.

௧௯௧௦ ௵ அச்சுச் சட்டம் அமலிலிருந்தகாலையில், அது பத்திரிகையைத் தாக்கி அதன் சுதந்தரத்தை யபகரித்துவந்தது. அது திருத்தமடைந்தபொழுது பத்திரிகையின்மேல் பாய்வது நிறுத்தப்பட்டு, ஆசிரியர், பிரசுரகர்த்தா, அச்சிடுபவர் ஆகிய மூன்று ஆட்கள்மேல் சட்டம் பாயத் தொடங்கிற்று. இதை யனுசரித்து, ஒருவரே இம்மூன்று பதவிகளையும் வகிப்பது உசிதமென்று பத்திரிகை ஆசிரியர்கள் எண்ணி அவ்வாறே எல்லாரும் செய்துவருகிறார்கள். இதுவரையில் அவதூறு வழக்கில் ஆசிரியர் வேறு; பிரசுரகர்த்தா முதலியோர் வேறு; என்று மயிர் பிளந்து தீர்ப்புச் சொல்லப்பட்டதாக யாம் அறியவில்லை. இந்த நுட்பமான வாதம் இராமநாதபுரம் நீதிபதி ஸ்ரீ கோவிந்த மேனன் அவர்கள் மனதில் உதித்தது ஆச்சரிய அம்சத்

துடன் நிற்பதானல் கவலையற்றிருக்கலாம். ஆனல் பத்திரிகையின் பிரதம உரிமையையே இந்தக் குதர்க்கமான தீர்ப்பு பாதிக்கிறதாகையால், சட்டப்படியும் பத்திரிகை மூலமாயும் பலத்த கிளர்ச்சிசெய்து பத்திரிகையின் சுதந்தரம் நிலைநாட்டப்படவேண்டுமென்று யாம் வாதிப்போம். இவ்வழக்கில் மற்றும் அநேக ருசிகரமான அம்சங்களைப் பார்வையிட வேண்டியிருப்பதால், முழு விவரங்களும் கிடைத்த பின்னர் அவைகளைப் பரிசீலனைசெய்ய உத்தேசித்துள்ளோம்.

"தமிழ்நாடு."

'தமிழ்நாடு' பத்திரிகை எழுதியது வருமாறு:—

ராவ்பகதூர் ஆவி. பழ. சிதப்பரஞ் செட்டியார் 'ஊழியன்' பத்திரிகையின் மீது கொடுத்திருந்த வழக்கையும் அதை விசாரித்த நீதிபதி, ஆசிரியர் என்ற முறையில் 'ஊழியன்' ஆசிரியர் ஸ்ரீமான் சொக்கலிங்கஞ் செட்டியாரை விடுதலை செய்து, அச்சிட்டு வெளியிடுபவர் என்ற முறையில அவருக்கு ஒரு ரூபாய் அபராதம் விதித்ததையும் நண்பர்கள் அறிவார்கள். நீதிபதியின் இந்தப் பாகுபாட்டைப் பற்றி நாம் இப்பொழுது விசாரிக்க விரும்பவில்லை. 'ஊழியன்' எழுதியது நியாயமா இல்லையா என்பதையே கவனிக்க விரும்புகிறோம். ஸ்ரீமான் சிதப்பரஞ் செட்டியார் ஜில்லா போர்டு கூட்டங்களுக்கு ஒழுங்காய்ச் செல்வதில்லையென்றும், அப்படிச் செல்லாததினல் பொது ஜனப் பிரதிநிதி என்ற தமது பொறுப்பையும், கடமை

யையும் சரிவர அறியவில்லை யென்றும் 'ஊழியன்' எழுதியது. ஸ்ரீமான் செட்டியார் பொதுஜனங்களால் தேர்ந்தெடுத்து அனுப்பப்பட்டார் என்பதை மறுக்க மாட்டாரென்று நம்புகிறோம். எப்பொழுது பொது ஜனப் பிரதிநிதியாக ஒரு வேலையைப் பார்க்க ஒருவர் விரும்புகிறாரோ அப்பொழுதே பொதுஜன வாழ்த்து தலுக்கோ, கண்டனத்திற்கோ உட்பட அவர் தயாரா யிருக்க வேண்டும். இந்த உண்மையை ஒவ்வொரு பொதுஜன சேவகரும் கட்டாயம் அறிந்திருக்க வேண் டும். ஸ்ரீமான் செட்டியார் இதை அறிந்திருக்கிறாரா என்பது நமக்குச் சந்தேகமாயிருக்கிறது.

'ஊழியன்' ஸ்ரீமான் செட்டியாரின் அந்தரங்க நடவடிக்கைகளைப் பற்றி ஒன்றும் எழுதிவிடவில்லை. பொதுஜன சேவையில் ஸ்ரீமான் செட்டியாரின் ஸ்தா னத்திற்குரிய கடமையைப் பற்றி, நியாயமான முறை யிலேயே எழுதியிருக்கிறது. அதை ஸ்ரீமான செட்டி யார் 'மான நஷ்டம்' என்று எடுத்துக்கொண்டதைக் குறித்து நாம் வருத்தமடைகிறோம். பொதுஜனப் பிரதிநிதியாகப்போக இஷ்டப்படுகிறவர்கள், இம்மாதிரி கண்டனங்களை யெல்லாம் 'மான நஷ்ட' மாகப் பாவி த்து, கோர்ட்டுக்குப் போக புறப்பட்டுவிட்டால், பின் னால் பொதுஜன சேவை என்பதற்கு அர்த்தமேயில்லா மல் போய்விடும். நியாயமான கண்டனங்களை ஒவ் வொரு கட்சியாரும் விரும்புவதுதான் முன்னேற்றத் திற்கு அறிகுறியாகும். இவைகளை ஸ்ரீமான் செட்டி யார் அறிந்திருந்தால், இந்த வழக்கையே தொடுத்தி ருக்கமாட்டார். நீதிபதிகள் கிரிமினல் சட்டங்களை

மட்டும் புரட்டிப் பார்க்காமல், பத்திரிகைகளின் கடமையையும் பொறுப்பையும் கொஞ்சம் சிந்தித்துப் பார்த்து, இம்மாதிரி வழக்குகள் கிளம்ப முடியாமலே செய்துவிடுவதுதான் ஜனங்களின் நன்மைக்குற்றதென்று நினைக்கிறோம். அப்படியில்லாவிடில், நினைத்தவுடனே ஒவ்வொருவரும் ஒவ்வொரு பத்திரிகையின் மீது வழக்குத் தொடுக்க ஆரம்பித்துவிடுவார்கள் அப்படிச் செய்ய இடங்கொடுப்பது பத்திரிகைகளின் வளர்ச்சியைத் தடைபடுத்தி, அவைகளின் சுதந்தரங்களைப் பிடுங்குவதற்கு உதவி செய்வதாகும்.

"தமிழ் நேசன்."

"தமிழ் நேசன்" பத்திரிகை எழுதிய அபிப்பிராயம் வருமாறு:—

காரைக்குடியில் பிரசுரமாகும் 'ஊழியன்' பத்திரிகைக்கு விரோதமாக மேற்படியூர் ராவ்பகதூர் சிதம்பரஞ்செட்டியார் கொண்டுவந்த வழக்கு நீடித்தகாலம் விளங்கப்பட்டு, முடிவில் ஊழியன் ஆசிரியரும் பதிப்பாளருமாகிய ஸ்ரீமான் ராய. சொக்கலிங்கன் அவர்களுக்கு நியாயாதிபதி ஒரு ரூபா தண்டம் விதித்தார். இது பலருக்குப் போசச்சரிப்பத்தை விளைத்திருக்குமென நினைக்கிறோம். இவ்வழக்கு விசாரணையை ஆதியோடந்தம் படிப்போர்களும் படித்தவர்களும் அபராதம் போட்டது சரியெனக் கூறுர்கள். வாதி கனம் சி. செட்டியாரவர்கள் தாம் கல்வி கேள்விகளில் வல்லுனரல்லவென்பதை ஒப்புக்கொள்கிறுர். பிரதி வாதி-

பின் வக்கீல் கனம் ஜோசப் அவர்கள் இவரைக்குறுக்கு விசாரணை செய்ததில், தமக்கு இங்கிலீஷ் தெரியா தென்றும் பொதுக்கூட்டங்களில் ஒருபோதும் பேசிய தில்லையென்றும், யாதொரு புத்தகமும் தான் இயற்ற வில்லையென்றும், தமிழில் தான் வகுப்புப் பரிட்சை கொடுக்கவில்லை யென்றும், அதற்கு ந்யாயம் அவர் படிக்குங்காலத்திலே அவ்விதப் பரீட்சை முறைகள் இல்லையென்றும், ஜில்லா போர்டில் கேள்விகள் கேட்கும் பாத்தியம் தமக்குண்டெனத் தெரிந்திருந்தும் தாம் அவ்வாறு நடந்துகொள்ள வில்லையென்றும் மறுமொழி சொன்னார். நீங்கள் காரைக்குடி யூனியன்போர்டில் நியமனம் பெற்றிருந்த பொழுது எதாவது கமிட்டியில் இருந்ததுண்டா என்ற கேள்விக்கு "யாதில்லை" எனப் பதிலளிக்கிறார். இன்னும் இவர் தகுதியைக் காட்டும் எவ்விதக் கேள்விக்கும் "ஞாபக மில்லை" என்று சொல்லிவிடுகிறார். ஜில்லா போர்டில் திரு. அளகிரிசாமிநாடு ௬—௨—௨௪-ல் ஏதேனும் கேள்வி கேட்டதுண்டா என்று பிரதிவாதி வக்கீல் கேட்டபொழுது, ராவ்பகதூர் சிதம்பரஞ்செட்டியார் "ஞாபகமில்லை" என விடையளிக்கிறார். "யாதில்லை" "ஞாபகமில்லை" என்னும் பதங்களே மறுமொழியாகப் பல கேள்விகளுக்கு மிருப்பதைக் காண்கின்றோம். அதிசீக்கிரம் வெளிவரும் இவ்வழக்கைப் பற்றிய புத்தகம் நேயர்களின் சந்தேகத்தை நிவர்த்தி செய்யும். வாதி, சபைகளில் பேசுந் திறனற்றவரென்பதை ஒப்புக்கொண்ட பின், ஊழியன் கட்டுரை "இவர்களால் யாது பயன்" என்றது பொருத்த முடைத்தேயாம்.

வாதி பெருநிதிபடைத்தார் என்பதும் அரசாங்கத்துக்கு வருட வீதம் ரூ ௬,000 வருமானவரி செலுத்துகிறாரென்பதும் தெரிகிறது. இக்காரணம் பற்றி நீதவான் பிரதிவாதிக்குத் தண்டம் விதித்தார் போலும்! சபைகளில் வாதாடி, பிறருக்கு நன்மை பயக்கும் விஷயங்களை எடுத்துரைக்கும் ஆற்றலை வாதியிடங்காணேமென்பதே ஊழியன் அபிப்பிராயம். அதற்கிணங்க வாதியின் அறிவும் அமைந்திருத்தலால், குற்றவாளியென ஊழியன் ஆசிரியரைக்கூறுதல் தகாது. பட்டம் பெற்றால் போதுமானது, கல்வியறிவு வேண்டியதில்லையென்பது போர்டின் கருத்தா? அப்படியானல் ஊழியன் சொன்னது தவறாகும். சபைப் பழக்கங்ளிற் சேர்ந்து பேசுந்திறமை போர்டுகளில் மிக்க அவசியமானது. ஆனல் செட்டி(மார்ப்)ப்பிள்ளைகள் தேசத்தில் இந்த முறையில்லையா? இது அவசியமென்பதை ஊழியன் எடுத்துரைத்தது குற்றமானல், பத்திரிகைகளின் பயன் யாதோ அறிகிலேம். ஓர் சபையின் அங்கத்தவரானேருக்கு ஞாபகக்குறைவு, மறதி, இவைகளிருப்பின், அவர் விஷயங்களைக் கண்டித்தோ அல்லது திருத்தியோ நிலை நாட்ட வன்மையற்றவரென்பது எவருமறிவார். இவ்வழக்கில் வாதியின் விடைகளிற் பெரும்பான்மை "யாதில்லை" என வருவதால், இவர் தங்கடமையைச் சரிவர நடத்தவில்லையென்று ஊழியன் கூறியது ஒக்கும். ஊன்றி நோக்குவோர்க்கு ஊழியன் கட்டுரை உசிதமுடைத்தென விளங்கும். சபையில் அங்கத்தவர் எவரேனும் கல்வி கேள்விகளிற் குறைந்தவரானல், அவர் எக்காலத்தும் உலகத்துக்கு நன்மை புரி

யும் ஆற்றலிலர் என்பது யாவருமறிந்த விஷயம். இவ் வழக்குப் பணப்பெருக்கால் எழுந்ததேயொழிய, உண்மையில் ஊழியன் கட்டுரையில் தவறு கிடையாது.

"தேசோபகாரி."

ரங்கூனில் பிரசுரமாகும் 'தேசோபகாரி' எழுதியது வருமாறு:—

ஊழியன் ஆசிரியர் ராய. சொக்கலிங்கம் செட்டியாரவர்கள் பிரசுரகர்த்தா என்ற முறையில் ஒரு ரூபா அபராதம் விதித்ததாக எற்கனவே கூறியிருந்தோம். அவ் வழக்கை நோட்டமிட்ட அன்பர்கள் இத் தீர்ப்பும் அநியாயத் தீர்ப்பென்றுதான் சொல்வார்கள். அப்படியே பலரும் ஒப்புக்கொள்ளுகிறார்களென்பது நிச்சயம். நாம் அபிப்பிராயப்படுகிறதாவது, கேஸை தள்ளிவிடாமல் ஒரே ரூபாய் அபராதத்தை விதித்துவிட்டார். ராய. சொக்கலிங்கனவர்களும் இதை எதிர்பார்த்திருப்பாரென்று நாம் எண்ணவில்லை. நியாயாதிபதி தங்குழுவினராகிய ராவ்பகதூர் சிதம்பரம் செட்டியாரவர்கள் மனமகிழ்ச்சியடையச் செய்திருப்பார். என்றாலும், ஒருவிதத்தில் நம் எதிரிக்கு ஒரு ரூபாதானே அபராதம் விதிப்பதென மனப்புழுக்கங் கொண்டிராமலிரார். இனியாகிலும் பட்டம் பெற்றவர்கள் வீணே கோர்ட்டில் செலவழித்து அவமானமடையாமலிருப்பார்களா? அந் நியாயாதிபதி தங்களுக்கு சம்பளம் பகிர்ந்து கொடுத்தும் அரசாங்கத்தார் ராவ்பகதூர் பட்டம் கொடுத்து தங்களுக்கு தக்க பலமாக

வைத்திருப்பதை அறியாமலிரார். ஆனது பற்றி, தங்களுக்கு பக்கபலமான ராவ்பகதூர் செட்டியார் தெரியாத்தனமாய் இக் கேசைக் கொண்டு வந்து விட்டார். இதிலே பிரயோஜனமில்லை. தள்ளிவிட்டாலோ நமது ராவ்பகதூர் செட்டியார் அவமானமடைவார் என்று கருத்துக்கொண்டே, 'ஊழியன்' ஆசிரியருக்கு ஒரு ரூபாய் அபராதம் விதித்தனர் போலும்! இதில் ராவ்பகதூர் செட்டியாருக்கு அவமானமா, அன்றி ஆசிரியர் செட்டியாருக்கு அவமானமா என்பதை நேயர்களே யூகித்துக்கொள்ளலாம்.

ஹைக்கோர்ட் அப்பீல்.

"ஊழியன்" அவதூறு வழக்கில் ராமநாதபுரம் சப்டிவிஷனல் மாஜிஸ்திரேட் செய்த தீர்ப்பை ஆட்சேபித்து, 'ஊழியன்' பத்திராதிபர் திரு. ராய. சொக்கலிங்கன் சென்னை ஹைகோர்ட்டில் செய்துகொண்ட அப்பீல், டிசம்பர்-மீ ௬-உ ஹைகோர்ட் ஜட்ஜி ஜஸ்டிஸ் திரு. வாலஸ் அவர்களால் ஏற்றுக்கொள்ளப் பெற்றது.

கட்டுரை அவதூறுகொண்டது என்று ஸப்டிவிஷனல் மாஜிஸ்திரேட் கொண்ட அபிப்பிராயத்திற்குத் தாம் வேறுபட முடியவில்லை யென்று நீதிபதி கூறி, ஆனால் எதிரி ஊரில்லாத காலத்தில் நிகழ்ந்ததற்கு அவர் பொறுப்பா என்ற பிரச்னையின்மேல் அப்பீலை ஏற்றுக்கொள்வதாக, அப்பீலை ஏற்றுக்கொண்டார்.

அப்பீல் தீர்ப்பு.

"ஊழியன்" அவதூறு வழக்கில் சென்னை ஹைக்கோர்ட்டில் செய்துகொள்ளப்பட்ட ரிவிஷன் மனுவின் பேரில் ஜூலை-மீ ௧௭-ந் தேதி சொல்லப்பட்ட தீர்ப்பு வருமாறு:—

ஜூலை-மீ ௧௭-உ, ௧௯௨௭. ஆஜர்:—௩னம். ஜஸ்டிஸ் வாலஸ். கிரிமினல் ரிவிஷன் கேஸ் ௧௯௨௬-ம் ஆண்டின் நீ. ௬௬௦. கிரிமினல் ரிவிஷன்மனு ௧௯௨௬-ம் ஆண்டின் நீ. ௮௩௧.

ராய. சொக்கலிங்கம் செட்டியார் — மனுதாரர் (எதிரி)

ராவ்பகதூர் ஆவி. பழ சிதம்பரம்
செட்டியார் — பிரதிவாதி (பிராதுதாரர்)

ராமனுதபுரம் ஸப்-டிவிஷனல் மாஜிஸ்திரேட் கோர்ட்டின் ௧௯௨௬-வருஷத்திய காலண்டர் கேஸ் நி. ௨௩ வழக்கில் மேற்படி கோர்ட்டாரால் செய்யப் பட்ட தீர்ப்பைப் புனராலோசனை செய்து மாற்றும் படி வேண்டிக்கொண்டு, ௧அ௯அ-ம் ஆண்டின் கிரிமினல் புரொஸீஜர் கோடின் ௪௩௫, ௪௩௯-பிரிவுகளின் கீழ்ச் செய்துகொள்ளப்பட்ட மனு.

௧௯௨எ-ம் ஆண்டு மே-மீ ௬ ௨ வெள்ளிக்கிழமை இது விசாரணைக்கு வந்தது. மனுவும், கீழ்க்கோர்ட்டுத் தீர்ப்பும், வழக்கின் தஸ்தாவேஜிகளும் படித்துப் பார்க்கப்பட்டு, மனுதாரரின் (எதிரி) வக்கீல்களான திரு. கே. ராஜா அய்யருக்காக திரு. எ. கிருஷ்ணசாமி அய்யர், திரு. வி. ராமஸ்வாமி அய்யர், சர்க்கார் தரப்பில் பப்ளிக் பிராஸிகியூடர், வக்கீல் திரு. வி. எல். எதிராஜ், பிரதிவாதி (பிராதுதாரர்) தரப்பு வக்கீல் திரு. ஸ்வாமினதய்யர் ஆகியவர்கள் செய்த ஆர்குமெண்டுகள் கேட்கப்பட்டு, வழக்கு நமது ஆலோசனைக்காக இந்நாள் வரை நின்றது. கோர்ட்டார் இந்த உத்திரவைச் செய்தார்கள்: —

ஒரு அவதூறு குற்றத்துக்காக, ராமனுதபுரம் ஸப்-டிவிஷனல் மாஜிஸ்திரேட்டால் தமக்கு தண்டனை விதிக்கப்பட்டதை மாற்றும்படி மனுதாரர் செய்து கொண்டிருக்கும் மனுப்பற்றிய வழக்கு இது. ஒரு

ரூபாய் அபராதம் விதிப்பது போதிய தண்டனையாகு மென்று ஸப்-டிவிஷனல் மாஜிஸ்திரேட் கருதியிருக்கிறார். அபராதத்தைத் தள்ளுபடி செய்துகொள்ளுவதற்காக, இங்கு வரவேண்டுவது அவசியமென்று மனுதாரர் கருதியிருக்கிறார்.

ரிவிஷன் மனுவை நான் ஏற்றுக்கொண்ட காலத்தில், மனுதாரர் சார்பாக இரண்டு அம்சங்களின்மீது செய்யப்பெற்ற ஆர்குமெண்டுகளை நான் கேட்டேன். அவை (க) பிராது செய்துகொள்ளப்பட்ட கட்டுரையில் கூறப்பட்ட விஷயம் அவதூறாகுமா என்பதும், (உ) அவதூறை மனுதாரர் பிரசுரித்தாரா என்பதுமாகும். முதல் அம்சம் சம்பந்தப்பட்ட மட்டில், கீழ்க் கோர்ட்டு அபிப்பிராயம் சரியென்று எனக்குப்பட்டது. விஷயம் அவதூறாயினும், மிக இழிவான அவதூறு அன்று என்று கீழ்க்கோர்ட்டு கொண்ட அபிப்பிராயத்தையும் நான் ஏற்றுக்கொண்டேன். இந்த அம்சத்தின் மீது இப்பொழுது, மனுதாரர் தரப்பில் பின்னும் செய்யப்பெற்ற ஆர்குமெண்டுகளையும் கேட்டிருக்கிறேன்; ஆனலும், எனது அபிப்பிராயத்தை மாற்றிக்கொள்ள, நான் காரணமெதுவும் காணவில்லை.

மனுதாரர் அவதூறைப் பிரசுரித்தாரா என்ற இரண்டாவது அம்சம் பாக்கியிருக்கிறது. “ஊழியன்” என்ற சமாசாரப் பத்திரிகையில், க-கஉ-க௯உ௫-ல், கட்டுரை வெளியாயிருக்கிறது. இந்தப் பத்திரிகைக்கு மனுதாரர் உறுதிமொழி கொடுத்த (டெக்ளேர் செய்த) அச்சிடுவோரும் பிரசுர கர்த்தரும் ஆவர். ஆகையினல், அந்தக் கட்டுரையைத் தாம் பிரசுரிக்கவில்லையென்று

காட்டி, உருகப்பிக்கவேண்டிய பொறுப்பு அவர்மீது விழுகிறது. அவர் சார்பாகச் செய்யப்படும் வாதமாவது :—௧௮-௧௧-௧௯௨௫-ல முதல் ௧௭-௧௨-௧௯௨௫-வரையில் அவர் காரைக்குடியில் இல்லை; ௨௦-௧௧-௧௯௨௫-லயில் ஜில்லா போர்டு கூடிய கூட்டத்தைப்பற்றி மேற்படி கட்டுரை குறிப்பிடுகிறது; அந்தக் கூட்டத்திற்கு மனுதாரர் ஆஜராயிருந்திருக்க முடியாது; அவர் பத்திரிகை வேலை முடிவதையும் ஒரு உதவி ஆசிரியரிடம் விட்டிருந்தார்; ஆகையினால் இந்தக் கட்டுரைக்காகவாவது அல்லது இது பிரசுரிக்கப்பெற்றதற்காகவாவது, மனுதாரர் குற்றப் பொறுப்புடையவராயிருக்க முடியாது. (அந்தக் கட்டுரையைத் தாம் பிரசுரிக்கவில்லையென்று காட்டி) அவர் உருகப்பிக்கவேண்டிய பொறுப்பு, இத்தகைய வாதத்தினால் தீர்ந்துவிடவில்லையென்பது வெள்ளிடையாகும். உதாரணமாக காரைக்குடியிலிருந்து வெளியூருக்குப் போயிருந்துகொண்டு, கட்டுரை எழுதி, அதைப் பிரசுரிக்குமாறு காரைக்குடிக்கு அனுப்புவது ஒரு மனிதருக்கு எளிதேயாகும். இந்த நோக்கில், கீழ்க்கோர்ட்டில் மனுதாரரின் வாக்குமூலம் என்ன என்பதைக் கவனிப்பது உபயோகமுள்ளதாயிருக்கும். அதன் முக்கியமான பாகத்தில் கூறப்படுவதாவது :—"கட்டுரை பிரசுரிக்கப்பெற்ற காலத்தில், எதிரி காரைக்குடியில் இல்லை......முக்கியமான எந்தக் காலத்திலும், "ஊழியன்" பத்திரிகை வேலையை எதிரி நடத்தவில்லை. பிராஸிகியூஷன் தரப்பு ௭-வது சாட்சியின் சாட்சியத்தினால், உதவி ஆசிரியர் கிருஷ்ணய்யர் பத்திரிகை வேலையை

நடத்திவந்தார் என்பது தெளிவாயிருக்கிறது." கட்டுரையைத் தாம் எழுதவில்லையென்று மனுதாரர் மறுக்கவில்லையென்பது குறிப்பிடத்தக்கது. உண்மையிலேயே கட்டுரையை எழுதியவர் அவரேயல்லவாயின், கட்டுரையை எழுதியவர் பெயரை அவர் சொல்லாததற்கு விட்டுவிடலாம். ஆனால், தாமே எழுதவில்லை என்றாவது, அதை எழுதியவர் யாரென்று தமக்குத் தெரியாதென்றாவது அவர் சொல்லவில்லை. அதைப் பிரசுரிக்குமாறு தாமே கட்டளையிடவில்லையென்று அவர் சொல்லவில்லை. அது வெளியானதைப்பற்றித் தமக்கு யாதொன்றும் தெரியாதென்று அவர் யாதொரு வாக்குமூலமும் கொடுக்கவில்லை. தாம் வெளியூருக்குச் சென்றது பத்திரிகையின் காரியம் பற்றியல்லவென்றும் அவர் கூறவில்லை. தாம் ஊரில் இல்லையென்றும், உதவி ஆசிரியர் பத்திரிகை வேலையை நடத்திவந்தார் என்றும், தாமே பொறுப்பாளியல்லவென்றும் கூறும் தெளிவில்லாத ஒரு வாக்குமூலத்தைக் கொண்டு கோர்ட்டார் முடிவுகட்டிக்கொள்ளுமாறு தூண்டவே, அவர் முயலுகிறார். மேலும், பத்திரிகையின் வேலையைத் தாம் நடத்தவில்லையென்றாவது, உண்மையிலேயே பத்திரிகை வேலையை நடத்தி வந்தது யார் என்பதையாவது, மனுதாரர் தாம் ஊரில் இல்லாக் காலத்தில் பத்திரிகையில் பிரசுரிக்க விஷயங்கள் அனுப்பிவரவில்லையென்றாவது ருசுப்பிப்பதற்காக, தமது தரப்பில், அந்த உதவி ஆசிரியரை அவர் விசாரிக்கவில்லை. (கட்டுரை) அவரது அனுமதியின்றியாவது, அவரது சம்மதமின்றியாவது அவருக்குத் தெரியாமலாவது பிர

சுரிக்கப்பெற்றது என்ற பேச்சாவது உருசுவாவது எதிரியின் சொந்த எதிர்வாதத்தில் யாதும் இல்லை.

கீழ்க்கோர்ட்டு இந்த நோக்கில், கவனிக்கவில்லையென்று இங்கு வாதிக்கப்படுகிறது. இந்த அம்சத்தைப்பற்றி, கீழ்க்கோர்ட்டு ௬௦-வது பாராவில் விவரித்து, பத்திரிகையை நடத்தி வந்ததாகக் கூறப்படும் இந்த உதவியாசிரியர் பத்திரிகையை நடத்தத் தகுதி வாய்ந்தவராவென்று ஆராய்ந்திருக்கிறது. ஆனல், விவாதத்திற்குரிய அம்சம் அவர் தகுதி வாய்ந்தவரா என்பதன்று; ஆனல் அவர் நடத்திவந்தாரா, ஊரில் இல்லாத மனுதாரரால் எவ்விதத்திலும் தலையிடப்படாமலும் கண்காணிக்கப்படாமலும் முற்றும் நடத்திவந்தாரா என்பதே விவாதத்திற்குரிய அம்சமாகும். இன்னும் இந்த விஷயத்தைப்பற்றி ஆலோசிக்கையில், கட்டுரை பிரசுரிக்கப்பெற்றது தமது அனுமதியின்றியாவது தமக்குத் தெரியாமலாவது தமது சம்மதமின்றியாவது நடந்ததாக மனுதாரர் யாதும் திட்டமாக எதிர்வாதம் செய்யவில்லை என்பது நினைவில் வைக்கப்படவேண்டும். எனவே, உதவி ஆசிரியர் பத்திரிகையை நடத்திவந்தார் என்று கூறப்பட்ட எதிர்வாதத்தைப் பற்றியே, விசாரணைக் கோர்ட்டு கவனித்தது. கீழ்க்கோர்ட்டு, ௬௦வது பாராவில் அடிப்படையான அம்சத்துக்கு வருகிறது. அது கூறுவதாவது:—"தமது அனுமதியின்றியாவது, தமக்குத் தெரியாமலாவது, தமது சம்மதமின்றியாவது அவதூறு பிரசுரிக்கப்பெற்றது என்று எதிரி காட்டியிருக்கவேண்டும். இது செய்யப்படவில்லை. எனவே, அவரது குற்

றப் பொறுப்பு நீங்கவில்லை." இந்த உரையை நான் முற்றும் ஏற்றுக்கொள்ளுகிறேன். (வழக்கின்) விஷயங்களைக் கொண்டும், மனுதாரரின் வாக்கு மூலத்தில், நான் மேலே கூறிய விஷயங்கள் பொருளுடனே விடப்பட்டிருப்பதைக் கொண்டும், அனுமானிக்கக்கூடிய சரியான முடிவு அதுதான் என்று நான் மதிக்கிறேன்.

நடைபெற்றதாகச் சொல்லப்படும் அநேகம் உதாரணங்கள் என்னிடம் கூறப்பெற்றன. ஆனால் அந்த கைய வழக்குகள் எந்தப்பொதுவான கொள்கையைக் கொண்டு தீர்மானிக்கப்பட்ட வேண்டுமோ அதை அவை எவ்விதத்தும் மாற்றமாட்டா. ஒருக்கால், ராமஸாமிக்கும் வி. லோகநாதனுக்கும் நடந்த வழக்கான இ. லா. ரி. ௬ சென்னை ௩ அ௫-வழக்கைக் கண்டு, கீழ்க்கோர்ட்டு, உதவி ஆசிரியர் தகுதிவாய்ந்தவரா அல்லவா என்ற சர்ச்சையைச் செய்திருக்கலாம். ஆனால், மனுதாரர் தமது அனுமதியின்றிப் பிரசுரிக்கப் பெற்றதாக உருசுப்பிக்கும் பொறுப்பைக்கூடக் கழித்துக் கொள்ளவில்லை யாகையினால், இதைப்பற்றிச் சர்ச்சை செய்யவேண்டிய அவசியமில்லை. ஹரிசர்வோத்தமராவுக்கும் மன்னார் பெருமானுக்குமாகிய வழக்கான இ. லா. ரி. ௩௨ சென்னை ௩௩அ வழக்கில், உள்ள "ஆஜரில்லாத சொந்தக்காரர்" என்ற சொற்றொடர், சில நாட்களுக்கு மட்டில் ஆஜரில்லாத ஒருவரைக் குறிக்கவில்லை பிரசுர வேலையைக் கவனிக்கவே கவனிக்காத ஒரு சொந்தக்காரரையே அது குறிக்கிறது. சிறிது காலத்திற்கு ஆஜரில்லாதிருத்தல் என்னும் விஷயத்தைப் பற்றி, இ. லா. ரி. ௩௫, கல்கத்தா ௬௪௫ வழக்காகிய

மன்னர் பெருமானுக்கும் பனேந்திரநாத மித்தருக்கு மான வழக்கில் இன்னும் நன்ருக விவரிக்கப்பெற்றிருக் கிறது. ஆஜரில்லாதிருந்தது நல்ல எண்ணத்துடனே யே யென்று நிரூபிக்கும் பொறுப்பு எதிரியினுடையது என்று தெளிவாக அதில் கூறப்பட்டிருக்கிறது. அதா வது, ஆஜரில்லாதிருத்தல் என்பதன் உண்மையான பொருளிலேயே ஆஜரில்லை யென்றும், அதனுல் பத்தி ரிகையின் வேலையிலும் அதை வெளியிடுவதிலும் தாம் எவ்விதக் கண்காணிப்பும் செய்யாது நின்றிருந்ததாக வும் உருசுப்பித்திருக்கவேண்டிய பொறுப்பு எதிரியினு டையதாகும். உருசுப்பிக்கும் பொறுப்பு இவ்வழக் கில் செய்து தீர்க்கப்படவில்லை யென்றே நான் அபிப் பிராயப்படுவதாக, ஏற்கனவே கூறியிருக்கிறேன். எல். எல். ஆர். ௩அ கல்கத்தா ௨௨௭ நி. வழக்காகிய சிரேந் திரப் பிரசாதுக்கும் மன்னர்பெருமானுக்குமான வழக் கிலும் இதே கொள்கை சொல்லப்பட்டிருக்கிறது.

ஆகையினுல், இந்தத் தண்டனையில் தலையிட, நான் யாதொரு காரணமும் காணவில்லை; எனவே, இந்த வழக்கைத் தள்ளுபடி செய்கிறேன்.

(ஒப்பம்) டி. அப்புராவ்,

அப்பெலேட்ஸைடு ஆக்டிங் ரெஜிஸ்டிரார்.

௨௯–௭–௨௭.

ஹைகோர்ட் தீர்ப்பின்மேல்

பத்திரிகை அபிப்பிராயங்கள்.

"ஊழியன்."

க.

(பிரபவ-ளு ஆடி-மீ கக-உ தலையங்கம்.)

ஊழியன் ஆசிரியர், அச்சிடுவோர் வெளியிடுவோர் ஆகிய ராய. சொக்கலிங்கன்மீது காரைக்குடி ராவ்பகதூர் ஆவி. பழ. சிதம்பரச் செட்டியார் தொடுத்திருந்த அவதூறு வழக்கின்மேல் இராமநாதபுரம் நீதிபதி திரு. கோவிந்த நாயர், ஆசிரியராகிய ராய. சொக்கலிங்கன் ஊரிலில்லாததால் விடுதலை யென்றும் அச்சிடுவோர், வெளியிடுவோராகிய ராய. சொக்கலிங்கனுக்கு ஊரிலில்லையானாலும் ஒரு ரூபாய் அபராதம் என்றும் தீர்ப்பளித்தார் என்பதை அன்பர்கள் அறிவார்கள். அவர் செய்த தீர்ப்பின் தன்மையை விரித்து விளக்கி அப்பொழுது நாமும் எழுதியிருக்கிறோம். பொருளாளர்க்கும் பொருமைக்கும் அடிமைப்பட்ட ஒரு சில பத்திரிகைகள் தவிர ஏனைப் பத்திரிகைகளும் அத் தீர்ப்பைப் பெரிதும் கண்டித்து எழுதி யிருக்கின்றன.

இவ்வழக்கின்மேல் ஹைகோர்ட்டில் ரிவிஷன் செய்யப்பட்டதும் அனைவர்க்கும் தெரியும். அந்தக் கீழ்க் கோர்ட்டுத் தீர்மானமே சரியென நீதிபதிவாலஸ் தீர்ப்பளித்துவிட்டார். திரு. கோவிந்தநாயர் தீர்ப்பி

லுள்ள குறைபாடுகளை அன்று தெள்ளிதின் வெளியிட்டிருக்கிறோமாதலின் அத்தீர்ப்புச்சரி என்ற அறிவு கொண்டு இன்று வேறு அதனையே அறைய வேண்டுவதில்லை. கோவிந்த நாயர் கூறினும், அன்றி நீதிபதி வாலஸ் வரையினும் மற்றொருவர் வழுத்தினும் தவறு தவறேயன்றோ? பிரிட்டிஷ் நீதிபதியின் தன்மை இது தான் என நீதிபதி வாலஸ், தெளியா மக்கட்கும் தெள்ளிதின் விளக்கிக்காட்டினார் போலும்! இத்தீர்ப்பினால் அறிவு உலகில் அபராதம் உறுதிப்படுத்தப்பட்ட எதிரி, குறைந்து போய்விடவில்லையென்பதை விரித்துக்கூற வேண்டிய அவசியமில்லையெனக் கருதுகிறோம். ஆளின் தாரதம்மியம் பிரிட்டிஷ் நீதிபதிகள் தீர்ப்பைப் பொறுத்திருக்கவில்லை என்பது வெளிப்படை. நீதிபதி வாலஸ் இவ்வழக்குச் சம்பந்தமாக ஆரம்பமுதல் நடந்து கொண்ட முறையிலிருந்தே இத் தீர்ப்பையே பலர் எதிர்பார்த்திருக்கவும் கூடும். எதிரியின் ரிவிஷனை ஏற்றுக்கொள்ள மறுத்துப்பெரிதும் மன்றாடினார். அதன் பிறகு பல மாதங்கள் கழித்துச் செய்யப்பட்ட வாதியின் ரிவிஷனைத்தடையின்றி ஏற்றுக்கொண்டார் முன்னர் அவ்வாறு செய்த அவரிடமே வழக்கு விசாரணைக்கு வந்ததும் அநேகமாக இத்தீர்ப்பே கிடைக்குமென அறிஞர் எதிர்பார்த்திருக்க வேண்டும். நீதிபதி வாலஸ் வழங்கும் நியாயம் ஏறக்குறையச் சரியாய் அமையும் எனப் பலர் பகர்வதுண்டு. இருக்கலாம். எல்லாமனிதர்களும் சில சந்தர்ப்பங்களில் தவறிப்போவது இயல்புதானே. இத்தீர்ப்புக்கு நாம் வருந்தவில்லை. இது பற்றி வருந்தவேண்டுவதுமில்லை யென்றும் அன்பர்கட்

குக் கூறுவோம். தீர்ப்பின் முழுவிபரமும் கிடைத்த பிறகு அதனை ஆராய்ந்து எழுதுவோம்.

இதுபற்றி முன்னர் எழுதிய சில குறிப்புக்களை ஈண்டுத் தருவோம்.

சென்ற ஆண்டு கார்த்திகைத் திங்கள் பதினைந் தாம் நாள் ஊழியன் உபதலையங்கத்தின் இறுதியில்,

"பிரிட்டிஷ் அரசியலுக்கும் நமக்கும், அதன் சார்பு பற்றியவர்கட்கும் நமக்கும், அவ்வரசியலும் அவரும் உள்ளவரைக், கொள்கையில் என்றும் போராட்டந்தான். நமது கொள்கையை நாம் எவர் பொருட்டும் எதன் பொருட்டும் எந்த அதிகாரத்தின் பொருட்டும் விடப்போவதில்லை. ஆனால், இது கொண்டு நாம் தாக்குதலையே கடனாக் கொண்டிருக்கின்றோம் என எவரும் எண்ண வேண்டுவதில்லை. நமக்கு ஆளைப்பற்றிக் கவலையில்லை. நமக்கு ஆள்மீது பகையில்லை. செயலைப்பற்றியதே நமது கொள்கை. எவராயினும் செய்வது தவறானால், நாம்விடப் போவதில்லை. இந்த ராவ்பகதூர் சிதம்பரச்செட்டியாரேயாயினும், செய்வதில் நன்னோக்கமும் நன்மையும் இருக்குமேல், அச்செயல் பற்றியவரை அவரைப் போற்றுவதில் நாம் முன்னணியில் நிற்போம்; செயல் தவறினால், கண்டிக்கச் சிறிதும் பின்வாங்கப் போவதில்லை. எவராயினும் நமக்குக் குறிசெயல். பிரிட்டிஷ் நீதிபதிகள் தீர்ப்பிற்காக, நாம் செய்தது குற்றமென்று ஏற்பட்டு விடாது என்பதை மீண்டும் விளம்பி அமைவோம்"

என்றும்,

சென்ற ஆண்டு கார்த்திகைத் திங்கள் இருபத் தொன்பதாம் நாள் ஊழியன் இடிமுழக்கத்தில்,

"ராவ்பகதூர் சிதம்பரச்செட்டியார் ஊழியன் ஆசிரியர் ராய. சொக்கலிங்கன் மீது தொடுத்திருந்த அவதூறு வழக்கின்பேரில் எதிரியால் சென்னை உயர்தர நீதிமன்றத்தில் (ஹைகோர்ட்) அப்பீல் செய்யப்பெற்று ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. ஹைக்கோர்ட்டின் தீர்ப்பை அன்பர்கள் ஆவலுடன் எதிர்நோக்கி நிற்றல் கூடும். இவ்வழக்குப் பெஞ்சுக்கு வருவதற்குச் சில மாதங்கள் செல்லும். எதிரி, குற்றவாளியல்லரென்பதற்கு ஹைக்கோர்ட் தீர்ப்பு வேண்டுவது அவசியமென்று அறிஞர் கருதார். இருந்தாலும் இது ஒரு உலகப்போக்கு."

என்றும் எழுதியிருப்பதை அன்பர்கள் நினைவிற்குக் கொண்டுவருவோம்.

* * * *

௨

(பிரபவ-ஆ புரட்டாசி-மீ கஅ-உ உபதலையங்கம்.)

திரு. ராவ்பகதூர் சிதம்பரச் செட்டியார் ராயம் சொக்கலிங்கன்மீது தொடுத்திருந்த அவதூறு வழக்கின் அப்பீல் தீர்ப்பு வேறு பக்கம் வெளிப்போந்திருக்கின்றது. அப்பீலின் முடிவைப் பற்றி முன்னரே எழுதியிருக்கின்றோம். தீர்ப்பில் கூறப்படும் காரணங்களையே ஈண்டு ஆராய்தல் வேண்டும். அப்பீல் தீர்ப்பு முற்றும் மூன்றும் பக்கம் வெளியாகி யிருக்கிறது. அது சுருங்கிய அளவு கொண்டதாகவே இருக்கிறது. பழையதைத் தவிரப் புதியதாக ஒரு காரணமும் அதில் காட்டப்படவில்லை. நீதிபதி கோவிந்தநாயர் தீர்ப்பை முற்றும் ஆதரிப்பதாகக் கூறி அவ்வரைவிடச் சிறிது

சாமர்த்தியமாக நீதிபதி வாலஸ் விவாதித்திருக்கின்றார். கோவிந்தநாயர் தீர்ப்பைப் பற்றிப் பல கட்டுரை முன்னே எழுதப்பட்டிருப்பதால், இதைவேறு விரித்துக் கொண்டிருக்க அவசியமில்லை.

முதலில் கட்டுரை அவதூறு கொண்டதுதான் எனக் கீழ்க்கோர்ட்டுத் தீர்ப்பை உடன்படுகின்றார். கட்டுரையிற் கூறப்படும் அனைத்தும் உண்மையென்று முன்னரே விளக்கப்பட்டிருப்பதால் அதை இப்பொழுது விரிக்கவேண்டுவதில்லை. பிரிட்டிஷ் நீதிபதிகளைக் கட்கு, பட்டதாரிகளைப் பற்றியும் அரசாங்கத்தை ஆதரிப்போரைப் பற்றியும் கூறும் அனைத்தும் அவதூறாகவே தோன்றுவது இயல்புதான்.

எதிரி குற்றப் பொறுப்புடையவரல்லர் என்பதை எதிரி நன்கு மெய்ப்பிக்கவில்லையென விளம்புகிறார். வாதியின் சாட்சி மூலமே எதிரி அதை மெய்ப்பித்திருக்கிறார். அது தவிர, எதிரி அக்கட்டுரை எழுதவில்லை யென்பதற்கு சாட்சி விடவில்லையென நீதிபதி வாலஸ் கூறுகிறார். எதிரி அதை எழுதவில்லையெனத் திரு. கோவிந்தநாயரே ஆசிரியரை விடுவித்துவிட்டார். அவர் தீர்ப்பையே இவர் உறுதிப்படுத்துவதானால் இந்தவாதம் பொருளற்றது. கீழ்க்கோர்ட்டு நீதிபதி ஒரே ராய. சொக்கலிங்கனுக்கு ஆசிரியர் முறையில் விடுதலை தந்து, அச்சிடுவோர் வெளியிடுவோர் முறையில் தண்டனை விதித்தார். இம்முறை சரியா அன்று என்பதைப்பற்றி ஜஸ்டிஸ் வாலஸ் பேசாது விட்டுவிட்டார்.

கெட்ட எண்ணங் கற்பிக்க, ராவ்பகதூர் சிதம்பரச் செட்டியார் கூறிய பொய் மூட்டைகளை யெல்லாம் ஜஸ்டிஸ் வாலஸ் ஏனோ அவிழ்த்துப் பார்த்தாரல்லர். இத்தகைய பெரும் பெய்யராகிய ஒருவரைப்பற்றி எழுதிய உண்மையுரைகள் அவதூறு கொண்டவை என முடிவுக்கு வந்துவிட்டார்! கெட்ட எண்ணம் ருசுப்பிக்கப்படாமலிருக்க—மேலும் வீணாகக் கெட்ட எண்ணங் கற்பிக்க, வேண்டுமட்டும் உலகறியப் பொய் கூறியதாக விளங்கி யிருக்க, நீதிபதி வாலஸ் தீர்ப்பு இவ்வாறு அளித்தது எதைக் காட்டுகிறது என்பதை அன்பர்கள் தீர்மானத்திற்கே விட்டுவிடுவோம். இத் தகைய தீர்ப்புக்கள் பிரிட்டிஷ் நீதியின் தன்மையை மக் கள் உணர்தற்குக் கருவியாகும்.

"சுகோதயம்."

"பத்திரிகைகளுக்கு ஆபத்து" என்ற தலைப் புடன் "சுகோதயம்" பத்திரிகை எழுதிய தலையங்கம் வருமாறு:—

காரைக்குடியிலிருந்து வெளியாகும் நமது சக வர்த்தமானியும தேசிய வாரப்பத்திரிகையுமான "ஊழி யன்" ஒரு அவதூறு வழக்கில் சிக்கி, சென்ற இரண்டு வருடங்களாக பத்திரிகை உரிமையைப் பாதுகாக்க மகத்தான முயற்சிசெய்து வந்திருப்பதை யாம் அடிக் கடி "சுகோதயத்தில்" பிரசுரித்திருக்கிறோம். வழக் கின் வரலாறு சுருக்கமாய் வருமாறு:—ஸ்ரீமான் ராவ்பக தூர் ஆவி. பழ. சிதம்பரம் செட்டியார் அவர்கள் ஒரு

கௌரவம்வாய்ந்த கனவான்; காரைக்குடி யூனியன் போர்டின் தலைவர்; தாலூகா போர்டு அங்கத்தினர்; பெரிய தர்மிஷ்டர்; பல பரோபகாரமான வேலைகளைச் செய்திருப்பவர்; எனினும் நமது நாட்டின் துரதிருஷ்ட அடிமை நிலைமையில் ஒரு கனவான் நிறைவேற்ற முடியாத பல பொதுக் கடமைகளையும் ஸ்தானங்களையும் கழுத்து முறியும்படி சுமப்பது இயல்பாகி விட்டவிதியை ஸ்ரீமான் சிதம்பரஞ்செட்டியார் அவர்கள் மீறவில்லை; எனவே தாம் வகித்த எல்லா பிரதிநிதிஸ்தான கடமைகளையெல்லாம் திருப்திகரமாய்ச் செய்ய முடியாமற்போயிற்று; அடுத்தடுத்து மூன்று கூட்டங்களுக்கு ஆஜராகவும் தவறிவிட்டதால், பள்ளிக்கூட மாணவர்கள் நின்றுவிட்டால் பெயரை அடித்துவிடுவதும் வந்தால் சேர்த்துக்கொள்வதும் சகஜமாகக் காணப்படுவதுபோல், மற்றெல்லா ஜில்லாக்களிலும் அமுலிலிருக்கும் வழக்கத்திற்கிணங்க இராமநாதபுரம் ஜில்லா போர்டிலும் ஸ்ரீ செட்டியார் தமது சகாக்களுடன் மீண்டும் மீண்டும் இழந்த ஸ்தானத்தை தாமே அடையப் பெற்றார். இதோடு ஆலோசனைக் கமிட்டிக்கும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஜனநாயகத்தையும் பிரதிநிதிகள் தங்கள் கடமைகளை ஜனத்திருப்திக் கேதுவாய் நிறைவேற்றிவைக்க வேண்டுமென்ற பொறுப்பாட்சிக்கு அஸ்திபாரமான கொள்கையையும் பொன்னேபோல் போற்றும் பொது ஜன ஊழியர்கள் எவருக்கும் ஸ்ரீ ராவ்பகதூர் செட்டியார் அவர்கள் ஸ்தலஸ்தாபன நடத்தை மிக்கமனவருத்தத்தைத் தரும் என்பதில் தடையில்லை. எனவே

பூரண சுயராஜ்ய ஆவேசமிருக்த "ஊழியனில்," அதன் கீர்த்திபெற்ற ஆசிரியர் ஸ்ரீ ராய. சொக்கலிங்கன் செட்டியார் அவர்கள் காரைக்குடி காரியாலயத்தில் இல்லாமல் சென்னைக்குப் போயிருந்த காலத்தில், உப பத்திராதிபரால் ஒரு சிறிய குறிப்பு ஸ்ரீ சிதம்பரஞ்செட்டியார் அவர்களையும் அவர்போன்ற அங்கத்தினர்களையும் கண்டித்து "இவர்களால் யாதுபயன்" என்ற மகுடத்தின் கீழ் வெளியாயிற்று. இதுதான் அவதூறு வழக்கிற்கு ஆதிகாரணம். இராமநாதபுரம் டெப்டீ கலெக்டர்முன் சில மாதங்களாக இவ்வழக்கு நடைபெற்றதில், "ஊழியன்" ஆசிரியர் ஸ்ரீ ராய. சொக்கலிங்கன் செட்டியார் அவர்களுக்கு ஒரு ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. இதை ரத்து செய்யவும் பத்திரிகையின் உரிமையைப் பாதுகாக்கவும் ஸ்ரீ ராய. சொக்கலிங்கன் செட்டியார் அவர்கள் சென்னை ஐக்கோர்ட்டில் அப்பீல் செய்தார். அப்பீலின் முடிவு கீழ்க்கோர்ட்டின் தீர்ப்பை ஊர்ஜிதம் செய்து, ஸ்ரீ ராவ்பகதூர் சிதம்பரஞ் செட்டியார் அவர்களுக்கு ஒரு தனிப்பெரும் வெற்றியை யளித்து, பத்திரிகையின் அடிப்படையான உரிமைகளில் பிரதமமானதைக் கொள்ளையிட்டுவிட்டது. பத்திரிகைகளுக்கு நேரிட்டிருக்கும் ஆபத்துக்களில் இது மிகவும் அபாயமானது. ஆனால் பத்திராதிபர்கள் இந்தத் தீர்ப்பை ஆராய்ந்து பார்த்து, பலமாய்க் கண்டிக்காமலிருப்பதற்கு வருந்துகிறோம்.

வழக்கின் குண குணங்களைப்பற்றி இப்பொழுது பேசவேண்டியதில்லை; குரூர புத்திகொண்டு ஊழியன் ஆசிரியர், ஒரு கௌரவம் வாய்ந்த ஜனப்பிரதி நிதிக்கு

அவதூறு இழைத்தார் என்ற பொய்வாதம் கீழ்க் கோர்ட்டிலேயே அடிபட்டுப் போய்விட்டது. ஆசிரியர் ஊரிலில்லை என்பதும் பிரஸ்தாபக் கட்டுரையை எழுதவில்லை என்பதும் வேறொருவர் அதை எழுதினர் என்பதும் ருசு செய்யப்பட்டு விட்டன. எனவே வாதி ஸ்ரீ சிதம்பரஞ்செட்டியார் அவர்களை எதிரி ஸ்ரீ ராய. சொக்கலிங்கம் தாக்கவில்லை என்று நீதிபதி கோவிந்த நாயர், அபிப்பிராயப்பட்டு ஆசிரியர் என்ற முறையில் அவரை விடுதலை செய்துவிட்டார். இது ஆசிரியரின் மாசற்ற மனதிற்கும் அவர் நிரபராதி என்பதற்கும் பெரிய சான்று தருகிறது. ஆனல் ஆசிரியர் என்ற ஹோதாவில் குற்றம் செய்யாதவரெனக் கருதப்பட்டு, விடுதலையடைந்தவர் டி பத்திரிகையை வெளியிடுபவர் என்ற அம்சத்தில் குற்றவாளியாக்கப்பட்டு, ஒரு ரூபா அபராதம் விதிக்கப்பெற்றார். ஒரு ஹோதாவில் குற்றமில்லை; மற்ற ஹோதாவில் குற்றம் என்பது தான் தீர்ப்பின் அசட்டுத் தனத்தைக் காட்டுகிறது. இது ஒரு கிரிமினல் வழக்கு; கெட்ட எண்ணம் எதிரிக்கு இருந்தது என்று வெளிப்படையாய் ருசுசெய்யப்பட்டால் ஒழிய, எதிரி நன்னோக்கத்துடன் நடந்திருப்பதாக நீதிபதி அங்கீகரித்து விடுதலைசெய்திருக்கவேண்டும். எதிரிக்கு துர் எண்ணம் கற்பிக்க வாதி தரப்பில் விடப்பட்ட சாக்ஷியம் தோல்வியுற்றது. இதற்குமாறாக எதிரிக்கும் பிரஸ்தாபக் கட்டுரைக்கும் சம்பந்தமில்லை என்ற முக்கிய அம்சம் வாதி சாட்சிகளாலேயே ருசுப்படுத்தப்பட்டது. ஆனல் சாட்சியத்தை யனுசரித்து தீர்ப்பளிக்காமல், தாத்காலிகமாய் பத்திரிகையை வெ

ளியிடும் பொறுப்பை வகித்த உப பத்திராதிபர் குற்றத்திற்காக, ஊரிலில்லா ஸ்ரீ ராய. சொக்கலிங்கன் அவர்களை நீதிபதி அநீதியாய் தண்டித்தார். ஆகையால் இதை மறுத்து அப்பீல் செய்யப்பட்டது. ஆனால் அப்பீலில் தவறான கீழ்க் கோர்ட்டுத் தீர்ப்பே ஐக்கோர்ட்டு நீதிபதியால் உறுதியாக்கப்பட்டது,

இதிலிருந்து கிடைக்கப்பெறும் சட்டம் என்ன? ஆசிரியர், வெளியிடுபவர், அச்சிடுபவர் என்ற மூன்று கடமைகளைச் செய்யும் பத்திராதிபர்கள் சொந்த வேலையாக அல்லது சரீர சுகத்திற்காக வெளியூர்களுக்குச் செல்ல நேர்ந்தகாலத்தில், எதாவது தோஷங் கற்பிக்கக்கூடிய கட்டுரை பத்திரிகையில் வெளிவந்தால், ஊரில்லாதவர்கள் குற்றவாளியாகிறார்கள். இது மிகவும் ஆபத்தானதும் முறைதவறினதுமாகும். அவனுற வழக்கிற்கு ஆதாரமான கட்டுரையில் சம்பந்தப்படாதவரென்று நிச்சயமாய் ருசு செய்யப்பட்டிருக்கும்பொழுது ஸ்ரீ ராய. சொக்கலிங்கன் அவர்களுக் தண்டனை விதிப்பது செல்லாது என்ற எதிரியின் முக்கியமான வாதத்தை ஐக்கோர்ட்டு நீதிபதி ஏற்க மறுத்துவிட்டார். நீதிபதியின் தீர்ப்பு கர்னாடக சட்ட ரீதியாயிருக்கலாம். ஆனால் ஜனநாயக கோட்பாடுகளை பனுசரித்துப் பார்த்தால், அது எவ்வழியிலும் நியாயமாகாது என்பதே எமது துணிபு. சிவில் வழக்காயிருந்தால், இத்தகைய தீர்ப்பு, ஒருவாறு மதிப்பாகும். கிரிமினல் வழக்கில் நிரபராதியைத் தண்டிக்கலாம் என்ற இந்த தீர்ப்பு மிகவும் பிற்போக்கானது. எதிரியின் சத்திய நடத்தைக்கும் யதார்த்தத்திற்கும் சாதகமாக நீதிபதி தீர்ப்பளிக்கவும்

பத்திரிகையின் உரிமையையும் பத்திராதிபரின் சுதந்தரத்தையும் காக்கவும் நீதிபதி முற்றிலும் தவறிவிட்டார். இந்தத் தீர்ப்பு பத்திரிகைகளின் சுதந்தரத்தைப் பறிமுதல் செய்ய இனி உபயோகப்படுத்தப்படுமோவென்று அஞ்சவேண்டியிருக்கிறது. எனவே பீனல்கோடு அவதூறு சட்டத்தைத் திருத்தியமைத்தல் வேண்டும்.

"ஊழியன்" சம்பந்தப்பட்டவரையில், பத்திரிகையின் தீரத்தையும், நியாயப்போக்கையும் சுதந்தரப் போராட்டத்தையும் ஸ்ரீ ராவ்பகதூர் சிதம்பரம் செட்டியார் உள்ளிட்ட அனைவரும் போற்றக் கடமைப்பட்டிருக்கிறார்கள். அபிப்பிராய சுதந்திரத்திற்காகப் போராடும் கொள்கைகொண்ட "ஊழியன்" போன்ற பத்திரிகைகளால் மட்டுமே நாட்டில் சுதந்திர எழுச்சி பெருகும். "பழியோரிடம்; பாவமோரிடம்" என்பதற்கிணங்க, பிறர்செய்த குற்றத்திற்காக "ஊழியன்" ஆசிரியர் ஸ்ரீ ராய. சொக்கலிங்கன் அவர்கள் தவறாகத் தண்டிக்கப்பட்டார். தீர்ப்பு எவ்வளவு அநீதமாயினும், குற்றஞ் செய்தவரைக் காட்டிக்கொடாமலும் கோழைத்தனமாய்ப் பின் வாங்காமலும் உயர்தர நீதிமன்றம்வரையில் வெற்றிக்காகப் போராடிய "ஊழியன்" கம்பெனியாரின் சுதந்தரப் போராற்றலைப் போற்றாதவன் பொறாமைக்காரனாகத்தா னிருத்தல்வேண்டும். "ஊழியன்" வாழ்க!

"சுகோதயம்"

(உ)

ஸ்ரீ ராவ்பகதூர் ஆவி. பழ. சிதம்பரஞ்செட்டியார் அவர்கள் "ஊழியன்" ஸ்ரீ ராய. சொக்கலிங்கன் செட்டியார் அவர்கள் மீது தொடுத்திருந்த அவதூறு வழக்கின் அப்பீல் தீர்ப்பு சென்ற வாரத்தின் "ஊழியனில்" மொழி பெயர்த்து, பிரசுரிக்கப்பெற்றிருக்கிறது. நீதிபதி வாலஸ் அவர்கள் எழுதியிருக்கும் இத்தீர்ப்பை யாம் மிக்க கவனத்துடன் படித்துப் பார்த்தோம். அப்பீல் செய்து கொண்ட ஸ்ரீ ராய. சொக்கலிங்கன் செட்டியாரவர்களுக்கு நியாயம் செய்ய நீதிபதி வாலஸ் முற்றிலுந் தவறிவிட்டார். கீழ்க்கோர்ட்டார் விதித்த அபராதம் அற்பமான ஒரு ரூபாயினும், அதை மறுத்து, உயர்தர நீதிமன்றத்திலாவது நீதி கிடைக்கக்கூடாதா என்கிற எண்ணத்தின்மேலும் கடமையில் தவறும் ஜனப்பிரதிநிதிகளைப் பொது நோக்கோடு கண்டித்து நல்ல ஜனநாயக அரசியல் முறைக்கு அஸ்திபாரம் கோலும் உன்னத லக்ஷியத்தோடும் உழைக்கும் பத்திரிகைகளின் சுதந்தரத்தைச் சட்டரீதியாய் பாதுகாக்கவும் "ஊழியன்," ஆசிரியர் அபாரச் செலவு செய்து அப்பீல் செய்தார். ஆனால் கீழ்க்கோர்ட்டின் தீர்ப்பை ஊர்ஜிதஞ்செய்த ஐக்கோர்ட்டு நீதிபதியின் தீர்ப்பு மனுதார் எண்ணிய எண்ணங்களைப் பொய்ப்படுத்திவிட்டதற்கு யாம் பெரிதும் வருந்துகிறோம்.

நீதிபதியின் வாதங்களைச் சிறிது கவனிப்போம். இரண்டு அம்சங்களைக் குறித்து நீதிபதி தீர்ப்பெழுதி

பிருக்கிறார். முதலாவது, பிராது கட்டுரையில் கூறப்பட்ட விஷயம் அவதூறு ஆகுமா என்பதைப் பற்றியது. ரிவிஷன் மனுவை ஏற்கும்காலத்தில் கீழ்க்கோர்ட்டார் நிர்மானித்தபடி அதை அவதூறு எனக் கருதியே ஏற்றுக்கொண்டாராம். ஆகையால் பின்னால் எதிரி, மனுதார் தரப்பு வக்கீல்களால் செய்யப்பட்ட வாதங்கள் நீதிபதியின் முதல் அபிப்பிராயத்தை மாற்றவில்லையாம்! இதுதான் முதல் அம்சத்தைப் பற்றி, நீதிபதியின் தீர்ப்பு. ஐக்கோர்ட்டில் செய்யப்பட்ட வாதங்கள் என்ன, அவைகளை ஏற்றுக்கொள்ளாததற்குக் காரணங்கள் என்ன என்னும் விவரங்களைக்கொடுத்திருந்தால் நீதிபதியின் மனப்போக்கு நமக்கு விளங்கும். அப்படிச் செய்யாமல் "கீழ்க்கோர்ட்டாரின் அபிப்பிராயமே சரியென்று நான் ஏற்றுக்கொண்டேன். பின்னால் அதை மாற்றிக்கொள்ளவில்லை" என்பது சட்டசபை அங்கத்தினர்களுக்குப் பொறுப்பற்ற கவர்ன்மெண்டு அங்கத்தினர்கள் அளிக்கும் பதிலின் சாயையை யொட்டியிருப்பதாக யாம் அஞ்சுகிறோம். "மிக இழிவான அவதூறு அன்று" என்று அபிப்பிராயப்படும் நீதிபதி மனுதார் பத்திரிகையின் பொது நோக்கை கவனித்து பொது நன்மையே அபிவிருத்தி செய்யும்பொருட்டு எழுதப்பெற்ற கட்டுரையை மன்னித்து, விதிக்கப்பட்ட அபராதத்தை ஏன் ரத்து செய்திருக்கக்கூடாது? வழக்கு இரண்டு தனிப்பட்ட நபர்களுக்குள் நடக்கவில்லை. வாதி ஜனப்பிரதிநிதி; எதிரி ஜனநன்மை வாதி; இவர்களுக்குள் யாதொரு குரோத புத்தியோ அன்றி பகை

ஸ்தாபமோ இல்லை என்பதைக் கீழ்க்கோர்ட்டுத் தீர்ப்பு உறுதிப்படுத்துகிறது. இதிலிருந்து மனுதாரின் கண்ணியமும், குற்றமற்ற, நிஷ்களங்கமான தன்மையும், நன்றாகவும் நீதிபதி வாலஸ் அவர்களுக்கு விளங்கவில்லையா? சட்ட ரீதியாக "அவதூறு" என்று மயிர் பிளந்து வாதிக்கும் பிரஸ்தாபக் கட்டுரையின் சில சொற்களை ஒரு தட்டிலும், கால உணர்ச்சி, ஸ்தலஸ்தாபனச் சீர்திருத்தக் கிளர்ச்சி, பொதுக்கடமையைச் செய்வதில் வாதி ஸ்ரீ ராவ்பகதூர் சிதம்பரஞ்செட்டியார் அவர்களின் கண்டிக்கத்தக்க சிரத்தைக் குறைவு, கூட்டங்களுக்குக் கூட தொடர்ந்து ஆஜராகாததோஷம் முதலிய ருசுச்செய்யப்பட்ட சாக்ஷியங்களை மறு தட்டிலும் வைத்துப் பார்த்திருந்தால், நீதிபதி வாலஸ் கட்டாயம் மனுதாருக்குத் தீர்ப்பளித்திருப்பார் என்று திடமாய் எண்ணுகிறோம். அற்ப "அவதூறு" மிக அற்ப அபராதம்; ஆனால் பெரிய வியாஜ்யம்; அபாரப் பணச்செலவு; நீதி கிடைக்குமென்றும், தமது சத்திய நெறி அங்கீகரிக்கப்பெறும் என்றும் எண்ணி மனுதார் ஹைக்கோர்ட்டிற்கு வந்திருப்பதை நீதிபதி வாலஸ் சீர்தூக்கிப் பார்த்திருந்தால், அவசியமாயின் பத்திரிகையின் பொறுப்புக்களைக் குறித்து ஒரு எச்சரிக்கை விடுத்து, கீழ் கோர்ட்டின் தீர்ப்பை ரத்துசெய்திருக்கலாம். இந்த வழக்கின் உட்போக்கை நீதிபதி வாலஸ் அறிந்து கொள்ளாமல், மேற்புல் மேய்ந்து தீர்ப்பு எழுதிவிட்டார் என்றே யாம் கருதவேண்டியிருப்பதற்கு வருந்துகிறோம்.

இரண்டாவது அம்சம் அவதூறை மனுதாரர் பிரசுரித்தாரா என்பது. இவ்விஷயமாய் நீதிபதி வாலஸ்

அவர்கள் தமது அற்புத வாதிக்கும் திறமையை யெல்லாம் காட்டியிருக்கிறார். மனுதார் சார்பில் கீழ்க் கோர்ட்டில் இவ்வழக்கு போதிய திறமையுடனும் ஜாக்கிரதையுடனும் அவர் வக்கீல்களால் நடத்தப்படவில்லை என்றும் சில முக்கியமான சாக்ஷிகளை விசாரிக்கவில்லை என்றும் எதிரியின் குற்றமற்ற தன்மையை இன்னும் அதிகமாக விளக்கியிருக்கலாமென்றும் யாம் ஒப்புக்கொள்ளுகிறோம். எனவே நீதிபதி வாலஸ் சற்று கண்டிப்பாய் வாதிக்க இடம் ஏற்பட்டிருக்கிறது. எனினும், நீதிபதி வாலஸ் பேசுவது ஒரு பாரிஸ்டர் ஜூரிகளைப் பார்த்து ஆவேசமொழிகளைச் சமாரியாகப் பெய்வது போலிருக்கிறதே யன்றி, நடுநிலை நீதி ஆசனத்தில் உட்கார்ந்து எழுதுவதுபோல் இல்லை என்று யாம் தைரியமாய்க் கூறுவோம். ஏனெனில் கீழ்க் கோர்ட்டுத் தீர்ப்பைக் கூடச் சரியாகப் படிக்காமல், தீர்ப்பெழுதிய குற்றத்தோடு அனாவசியமான வாதத்திலிறங்கி, "விசேஷவாதம்" என்னும் தோஷத்திற்காளாகிறார். மனுதார் கீழ்க் கோர்ட்டில் அஜர்ப்படுத்திய ஸ்டேட்மெண்டில் கட்டுரையைத் தாம் எழுதவில்லை, பிரசுரிக்கும்படி உத்தரவிடவில்லை, அவைகளின் பொறுப்பு தம்மைச் சாராது என்று திட்டமாய்ச் சொல்லவில்லை என்பது உண்மையேயாயினும், அவ்வாறு சொல்லவேண்டிய அவசியம் ஏற்படவில்லை. வாதி தரப்புச் சாக்ஷிகளே இவ்விஷயங்களை ருசுச் செய்திருக்கிறார்கள். வழக்கை விசாரித்த ஸ்ரீ கோவிந்த மேனன் எதிரி எழுதவில்லை என்பதையும் பிரசுரிக்கவில்லை என்பதையும் ஒப்புக்கொண்டு ஆசிரியர் என்ற

ஹோதாவில் விடுதலை செய்திருப்பதை நீதிபதி வாலஸ் கவனிக்காமல் அவசரப்பட்டுத் தீர்ப்பெழுதியது எமக்கு மிக்க ஆச்சரியத்தையும் ஏமாற்றத்தையும் கொடுக்கிறது. மேலும் வாதத்தின் நட்பம் அதுவல்ல; யார் பிரசுரித்தார் என்பதல்ல; எதிரியின் ஸ்டேட்மெண்டு சர்வ வாத லக்ஷணங்களும் பொருந்தியதுதானா என்பதல்ல. ஆசிரியர் என்ற ஹோதாவில் நிரபராதி என்று விடுதலையடைந்த மனுதாரை பிரசுரகர்த்தா என்ற முறையில் தண்டிக்கலாமாவென்பதும் மனுதார் வெளியூர் சென்றிருந்த கா[illegible] நதிவாய்ந்த ஒரு உதவி ஆசிரியர் பத்திரிகையை நடத்திவந்தார் என்ற சாக்ஷியும் வாதி தரப்பால் விடப்பட்டிருக்கையில் ஆஜரில்லாத ஒருவர்மேல் கிரிமினல் வழக்கில் குற்றஞ் சுமத்தலாமா வென்பதும் ஆகிய இரண்டு அம்சங்களே முக்கியமானவை. இவைகளைப்பற்றி நீதிபதி கவனிக்காதது இவர் தமது பொறுப்பைச் சரிவர வகிக்கவில்லை என்பதை உணர்த்துகிறது. நீதிபதி வாலஸ் சொல்வது போல் குற்றத்தை நிர்ணயிக்கும் முக்கிய அம்சங்கள் எதிரியின் ஸ்டேட்மெண்டில் தெரிந்தோ தெரியாமலோ கொடுக்கப்படவில்லையாயின், கீழ்க்கோர்ட்டு நீதிபதி எங்கு உறங்கினர்? போதிய ஆதாரமில்லாமல் எப்படிக் குற்றஞ் சாற்றுகிறார்? பிரஸ்தாபக் கட்டுரையின் எழுத்துப் பிரதியையும் வேண்டிய தகவல்களையும் ஆஜர்ப் படுத்தும்படி ஏன் உத்திரவிட்டிருக்கக்கூடாது? எதிரியின் கவனமின்மை அல்லது திறமையின்மை நியாயப் பிறழ்தலுக்குத் தருணமாகுமா? கீழ்க் கோர்ட்டு நீதிபதி எதிரி அவதூறுக் கட்டுரையை எழு

தமில்லை என்று ஒப்புக்கொண்டிருக்கும்பொழுது, நீதிபதி வாலஸ் இந்த அம்சத்தை சந்தேகிக்கும் முறையில் வாதித்திருப்பது அவர் கண்மூடித் தனத்தைப் புலப்படுத்துகிறது. கீழ்க்கோர்ட்டுக் கட்டுகளைச் சரியாகப் படித்துப் பார்க்காததாலும், சட்டத்தையும் நியாயத்தையும் சீர்தூக்கி ஆராய்ச்சி செய்யாததாலும் நீதிபதி வாலஸ் கீழ்க்கோர்ட்டின் முரண்பட்ட அசட்டுத் தீர்ப்பையே ஊர்ஜிதம் செய்துவிட்டார் என்பதில் அபிப்பிராயபேதம் இருக்க இடமில்லை. நீதி கிடைக்காமற்போயினும், "ஊழியன்" ஆசிரியர் பொது ஜனங்களால் நிரபராதி யென்றும் சுதந்தரத்திற்காக அதி சாமர்த்தியத்துடனும் விடாமுயற்சியுடனும் போராடியவர் என்றும் மதிக்கப்பெற்று, அவர்கள் ஆசியைப் பூரணமாய்ப் பெறும் பாக்கியங் கொண்டவர் என்பது இவ்வழக்கால் சந்தேகமற அறியக்கிடக்கிறது.

ஊழியன் அச்சுக்கூடம்,
காரைக்குடி.